# மதமாற்றம் எனும் மயக்கம்

எபி சுந்தர்ராஜ்

## இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

*WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599*

*Email: wordofgod@wordofgod.in*

## *Wishing you in the mighty name of Jesus Christ*

*We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.*

*95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.*

*WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599*

*Email: wordofgod@wordofgod.in*

# மதமாற்றம் எனும் மயக்கம்

# மதமாற்றம் எனும் மயக்கம்

ஆசிரியர்
எபி சுந்தர்ராஜ்

மொழி பெயர்பாளர்
ராஜ பகதூர்

பாரத் ஜோதி
சென்னை

*Mathamattram Enum Mayakkam*
*(Tamil)*

*Confusion Called Conversion*
*by Sunder Raj*
*© Sunder Raj 1988*

*First Tamil Edition 1998*
*Revised Second Edition 1999*
*ISBN 81 - 7362 - 127 - 6*

*All rights reserved*
*No part of this publication may be reproduced or transmitted in any form or by any means, electronic, or mechanical, including photocopying, recording, or any information storage and retrieval system, without permission in writing from the publisher.*

*Published for* ***OM India***

*By*
***Bharat Jyoti,***
*Po.Box.7313, Chennai - 600 101*

**Publisher's Note**

The doctrinal, and sociological views of the author are not necessarily those of the publisher.

## பொருளடக்கம்


1. பிரச்சனை 9
2. கிறிஸ்தவம் - ஒரு மேற்கத்திய மதமா? 10
3. மிஷனெரிகளின் பெருந்தொல்லை 21
4. சுவிசேஷமும் வெளி நாட்டுப் பணமும் 27
5. "பாவிகளே" 31
6. சமூக நலத் தொண்டின் வழியாக மத மாற்றம் 36
7. மிஷனெரிகள் காலனி ஆட்சியின் கைக்கூலிகளே! 45
8. கலாச்சாரத்தைக் களங்கப்படுத்தும் கிறிஸ்தவம் 49
9. தேசப்பற்றில்லாத கிறிஸ்தவர்கள் 56
10. இந்திய அடிமை 63
11. தீண்டா ஜாதிகள் யார்? 70
12. அடிமை தர்மாவும் ஆரிய தர்மாவும் 80
13. திராவிட நாட்டில் பிராமணர்களின் மிஷனரி வேலை 84
14. தீணடப்படாதவர்களின் சமய தாகம் 96
15. தீண்டப்படாதவர்கள் ஏன் கிறிஸ்துவைத் தேடுகிறார்கள் 100
16. தீண்டப்படாதவர்கள் "இந்துக்களாக்கப்பட்டது" எப்பொழுது ஏன்? எப்படி? 105
17. யார் இந்த ஆதிவாசிகள்? 113
18. பழங்குடியினர் - இவர்களின் மதங்கள் எவை? 118
19. பழங்குடிகளுக்குள் பிராமணீய மிஷனரிப் பணி 125

20. பழங்குடி மக்கள் கிறிஸ்தவர்களாக மாறக் காரணம் என்ன 130

21. பழங்குடி மக்கள் எப்பொழுது, எதற்காக, "இந்துக்கள்" ஆக்கப்பட்டனர்? 138

22. சென்சஸ் எண்ணிக்கைகள் எந்த அளவுக்கு சரி 143

23. இந்தியாவில் உள்ள சமயங்கள் பற்றிய ஒரு கண்ணோட்டம் 150

24. 'இந்து' என்பவர் யார்? 154

25. மதச் சுதந்திரத்தை எதிர்ப்பவர்கள் யார்? 158

26. அரசியல் சட்டமும் மதமாற்ற சட்டமும் 165

References 186

## நன்றி செலுத்துகிறேன்

என்னுடைய புத்தகத்தின் பாகங்களை வாசித்து, தகுந்த திருத்தங்கள் செய்து, தங்களுடைய ஆராய்ச்சி பிரிவின் கருத்துக்களை அளித்து உதவிய பண்டிதர்களுக்கு என் உளமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்ளுகிறேன். அவர்களாவன: Dr. எலியம்மா சகரியா, பங்காரபேட்; Dr. சுணந் சுமத்திரா, பூனா; Dr. கரோடெம்ரெல், ஷில்லாங்; Dr. தேவதாசன், நாக்பூர்; பேராசிரியர். ஜெயராஜ், தாம்பரம்; Dr. லால் தீனா, இம்பால் மற்றும் திரு. தேவதாசன், வழக்கறிஞர், சென்னை.

ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகம், வித்யா ஜோதி, இந்தியன் ஸோசியல் இன்ஸ்டியூட் மற்றும் டிரேசி போன்ற நூலகங்கள் புது டில்லியில் உள்ளன. இவைகள் மூலம் பெற்றுக்கொண்ட உதவி களுக்காக நன்றி.

நல்ல முறையில் எழுதுவதற்கு தேவையான வித்தியாசமான மன நிலையில் நான் பல மாதங்கள் இருந்தபோது, பொறுமையுடன் என்னுடன் இருந்த என் மனைவிக்கும், பிள்ளைகளுக்கும் நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஜான்ஸி

எபி சுந்தர் ராஜ்

1

# பிரச்சனை

"மிஷினெரிகள் தங்கள் பணச் செல்வாக்கைப் பயன்படுத்தி தவறான வழிமுறைகளைக் கையாண்டு ஏதுமறியாத ஏழை எளியவர்களான இந்துக்களை ஏமாற்றி மதம் மாறச் செய்து விடுகின்றனர். அரசியல் சட்டம் 25வது பிரிவு வழங்கும் அதிகப்படியான உரிமைகளைக் கொண்டு இவர்கள் அந்நிய மதத்தைப் புகுத்தி இந்திய கலாச்சாரத்தைக் களங்கப்படுத்தி விடுவதோடு சமுதாய அமைதியைக் குலைத்து தேசிய ஒருமைப்பாட்டிற்கும் பெரும் ஆபத்தை உண்டாக்குகின்றனர்."

வாசகர்களாகிய நீங்கள் இத்தகைய குற்றசாட்டினை அடிக்கடி கேள்விப்பட்டிருப்பீர்கள். அடிக்கடி கேள்விப்படுவதால் இக்குற்றச்சாட்டின் வேகம் குறைந்து போகவில்லை. இந்த நாட்டின் நலன்களில் அக்கறையுள்ள எவரும் இத்தகைய குற்றச்சாட்டினை எளிதில் தள்ளிவிடவும் முடியாது. இந்நூலில் இவ்விஷயத்தை என்னால் இயன்ற அளவுக்கு நேர்மையுடன் விவாதித்து ஆராய்ச்சி செய்யப் பிராயாசப்படுகிறேன்.



2

# கிறிஸ்தவம் - ஒரு மேற்கத்திய மதமா?

''மேலைநாட்டு வியாபாரிகள் தங்கள் கப்பல்களில் கொண்டு வந்து இறக்கிய சரக்கே, கிறிஸ்தவம். யூனியன் ஜாக் கொடி பறந்த காலத்தில் அது நமதுதாய் நாட்டிற்குள் படையெடுத்து விட்டது. அந்நியர் ஆட்சியின் ஆதரவிலும் அரவணைப்பிலும் அது செழித்து வளர்ந்து விட்டது. வெள்ளையன் போன போதே அவன் தந்த அடிமைச் சின்னமாகிய கிறிஸ்தவத்தையும் அனுப்பி விடுவது தான் சரியான காரியம்''. செய்தித்தாள்களில் வெளியிடும் கட்டுரைகளிலிருந்து நியோகிகமிஷன்[1] வரை இந்தப் பிரச்சினைதான் காரசாரமாக விவாதிக்கப்பட்டு வருகிறது. இது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையாக உள்ளதால் சில விஷயங்களை முறையாக ஆராய்ந்து விடுவது நல்லது.

A. இந்தியாவில் குடியேறிய போர்த்துக்கீசியர்களின் மதம் மாற்றும் முயற்சி, போர்த்துக்கீசிய வணிகர்கள் நமது நாட்டின் மேற்குக் கரையோரங்களில் என்ன

செய்தார்கள், அவர்கள் எப்படிப்பட்ட கிறிஸ்தவ மார்க்கத்தினைக் கொண்டு வந்தனர் என்ற விபரங்களை இந்திய சமயங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்யும் எவரும் அறியாமல் இருக்க முடியாது. சரித்திரத்தின் இடைக்காலத்தில் நாடுகளைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் போர்த்துக்கீசியர்களும் ஸ்பானியர்களும் ஈடுபட்டதை நாம் பாராட்டினாலும், அரபியக் கொள்ளைக்காரர்களைப் போல், கப்பல் கொள்ளையிலும் போர்க்குரல் உயர்த்துவதிலும் அவர்களுக்கிருந்த ஆர்வத்தை நாம் கண்டிக்காமல் இருக்க முடியாது.

கிறிஸ்துவின் ஆத்மீக இயக்கமும் திருச்சபை அமைப்புகள் என்ற அளவில் அரசாங்கங்களால் ஆதரிக்கப்பட்ட காலத்தில் ஆன்மீக வளர்ச்சி குன்றி காணப்பட்டது. கான்ஸ்டன்டைன் அரசன் காலம் தொடங்கி 18-ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் தோன்றிய பக்திக் கொள்கையினர் காலம் வரையில் இந்நிலைமையை நாம் காணலாம். இறுதியில் திருச்சபை வேறு அரசாங்கம் வேறு என்ற ஒரு தெளிவை மக்கள் மனதில் இது உருவாக்கிற்று. இந்த நீண்ட கால இடைவெளியில் மேல் நாடுகளில் திருச்சபை ஒரு மதஸ்தாபனம் என்ற நிலையில் மற்ற மதங்களைப் போலவே பிடிவாதமான கொள்கைகளையுடையதாய்க் காணப்பட்டது.[2]

எங்கெல்லாம், எப்பொழுதெல்லாம் அரசாங்கத்தின் ஆற்றலையும், ஆதரவையும், சாராமல் திருச்சபை இருந்து வந்ததோ அங்கெல்லாம் திருச்சபை ஆன்மீக நிலையில் வளர்ந்தோங்கிச் செழித்தது. மதத்தலைவர்களால் ஆளப்பட்ட மக்கள் ஒருபோதும் சுதந்திரமான சர்க்காரை அமைத்து கொண்டதேயில்லை என்று ஜெஃபர்சன் எழுதியுள்ளார்.[3] சர்க்கார் ஆதரவோடு வாழ்ந்த மதங்கள் அனைத்தும் சுதந்திரமிழந்தே வாழ்ந்து வந்தன, என்று ஹென்றி கிளே கூறுகிறார்.[4]

சமய நீதி மன்றங்கள் (Inquisiton) மக்கள் மீது சாட்டிய குற்றச்சாட்டுகள் ஐரோப்பாவில் இடைக்காலத்தில் வாழ்ந்த திருச்சபைச் சரித்திரத்தின் இருண்ட அத்தியாயங்களாக இருந்தன. அப்படிப்பட்ட மதக் குற்றச் சாட்டுகளின் விசாரணைகள் லிஸ்பன் தொடங்கி கோவா மட்டும் எங்கும் நடந்து வந்த காரியம் மிகவும் வருந்தத்தக்கதே. இதன் மூலம் நூற்றுக்கணக்கானமக்கள் கொடுமைப் படுத்தப்பட்டனர். ஆயிரக் கணக்கானோர் மதக் கொள்கைகளை ஏற்றுக் கொள்ளுமாறு கட்டாயப்படுத்தப்பட்டனர்.

மதவிசாரணை என்பது சபை மக்கள் கொள்கை கட்டுப்பாட்டுடன் வாழ்வதைக் காப்பாற்றுவதற்காக ஏற்பட்டது என்று பிரான்சிஸ் சேவியர் கூறுகிறார். இந்த மதவிசாரணை இந்தியாவில் உள்ள திருச்சபைகளில் ஒருமுறை புகுத்தப்பட்ட பின் அது சபையைச் சேராத மக்களையும் கூட குறிப்பாக சில முஸ்லீம்களையும், இயற்கையை வணங்கும் கொங்கணி மக்களையும் கூட பாதித்தது

வணிகர்கள் ஒருபோதும் மத உபதேசங்களை பிற மக்களுக்கு எடுத்துச் செல்லும் தூதுவர்களாக இருக்க முடியாது. போர்த்துக்கீசிய வியாபாரிகளும் சிப்பாய்களும் மத அளவில் எவ்வளவு சூன்யங்களாக இருந்தனர் என்பதை ஒரு எடுத்துக் காட்டால் விளக்கலாம்.

ஒரு சமயம் போர்த்துக்கீசிய சிப்பாய்கள் சிலர் மேரி மாதாவை வணங்குவதாக எண்ணி காளிகோயில் பூஜையில் பயபக்தியோடு கலந்து கொண்டார்களாம்! கே.எம். பணிக்கா தமது நூலில் இதனை எழுதியிருக்கிறார்.[5]

மதச்சடங்காச்சாரங்களில் மக்கள் தீவிர ஈடுபாடு காண்பித்ததற்குக் காரணம் தங்கள் உள்ளான பக்தி வாழ்க்கையிலும் மத விஷயங்கள் பற்றிய அறிவிலும் உள்ள குறைபாட்டை பிறர் காணாமலிருக்க வேண்டும் என்ற நோக்கமே. இதே வணிகர்கள் காலனிகளில் ஆட்சியாளர்களாக மாறின போது அவர்களின் தவறான மதச் சடங்காச்சாரப் பற்று அவர்கள் சார்ந்திருந்த மதம் மக்களிடையே நன்கு பரவுவதற்கு தடையாக மாறி விட்டது. இந்தியாவைப் பொறுத்தவரை இந்தக் காவியம் போர்த்துக்கீசியரோடும் அவர்கள் பிடித்த சிறிய நிலப்பரப்பாகிய கோவாவோடும் முடிந்து விட்டது.[6]

சீர்திருத்த காலம், அதைத் தொடர்ந்து 18ம் நூற்றாண்டில் தோன்றிய மறுமலர்ச்சி இயக்கம், பக்திக் கொள்கையினரின் ஆத்மீக எழுச்சி இயக்கம் ஆகியவை திருச்சபைக்கும் அரசாங்கத்திற்கும் உள்ள வேறுபாடுகளைக் கொண்டு வந்தது. இத்தாலியில் தோன்றிய மறுமலர்ச்சி இயக்கத்தின் ஆதிக்கம். திருச்சபையைப் பாதித்து விட்டதைக்கண்ட பேராசிரியர் புக்கார்ட் என்பவர், 'மதம் என்பது மீண்டும் தனி மனிதனின் காரியமாகவும், தனிமனித உணர்ச்சிக்குரிய விஷயமாகவும் இருக்க வேண்டும்' எனக் கூறினார்.[7]

தரங்கம்பாடியில் 1706-ஆம் ஆண்டு சீகன்பால்க் வந்திறங்கினார். பக்திக் கொள்கை இயக்கமும், ஆவிக்குரிய உயிர் மீட்சி இயக்கங்களும் தோன்றின.[8] நாடு இனம் இவற்றிற்கு அப்பாற்பட்ட நிலையில் மிஷினெரிகள் இயங்கி வந்தனர். அக்காலத்தில் இந்தியாவில் நடைபெற்று வந்த மேல் நாட்டு மிஷினெரிப் பணிகள் அனைத்தும் அரசாங்கங்களுடைய தொடர்பும் உதவியுமின்றி சுயாதீனமாய் உண்டானவை என்பதை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும். இது பற்றி 7ஆம் அத்தியாயத்தில் விரிவாக நாம் காணலாம்.

ஆனால் இந்திய மக்கள் பலருக்கும் வெளிநாட்டு மிஷினெரிகள், அனைவரும் அந்நிய நாட்டு அரசாங்கங்களால் அனுப்பப்பட்டவர்கள் என்ற ஒரு தப்பான எண்ணமே இருந்து வருகிறது. இந்த கருத்தினை டி.என்.கோபால் என்பவர் விவேகானந்த கேந்திர பிரகாஷன் என்ற பத்திரிகையில் எழுதியிருந்த வார்த்தைகளிலிருந்து காணலாம். ''இறுதியாக கிழக்கிந்திய கம்பெனி வந்தது. முகலாயருடைய ஆதிக்கம் குறைவுபட்டது. எல்லாம் ஒரே குழப்பமான நிலையை அடைந்தது. இந்த சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டனர்

தந்திர புத்தியுள்ள பிரிட்டிஷ்காரர்கள்! உயர்ந்த உத்தியோகங்கள், அந்தஸ்துக ளைக் கண்டு இந்தியர்கள் மயங்கி விட்டனர் இதுதான் இந்தியாவில் கிறிஸ்தவ மதம் தோன்றி வளர்ந்த வரலாற்றின் சுருக்கம்,"[9] ஆனால் சரித்திரம் கூறும் உண்மை வேறு! காலனி ஆதிக்கம் இந்தியாவில் காலூன்றுவதற்கு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கிறிஸ்தவம் இந்தியாவில் தோன்றி செழித்த மதம் ; அது ஒரு மேற்கத்திய மதம் அல்ல என்ற உண்மையை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

B. தோமா முனிவர்

புகழ் பெற்ற மத ஆராய்ச்சியாளர் டாக்டர் ஃபர்க்குவர் கூறுவது போல் இயேசுவின் பன்னிரண்டு சீஷர்களில் ஒருவரான தோமா அலக்சாந்திரியா விலிருந்து கப்பலில் புறப்பட்டு, குந்தபோரஸ் என்ற அரசனிடம் அந்நாட்களில் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த ஹப்பான் என்பவரோடு சேர்ந்து அந்த அரசனின் தலைநகரான தக்சலாவுக்கு கி.பி.48–49ல் வந்து சேர்ந்தார். இந்த நாடு இப்போது பஞ்சாப் என அழைக்கப்படுகிறது. இந்த பஞ்சாபும், அதன் தலைநகரும் சீனாவிலிருந்து கி.பி.50ல் வந்த இந்தோ ஸ்கைதிய குஷான்களால் பிடிக்கபட்ட போது அவர் தக்சலாவைவிட்டு மலபார் கடற்கரையிலுள்ள முசிரிக்குப் போனார். சகோத்திரா வழியாக அவர் கி.பி.51–52ல் முசிரி சென்றடைந்தார்.[10]

தோமா தமிழ் நாட்டின் கடற்கரைப் பகுதிகளில் வந்து வசிக்க நினைத்தற்குக் காரணம் சென்னையிலும் கொச்சியிலும் கடற்கரைப்[11] பகுதிகளில் ஏற்கெனவே யூதர்கள் குடியேறி வசித்து வந்தனர். இவர்கள் சிதறிப்போன யூதர்கள் காலங்களில் அல்லது சாலமோன் அரசனின்[12] ஆட்சிகாலத்தில் இஸ்ரவேல் நாட்டு வணிகர்கள் தமிழ் நாட்டின் கடற்கரைக்கு[13] வந்த காலங்களில் இப்பகுதிகளில் வந்து குடியேறியவர்கள். இதற்கு வேறொரு காரணம் இருந்தது.

முதல் நூற்றாண்டில் ரோமர்கள் வியாபாரத்தில் மும்முரமாக இவ்விடங்க ளில் ஈடுபட்டிருந்தனர். அரிக்கமேடு, கள்ளிக்கோட்டை, கோயமுத்தூர் ஆகிய இடங்களில் ரோம நாணயங்கள் கிடைத்திருப்பது இதற்கு தக்க சான்றாக அமைகிறது

தோமா அப்போஸ்தலர் வருகை பற்றிய சரித்திர உண்மையை நிலைநாட்ட டாக்டர் அருளப்பா,[14] டாக்டர் ஞானசிகாமணி,[15] கா.நா. சுப்பிரமணியம்,[16] டாக்டர் கயே,[17] டாக்டர் ஜி.யூ.[18] போப் என்பவர்களின் நூல்களிலிருந்து சில ஆதாரங்களை நான் கூற விரும்புகிறேன்.

கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் சிரியாக் மொழியில், அப்போஸ்தலர்களின் உபதேசங்கள் என்று எழுதப்பட்ட நூலில் தோமா அப்போஸ்தலர் இந்தியாவில் இருந்து எழுதிய கடிதங்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. கி.பி. 180க்கும், 230க்கும் இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்ட தோமா அப்போஸ்தலனின் நடபடி கள் என்ற புத்தகத்தில் இந்தியாவில் தோமா சென்றிருந்த இடங்கள் பற்றியும், கி.பி.

20-45 வரை ஆட்சி செய்த குந்தபோரஸ் அரசன் பற்றியும் குறிப்புகள் காணப்படு கின்றன.

டாரதியு கி.பி. 254-313 என்பவர் இந்தியாவில் காலாமினா என்ற இடத்தில் அப்போஸ்தலர் தோமா கொல்லப்பட்டதாக கூறுகிறார்.

எடசாவில் வாழ்ந்த ரூஃபினஸ் கி.பி. 371-396 தோமாவின் எலும்புகள் கி.பி. 394ல் இந்தியாவில் இருந்த எடசாவுக்கு எடுத்துச் செல்லப்பட்டதாக எழுதி வைத்திருக்கிறார். கி.பி. நான்காவது நூற்றாண்டைச் சேர்ந்த தூய எப்பிரேம் என்பவர் தோமா தமது மத நம்பிக்கையின் காரணமாக இந்தியாவில் கொல்லப்பட்டதாக எழுதுகிறார். நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த தூய கிரகோரி, தூய நாசியேன்சியு, தூய அம்புரோஸ், தூய எரானிமஸ் ஆகியோரும் ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த பிஷப் காந்தன்ஷியஸ், தூய பாலினஸ் என்பவர்களுள் தோமா அப்போஸ்தலர் தமது மதநம்பிக்கையின் காரணமாக அவருடைய எதிரிகளால் இந்தியாவில் ஊழியம் செய்த காலத்தில் கொல்லப்பட்டார் என்றும், அவருடைய எலும்புகள் இந்தியாவிலுள்ள அவரது கல்லறையிலிருந்து எடுக்கப்பட்டு எடசாவுக்கு அனுப்பப் பட்டதாகவும் கூறியுள்ளார்.

டூர்ஸ் நகரைச் சேர்ந்த தூய கிரகோரி கி.பி. 544-595 என்பவரும், தூய ஜெரோம் கி.பி. 400 என்பவரும், பிரபல சரித்திர ஆசிரியரான தூய பீட் கி.பி. 8ஆம் நூற்றாண்டு என்பவரும், மேற்கூறிய தகவல்களின் உண்மையை உறுதிப்படுத்துகின்றனர்.

எரேனிமஸ், பீட், ரோமாபுரியின் இரத்த சாட்சிகளும், கீழை நாட்டு இரத்த சாட்சி பட்டியல்களும் இந்த உண்மைகளை வலியுறுத்துவதோடு அப்போஸ்தலர் தோமா கலமினா என்ற இடத்தில் ஈட்டியால் குத்தப்பட்டார் என்றும் குறிப்பிடுகின்றனர்.

சடோசோபிரேணியஸ், கிளிபோட்டடஸ், ஈசிடஸ், டொரோடியூஸ் என்பவர்கள் கலமினா என்று குறிப்பிடும்போது, பின்னால் எழுதிய பாசோரா 13ஆம் நூற்றாண்டு அமிர், 14ஆம் நூற்றாண்டு மார்க்கோ போலோ ஆகியோர் இதனை மைலாப்பூர் என்று குறிப்பிடுகின்றார். கலமினா என்ற சிரியாக் பெயருக்கு சின்ன மலை என்று அர்த்தம். இந்தப் பெயர் கேரளாவிலிருந்து தமிழ்நாட்டுக்கு வந்துபோன சிரியாக் கிறிஸ்தவ அடியவர்களால், மைலாப்பூருக்கு அருகே உள்ள சின்ன மலையைக் கருதிக்கொடுக்கப்பட்டது. ஆனால் பிந்திய நூலாசிரியர் அனைவரும் அதனைப் பழங்கால அரசர்கள் ஆண்ட பட்டினமாகிய மைலாப்பூர் என்றே குறிப்பிடுகின்றனர்.

மேலே கொடுக்கப்பட்ட தகவல் ஏடுகளும், மலபார் கிறிஸ்தவர்களின் சமயச் சிறப்பும் பெற்ற மற்றைய நூல்களும், பாலூர், முசிரி, பாரூர், கோகமங்கலம், சாயல், நிராணம், கொல்லம் ஆகிய இடங்களில் கிறிஸ்தவ சபைகளை அப்போஸ்

தவர் தோமா நிறுவியதாகக் கூறுகின்றனர். "பாலூர் என்ற பெயருடைய கள்ளி, கலியங்காவு, சங்கதாபுரி, பகோளமட்டம் என்ற இடங்களில் வாழ்ந்து வந்த நான்கு குடும்பங்கள் மலபார் கிறிஸ்தவர்களின் குருத் தேவையை சந்தித்து வந்தனர் என்ற செய்தி தோமாவின் திருப்பணி பாலூரில் மக்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளக் காரணமாயிருந்தது என்பதற்கு சான்றாக அமைகிறது"[19] இவ்வாறு விவேகானந்த கேந்திர பிரகாஷன் கூறுகிறது.

கா.நா. சுப்பிரமணியம் தம் நூலில் டி.ஆர்.சே. கூறுவதை எடுத்துக் கூறியுள்ளார். எல்லாத் தகவல்களையும் திரட்டிவைத்து டி.ஆர்.சே. கூறுவதாவது, மேற்கு கடற்கரையில் யூதர்களையும், திராவிட இன மக்களையும் கொண்ட பல சபைகளை அமைத்தபின் தோமா அப்போஸ்தலர் மைலாப்பூர் சென்றார். அங்கு அவர் போகும் முன்பே மக்கள் அவருடைய அற்புதங்களைக் குறித்துக் கேள்விப்பட்டிருந்தனர். மைலாப்பூரில் ஆண்ட ராஜா திருமுழுக்குப் பெற்றதோடு அவருடைய பிரஜைகளில் சிலர் சுவிசேஷத்தை ஏற்றுக் கொண்டனர். இது அங்குள்ள பிராமணர்களுக்கு வெறுப்பு உண்டாக்கியதோடு பொறாமை உணர்வையும் உண்டாக்கியது. அவர்கள் அவரை ஈட்டியால் குத்திக் கொன்றனர்.[20]

விவேகானந்த பிரகாஷன் என்ற பத்திரிகையில் இந்த தகவல் குறித்தக் கூறும்போது "பாரம்பரியம் கூறுகிறது தோமா மூர்க்கவெறி கொண்ட பிராமணர்கள் கையில் சிக்கிக் கொடிய மரணம் அடைந்தார். தோமா இந்த சமயக் காவலர்களின் பகைமைக்குள்ளாகி அவர்களுடைய வெறுப்பைச் சம்பாதித்ததே இதற்குக் காரணம்"[21] என்கிறார் டி.என். கோபால்.

ட. மற்ற அப்போஸ்தலர்களும், தூதுவர்களும்.

தாமஸ் அப்போஸ்தலரை அடுத்து பர்தொலோமேயு வந்தார். இவரும் இயேசுவின் பன்னிரண்டு சீடர்களில் ஒருவர். மேற்கு கடற்கரையிலுள்ள கல்யாண் என்னுமிடத்தில் கொஞ்ச காலம் ஊழியம் செய்தார். பர்தொலோமேயு, ஏழு ஆண்டுகள் மட்டுமே இந்தியாவில் இருந்தார். காரணம் இவருக்கு கடுமையான எதிர்ப்புகள் உண்டாயின. கி.பி. 55-ல் இவர் வந்திருக்கவேண்டும்.[22]

பர்த்தொலோமேயுவின் காலம்முதல் கல்யாண் பகுதியில் ஏராளமான கிறிஸ்தவர்கள் வாழ்ந்து வந்தனர். கி.பி. 522ல் இந்தியாவுக்கு வந்த புகழ்வாய்ந்த உலக சுற்றுப்பயணியான காஸ்மோஸ் இன்டிகோப்ளுயேஸ்டஸ் "கிறிஸ்தவர்கள் உலகில் வாழும் பகுதிகள்" என்ற அவருடைய அரிய நூலில் "கல்யாணாவில் பாரசீகத்திலிருந்து அனுப்பப்பட்ட ஒரு பிஷப் இருந்து வந்தார்"[23] என்று குறிப்பிடுகிறார்.

"பர்தொலோமேயு காலத்தில் கிறிஸ்தவர்கள் தங்களைச் சுற்றியுள்ள சூழ்நிலையின் போக்குக்குத் தங்களைக் கொஞ்சம் கொஞ்சமாக விட்டுக் கொடுத்துவிட்டனர்"[24] என்று கா.நா. சுப்பிரமணியம் எழுதுகிறார்.

அதையடுத்து ஸ்தோயிக் தத்துவஞானியாக இருந்து கிறிஸ்தவ சந்நியாசியாக மாறின பாண்டேனஸ் என்பவர் கி.பி. 189ஆம் ஆண்டில் மேற்குக் கரையோரம் வந்தார். அலக்சாந்திரியாவைச் சேர்ந்த இளமந்து என்ற கிறிஸ்தவ முனிவர் கி.பி. 160-220 இவருடைய மாணாக்கரே. கிளமந்து, தனது ஆசிரியர் சந்தித்த பிராமணர்கள், பௌத்தர்கள், இந்திய சந்நியாசிகளைக் குறித்து எழுதுகிறார்.[25]

பாரசீக வளைகுடாவிலிருந்து கி.பி. 295ம் ஆண்டில் இந்தியாவுக்கு பர்சாநகரைச் சேர்ந்த டேவிட் வந்தார். இவர் சரித்திரத்தில் குறிப்பிட்டபடி இந்தியாவின் முதல் பிஷப் ஆவார்.[26]

சேருமன்- பெருமாள் கி.பி. 341-378 என்ற அரசனின் ஆட்சிக் காலத்தில் நைதாமஸ் என்ற புகழ்பெற்ற சிரியாக் கிறிஸ்தவர் மேட்ரோபாலிட்டன் மார் ஜோசப்போடும் மற்றும் சில மத குருக்களோடும் 400 சிரியாக் கிறிஸ்தவர்களோடும் இந்தியாவுக்கு வந்தார். இவர்கள் யாரென்றால், சிரியாவில் கிறிஸ்தவர்களுக்கு இரண்டாம் சப்போர் என்ற அரசன் காலத்தில் கி.பி. 339-379 உபத்திரவங்கள் உண்டானபோது நாட்டைவிட்டு ஓடிவந்த கிறிஸ்தவர்கள் இவர்கள் அனைவரும் கி.பி. 345ல் கிரங்கனூர் என்ற இடத்தில் கப்பலில் வந்து இறங்கினார்கள். இந்த நைதாமஸின் இரண்டாவது மனைவி ஒரு நாயர் பெண்ணாக இருந்தாள்.[27] சிரியாக் கிறிஸ்தவர்களில், இரண்டாவது கூட்டம் கி.பி. 774லும் மூன்றாவது கூட்டம் கி.பி. 822லும், வந்து சேர்ந்ததாக சரித்திரம் கூறுகிறது. சரித்திரத்தில் குறிப்பிடப்படாத வேறு சில சிறு குழுக்களாகவும் சிரியாக் கிறிஸ்தவர்கள் அதிகமான அளவில் வந்து குடியேறியிருக்க வேண்டும்.

முதல் சில நூற்றாண்டுகளில் வாழ்ந்த இந்தியக் கிறிஸ்தவர்கள் காஸ்மோஸ் கி.பி. 522-ல் எழுதிய நூலில் இந்தியாவில் தான் பயணம் செய்த காலத்தில் தென்மேற்கு இந்தியாவில் மட்டுமல்லாமல் இந்தியாவின் பல பாகங்களில் மிகப் பெருமளவில் கிறிஸ்தவர்கள் வாழ்ந்து வந்ததாகக் குறிப்பிடுகிறார்.[28] திராவிட நாட்டில் யூதர்கள், சிரியர்கள், திராவிடர்களுக்கிடையில் கொஞ்சங்கொஞ்சமாக இனக் கலப்பு ஏற்பட்டது.[29], [30] மார்சப்போர் என்ற பிஷப் தலைமையில் இருந்த கிறிஸ்தவர்கள் கி.பி.825ல் தாணு இரவி[31] என்ற அரசன் காலத்தில் கொல்லம் என்ற பட்டணத்தைக் கட்டினார்கள்.

கிழக்கு நாடுகளில், தூய திருச்சபை சரித்திரம் என்ற நூலில் திராவிட நாட்டில் வாழ்ந்த ஆதிக் கிறிஸ்தவர்கள் பற்றி நீல் என்ற சரித்திர ஆசிரியர் 'இவர்கள் உழைப்பாளிகள், தெளிவான மொழி பேசுபவர்கள், பெற்றோர்களையும் பெரியவர்களையும், குருமார்களையும் மதிப்பவர்கள், இவர்கள் பெரும்பாலும் வியாபாரிகள். தாராள குணம் படைத்த உயர்ந்த பண்பாளர்களாக எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்கள். மிகவும் ஆசார குணம் படைத்தவர்கள். இவர்கள் மதுபானம், மாமிசம் புசிப்பது அரிது'[32] என்று எழுதுகிறார்.

இரண்டாம் சப்போர், எஸ்டிகாட், ஐந்தாம் பஹரேய்ன் என்ற அரசர்கள் காலத்தில் கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்பட்டதைத் தொடர்ந்து, நெஸ்டோரியக் கிறிஸ்தவர்கள், பெத்அபி குரு மடம் மற்றும் பல குரு மடங்களைச் சேர்ந்த மத குருக்களும், கி.பி. 4-ஆம் நூற்றாண்டு முதல் இந்தியாவில் வந்து குடியேறினர். இந்த விபரங்கள் பற்றி தெளிவாக டாக்டர் ஸ்டூவர்ட்[33] தமது நூலில் எழுதியுள்ளார்.

கி.பி. 354-ல் இந்தியாவிலிருந்து அரேபியா, அபிசினியா, இலங்கை ஆகிய நாடுகளுக்கு அனுப்பப்பட்ட இந்திய மிஷினெரி ஒருவரைப் பற்றி எரியன் பிலோஸ்ட் ஆர்கியஸ் என்பவர் தமது நூலில் எழுதுகிறார். மேலும், இந்தியக் கிறிஸ்தவர்கள் தங்கள் ஆராதனைகளில் உட்கார்ந்தபடி வேதம் வாசிக்கக் கேட்கிறார்கள் எனக் குறிப்பிட்டுள்ளார். தானியேல் என்ற இந்தியர் சிரியாக் மொழியில் வேதத்தை ரோமர் நிருபத்தை எழுதியதாக இசோதாத் எழுதுகிறார்.[34] கி.பி. 525-ல் கங்கை நதிச் சமவெளியில் கிறிஸ்தவர்கள் பெருமளவில் கூட்டம் கூட்டமாக வாழ்ந்ததைக் காஸ்மோஸ் பார்த்ததாக எழுதியுள்ளார் என்று அசிமனி தமது நூலில் குறிப்பிடுகிறார்.

கி.பி. 356-ல் இலங்கைத் தமிழர் தியோபிலஸ் பிஷப்பாக திருப்பணிவிடைக்கு ஏற்படுத்தப்பட்டார். கி.பி. 325-ல் நடைபெற்ற நீசேயன் கவுன்சில் என்ற அந்த சரித்திரப் பிரசித்தி பெற்ற கூட்டத்தில் ஒரு இந்திய பிஷப்பும் பங்கேற்றார். பஞ்சாப் மாநிலத்தில் உள்ள கண்டிஸ்பூர் சாகாபாத் கி.பி. 893-ம் ஆண்டில் பிஷப் இருக்கும் ஒரு மெட்ரோபாலிடன் ஆகிவிட்டது. கி.பி. 1222-ல் பாட்னா அங்ஙனமே ஒரு மெட்ரோபாலிடனாக மாறியது.[35]

பேரருட் தந்தை வி.எலியா கி.பி. 1503-ம் வருஷம் ஒரு மெட்ரோபாலிட்டன் பிஷப்பை அபிஷேகம் கொடுத்து இந்தியாவுக்கு அனுப்பி வைத்தாராம். ஆறு முதல் பன்னிரண்டு பிஷப்மார்களும், அவர்களின் அருளாட்சியின் கீழ் ஏராளமான இந்திய கிறிஸ்தவர்களும் இருந்து வந்தார்கள் என்பதை இது உறுதிப் படுத்துகிறது.[36]

திராவிட நாட்டில் கிறிஸ்தவர்களின் சின்னங்களாக இருந்த கருப்புக்கல் சிலுவைகள், சாசனியன் வம்ச அரசர்கள் ஆண்ட பாரசீக சாம்ராஜ்யத்தில் மொழியாகிய பஹ்லாவி மொழியில் எழுதப்பட்ட எழுத்துக்களோடு சென்னைப் பட்டணம் முதல் முட்டுச்சரா வரை காணப்படுகின்றன.

1498ல் கள்ளிக்கோட்டை வந்த வாஸ்கோட காமா கேரளாவில் இரண்டு லட்சத்துக்கும் மேற்பட்ட கிறிஸ்தவர்கள் இருந்ததாக எழுதி வைத்திருக்கிறார்.[37]

[38] திருவிதாங்கோடு அரசாங்க குறிப்பேட்டில் இந்தியாவில் முதல் முதலாக வந்த வெள்ளைக்காரன் வாஸ் கோட காமாவின் காலத்திற்கு வெகு முன்பு ஆதிகாலத்திலிருந்தே கன்னியாகுமரி மாவட்டத்தில் கிறிஸ்தவர்கள் கூட்டம் கூட்டமாக வாழ்ந்து வந்தனர் என்பதற்கு கல்நாட்டு ஆதாரங்கள் உண்டு.

ஸ்டிரிக்லாண்ட், மார்ஷல்[39] என்பவர்களின் கணக்குப்படி இந்தியாவுக்கு வெள்ளைக்காரர்கள் எவரும் வருவதற்கு முன்பே பத்து லட்சம் கிறிஸ்தவர்கள் இந்தியாவில் இருந்தனராம். இன்றும் கிறிஸ்தவர்களின் சதவீதம் இதுதான்.

ஆதியில் வாழ்ந்த கிறிஸ்தவர்களில் பெரும்பாலானோர் சமயதுவேஷத்தால் ஏற்பட்ட உபத்திரவங்களைச் சகிக்க மாட்டாமல் கிறிஸ்தவ மதத்தைவிட்டு விலகினார்கள், என்பதற்கு ஏராளமான சான்றுகள் உள்ளன. மாராதா, சித்திக்கள்,[40] எல்லாணி சுமாவாருக்கள்,[41] மற்றும் இதுபோன்ற கூட்டத்தினர் தங்களுடைய பூர்வீக கிறிஸ்தவப் பழக்க வழக்கங்களின் அடையாளங்களை உடையவர்களாய்க் காணப்படுகின்றனர். கேரளாவில் உள்ள கிறிஸ்தவர்கள் தாரியாய்க்கள் ஒரு காலத்தில் மைலாப்பூரிலிருந்த உபத்திரவங்களைத் தாங்க முடியாமல் ஓடி வந்த கிறிஸ்தவர்களே.[42]

சோழ நாட்டிலும் பாண்டிய நாட்டிலும் வாழ்ந்த கிறிஸ்தவர்களிலும் பெரும் பகுதியினர் உபத்திரவங்களுக்கு ஆளாகினர்.[43] சேரநாட்டு அரசர் மேற்குக் கடற்கரையில் வாழும் கிறிஸ்தவர்களுக்கு அதிக சலுகைகள் வழங்குவதைப் பார்த்து அவ்வரசனோடே பகைமை கொண்டு இருந்த சோழ அரசரும் பாண்டிய அரசரும் அவர்கள் ஆட்சியில் வாழ்ந்துவந்த கிறிஸ்தவர்களை உபத்திரவப்படுத்தத் தொடங்கினர்.[44]

முதல் நூற்றாண்டு தொடங்கி கிறிஸ்தவர்களுக்கு வழங்கப்பட்ட பெயர் நாசரேணி, சிரியன், மணி கிராமாக்கர், தாரியாய்க்கள் சுதிஷ்ட் சான்றோர் என்பவை போதகர்களுக்கு கட்டனார்,[45] அய்யன்,[46] அச்சன் என்ற பெயர்கள் கொடுக்கப்பட்டன.

## E. பழங்கால இந்திய சிந்தனையிலும் இலக்கியங்களிலும் கிறிஸ்தவ செல்வாக்கு முத்திரை:-

இந்திய இலக்கியங்களில் கிறிஸ்தவ சிந்தனைகள் இழையோடிக் கிடப்பதை ஏராளமான இடங்களில் காண்கிறோம். டாக்டர் ஞானசிகாமணி கூறுவது போல் முதல் நூற்றாண்டு தொடங்கி அநேக தமிழ் இலக்கியங்கள் படைக்கப்பட்டுள் ளன. கிறிஸ்தவ கருத்துக்கள் இலக்கியங்களில் இடம் பெற ஆரம்பித்தன. திருக்குறளில் இது அதிகம் காணப்படுவதாக அறிஞர்கள் கருதுகின்றனர். கிறிஸ்தவ அடிப்படையில் திருக்குறள்[47] எழுதப்பட்டது என டாக்டர் சத்தயமும், டாக்டர் காமாட்சியும்[48] ஆராய்ந்து பார்த்துள்ளனர்.

திருக்குறளை அந்த நாட்களில் ஆராய்ந்து படித்த டாக்டர் ஜீயூபோப், வள்ளுவர் மைலாப்பூரில் நெசவுத் தொழில் செய்து வாழ்ந்து வந்தார். அவருடைய இனம் பறையர் இனம்; மைலாப்பூரில் தூய தோமா வேலால் குத்தப்பட்டு மரணம் அடைந்தார் என்கிறார். மேலும் மைலாப்பூரில் அலெக்சாந்திரியாவைச் சேர்ந்த பாண்டேனஸ் உபதேசித்து வந்தார். இந்த வள்ளுவருக்கு ஜைனமதம் மற்றும், மதங்களின் கோட்பாடுகளும் தெரியும்.

தனது அற்புதமான திருக்குறளில் கிறிஸ்தவ கருத்துக்களை அதிகம் புகுத்தி எழுதினார் என்கிறார்[49]

திருக்குறளின் இன்றைய தலைசிறந்த ஆராய்ச்சியாளராக விளங்கும் புலவர் தெய்வநாயகம்[50] வள்ளுவர் வாழ்ந்த காலத்தைப்பற்றி அரும்பெரும் ஆராய்ச்சிகளைச் செய்துள்ளார் டாக்டர் தெய்வநாயகம்,[52 53] டாக்டர் அருளப்பா ஆகியோர் எழுதிய ஐந்து அரிய நூல்களில் திருக்குறளில் வரும் கடவுளின்[51] குணாதிசயங்கள், மனம் திரும்புதல், ஒப்புரவு, கிடைத்ததற்குரியஅருள், வான்,பாவம், ஆவி, நரகம், பிசாசு ஆகியவைபற்றிய கோட்பாடுகள் காணப்படுகின்றன திருக்குறள் கிறிஸ்தவக் கருத்துக்களை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது என்ற உண்மையை இவர்கள் தெள்ளத் தெளிவாக விளக்கி கூறுகின்றன

வடக்கேயிருந்து வந்து வளரத் தொடங்கிய பிராமண மதத்தினால் மற்ற மதங்கள் தெற்கே செல்வாக்கில் குறையத் தொடங்கின அவைகளின் மதநூல்களும், முக்கியத்துவம் இழந்தன. அதைக்குறித்து கே. ஆர் சீனிவாச ஐயங்கார் பேசும்போது "இந்து சமயத்தில் புதிய சக்திகள் உருவெடுத்து ஜைன பௌத்த மதங்களின் ஆதிக்கம் சமுதாயத்திலும் இலக்கியத்திலும் இல்லாமல் போகச் செய்தன என்கிறார்"[54] கடவுளை நம்பாத பௌத்த ஜைன மதங்களுக்கு நேர்ந்த காரியம், ஏற்கனவே நன்கு அறிந்த காரணங்களால் கடவுளை நம்பும் கிறிஸ்தவ சமயத்துக்கும் நேர்ந்துவிட்டது.

சாது செல்லப்பா,[55] டாக்டர் தெய்வநாயகம்,[56] டாகடர் அருளப்பா[57] போன்றவர்கள் சோழ நாட்டில் பிராமண சமயம் வைணவம் மற்ற சமயங்களின் இலக்கியங்களை கொஞ்சம் கொஞ்சமாக திட்டமிட்டு அழித்து விட்டதைக் குறித்து கூறுகின்றனர். மூன்றாம் குலோத்துங்கன் என்ற ஆரிய அரசன் ஆண்டகாலத்தில் 'குக்கை இடிக்கலகம்' என்ற பிரபல்யமான சம்பவம் நிகழ்ந்தது. இது மற்ற மதங்களை அழிக்க தீட்டிய திட்டமே. தமிழ்நாட்டில் பாண்டிய நாட்டுப்பகுதியில் பிராமணியமல்லாத மற்ற சமயங்களைச் சார்ந்தவர்களைக் கழுவேற்றிக் கொன்ற விதத்தை ஹனுமந்தன்[58] விவரிக்கிறார். முதலாம் மகேந்திரவர்மன் மற்ற சமய மக்களை அழிக்கும் நோக்கத்துடன் பல பட்டணங்களையும் கிராமங்களையும் முழுமையாக அழித்தான் என்று ராஜமாணிக்கனார்[59] கூறுகிறார். கர்நாடக மாநிலத்தில் உள்ள பர்கூர் என்ற கிராமம் இப்படி அழிக்கப்பட்டதை சர்மா[60] ஒரு எடுத்துக்காட்டாகக் கூறுகிறார். பிராமணியத்திற்கு புறம்பான மதகோயில்கள் பிராமணீய மதக்கோயில்களாயின. நாகர்கோயிலிலுள்ள சைவக்கோயில் ஒன்று இப்படி பிராமணிய மதக் கோயிலாக வைணவக் கோயிலாக மாற்றப்பட்டதை நல்ல உதாரணமாக சிதம்பரம் பிள்ளை[61] கூறுகிறார்.

இப்படிப்பட்ட உபத்திரவம் நிறைந்த சூழ்நிலைகளில் பிராமணியத்தைச் சேராத தமிழ்பக்தி இலக்கியங்கள் ஏராளம் எழும்பின. எந்த மதக்கடவுள் பெயரோ அடையாளமோ இல்லாதபடி 'அருள்' என்னும் கிடைத்தற்கரிய இணையற்ற கிருபைக் கோட்பாட்டினையும் அதனோடு 'சிவம்' என்ற அன்புக்கோட்பாட்டினையும் அடிப்படையாகக் கொண்டு இவை எழுதப்பட்டன.[62]

பிற்காலத்தில் இவைகளைத் திரித்து இவற்றில் வழிபாட்டு உருவங்களை சேர்த்துக் கெடுத்துவிட்டனர். இந்த கடவுளைச் சார்ந்த ஆஸ்தீக பக்தி இலக்கியங்கள் கடவுளைச் சாராத நாஸ்தீக மதங்களான (கடவுள் அல்லது பரம்பொருள் ஒன்று இல்லையென மறுப்பவை) பௌத்த, ஜைன மதங்களிலிருந்து தோன்றியிருக்க முடியாது. கண்டதையும் கடவுளென்று நம்பும் (Pantheism) திராவிட மதங்களிலிருந்து தோன்றியிருக்க முடியாது. எனவே தமிழ் நாட்டின் பக்தி இலக்கியங்களுக்கு கிறிஸ்தவக் கோட்பாடுகளே அடிப்படையானவை என்ற தவிர்க்கமுடியாத ஒரு முடிவிற்கு நாம் வரவேண்டியதாகிறது. இவை எந்தவித உருவகமுமின்றி அமைந்து இருப்பதால் உபத்திரவங்களில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள் படைத்த இலக்கியங்களே. தமிழில் 'சிவம்' என்ற பதம் சித்தர்கள் முதல் நாயன்மார்கள் மற்றும் வள்ளலார் ராமலிங்க அடிகள் வரை உள்ள காலங்களிலெல்லாம் 'அன்பை' குறிக்குமேயின்றி அது புராணங்களில் வரும் 'சிவனை'க்[63] குறிக்காது. இந்த இரு பதங்களுக்கும் எந்தவிதப் பொருத்தமுமில்லை.

சித்தர்களின் சிறப்பான இலக்கியங்களை நாம் இங்கு குறிப்பாக காண வேண்டும். 'சித்தர்கள் பதினெட்டுப் பேர்கள் அவர்கள் சார்ந்திருந்த மதத்தைக் குறித்து தெளிவாக ஒன்றும் கூறமுடியவில்லை. என்று பேராசிரியர் கே.கே. பிள்ளை கூறுகின்றார்.[64]

அகத்தியர் எழுதிய முப்பது பாடல்களைக் கொண்ட அகத்தியர் ஞானம் என்ற நூலை எந்த சந்தேகத்திற்கும் இடமின்றி ஒரு கிறிஸ்தவ நூலாகக் காணலாம். இதை வைத்து டாக்டர் ஞானசிகாமணி அவர்கள் இணையற்ற ஒரு ஆராய்ச்சி நூலைப் படைத்துள்ளார்.[65] மெய்கண்ட சாத்திரத்தில், அவதாரமெடுத்த தெய்வ குமாரனைக் காண எகிப்திற்குச் செல்வதாகக் கவிஞர் பாடியுள்ளார்.

யாகோப் என்ற மறுபெயர்கொண்ட ராமத்தேவர்[66] பதினெட்டு சித்தர்களில் ஒருவர். கிறிஸ்தவ கோட்பாடுகள் சித்தர்களில் பல பாடல்களுக்கு அடிப்படையாய் அமைவதைப் பல இடங்களில் நாம் காணலாம்.

காலப்போக்கில் அழிக்கப்படாமல் தெய்வாதீனமாகக் காப்பாற்றப்பட்டவை இந்த ஒருசில இலக்கியங்களே. இவை தமிழகத்தில்[69] தோன்றிய திராவிட[67] மக்களின் பக்தி இயக்கத்தில்[68] கிறிஸ்தவ சத்தியங்களே வேராக நின்றதை தெளிவாக்குகின்றன. இவை இந்தியாவில்[70] பிற பகுதிகளுக்கும்[71] பரவின.

இவ்வாறு கிறிஸ்தவம் இந்தியாவில் பிற மதங்களைப் போலவே பழமையானதும், கிழக்கே தோன்றினதும் இந்த நாட்டைச் சேர்ந்ததுமான மதம் என்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை.

3

# மிஷினெரிகளின் பெருந்தொல்லை.

''மிஷினெரிகளின்'' என்ற சொல்லைக் கேட்டவுடன் அவர்கள் அந்நியர்கள், நிறையப் பணம் வைத்திருப்பவர்கள், ஏகாதிபத்தியவாதிகள், மற்ற நாட்டின் மீது ஆதிக்கம் செலுத்த வந்தவர்கள் என்பது போன்ற எண்ணங்களே சாதாரணமாக வரும்.

இந்த விஷயம் குறித்து மற்ற அத்தியாயங்களில் நிறைய விவாதிக்கப்பட இருக்கிறது. இப்போது இரண்டு குறிப்புகளை மட்டும் எடுத்துக் கொள்வோம்.

எந்த மத மிஷனெரிகள் ?

எந்த நாட்டு மிஷனெரிகள் ?

எல்லா பெரிய மதங்களிலும் மிஷனெரிகளைக் காண்கிறோம். பௌத்தமத மிஷனெரிகள் மேற்கு ஆசியாவிலும் வட ஆப்பிரிக்காவிலும் மத்திய ஆசியாவிலும் தென்கிழக்கு ஐரோப்பாவிலும் இமயமலை நாடுகளிலும் சீனா, கொரியா,

ஜப்பான் போன்ற நாடுகளிலும் மற்றும் தூர கிழக்கு தீவுகள் அனைத்திலும் சென்று தங்கள் மதத்தைப் பரப்பியுள்ளனர்.[1] [2] காலவரிசைப்படிப் பார்த்தால் பௌத்த மதம் தான் உலகமுழுவதிலும் மதம் பரப்பும் வேலையைச் செய்த பழம்பெரும் மிஷனெரிமதம்.

இரண்டாவதாக பிராமண மதம் வேத, ஆரியதர்மம்.[3] சுவாமி விவேகானந்தர் கிறிஸ்தவ மிஷனெரிமார்களைக் குற்றஞ்சாட்டிப் பேசின ஒரு சந்தர்ப்பத்தில் நாங்கள் எங்காவது எங்கள் மதத்தைப் பரப்ப மிஷினெரிகளை அனுப்பியிருக்கிறோமா? என்ற கேள்வியைக் கேட்டார்.[4] சரித்திரம் இதற்கு 'ஆம்' என்றே பதில் தருகிறது. பிராமண மதம் மலாய் தீபகற்பத்தில் கம்போடியா, அண்ணம், சுமத்திரா, ஜாவா, பாலி, போர்னியோ போன்ற நாடுகளில் பரவிய விதம் குறித்துப் பேசும்போது டாக்டர் மஜீம்தார், ''பௌத்தமதம் எங்கும் பரவியிருந்த போதிலும் பிராமண மதம் இந்நாடுகளில் செழித்திருந்தது. இந்நாட்டுக்குடிகள் தங்களை ஆண்ட மக்களின் ஆசாரத்தைத் தழுவி விட்டனர்'[5] என்கிறார். அந்த அகண்ட நிலப்பரப்பில் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பிராமண மதம் அங்கு வாழ்ந்த பல்வேறு இனமக்களின் வாழ்க்கையைப் பெருமளவில் பாதித்தது என்கிறார் அவர். இந்துமதம், (பிராமணமதம்) இந்தியாவில் உச்சக் கட்டத்தில் இருந்தபோது இந்தியாவின் ஆதிக்க நாடுகளிலும் அது ஒரு செல்வாக்குள்ள மதமாகவே இருந்தது. இந்தியாவில் பிராமணியத்தின் வீழ்ச்சி ஏற்பட்டபோது அதன் ஆதிக்க நாட்டு மக்களிடையேயும் இந்து மதம் வீழ்ச்சி அடைய ஆரம்பித்தது. இந்துமதத்தை அந்நியர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்ற பொதுவான கருத்து சரியல்ல என்பதை இக்குடியேற்ற நாடுகளைப் பார்த்தால் நாம் அறிந்துகொள்ளலாம். இந்தியா மற்ற நாடுகளை ஆண்டு அங்கெல்லாம் இந்தியாவின் கலாச்சாரத்தை பரவச்செய்த காரியம் இந்திய சரித்திரத்தின் ஒளிமயமான காலத்தின் ஓர் அம்சமாகும் என்கிறார் மஜீம்தார்.[6]

இந்தியாவிற்குள்ளேயே பிராமணமதம் ஒரு தீவிர மிஷனெரி மதமாக இருந்து வந்தது. இந்தியாவில் ஆரியரல்லாத பிற இனங்களுக்குள்ளும், ராஜ்யங்களுக் குள்ளும் பிராமணமதம் எப்படிப் பரவியது என்பதை பின்னால் வரும் அத்தியாயங்களில் நாம் காணப்போகிறோம். ஆரியமதம் மிஷனெரி மதமாக இருந்திராவிட்டால் இந்தியா முழுமையும் அது பரவியிருக்க முடியாது என்கிறார் டாக்டர் அம்பேத்கார்.[7]

''டிஸ்கவரி ஆப் இந்தியா'' என்ற தமது நூலில் ஜவஹர்லால் நேரு தூர கிழக்கு நாடுகள் அனைத்திலும், பிராமணமதம் கொண்டு செல்லப்பட்டுப் அங்கு பரப்பப்பட்டது என்று எழுதுகின்றார். கி.பி. முதலாம் நூற்றாண்டிலிருந்தே தெற்கு நாடுகளிலும் தென்கிழக்கு ராஜ்யங்களிலும் இந்தியர்கள் வியாபாரம் செய்வதற்காகச் சென்று குடியேறினார்கள். இந்திய வியாபாரிகள் சென்றதை அடுத்து பிராமண மிஷனெரிகள் அங்கு சென்றிருக்கலாம். இந்தியாவிலிருந்து சென்ற மதங்கள் இந்தக் கிழக்கத்திய நாடுகளிலெல்லாம் பரவின. முதலாவது

பரவிய மதம் பிராமண மதமே. அதனைத் தொடர்ந்து இங்கு பௌத்தம் பரவியது. ஜாவா நாடு ஒரு பிராமணிய நாடாகவே இருந்துவந்தது.[8]

தென்கிழக்கு நாடுகளில் பொருள் ஈட்டும் நோக்கத்தோடல்லாமல் பிராமண மதத்தைப் பரப்பும் மிக முக்கிய நோக்கத்தோடே பிராமண மிஷனெரிகள் இந்நாடுகளுக்குச் சென்றனர். அடிப்படையாயிருந்தகாரியம் இந்நாடுகளைச் சமஸ்கிருத மயமாக்க வேண்டும், பிராமணிய, மயமாக்க வேண்டும் என்பதே"[9] என்று லுஃப்ஸ் தமது நூலில் எழுதியிருப்பதாக இந்து மத ஆராய்ச்சியாளர் டாக்டர் எ.எல். பாஷம் கூறுகின்றார்.

'இந்தியாவின் ஆன்மா' என்ற நூலில் "எல்லா நாகரீகங்களிலும் இருந்துவந்த ஆதிக்க எண்ணம் இந்தியர்களையும் ஆட்கொண்டது. இந்திய வியாபாரிகள், போர் வீரர்கள் மற்றும் பிராமண மிஷனெரிகள், பௌத்த மிஷனெரிகள் ஆகியோர் அலையலையாகச் சென்று தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கடற்கரைகளை மோதிக் கொண்டிருந்தனர்" என்று அமௌரி டி. ரென்கோர்ட் எழுதுகிறார்.[10]

ஆரியவர்த்தாவை வட நாட்டை பௌத்தர்கள், இஸ்லாமியர்கள், பிரிட்டீஷ்கா ரர்கள் பிடித்து ஆண்டு சொற்ப காலங்களில் மட்டும்தான் இந்த பிராமண மிஷனெரி வேகம் மங்கியது. இந்த நூற்றாண்டில் மீண்டும் பிராமண மதத்தில் ஏற்பட்டுள்ள எழுச்சியும் மறுமலர்ச்சியும் இந்த நாடு முழுவதிலும் உலக அளவிலும் மிஷனெரி வேகத்தை முடுக்கி விட்டிருக்கிறது. இன்று ராமகிருஷ்ணா மிஷன், அஸாம் இந்து மிஷன், ஆரிய சமாஜ், விஷ்வ உறிந்து பரிஷத் போன்ற பல மிஷனெரி சங்கங்களும் இன்னும் ஜெட் விமானச் சுவாமிகளும், பில்லியன் டாலர் பகவான்களும் தோன்றிச் செயல்பட்டு வருவதை நாம் எல்லோரும் நன்கறிவோம்.

1981-ல் மீனாட்சிபுரம் என்ற கிராமம் மதங்களின் இழுபறிக்குரிய இடமான போது, பிராமண மிஷனெரிகள் ஒரு அமெரிக்க இந்து மிஷனெரிய முக்கியப் பேச்சாளராக அங்கு கொண்டு வந்து மக்களைக் கவரும் நடவடிக்கையில் உடனடியாக இறங்கினார்கள். 1984 பெப்ரவரியில் சேலத்தில் நடந்த தமிழ் நாடு இந்து முன்னணி வருடாந்திர மாநாட்டில் அர்ஜீன்நாதா், ஆனந்த ஸ்வரூப்[11] என்ற இரு இத்தாலிய இந்து மிஷனெரிகளைக் கொண்டு வந்தனர். இப்போது இந்தியாவில் இப்படிப்பட்ட வெள்ளைக்கார இந்து மிஷனெரிகள் ஆயிரக்கணக் கில் உண்டு.

கலிபோர்னியாவிலிருந்து வெளியாகும் 'தி பார்வர்டு' என்ற பத்திரிகை, 1982ம் ஆண்டில் பகவான் ராஜினீஷ் இரண்டரை லட்சம் வெள்ளையர்களை இந்து சந்நியாசிகளும் சந்நியாசினிகளுமாக்கிவிட்டார் என்று கூறுகிறது இன்று இந்தியாவில், வெள்ளைக்கார இந்து மிஷனெரிகள், வேன்களில் பல இடங்களுக் குச் சென்று தீவிரமாக பிரச்சாரம் செய்து மதத்தைப் பரப்பிவருவதைப் பார்க்கிறோம்.

இந்தியாவில் உள்ள கிறிஸ்தவ ஆஸ்பத்திரிகளில், காசநோய் மருத்துவ மனைகளில் தொழுநோய் இல்லங்களில், தொழிற்கூடங்களில், பராமரிப்பு நிலையங்களில், சிறப்புப் தொழில் கற்பிக்கப்படும் பணிக்கூடங்களில் வெளிநாட்டுக் கிறிஸ்தவர்கள் மொத்தத்தில் சுமார் ஐநூறு பேர் இருக்கின்றனர். இந்தப் பணிஸ்தலங்கள் இன்று இந்தியக் கிறிஸ்தவர்களைக் கொண்டே இயங்கி வருகின்றன. இந்திய நாட்டு வல்லுநர்களை வெளிநாட்டு வல்லுநர்கள் இடத்தில் இப்போது கொஞ்சங் கொஞ்சமாக இந்தியர்களையே அரசாங்கமும், கிறிஸ்தவ ஸ்தாபனங்களும் அமர்த்தி வருகின்றன.

சிலர் வெளிநாடுகளிலிருந்து கிளம்பி "உலகம் முழுவதும்" தனியாக சுவிசேஷம் அறிவித்துவிட வருகின்றனர். மக்களைப் பற்றியோ அவர்கள் கலாச்சாரம் பற்றியோ எந்தவித தெளிவுமின்றி தங்கள் மூன்று நாள் குருசேடுகளை நடத்தி முடித்துவிட்டுப் போவதன் மூலம் இவர்கள் சுவிசேஷம் பரவச்செய்யும் பணியில் நன்மை செய்வதைவிட, தீமையே புரிகின்றார். இவர்கள் இல்லாமலே இந்திய திருச்சபைகள் நன்றாக ஊழியம் செய்ய முடியும்.

19ம் நூற்றாண்டில் இந்தியாவில் வெள்ளைக்கார மிஷனெரிகள் நற்செய்திப் பணியில் ஈடுபட்டிருந்த நேரங்களில் கூட நற்செய்திப் பணிகளை முன் நின்று நடத்தி வைத்தவர்கள் இந்தியக் கிறிஸ்தவர்களே. தமிழ் நாட்டின் தென் பகுதியில்[12] சென்று முதன் முதலாக சபையை ஸ்தாபித்த பெருமை மகாராஷ்டிராவைச் சேர்ந்த ஒரு அம்மையார் அவர்களையே சாரும். அங்ஙனமே திரு வேதமாணிக்கம் என்ற இந்தியக் கிறிஸ்தவரே திருவிதாங் கோடுக்கு சுவிசேஷத்தை எடுத்துச் சென்றார். தமிழ் தாவீது என்பவர் கேரளப்பகுதிகளில் சுவிசேஷம் அறிவித்து ஏராளமான மக்களை கிறிஸ்துவண்டை வழி நடத்தினார். காசிக்குன்றுகளில் கிருஷ்ண சந்திர பாலும், கூச்பீகாரில் சந்தாலீ மக்களும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தனர்.[13] தமிழ் நாட்டைச் சேர்ந்த பிஷப் வேதநாயகம் அசரியா அவர்கள் ஆந்திராவில் உள்ள தோர்ணக்கல்லுக்கு நற்செய்தியைக் கொண்டு சென்றார்.[14] பஞ்சாபிலுள்ள குருதாஸ்பூருக்கு தீட் என்பவரால் சுவிசேஷம் கொண்டு செல்லப்பட்டது. பஞ்சாபிக் கிறிஸ்தவர்கள்,[15] உத்தரப் பிரதேசத்திலுள்ள முசாபி சீக்கியர்களுக்கு சுவிசேஷம் அறிவித்தார்கள். கோதுல்லா என்ற அஸ்ஸாமியர் தன் உயிரைத் துச்சமாக மதித்து, நாகர்களிடம் சென்று முதன் முதலாகச் சுவிசேஷம் அறிவித்தார்.[16] ஆந்திரப் பிரதேசத்தின் பல பகுதிகளில் தேசிகாச்சாரி அப்பாவு, அபிஷேக நாதன் முக்தியால்பாப் ஞானமுத்து[17] என்ற தமிழ் நாட்டு சுவிசேஷகர்கள் சென்று நற்செய்தியை அறிவித்தனர். இது போன்ற, இன்னும் பல இந்தியர்களாலேயே இந்தியாவில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு வந்தது. அவர்களின் பெயர்களை கூறினால் அது நீண்டதொரு பட்டியலாக அமையும்.

நியோகி கமிஷன் அறிக்கையின்படி பல இடங்களில் வெள்ளைக்காரர்கள் வருவதற்கு முன்பே மக்கள் திரளாக கிறிஸ்தவமதத்தில் சேர்ந்திருந்ததாக காண்கிறோம். 1907ஆம் ஆண்டு ஜாஷ்பூர் ராஜ்யத்தில் எந்த வெள்ளை

மிஷினெரியும் அனுமதிக்கப்படாத காலத்திலேயே ஏராளமான மக்கள் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு, தீட்சை பெற்றனர்'' என்று அந்த அறிக்கை குறிப்பிடுகிறது. அதுபோல் உதயபூர் ராஜ்யத்திலும் அநேகர் தீட்சை பெற்றிருந்தனர். 1961 வரை இங்கு கிறிஸ்தவ குருவோ, உபதேசியாரோ அனுமதிக்கப்படவில்லை."[18]

பலருக்கு சுதேசி கிறிஸ்தவ மிஷன்களைப் பற்றியோ, சுதேசி ஊழியர்களைப் பற்றியோ எதுவும் தெரியாது. 1888ம் ஆண்டில் முதன்முதலாக இந்தியர்களால் தொடங்கப்பட்ட மார்த்தோமா சுதேசி மிஷன், மலையாள மிஷனெரிகளை இந்தியா முழுவதும் அனுப்பி இந்நாட்டுப் பணத்தை வைத்தே கிறிஸ்தவ ஆசிரமங்களை ஸ்தாபித்தது.[19] 1903-ஆம் ஆண்டு பிஷப் வேதநாயகம் அசரியா இந்திய மிஷனெரி சங்கத்தை தோற்றுவித்தார். 1905ம் ஆண்டு தேசிய மிஷனெரி சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. முவான்தங்கா 1983ம் ஆண்டு எழுதிய தமது நூலில் குறிப்பிட்டுள்ளபடி இந்தியாவின் வடகிழக்குப் பகுதிகளில் உள்ள சபைகளில் 400 சுதேசி மிஷனெரிகள் பணியாற்றுகின்றனர். இவர்கள் கலாச்சாரம் கடந்து இந்தியாவிலும், பூடான், நேப்பாளம், மலேசியா, ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளிலும் நற்செய்திப் பணிபுரிகின்றனர்.[20] இவர்கள் அனைவரும் இந்தியாவில் வடகிழக்குப் பகுதியில் உள்ள திருச்சபைகள் தரும் பணத்தைக் கொண்டே அனுப்பப்பட்டுள்ளனர். வடகிழக்கு இந்தியப் பகுதிகளில் நடைபெறும் கிறிஸ்தவ ஊழியங்களில் ஒரு வெளிநாட்டு மிஷனெரியும் கிடையாது.

அவர்கள் அங்கு போக அரசாங்க அனுமதி கிடையாது. இந்திய கிறிஸ்தவ மிஷனெரிகள் ஆஸ்திரேலியா தொடங்கி அமெரிக்காவரை நற்செய்திப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.[21] இன்று மொத்தம் 15,000 இந்திய மிஷெனெரிகள் உண்டு.

கத்தோலிக்க திருச்சபையை எடுத்துக் கொண்டால் 12,000 இந்தியர்கள் குருக்களாகவும், 3000 பேர் உதவிக்குருக்களாகவும், 47,000 பேர் கன்னிமார்களாகவும்[22] பணியாற்றுகின்றனர்.

இந்திய கிறிஸ்தவப் பணியாளர்களின் பணத்தேவை எப்படிச் சந்திக்கப்படுகிறது என்று அடுத்த அத்தியாயத்தில் பார்ப்போம். மேலே கூறப்பட்ட இந்தியக் கிறிஸ்தவ மிஷனெரிகளில் மிகப்பலர் ஆத்மீக அற நிலையில் மிக உயர்ந்த நிலையுடையவர்கள். இவர்களில் பலர் நன்கு படித்தவர்கள். வக்கீல்களாக மொழி ஆராய்ச்சியாளராக, மருத்துவர்களாக, பொறியாளர்களாகப் பணியாற்றுபவர்கள்.

கிறிஸ்தவர்களைப் பற்றிக் கூறும்போது, ஆரிய சமாஜத்தலைவர் பிரமச்சாரி விஷ்ணுதத்தி "கிறிஸ்தவ மிஷன் சங்கங்களில் பதினாயிரக் கணக்கான பணியாளர் இந்தியக் கிறிஸ்தவர் குடும்பங்களிலிருந்தும் ஏழைக் குடும்பங்களிலிருந்தும், பணியாற்றுகின்றனர். இந்தியக் கத்தோலிக்கக் குடும்பங்களில் குடும்பத்

திற்கு ஒரு பிள்ளையாவது திருச்சபை ஊழியத்திற்கென்று அர்ப்பணிக்கப்பட வேண்டும் என்பது வழக்கம்'' என்று கூறுகிறார்.[23]

இது மட்டுமல்லாமல் பல்லாயிரக்கணக்கில் இந்திய கிறிஸ்தவ சபைகளைச் சேர்ந்த இந்திய சுவிசேஷகர்கள் தங்கள் சொந்த மொழி, இனமக்களுக்கு நற்செய்தி கூறிவருகின்றனர். இவர்கள் ஆங்காங்கே உள்ள சபைகள் கொடுக்கும் சம்பளம் பெற்று வேலை செய்கின்றனர்.

இன்று பல கிறிஸ்தவ சபைகளும், பணி இயக்கங்களும், கொள்கையிலும் நிர்வாகத்திலும், ஆள் பலத்திலும் பண விஷயங்களிலும் தன்னிறைவு பெற்றிருக்கின்றன. சிலோன் பெந்தேகோஸ்தே சபை, இந்திய பெந்தேகோஸ்தே சபை கேரளா ஆராதனை வீடுகள், ஹைதராபாத் லேமேன், இவாஞ்சலிக்கல் பெல்லோஷிப், சென்னை கிறிஸ்தவ ஆசிரமங்கள்[24,25] ஆகியவற்றை இதற்கு உதாரணமாக க்கூறலாம். இவை ஆயிரக்கணக்கில் சபைகள் கொண்டதாய் பல லட்சம் விசுவாசிகளைக் கொண்டதாய்க் காணப்படுகின்றன.

சுவிசேஷப்பணியின் பெரும் பகுதி சம்பளம் பெறாத சாதாரண கிறிஸ்தவர் மூலமே நடைபெறுகிறது. இன்று கிறிஸ்தவர் அநேகர் ஜெப ஊழியங்களிலும், தெய்வீக குணமளிக்கும் ஊழியங்களிலும், இயேசுவின் நாமத்தில் பிசாசுகளைத் துரத்தும் ஊழியங்களிலும் தன்னார்வத்தில் ஈடுபட்டுள்ளனர். அப்படிப்பட்ட கணக்கற்ற ஊழியர்களில் குறிப்பிடத்தக்கவர் சகோதரர் தினகரன் ஆவர். ஒரு வங்கியில் அதிகாரியாகப் பணிபுரிந்து கொண்டு தனக்குக் கிடைக்கும் ஓய்வு நேரங்களில் எல்லாம் பிரசங்கம் செய்து போதித்து ஆயிரக்கணக்கானோரை இயேசுவின் நாமத்தில் குணமாக்கி வருகிறார். இவருடைய கூட்டங்களில் மூன்று லட்சம் பேர்வரை கூடிவருகின்றனர்.[26]

இந்தியாவில் இவர்களையும் கூட ''வெளிநாட்டு மிஷனெர்கள்'' என்றே கணக்கிட்டு வைத்துள்ளனர். உத்தரப் பிரதேசத்தில் போலீஸ்காரர்கள் இந்திய கிறிஸ்தவ ஊழியர்களிடம் 'உன் பாஸ்போர்ட்டைக் காண்பி' என்று கேட்டதுண்டு! இந்தி பேசும் மாநிலங்களில் யாராவது சிலுவை அணிந்து அல்லது பைபிளைத் தூக்கி கொண்டு போனால் அரசாங்க அதிகாரிகள் அவர்களை அந்நிய நாட்டு மிஷனெரி என்று கருதுவதில் ஆச்சரியமில்லைதான்! அறிவு பற்றாக்குறை!! ஆனால் அருணாசலப்பிரதேசத்து முன்னாள் முதன் மந்திரி ஸ்ரீதுங்கன்[27] அவர்களும் நியோகி கமிஷன் தலைவரான திரு பவானி சங்கர் நியோகியும் கூட இந்த மடமையில் இருப்பதுதான் நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது.

# 4
# சுவிசேஷமும் வெளி நாட்டுப் பணமும்

"இந்தியாவில் நடைபெறும் கிறிஸ்தவ சேவை யாவும் அமெரிக்க டாலரை வைத்துத்தான் நடக்கின்றன. கிறிஸ்தவ மதத்தை ஏற்றுக் கொள்ளும் ஒவ்வொரு இந்தியனும் பணத்துக்காகவே அதைச் செய்கின்றான். கிறிஸ்தவ ஸ்தாபனங்கள் அனைத்தும் மதமாற்றம் செய்யும் வியாபாரஸ்தலங்களே. வெளிநாட்டுப்பண உதவி என்னும் ஊன்றுகோலை எடுத்துப் போட்டால் அத்தனையும் ஒன்றுமில் லாமல் ஒழிந்து போகும்."

மேற்கண்ட குற்றச்சாட்டினை அடிக்கடி கேட்கிறோம். இந்த ஸ்தாபனங்களை வகைபிரித்து காண்பதன் மூலம் விஷயங்கள் நமக்குத் தெளிவாகும். a) எல்லா சமூகத்தைச் சேர்ந்த மக்களுக்கும் சேவை புரியும் கிறிஸ்தவ ஸ்தாபனங்கள். b) கிறிஸ்தவ சமூகத்திற்கு சேவை செய்யும் கிறிஸ்தவ ஸ்தாபனங்கள். c) கிறிஸ்தவ தொழுகையும் சாட்சியும்.

a. பிரிவைக் குறித்து 7ம் அத்தியாயத்தில் தெளிவாகப் படிக்கப் போகின்றோம்.

b. பிரிவைக் குறித்த சில விஷயங்களை மட்டும் இங்கே காணலாம். இந்தியாவில் உள்ள சில திருச்சபைகள் ஆலயங்கள் கட்டுவதற்கும் வேதாகமப் பாடசாலைகள் நடத்துவதற்கும் கிறிஸ்தவ சமூகத்தைச் சேர்ந்த மக்களின் சமூக நலத்தேவைகளைச் சந்திப்பதற்கென்று சிலவேளை வெளிநாட்டுத் திருச்சபைகளிடமிருந்து பணம் பெறுவதுண்டு. இவற்றில் எந்தெந்த பணத்தேவைகள் உண்மையான தேவைகள் என்பது சர்ச்சைக்குரிய காரியமே. உயர்ந்த கோபுரங்களைக் கட்ட, ஆலயத்தில் கலர்க் கண்ணாடிகளை மாட்ட ஐரோப்பிய கட்டிடக்கலை நுணுக்கத்தோடு ஆலயங்களை எழுப்ப, விலையுயர்ந்த பைப்ஆர்கன்களை அமைக்க - இப்படிப்பட்ட தேவைகளுக்கு மேல்நாட்டுச் சபைகளிடமிருந்து பணம் வாங்குதல் இன்றைக்கு அவசியம்தானா? நம்முடைய ஆராதனைகளை நடத்த, சுவிசேஷம் அறிவிக்கத் தேவைப்படும் பணத்தை உள்நாட்டுச் சபைகளே கொடுப்பது நமக்கு மேன்மையல்லவா? இன்று ஆயிரக்கணக்கான இடங்களில் ஓலைக் கூரைபோட்ட ஆராதனை ஸ்தலங்களைப் பார்க்கும்போது சபைகள் சரியான அடிப்படையில் வளருகின்றன எனலாம். இது மகிழ்ச்சிக்குரிய காரியம்.

இந்தியாவில் உள்ள கிறிஸ்தவர்களில் 80 சதவிகிதத்திற்கும் மேலான ஜனங்கள் தீண்டப்படாதவர்கள், தாழ்த்தப்பட்ட இனத்திலிருந்து வந்தவர்கள். தாழ்த்தப்பட்டவர்களுக்கு அரசியல் சட்டம் வழங்கும் சலுகைகள் தாழ்த்தப்பட்ட கிறிஸ்தவர்களுக்கு மட்டும் இல்லை என்ற அநீதியினால் குழந்தைகளைச் சமுதாய இழிநிலையிலிருந்து தூக்கிஎடுத்துக் கல்வி புகட்ட வேண்டிய பொறுப்பு கிறிஸ்தவச் சபைகளுக்கு உள்ளது.[1] இது குறித்து 26ம் அத்தியாயத்தில் கூடுதலாகப் படிக்கப்போகிறோம். சர்க்காரின் இந்த அநீதி ஒழிந்தால் இவர்களுக்காக வெளிநாட்டுச் சபைகளிலிருந்து பணம் வரத்தேவையில்லை.

c. பகுதியையும் சற்று தெளிவுபடுத்தவேண்டும். அநேக சங்கப்பிரிவுகளைச் சேர்ந்த கிறிஸ்தவ திருச்சபைகள் ஆராதனைகளை நடத்துவதற்கும் சுவிசேஷ ஊழியத்தைச் செய்வதற்குமான தேவைகளைச் சந்திப்பதில் தன்னிறைவு பெற்றுள்ளன. சபை மக்கள் கொடுக்கும் மாதாந்திர சந்தா, மற்றும் காணிக்கைகளின் மூலம் இத்தேவைகள் சந்திக்கப்படுகின்றன.

18ம் நூற்றாண்டுக் காலத்திலேயே இந்தியாவின் தென் பகுதியைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள் ''பிடி அரிசி'' காணிக்கை கொடுப்பது போன்ற சகல யுக்திகளையும் மேற்கொண்டு ஆராதனைக்கான செலவுகளையும் சுவிசேஷம் கூறும் செலவுகளையும் சந்தித்தனர். இந்தியாவில் திருச்சபை இந்தியமயமாக்கும் தீர்க்கத் தரிசனத்தோடு உழைத்த பிஷப் அசரியா[2] என்பவர் இது போன்ற சுயதேவைப் பூர்த்தி திட்டங்களுக்கான அடிப்படை சித்தாந்தங்களை அந்நாட்களில் பலமாகப் போதித்து வந்தார்.

1980ல் நாகலாந்து பாராளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றிய ரேயினோ ஷயிசா, வெளிநாட்டுப் பணம் பெருமளவில் திருச்சபைகளுக்கு வருகிறது என்ற குற்றச்சாட்டை பலமாக ஆட்சேபித்தார். ''நான் எனது நாகாலந்து பாப்டிஸ்ட் சபையை நன்கறிவேன் அது முழுக்க, முழுக்க இந்தியப்பணத்தால் நடத்தப்படும் தன்னிறைவு பெற்ற சபை. எந்த வெளிநாட்டுப் பணமும் அதற்கு வரவில்லை'' என்றார். [3]

ஆராதனை நடத்துவதற்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்குமான செலவி னங்களைப் பொறுத்தவரை பெரும்பாலான இந்திய சபைகள் தன்னிறைவு பெற்றுவிட்டன. வேத அடிப்படையில் இயங்கும் எல்லா கிறிஸ்தவசபைகளிலும் சபையோர் தங்கள் வருமானத்திலிருந்து தசமபாகம் பத்தில் ஒன்று கொடுக்கிறார் கள்.

இன்று நற்செய்தியைப் பரப்பும் இந்திய கிறிஸ்தவ மிஷனிரி ஊழியங் கள் பல, இந்தியக் கிறிஸ்தவர்கள் கொடுக்கும் பணத்தாலேயே நடத்தப்ப டுபவை என்ற உண்மை இந்நாட்டில் உள்ள பலருக்குத் தெரியாது. நற்செய்திப் பணிக்காக தியாக உள்ளத்தோடு அநேக கிறிஸ்தவர்கள் தங்கள் திராணிக்கும் மிஞ்சிக்கொடுக்கிறார்கள். எனக்குத் தெரிந்த சிலர் தங்கள் வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கை நற்செய்திப் பணிக்குக் கொடுத்துவிடுகின்றனர். நான் வாங்கும் என் சம்பளம் சேலம் மாவட்டத்திலுள்ள நூற்றுக்கணக்கான சிறு பிள்ளைகள் வாரந்தோறும் ஒரு பொழுது உணவைத் தியாகம் செய்து எனக்கு அனுப்பும் ஈவாகும்.

வடமேற்கு இந்தியாவில் தன்னிறைவுடன் செயலாற்றும் உள்நாட்டு மிஷன்க ளைப் பற்றி ராங்குவா எழுதியுள்ளார். ''மிசோரம் பிரஸ்பிட்டேரியன் சபைமி ஷன் தங்கள் காரியங்களை ஆரம்பமுதலே இந்திய பணத்தைக் கொண்டே நடத்திவருகின்றன. இதன் 1980ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டம் 5லட்சம் ரூபாய். அத்தனை பணமும் மிசோரம் கிறிஸ்தவர்கள் கொடுத்த பணமே. மிசோரம் பாப்டிஸ்ட் மிஷன் காரியமும் அப்படியே. இந்த உள்நாட்டு மிஷனும் ஆரம்ப முதலே வரவு செலவு காரியங்களில் தன்னிறைவுடன் இயங்கிவருகிறது. இதன் 1979ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டம் 6, 70, 532 ரூபாயாகும். [4]

இந்திய மிஷனெரி சங்கம் பாளையங்கோட்டை, நேஷனல் மிஷனெரி சங்கம் சென்னை,[5] இந்தியன் இவாஞ்சலிக்கல் மிஷன், பெங்களூர் காஷ்மிர் எவாஞ்சலிக் கல் ஐக்கியம், உதாம்பூர் காஸ்பல் மிஷனெரி சங்கம், மணிப்பூர் மிஷன் போர்டு ஆஃப் எவாஞ்சலிக்கல் லூத்தரன் சபை, மத்திய பிரதேசம் வடகிழக்கு இந்தியா பாப்டிஸ்ட் சபைகளின் மிஷன் போர்டு, தென் இந்திய திருச்சபையின் மிஷன் போர்டு கர்னாடகா, மார்த்தோமா எவாஞ்சலிஸ்டிக் அசோசியசேஷன் கேரளா ஆகியவை இந்தியாவில் தன்னிறைவுடன் செயல்பட்டுவரும் இந்திய தேசியமி ஷன்களாகும். இவைகளின் செலவினங்கள் பல கோடி ரூபாய்

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு இந்தியாவில் உள்ள புராட்டஸ்டண்டுமிஷன் ஸ்தாபனங்களிலே மிகவும் பெரியது. அதன் செலவினங்கள் வருடத்திற்கு ஆறு கோடி ரூபாய் என்ற அளவில் உள்ளது. இதன் ஒவ்வொரு ரூபாயும் இந்திய விசுவாசிகள் கொடுக்கும். இந்தியப் பணமே.[6] முந்திய அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்ட 75 உள்நாட்டு மிஷன்களும் சேர்ந்து சுமார் 35 கோடி ரூபாய் வருமானத்தை இந்தியாவிலுள்ள புராட்டஸ்டாண்டு கிறிஸ்தவர்களிடமிருந்து பெற்று வருகின்றன. இந்தியாவில் உள்ள அனைத்து சங்கப்பிரிவுகளையும் சேர்ந்த கிறிஸ்தவர்கள் சுவிசேஷ பிரபல்லியத்திற்காக மட்டும் கிட்டத்தட்ட 60 கோடி ரூபாயை கொடுத்து வருகிறார்கள். இன்னும் சபை பராமரிப்புக்காக திருச்சபை பணிவிடைகளுக்காக இதற்கும் அதிகமாகக் கொடுத்து வருகிறார்கள். இந்தியாவிலேயே மிக அதிகமாக வெளிநாட்டுப் பணம் (47.74 கோடி) பெறும் நபர் சத்திய சாய் பாபா. (Ministry of Home Affairs 1996-97 Report - Outlook 1999)

---




5

# "பாவிகளே"

"சன்மார்க்கரீதியில் பார்த்தால் இந்தியாவில் வாழும் கிறிஸ்தவர்கள் ஒன்றும் பெரிய சன்மார்க்கர்கள் அல்ல. அவர்கள் சாதாரண மனிதர்களே. ஆனால் அவர்கள் பேசுவதெல்லாம் பக்தி. பச்சையாகக் கூறினால் அவர்களுக்கு ஆன்மீகத்தன்மையே கிடையாது. எனவே மற்ற சமயத்தவரை பார்த்து கிறிஸ்தவ சபைக்கு வாருங்கள் அப்போதுதான் விமோசனம் என்று கூறுவதெல்லாம் ஆன்மீகத் திமிர்ப்பேச்சு. எனவே இதற்கு சட்டபூர்வமான தடை விதிக்க வேண்டும்"

மேற்கண்டவிதத்தில் கூறப்படும் குற்றச்சாட்டை பற்றி நாம் நன்கு சிந்தித்துப் பதில் கூறவேண்டும். இந்தியாவில் உள்ள கிறிஸ்தவர்களில் பலர் கிறிஸ்து கொடுத்துள்ள சீஷத்துவதரங்களிலிருந்து மிகவும் குறைந்து காணப்படுகின்றனர். பக்தி நிறைந்த 'கிறிஸ்தவரும் மிசோரம் முதன். மந்திரியுமான பிரிகேடியர் டிசைலோ கூறுவது போல்" கிறிஸ்தவர்களாகிய நாம் நம்முடைய அன்றாட ஆன்மீக தரத்தில் இன்னமும் உயர வேண்டும். தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக்கொள்ளும் அநேகர் உண்மையான கிறிஸ்தவ ஒழுக்கங்களில் நடக்கத் தவறுகின்றனர்".[1] பேராசிரியர் ஆசீர்வாதம் ஒரு நல்ல கிறிஸ்தவ

அறிஞரும் அரசியல் வல்லுநரும் ஆவார். அவர் தமது நூலில் ''பிற சமயத்தவருக்குத்தான் கிறிஸ்துவின் நற்செய்தி தேவை என்ற எண்ணத்தோடு சுவிசேஷகர்கள் செய்யும் பிரசங்கங்கள், இந்தியர்களுக்கு ஏற்றதாயிருக்காது. திருச்சபையிலும் கூட பெயரளவில் கிறிஸ்தவர்களாக, கடவுளை அறியாத மூடர்களாக இருப்பவர்கள் உண்டு. எனவே திருச்சபைக்கு வெளியே இருப்பவர் களுக்கு மட்டுமல்லாமல் திருச்சபைக்கு வருபவர்களுக்கும் சுவிசேஷத்தை அறிவிப்பது சுவிசேஷர்களின் கடமையாகும்' [2] என்று எழுதுகிறார்.

அநேக நற்செய்திப் பணியாளர்கள் இந்த உண்மையையும் அதற்கான தங்கள் கடமையையும், நன்கறிந்துள்ளனர். ஆண்டவர் இயேசு வெளி வேஷக்காரர் களை நன்கு அறிந்தவர். தம்மைச் சுற்றி வந்து கொண்டு இருப்பவர்கள் எல்லோரும் பரிசுத்தவான்கள் அல்ல என்பது அவருக்குத் தெரியும். ஆனால் ஆன்மீகக் கிறிஸ்தவர், பேர்க் கிறிஸ்தவர் மற்றும் கிறிஸ்தவரல்லாதோர் ஆகிய எல்லோரும் அவரிடம் செல்ல முடியும். பாவியின் நேசர் ஆர்வத்தோடு வரும் எவரையும் வேண்டாமென்று தள்ளமாட்டார். சிலர் ''இந்தியாவை இயேசுவுக்கு வெல்லுவோம்'' என்று வீண்ஜம்பம் பேசும்போது பிறசமயத்தார் மனதில் தேவையற்ற அச்சங்களை இவர்கள் தோற்றுவித்து விடுகின்றனர். ஆண்டவர் இயேசு வாசல் இடுக்கமும் அதில் பிரவேசிப்பவர்கள் மிகச் சிலரே '' [3] என்று கூறினார். ஏராளமான கூட்டம் அவரை வியந்து பாராட்டினாலும் , திரளான மக்கள் சபையில் வந்து சேர்ந்தாலும், சிலர்தான் இயேசுவின் உண்மைச் சீஷர்களாயிருப்பார்கள்.

பாவ விமோசனத்துக்கு கிறிஸ்து வழி என்று கூறுவதே சரி. சபை வழி என்று போதிப்பது தவறு. சபைக்கு வெளியே இரட்சிப்பு இல்லை என்பது எப்படியிருக்கிறது என்றால் பள்ளிக்கூடத்துக்கு வெளியே படிப்பு இல்லை என்று கூறுவது போல் உள்ளது.

பகவான் ரஜனீஷ் "ஏழைகள் ஒழுக்கத்தரத்திலும் குறைந்திருப்பார்கள். அவர்கள் ஆன்மீக உயர் நிலைக்கு ஒரு போதும் வரமுடியாது"[4] என அறுதியிட்டு கூறுகிறார். "ஆவியில் எளிமையுள்ளவர் பாக்கியவான்கள், வானுலகம் அவர் களுடையது "5 என்ற இயேசுவின் வாக்கு எத்தனையோ ஏழை மக்களின் ஆன்மீக வாழ்வில் அற்புதங்களை நடப்பித்துள்ளது. தலித் கிறிஸ்தவரின் தாழ்ந்த ஆன்மீக நிலை குறித்துப் பரிகசித்துப் பேசுபவர்கள் உண்டு. ஆனால் அவர்களை கிறிஸ்துவின் தரங்களை வைத்து மதிப்பிடாமல், அவர்களை தாழ்த்தி வைத்துள்ள பள்ளத்தாக்கின் நிலையிலிருந்து அவர்களின் வளர்ச்சி கணக்கிடப் படவேண்டும். சிக்கல் நிறைந்த சமூக கேடுகளை சரிப்படுத்த திடீர் மருந்துகள் நம்மிடம் எதுவுமில்லை. மூவாயிரம் ஆண்டுகளாக தாழ்த்தப்பட்டு சீர்கேடடைந்து கொண்டேயிருந்த அவர்களது நிலையைத் தடுத்துச் சீரடையச் செய்து வருகிறது சுவிசேஷம். இது சுவிசேஷத்தின் மீட்கும் வல்லமைக்கு நல்ல சாட்சி ஆனால் இந்த வேலை இன்னமும் பூரணம் அடையவில்லை.

1930ம் ஆண்டில் இந்தியாமுழுவதும் அங்கீகாரம்பெற்றுள்ள (அவர்) முதல் தமிழ் நாட்டில் உள்ள நாகர்கோவில்வரை “மதமாற்றம் நன்மை செய்ததா?” என்பது பற்றி மதிப்பீடு (SURVEY) ஒன்று நடந்தது. கிறிஸ்தவர்களாகத் தங்கள் அருகில் வாழும் கிறிஸ்தவர்களைப் பற்றிக் கூறிய அபிப்ராயங்களை சாட்சிகள் அதில் அடங்கியுள்ளன. இரண்டாவது கேள்வி குடும்பத்தில் ஒருவர் கிறிஸ்தவராக மாறியதால் அந்தந்த இடங்களில் வாழும் கிறிஸ்தவர்களுக்கு குடிப்பழக்கத்தில் என்ன மாறுதல் ஏற்பட்டது? என்பதற்கு கிராமங்களில் கிறிஸ்தவ மதத்திற்கு மாறியவர்கள் குடிகாரர்கள் இருப்பதாகவும் அவ்வாறு குடிப்பழக்கம் அவர்களிடம் குறைந்து போனதாகவும் மக்கள் கூறினர். அதுபோல் மூன்று கிராமங்களில் மக்கள் ஒரு மாற்றமும் தெரியவில்லை என்றனர். ஒருவர்கூட கிறிஸ்தவ மதத்தை ஏற்றுக்கொண்டதால் குடிப்பழக்கம் அதிகமாகி விட்டதாகக் கூறவில்லை. இந்த சாட்சிகளில் நூற்றுப் பதினைந்து கிராமங்களில் உள்ளவர்கள், கிறிஸ்தவ மதத்திற்கு மாறியவர்கள் மதமாற்றத்திற்குப் பின் உண்மை பேசுகிறவர்களாகக் காணப்படுவதைக் குறிப்பிட்டனர். முப்பது பேர் உண்மை நிலையில் மாற்றம் இல்லை என்றனர். தெலுங்கு நாட்டுப் பகுதிகளில் சாட்சி பகர்ந்தவர்கள் முன்பு ஆடுமாடுகளை விஷம் வைத்துக் கொன்ற மாதிகா கிறிஸ்தவர்களாக மாறிய பின் இந்தக் குற்றத்தைச் செய்யவில்லை என்று கூறினார்கள்.

கந்திகோர் என்ற இனத்தைச் சேர்ந்தவர்களுக்குள் ஒரு கட்டுப்பாடு உண்டு. ஒரு வாலிபன் பெண்ணொருத்தியின் மூக்குவளையத்தைப் பிடுங்கிக் கொண்டு வந்தால் தான் அவனுக்கு திருமணம் ஒழுங்கு செய்யப்படும். அப்படிப்பட்ட நூற்றுக்கணக்கான கொள்ளைக்கார இனங்களைச் சேர்ந்தவர்களில், பவானி கொள்ளையர்கள்[7] உட்பட எத்தனையோ பேர் இந்தியாவின் இரட்சண்ய சேனைக் கிறிஸ்தவர்கள் நடத்தும் இருபத்தைந்து ஊழிய நிலையங்களில் மூலம் வாழ்க்கை மாற்றப்பட்டு இன்று நல்ல மக்களாக ஜீவிக்கின்றனர்.

தமிழ்நாட்டின் தென்பகுதியில் சாணார் குலத்தைச் சேர்ந்தவர்கள் கள் இறக்குகிற வர்களாயிருந்தனர். அவர்கள் கிறிஸ்தவர்களானபோது அவர்களின் குடிப்பழக் கம் மறைந்து போனதுமல்லாமல் அவர்கள் வியாபாரிகளாய், பள்ளிக்கூட ஆசிரியர்களாய் மற்றும், அன்றுள்ள நிலைமையில் நாட்டின் அந்தஸ்து உள்ளவராய் மாறிவிட்டனர்[8] இரண்டே தலைமுறைகளில் இம்மாற்றம் நிகழ்ந்து விட்டது.[9]

குற்றங்களுக்காக மனம் வருந்துதல், மனம் திரும்புதல், மனிதனோடும் தேவனோடும் ஒப்புரவாகுதல் ஆகியவை, கிறிஸ்தவ வழிபாட்டிலும், கொள்கை களிலும் முக்கிய இடம் பெறுகின்றன. இவை சமூக, சன்மார்க்க உணர்வுகளை இவர்களிடம் உண்டாக்கிவிட்டதால், மக்கள் கிறிஸ்தவர்களாக, மாறினபோது மற்றவர்களைக் காட்டிலும் சட்டத்துக்கு அடங்கி வரிகளை அரசாங்கத்துக்கு செலுத்தும் நாட்டின் நல்ல பிரஜைகளாக வாழுகின்றனர்.

மேலே கூறப்பட்ட ஜாதிகள் மத்தியில் ஏற்பட்ட மதமாற்றம் அல்லாமல் எத்தனையோ ஆயிரமாயிரம் தனிமனிதர்களாகவும் ஆன்மீக நிலையில் ஒரு மாற்றத்தை உணர்ந்து கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டுள்ளனர். இந்திய அரசின் முதல் சுகாதார மந்திரியான ராஜ்குமாரி அமிர்தகௌர் காந்தியின் சீஷராக இருந்தவர்கள். இவர்கள் கிறிஸ்தவ மதத்தை ஏற்றுக் கொண்டதற்காய் தங்கள் பட்டத்தை துறந்த ஒரு ராஜகுடும்பத்தில் பிறந்தவர்கள். ஆவிக்குரிய நிலையில் அப்பழுக்கற்ற வாழும் ஆயிரக்கணக்கான கிறிஸ்தவ பக்தர்களை நான் சந்திக்கும் பாக்கியம் பெற்றிருக்கிறேன். இவர்களின் உள்ளான பக்திவாழ்க்கைப்பற்றி செய்தித் தாட்களிலோ தேசிய பத்திரிக்கைகளிலோ நாம் படிப்பதில்லை. இவர்கள் விளம்பரத்தை வேம்பாக வெறுப்பவர்கள். இன்று இந்தியாவில் கிறிஸ்தவர்கள் பலர் காவல் துறையிலும் புலனாய்வுத்துறையிலும் உயர் பதவியில் காணப்படுவது அவர்களது நேர்மையினாலேயே. சாதாரணமாக நாம் நினைப்பதற்கு மாறாக எல்லாத் தாழ்ந்த ஜாதிகளையும். எல்லா உயர்ந்த ஜாதிகளையும் சேர்ந்த மக்கள், பலவகையான பின்னணியங்களில் இருந்து கிறிஸ்தவ அப்போஸ்தலர் காலம்[10] ஆசாரியா தயா பிரகாஷ்[11] காலம்முதல் நொபிலி[12] காலம் வரை பல இன மக்களும் கிறிஸ்துவை தேடி, பின்பற்றி வருகின்றனர்.




# 6

# சமூக நலத் தொண்டின் வழியாக மத மாற்றம்

"சமூகநலத் தொண்டினால் அமைக்கப்பட்டதே இந்தியக் கிறிஸ்தவம். மிஷன்காரர்களின் உதவி செய்யும் திட்டங்களைப் பார்த்து ஏழை எளியமக்கள் கிறிஸ்தவமதத்துக்கு ஓடிவந்துவிடுகின்றனரே தவிர மற்றப்படி சமயசத்திரங்களுக்காக அல்ல. நம்முடைய தேசத்தில் கிறிஸ்தவ மதத்திற்கு மாறிய மக்கள் எல்லோரும் சோற்றுக்காகத்தான் மாறினார்கள்."

இப்படிப்பட்ட குற்றச்சாட்டினையும் விவாதித்து விளக்கம் கூறவது நமது கடமையாகும். கடந்த நூற்றாண்டில் இந்தியாவில் உள்ள கிறிஸ்தவ மிஷன்கள் மிகப்பெரிய அளவில், மக்களுக்கு நன்மைகளைச் செய்துள்ளன என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.[1] இந்தியாவில் மக்கள் நல திட்டங்களைத் தொடங்கினவர்கள் கிறிஸ்தவ மிஷனெரிகள்தான். காலனி ஆட்சியாளர்கள் சமூக நிலையில் மக்களை அப்படியே வைத்திருக்க விரும்பினார்கள். காரணம் தங்களுடைய பொருளாதாரச் சுரண்டலுக்கு எதிராக எதுவும் எழுந்து விடாமல் பார்த்துக்

கொண்டார்கள். எனவே, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு சமூக நீதி, பொருளாதார விடுதலை கிடைக்க காலனி ஆட்சி ஒன்றும் செய்யவில்லை.

இரண்டாவதாக கிறிஸ்தவமதத்தை ஏற்றுக் கொண்டவர்கள் பெரும்பாலும் சமுதாயத்தின் மிக அடிமட்ட நிலையில் இருந்துவந்தவர்கள். கிறிஸ்தவ சமுதாய அரசியல் தலைவர் டாக்டர் ராஜ்குமாரி அம்ருத் கௌர் கூறுவது போல்'' எந்த சேவையிலும் ஒரு சமுதாயத்தின் முக்கிய கடமை கிராமங்களிலும், பட்டணங்களிலும் உள்ள அதன் உறுபினர்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபடு வதாகும். கிறிஸ்தவ மக்களில் அநேகர் வறுமையிலும் அறியாமையிலும் உழல்பவர்கள். அவர்களுக்காக, முழுமனதுடன் உழைத்து அவர்களை நாம் முன்னேற்றமடையச் செய்வது கிறிஸ்துவ சமுதாயத்தின் முதல் கடமையாகும்''[2]

இவ்வாறாக கிறிஸ்தவரும் கிறிஸ்தவரல்லாதருமான மக்களின் சமுதாயத்தே வைகளைச் சந்திக்கும் பெரிய பொறுப்பு கிறிஸ்தவ மிஷன்களைச் சேர்ந்ததா யிற்று. கடந்த நூற்றாண்டில் கிறிஸ்தவ மிஷன்கள் செய்த சமூகச்சேவையின் மூலம் பலர் கிறிஸ்தவர்களாக மாறினார்கள் என்பது உண்மைதான். ஆனாலும் முந்தியது பிந்தியதுக்குக் காரணமாயிருந்தது என்று முடிவு செய்யக்கூடாது. அது சரித்திர அறியாமை. சுதந்திர இந்தியாவில் தோன்றிய எழுத்தாளர்களுக் கெல்லாம் 19ம் நூற்றாண்டில் நமது நாட்டின் பரிதாபநிலை மறந்து போய்விட் டது.

மிஸ் நோபிள் என்ற ஒரு அமெரிக்கப் பெண்மணி, தான் இந்தியாவுக்கு வந்து ராமகிருஷ்ணா மிஷனில் ஒரு மிஷனெரியாகச் சேவை செய்ய விரும்புவதாக சுவாமி விவேகானந்தாவுக்கு கடிதம் எழுதினாள். அதற்கு அவர் எழுதிய பதில் ''இதில் கஷ்டங்கள் பல உண்டு இங்கு மக்கள் படும் துன்பம், அவர்களின் மூடநம்பிக்கைகள் அடிமைத்தனம் இவை எல்லாம் நீங்கள் எளிதில் அறிந்து கொள்ள முடியாது. இங்கு வந்தால் ஜாதியைப் பற்றிய வினோதமான எண்ணங்களோடு வாழும் திரளான மக்கள் மத்தியில் நீங்கள் தவிக்க வேண்டியதாயிருக்கும்''[3] என்று பதில் எழுதினார்.

ஷாரதா சதன் என்ற கிறிஸ்தவ மிஷனை நடத்தி வந்த பண்டித ராமாபாய் பால்ய விதவைகளைப் பராமரித்து வந்தார்கள்.[4] அவருடைய பணிகளில் அக்கரைகாட்டின குற்றத்திற்காக, மகாதேவ் கோவிந்த ரனதே என்ற சமூக சீர்திருத்தவாதி 1892ம் ஆண்டில் பிராமண சமூகத்தை விட்டே விலக்கி வைக்கப்பட்டு அநேக வேதனைகளுக்குள்ளானார்.

போன நூற்றாண்டில் தோன்றிய இந்து சமுதாய அமைப்புக்கள் எந்த சமூகநலப் பணிகளுக்கும் சமுதாய வளர்ச்சிப் பணிகளுக்கும் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்து வந்ததோடு அவைகளைப்பற்றி தவறான வதந்திகளைப் பரப்பும் வேலையும் செய்து வந்தன. இந்த காரியத்திற்கு மனம் வருந்தி பிரபல சமூக சீர்திருத்தவாதி கோபால கிருஷ்ணகோகலே[5] 'மன்னிப்புக் கேட்ட சம்பவம்' நமக்குச் சொல்லுகிறது.

சமூதாயத்தின் அடித்தளத்தில் இருந்த மக்களின் பரிதாபமான நிலைமைதான் காந்தி சர்வோதயா இயக்கத்தைத் தொடங்கச் செய்தது. ரஸ்கின்[6] கொடுத்த பைபிள் கருத்தின் அடிப்படையில் காந்திஜி இதைத் தொடங்கினார்.

தென் தமிழ் நாட்டில்[7] பொட்டுக் கட்டி விடப்பட்ட தேவதாசிப் பெண்களுக்கு பிறந்த குழந்தைகளைப் பராமரிப்பதற்கென்று டோனாவூரில் வாழ்ந்த ஏமிகார் மிக்கேல் அம்மாள் மீட்புப் பணிகளைத் தொடங்கின போது அவர்களுக்கு எதிராக பயமுறுத்தல்களும் கோர்ட் நடவடிக்கைகளும் வந்தன.

இந்தியாவின் தன்னிகரற்ற பெண் அறிஞரும், சீர்திருத்தவாதியும் தேசாபிமானியுமான பண்டித ராமாபாய் அம்மையார் உயர்ந்த ஜாதியைச் சேர்ந்த பால்ய விதவைகளைப் பராமரிக்க முன்வந்தபோது அவருடைய சிறப்பான ஊழியத்திற்குக் கிடைத்த பரிசு அவரைக் கொலை செய்யப் போவதாக வந்த அச்சுறுத்தல்களே! ராமாபாய் தாம் ஆதரவு காட்டிய பால்ய விதவைகளின் நிலைமையை தமது நூலில் விவரித்துள்ளார்''[8] பதின்மூன்று வயது நிரம்பிய பால்ய விதவை ஒருத்தியை தகப்பனார் கூட்டிக்கொண்டு வந்தார். பால்யத்திலேயே கணவனை இழந்த அவள் மாமியார் வீட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு கொடுமைப் படுத்தப்பட்டாள். மாமியார் அவளை ஒரு வளையத்தில் கட்டித் தூக்கி கூரை மோட்டில் தொங்க விட்டு அவள் கணவன் இறந்ததற்கு அவள்தான் காரணம் எனக்குற்றம் சாட்டிச் சித்திரவதை செய்தாள். அவளைப் பட்டினி போட்டதோடு மாமியார் அவளை நன்கு அடித்து நொறுக்கினாளாம். இன்னொரு பால்ய விதவையை வீட்டு விட்டத்தில் கட்டித் தொங்கவிட்டு, கீழே முட்களைப் போட்டு பரப்பி வைத்து விட்டு, அவள் தொங்க விடப்பட்ட அறையில் மிளகாய் வற்றல் புகைச்சல் போட்டு கதவைப் பூட்டி விட்டார்களாம்!''[9]

சிறந்த பராமரிப்புப் பணிகளைச் செய்து வந்த ராமாபாய்க்கு கிடைத்த அவதூறான பேச்சுகள் ஏராளம். ''சுயநல எண்ணமின்றி நான் பிறருக்கு நன்மை செய்யக் கூடும் என்பதை இவர்களால் நம்ப முடியவில்லை. இந்த மிருகங்களை பால்ய விதவைகளை எல்லாம் ராமாபாய் ஏன் தன்னுடைய இல்லத்திற்கு அழைத்துச் செல்கிறாள் தெரியுமா அவர்களைக் கிறிஸ்தவர்களாக்கி ஜாதி கெட்டவர்களாக்கி அவர்கள் பேரைச் சொல்லி பணம் சேர்த்து தன் பணப் பெட்டியை நிறைப்பதற்காகத்தான் என்று இவர்கள் அவதூறாய்ப் பேசினார்கள்''[10] என்று அவர் எழுதிவைத்துள்ளார்.

தென் இந்தியாவில் 1877லும்[11] மத்திய இந்தியாவில் 1897லும்[12] பஞ்சம் ஏற்பட்டபோது பஞ்ச நிவாரண வேலைகளைக் கிறிஸ்தவ மிஷன்கள்தான் மேற்கொண்டன. லட்சக்கணக்கில் மக்கள் பசியால் மடிந்ததோடு,[13] தொடர்ந்து பரவிய காலரா போன்ற தொற்று நோய்களாலும் ஏராளமான மக்கள் மடிந்தனர். ஆயிரக்கணக்கான குழந்தைகள் அனாதைகளாயினர்.[14] காலனி ஆட்சியாளர்கள் மிகக் குறைவான நிவாரணப் பணிகளையே செய்தனர். ஆனால் தனிப்பட்ட

கிறிஸ்தவ மிஷன்கள் எவ்வளவோ நிவாரணப் பணிகளை நடத்தி பஞ்சாப்[15] முதல் தமிழ் நாடு[16] வரை இந்தியா முழுவதும் இப்படி பஞ்சகாலத்திலும் மற்றும் வேறுபல சங்கட நிலைமைகளிலும் ஏராளமான பராமரிப்புப் பணிகளைச் செய்து வந்தன.

இதோடு கூட எந்நாளும் பஞ்சமான தீண்டப்படாதவர்கள் (Harijans). அவர்களுக்கு ஏழ்மை நிலை பற்றிய அறிக்கை: கூலியாட்கள் 52% நிலமற்ற விவசாயிகள். 1964-65ல் நாளொன்றுக்கான இவர்களுடைய தலா வருமானம் ரூ.1பை43. 1974-75ல் இது ரூ1.பை26[17] ஆயிற்று. இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் இம்மக்கள் நிலை இதுவானால் 19ம் நூற்றாண்டில் அவர்களுடைய நிலை என்னவாயிருந்திருக்கும்?

வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழும் மக்களின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் 6·6 லட்சம்[18] கூடிக் கொண்டே போகிறது. இந்தியா பாலிஸிரிப்போர்ட்டில் கூறப்பட்டுள்ளபடி குழந்தைகளின் மரண அளவு இந்தியாவில் குறையாமலேயே இருந்து வருகிறது. நாடு முழுவதிலும் 106 மருத்துவக் கல்லூரிகளும் 5400 பெரிய சுகாதார மனைகளும் 40,000 சிறிய சுகாதார மனைகளும் இருந்தும் இதே நிலை நீடிக்கிறது.[19]

இந்து மத கலாச்சாரங்களை ஆராய்ந்த சுவாமி அகானந்த பாரதி எழுதும்போது அயலகத்தார் வாழவழியின்றி அல்லல்படும் போதும் பட்டினியால் சாகும் போதும், அக்கரையின்றி வாழும் மக்கள் பற்றி கீழ்கண்டவாறு அவர் குறிப்பிடுகிறார். "பராம்பரியமாக இந்திய சிந்தனையில் எவரும் மனிதனை மனிதனாக நினைத்து அக்கரைப்படுவதில்லை. இருப்பவை அனைத்தும் தோற்றமும் முடிவுமின்றி காலம் கடந்து இருப்பவை. எனவே தனிமனிதனைக்குறித்து எண்ணும்போது ஏதோ ஒரு தெய்வீகம் நோக்கி இணையச் செல்லும் இடைப்பட்ட ஒரு நிலைத் தோற்றமாகவுள்ள தனித்தன்மையற்ற ஒன்றாக அவனை எண்ணுவது இந்திய மனதிற்கு இயல்பாயமைந்த ஒரு சிந்தனைக்கலையாகும்." [20]

இந்நிலையில் கதியற்றோர் பலர் சாகும் தறுவாயில் பசிபட்டினி நிலைமைகளில் கிறிஸ்தவ மிஷன்களால் ஆதரிக்கப்பட்டபோது அவர்களில் சிலர் கிறிஸ்தவர்களாக மாறியதில் ஆச்சரியம் என்ன? ஏழை எளியவர்கள் பசியால் மாள்வோர் கிறிஸ்தவர்களான நோக்கம் பற்றி ஆராயும் வாய்ச்சாலக்காரர்கள் ஒரு வாரமாவது சாப்பிடாமல் பட்டினி கிடந்துவிட்டு அதன் பிறகு ஆராய்ச்சி செய்யட்டும். அலறும் தன் குழந்தையின் வயிற்றுப் பசி நீக்க விழைதல் ஒரு "ஆன்மீக நோக்கம்" அல்ல என்பது உண்மைதான். ஆனால் அதை ஒரு "கீழ்த்தரமான நோக்கம்" என்று கூறுவோன் மடையன்.

பெண் குழந்தைகளைக் கொல்லும் பழக்கம் உலகில் பல ஆதி இனங்களிலும் காணப்பட்ட ஒரு கொடிய பழக்கமே. ஆனால் இந்தியாவில் இது இன்னும்

நீடிக்கிறது. 1870ம் ஆண்டு இதற்கு தடைச்சட்டம் வந்தபிறகும் இந்தியாவில் இன்னும் அதிக அளவில் இக்கொடிய பழக்கம் காணப்படுகிறது. மத்திய பிரதேசத்தின் கிராமங்களில் பெண் குழந்தைகளை, வேண்டுமென்றே கவனிக்காமல் சாகடிப்பவர் மத்தியில் தனது போராட்டமான ஊழியம் பற்றி கிறிஸ்தவக் கொள்ளை வீரரான விசால் மங்கள்வாதி தமது நூலில் எழுதுகிறார்.[21] இன்று கர்ப்பத்தில் கருவைச் சோதித்து ஆணா, பெண்ணா என்று கண்டுபிடித்து, லட்சக்கணக்கில் பெண் சிசுக்களைத் தாய்மார்களே தங்கள் கருப்பையில் அழிக்கும் கொடுமையின் உச்சகட்ட நாட்கள் வந்துவிட்டன நாம் புதிய கற்கால மனிதர்களாக மாறிவிட்டோம்.

இயற்கையின் சீற்றத்தால் அழிவு ஏற்படும் காலங்களிலும் சரி சமுதாய அநீதிகளால் ஜனங்கள் கஷ்டத்துக்குள்ளாகும் போதும் சரி அன்றும் இன்றும் கிறிஸ்தவ ஸ்தாபணங்கள் நிவாரணப்பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. காரணம் ''இந்தச் சிறியரில் ஒருவனுக்கு எதைச் செய்கிறீர்களோ அதை எனக்கே செய்கிறீர்கள்'' என்னும் ஆண்டவர் இயேசுவின் அன்புக்கட்டளையை செயல்படுத்துவதாகும் (மத்தேயு 25:40) மனிதனைக் குறித்த உணர்வு கொஞ்சமுமில்லாமல் கடவுளைக் குறித்த உணர்வு பெற்றுவிடும் அனுபவத்தை ஆண்டவர் இயேசு பொய் என்கிறார். ஐடா என்ற அமெரிக்கப் பெண் 1893ம் ஆண்டு ஒரு இரவில் இராணிப்பேட்டையில் மூன்று முஸ்லீம் பெண்கள் பிரசவநிலையில் செத்து மடிந்த காட்சியைக் கண்டார். அவர் தன்னை இந்தியாவின் மருத்துவப் பணிக்காக அர்ப்பணித்தார். இந்தியாவில் முதல் லேடி டாக்டர் அவரே. வேலூர் கிறிஸ்தவ ஆஸ்பத்திரியில் இப்பொழுது ஆண்டு தோறும் 10 லட்சம் பிணியாளிகள் சிகிட்சை பெற்றுச் செல்லுகின்றனர். வேலூர் ஆஸ்பத்திரியின் முக்கிய நோக்கம் மக்களைக் கிறிஸ்தவர்களாக்கி விடுவதாக இருந்திருக்குமானால் ஆற்காடு மாவட்டத்திலுள்ள மக்கள் அனைவரையும் எப்பொழுதோ கிறிஸ்தவர்களாக மாற்றியிருக்கக்கூடும். தமிழ் நாட்டில் அங்குதான் கிறிஸ்தவர்கள் எண்ணிக்கை மிகவும் குறைவு என்பது கவனிக்கத்தக்கது.

கிறிஸ்தவ ஸ்தாபனங்கள் சிறுபான்மையான கிறிஸ்தவர்களின் நன்மைக்காகவே பணியாற்றுவதாகச் சிலர் குற்றம் சாட்டுவதுண்டு. வேலூரில் சிகிட்சை பெற்ற நோயாளிகளின் 1978ம் ஆண்டின் புள்ளி விவரக் கணக்குப்படி அவர்களில் இந்துக்கள் 81.53, முஸ்லீம்கள் 7.06, கிறிஸ்தவர்கள் 11.41. ''வறுமையும் வியாதியும் மதம் பார்த்து மக்களுக்கு வருவதில்லை. எனவே எல்லா மதத்தையும் சேர்ந்த ஏழை மக்களுக்கு சி.எம்.சி இலவச சிகிட்சை அளித்து வருகிறது'.' என்று வேலூர் சி.எம்.சி ஆஸ்பத்திரியின் ஆண்டு அறிக்கை கூறுகிறது.[22]

இதே நிலைதான் கிறிஸ்தவ கல்வி நிலையங்களிலும் அங்கு பைபிள் போதிக்கப்படுகிறது.[23] நீதிநெறிகளை மாணவர்கள் தங்கள் வாழ்க்கையில் பெறச் செய்வதே இதன் நோக்கம். இன்று கிறிஸ்தவ பணிகளை ஆவேசத்துடன்

எதிர்த்துப் பேசும் அரசியல் தலைவர்கள் எல்லாம் அநேகமாக மிஷன் ஆஸ்பத்திரிகளில் பிறந்தவர்களாக இருப்பார்கள் அல்லது மிஷன் பள்ளிகளில் படித்தவர்களாக இருப்பார்கள். ஸ்தாபனங்களினால் மதமாற்றம் நடைபெற வில்லை என்பதை நிரூபிக்க இதுவே போதுமானது. இந்தியாவில் தொடங்கப் பட்ட முதல் ஆஸ்பத்திரி, முதல் டி.பி.சானட்டோரியம், தொழுநோய் இல்லம், விதவை இல்லம், மனநோய் மருத்துவமனை, பெண்களுக்கான குடிசைத்தொழில், விவசாயப்பள்ளி, ஆகியவை எல்லாமே கிறிஸ்தவர்களுக்கிருந்த கரிசனையில் தொடங்கப்பட்டவையே. அங்ஙனமே முதல் விபசாரிப் பெண்களுக்கான மீட்டு இல்லம் சிறையிலிருந்து விடுதலை பெற்ற குற்றவாளிகள் மற்றும் செவிடர், ஊமையர், குருடர்களுக்கு புது வாழ்வளிக்கும் இல்லங்களும் கரிசனை கொண்ட கிறிஸ்தவ மிஷன்களாலேயே தொடங்கப்பட்டன. இச்சேவைகளில் கிறிஸ்தவர்கள் ஈடுபடக் காரணம், அந்நாளில் அரசாங்கமோ;[24] சமுதாயமோ இவைகளைச் செய்ய முன் வராததே.[25] இந்தியாவில் கிறிஸ்தவ சமூக சேவையில் ஈடுபட்டவர்கள் எல்லோரும் மேல்நாட்டுக்காரர்கள் என்று எண்ணக்கூடாது. கிறிஸ்தவ சேவை நிலையங்களில் பணி செய்யும் மேல்நாட்டுக் கிறிஸ்தவர்கள் எண்ணிக்கை இந்தியா முழுவதிலும் ஆயிரத்துக்கும் குறைவு இந்த எண்ணிக்கையும் அரசாங்கத்தின் புதிய கொள்கைகளுக்கேற்ப குறைந்துகொண்டே வருகிறது உதாரணமாக 1953லிருந்து 1958[26] வரையுள்ளகாலத்தில் இந்தியாவில் தங்க அனுமதி விசா உள்ள வெளிநாட்டவரின் எண்ணிக்கை மூன்றிலொரு பங்காக அரசாங்கத்தால், குறைக்கப்பட்டுவிட்டது. இன்று அநேக கிறிஸ்தவ ஸ்தாபனங்கள் முழுவதும் இந்தியப் பணத்தைக் கொண்டு இந்திய கிறிஸ்தவர்களாலே நடத்தப்பட்டு வருகின்றன. இந்திய கிறிஸ்தவ மருத்துவமனைகளில் வேலை செய்யும் இந்திய கிறிஸ்தவ டாக்டர்களும் தாதியர்களும் கடும் உழைப்புக்கு முன் மாதிரி. அத்துடன் மிகக்குறையான ஊதியம் பெறுபவர்கள். மிஷன் ஆஸ்பத்திரியில் மிகக் குறைந்த சம்பளம் வாங்கி மகாராஷ்டிராவில் உள்ள டாக்டர் ஆரோலே போல தியாக உள்ளத்தோடு மனமுவந்து வேலையைச் செய்கின்றனர். டாக்டர் தொழில் திடீர் பணம் சம்பாதிக்கும் ஒரு கொள்ளையடிக்கும் தொழிலாக மாறிவிட்ட இந்நாட்களில் நாட்டில் சமூக சுகாதாரம் மக்கள் நல்வாழ்வுக்கென்று நடத்தி பணம் சம்பாதிக்கும் நோக்கம் சிறிதுமின்றி சிறிய பட்டி தொட்டிகளிலும் காடுகளிலும் மருத்துவப் பணியைக் கிறிஸ்தவர்கள் மட்டுமே செய்து வருகின்றனர்,.

தென்தமிழ் நாட்டின் சீரழிந்த பெண்களை மீட்பு இல்லங்களில் வைத்துப் பராமரிக்கும் பணியை இந்திய கிறிஸ்தவ சகோதரிகள் தங்கள் சொந்தப்பணங்களைக்கொண்டு செய்து வருகின்றனர். 1979ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் தெய்வீக வல்லமையால் வாழ்க்கை மாற்றப்பட்ட அறுபது ஆயுள் கைதிகள் பரோலில் விடுதலை செய்யப்பட்டு சேலத்தில் நடந்த ஆன்மீகக் கூட்டத்தில் பங்கு கொள்ள ஒருவாரம் அனுமதிக்கப்பட்டிருந்தனர். தமிழ்நாட்டின் உள்துறை மந்திரி இக்கூட்டத்தினைத் தொடங்கி வைத்தார். எந்த வெளிநாட்டுக்காரரும் இக்கூட்டத்திற்குப் பொறுப்பல்ல.

1939ம் வருஷம் வரை இந்தியாவிலெங்கும் கிறிஸ்தவப் பெண்களே மருத்துவத்தாதியராக பணிபுரிந்து வந்ததாக புள்ளி விவரங்கள் கூறுகின்றன. இப்போது போல் வேலையின்மையால் இப்பணிகளைச்செய்ய முன் வரவில்லை சமூகச்சேவை அர்ப்பணத்தினால் இப்பணிகளில் அமர்ந்தனர். இன்றும் கூட பல கிறிஸ்தவக் குடும்பங்களில் ஒரு ஆண்பிள்ளையைத் திருச்சபைப் பணிவிடைக்கும், ஒரு பெண் பிள்ளையை கிறிஸ்தவ சமூகப் பணிவிடைக்கும் அர்ப்பணம் செய்வது வழக்கத்தில் இருந்து வருகிறது.

அன்னை தெரசாவைப் பற்றி அறியாதவர்கள் இருக்கமாட்டார்கள். ஆனால் அவர்களோடு சேர்ந்து பணியாற்றும் ஆயிரக்கணக்கான இந்தியக் கிறிஸ்தவ தாதியர் பற்றி எவருக்குமே தெரியாது எனலாம். இவர்கள் வறுமையில் வாழ்ந்து மனித இனத்துக்கு நன்மை செய்ய அதிகம் பாடுபடுகிறார்கள். இவர்கள் சேவைக்கு எந்த விளம்பரமும் கிடையாது. மாலை, டாக்டர் பட்டம் கிடையாது.[27]

இந்திய கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் 576 ஆஸ்பத்திரிகளையும், 246 தொழுநோய் இல்லங்களையும் 254 முதியோர் இல்லங்களையும் 1075[28] அனாதை இல்லங்களையும் நடத்தி வருகிறார்கள். மிகப் பெரிய தியாக உள்ளத்தோடு பணிபுரியும் ஆயிரக்கணக்கான இந்திய கிறிஸ்தவப் பெண்களும் ஆண்களும் இப்பணிகளில் ஈடுபட்டிராவிட்டால் இச்சேவைகள் நடைபெறவே இயலாது.

அடிப்படை தேவைகள் சந்திக்கப்படாத அநேக ஏழைமக்கள் கிறிஸ்தவ ஸ்தாபனங்களின் பணிவிடைகளால் கவரப்பட்டு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்கின்றனர்.[29] அருணாசலப் பிரதேசத்தில் இந்துக்கள் அல்லாத பழங்குடி மக்கள் இந்து சமயத்தின் ராம கிருஷ்ணா மிஷன் செய்யும் நற்பணிகளால் கவரப்படுவதை போலவும் பில் இனத்தைச் சேர்ந்த இந்துக்களல்லாதோர் இந்து பில் சேவாமண்டல் மற்றும் ஸ்தாபனங்கள் செய்யும் சமூகநலச் சேவைகளால் கவரப்படுவதும் போன்ற காரியமே இது. இதைக்குறித்து நிராத்சவுத்திரி "சமூகத்தில் உயர்வை நாடும் இந்துக்கள் தங்கள் பிள்ளைகளைக் கிறிஸ்தவப்பள்ளிகளுக்கு அனுப்புகிறார்கள். அதே சமயம் கிறிஸ்தவ போதனையை தடைசெய்யப் போராடவும் செய்கிறார்கள். இந்த முரண்பட்ட நடத்தைக்குக் காரணம் என்ன? கிறிஸ்தவர்களின் சேவை பள்ளிக்கூடம் வைத்து கல்வி புகட்டுவதோடு முடிந்துவிடுகிறது. அதற்குமேல் நல்லதொரு மத வாழ்க்கையை மக்களுக்கு அவர்கள் அறிமுகப்படுத்தக்கூடாது என்ற ஒரு அடிப்படை எண்ணத்திலேயே நாம் செயல்பட்டு வருகிறோம். இது சரியான எண்ணமல்ல. கிறிஸ்தவ வாழ்க்கையின் சிறப்பை உணர்ந்தவர்கள் அந்த வாழ்க்கையை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்வதில் தவறென்ன?"[30] என்கிறார். கிறிஸ்தவப் பணிகளைச் செய்யும் ஸ்தாபனங்களுக்கு வெளிநாட்டு உதவிகள் வருவதைப் பல வகையில் பிரித்துக் காண்பது அவசியம். வெளிநாடுகளிலிருந்து இந்தியாவிலுள்ள கிறிஸ்தவ சேவை ஸ்தாபனங்களுக்கு[31] வரும் மொத்த பணமும் மதச்சார்புள்ள மிஷன்களால் அனுப்பித் தரப்படுவதில்லை. உலகமுழுவதுமுள்ள மதச்சார்பற்ற மனிதாபிமான நிறுவனங்

கள் அனுப்பும் பணம் தான் அது. சாதாரணமாக நாட்டில் ஒரு வெள்ளைக்கார ரைப் பார்த்தவுடன் அவரை அமெரிக்கராகவும் கிறிஸ்தவராகவும் எண்ணிக் கொள்வது வழக்கம். இப்படிப்பட்ட நிறுவனங்கள் இந்து, கிறிஸ்தவ, மற்ற எல்லா மதத்தினருக்கும் ஏழைமக்களுக்குச் சேவை செய்ய பணத்தை அனுப்பு கின்றன. எனவே சர்வோதய இயக்கங்கள், ராமகிருஷ்ணா மிஷன் மற்றும் பல மதச்சார்புடையதும் மதச்சார்பற்றதுமான சமூக சேவைச்சங்கங்களுக்கு இப்படிப்பட்ட நிறுவனங்களிடமிருந்து பணம் கிடைக்கிறது. இப்படிப்பணம் அனுப்பும் நிறுவனங்களுக்கு[32] உதாரணமாக ஆக்ஸ்ஃபாம், கிறிஸ்டோபர் குருடர் மிஷன், ஃபோர்டு நிறுவனம் போன்ற நூற்றுக்கணக்கான நிறுவனங்கள் கூறலாம். எந்த வெளிநாட்டு அரசாங்கமும் இந்தியாவில் நடக்கும் கிறிஸ்தவப் பணிக ளுக்கு பணம் உதவுவதில்லை.

அரசாங்கம் சம்பந்தப்படாத மிஷன்களும் நிறுவனங்களுமே பணம் அனுப்பி உதவுகின்றன. வெளிநாட்டிலிருந்து இந்தியாவுக்கு வரும் மொத்த பணஉதவி யால் மிகப் பெரும் பகுதி இந்து மிஷன்களுக்குச் செல்லுகிறது.

இந்தியாவில் பெருமளவில் நடைபெறும் கிறிஸ்தவ சமூகநலப் பணிகள் நிறைவேற உதவுவது வெளி நாட்டுப் பணம் அல்ல. இந்தியக் கிறிஸ்தவர்களின் தியாக மனப்பான்மையும் சேவை மனோபாவமுமே ஆகும். மிக அறிவுத்திறன் படைத்த எனது நண்பர்களில் பலர் மூன்று வேளை சாப்பாடு மட்டுமே பெற்று இந்தியாவின் கிராமப்புறங்களில் சமூக நலச்சேவை செய்து வருகின்றனர். அன்னை தெரசாவுடன் பணி புரியும் ''இந்தியன் மிஷினெரிஸ் ஆஃப் சாரிட்டி'' ஊழியக்காரிகள் தங்கள், உணவு, உடை, மருந்து தங்குமிடத்திற்காக மாதம் 60 ரூபாய் மட்டுமே செலவு செய்து வாழ்ந்துவருகின்றனர்.[33]

இந்தியாவில் நடைபெறும் கிறிஸ்தவ சமூக நலச் சேவைகள் அனைத்தும் வெளிநாட்டு உதவியுடன் தான் செய்யப்படுகிறது என்பதும் உண்மையல்ல. நூற்றுக்கணக்கான இந்திய திருச்சபைகள் சிறிய அளவில் சமூக நலப்பணிகளை தங்கள் சொந்தப் பணத்தைச் செலவு செய்தே நடத்தி வருகின்றன. வேலூர் கிறிஸ்தவ ஆஸ்பத்திரியின் செலவினங்களுக்கான பணம் எழுபத்து நான்கு திருச்சபைகளிடமிருந்து வருகின்றது: அவற்றுள் நாற்பத்தாறு இந்தியாவில் உள்ள திருச்சபைகள்.

தென் இந்தியத் திருச்சபையின் ஆட்சிக்குழு தீர்மானத்தின்படி அதன் உறுப்பினர்களான 20 லட்சம் கிறிஸ்தவர் வாரம் ஒரு முறை தங்கள் சாப்பாட்டை தவிர்த்து அந்தப்பணத்தை சமூக நலப்பணிகளுக்குக் கொடுப்பதோடு மாதந்தோ றும் ஒருநாள் சம்பளத்தையும் கொடுத்து அதைக் கொண்டு ஏழை எளிய மக்களுக்கு உணவளித்து வர தீர்மானித்தது.[34]

19ம் நூற்றாண்டின் கடைசியில் என்.ஜீ. சண்தேவர்க்கர் என்ற பிரசித்தி பெற்ற பிராமண சீர்திருத்தவாதி மேற்கு இந்தியப் பகுதியில் வாழ்ந்து வந்தார்.

இந்தியாவில் சமூக சீர்திருத்த இயக்கத்தின் ஆரம்பம் குறித்து அவர் பேசும்போது ''இன்று சில இடங்களில் கிறிஸ்தவ மிஷனெரிகளைக் குறைத்துப் பேசுவது பற்றி நான் அறிந்துள்ளேன். ஆனால் இன்று சமுதாயப் பணி என்ற விஷயம் பற்றி நம்மிடையே ஒரு விழிப்புணர்ச்சி உண்டாவதற்குக் காரணம் அந்த மிஷனெரிகளே''[35] என்கிறார்.

இன்று கிறிஸ்தவ நிறுவனங்களின் சேவை இந்தியாவில் எந்த அளவுக்குத் தேவை ?

1 பொருளாதார வசதி படைத்தோரின் நலன்களுக்காக இயங்கும் கிறிஸ்தவ ஸ்தாபனங்கள் அனைத்தும் மூடப்பட வேண்டும்.

2 தலீத் கிறிஸ்தவர்கள் பொருளாதாரச் சலுகைகள் பெறுவதற்கு மத அடிப்படையில் சர்க்கார் காண்பித்து வந்த அநீதி நீக்கப்படும் வரை அவர்களின் சேவைக்கென்று கிறிஸ்தவ ஸ்தாபனங்கள் இயங்கவேண்டும். சர்க்கார் அளிக்கும் அதே அளவு சலுகை, சேவை இங்கு அளிக்கப்பட வேண்டும்.

3 சமுதாயத்தில் மிகவும் நலிவுற்ற கிறிஸ்தவர், கிறிஸ்தவரல்லாத மக்களுக்கென மட்டுமே கிறிஸ்தவ சேவை ஸ்தாபனங்கள் இயங்க வேண்டும்.



# 7

# மிஷனெரிகள் காலனி ஆட்சியின் கைக்கூலிகளே!

''பிரிட்டீஷ் கொடியின் நிழலில் கிறிஸ்தவமதம் இந்தியாவுக்குள் நுழைந்து
விட்டது. மக்களை மதமாற்றம் செய்ததன் மூலம் இந்தியாவில் பிரிட்டீஷ்காரரின்
ஆதிக்கம் வலுப் பெற்றது. எனவே வெள்ளைக்கார மிஷனெரியும் வெள்ளைக்
கார அரசாங்கமும் ஒரே நாணயத்தின் இரு பக்க அச்சுப்பதிப்புக்களே. ஒருவர்
வாழ்வு மற்றவர் வாழ்வைப் பொறுத்ததே. இந்த அடிப்படையில் பார்த்தால்
மதமாற்றம் என்பது நாட்டை ஆதிக்கம் செய்யும் ஒரு காரியமே.''

இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளை நாம் நன்கறிவோம். கடந்த நூற்றாண்டில்
காலனி ஆட்சியாளர்களும் கிறிஸ்தவ மிஷனெரிமார்களும் வெள்ளைக்காரர்
களே என்பது உண்மைதான். இவர்களில் சிலர் ஒரே நாட்டைச் சேர்ந்தவர்களா
கக் கூட இருக்கலாம். மற்றும் சிலர் ஒரே ஊரிலிருந்து வந்தவர்களாக அல்லது

ஒரே பள்ளியில் படித்தவர்களாகக் கூட இருக்கலாம். இது ஒருவருக்கொருவர் பெரிய அளவில் அனுசரணையாய் இருந்திருக்கக் கூடும் என்பதை எவரும் மறுக்க முடியாதுதான்.[1] இரண்டாவதாக, ஆயிரக்கணக்கான சிறிய சமஸ்தானங்களையெல்லாம் ஒன்று திரட்டி பிரிட்டிஷ்காரர் தங்கள் சாம் ராஜ்யத்தின் கீழ் கொண்டு வந்ததால் ஓரிடத்திலிருந்து மற்றொரிடத்திற்கு செய்தி அனுப்பவும் பிரயாணம் செய்யவும் அதிக வசதியாக இருந்தது. சிவில் போலீஸ், சிவில் கோர்ட் இவற்றால் எல்லோரும் நன்மை பெற்றது போல் இதனால் மிஷனெரிகளுக்கும் நன்மை உண்டாயிற்று.

மூன்றாவதாக, புராட்ஸ்தாந்து திருச்சபை மிஷன்களில் சில சுவிசேஷப்பணியில் அக்கறைப்பட்டதுபோல் தங்கள் சொந்த நாட்டிற்காகவும் அக்கறைகாட்டி செயல்பட்டிருக்கக் கூடும்''.[2] அவ்வாறானவர்கள் ஒரு மிகச் சிறுபான்மையே.

அந்தக்காலத்தில் அநேக வெள்ளைக்கார மிஷனெரிகளுக்கும் வெள்ளைக்காரக் காலனி ஆட்சியாளர்களுக்குமிடையே, நூற்றி ஐம்பது ஆண்டுகளாக, கருத்து நிலையில் நடந்து வந்த சண்டைகள் குறித்து இந்தியர்கள் பலருக்கு தெரிந்திருக்க முடியாதுதான். இந்த அத்தியாயத்தில் அதைச் சுருக்கமாக நாம் விளக்கலாம்.

காலனி ஆட்சியாளர்களாயிருந்த வெள்ளைக்காரர்கள் பலர் ஐரோப்பாவின் நாடு பிடிக்கும் ஆசையில் தீவிரமாய் ஈடுபட்டிருந்த கொள்ளைக்கார கும்பலின் பிரதிநிதிகளே. ஆனால் மிஷினரிகளோ ஐரோப்பாவில் நடந்த ஆன்மீக எழுப்புதல்களால் தோற்றுவிக்கப்பட்ட ஆன்மீக பக்திக் குழுக்களைச் சேர்ந்தவர்கள். ஆனால் நம் நாட்டுக்கு வியாபாரம் செய்ய வந்த வெள்ளையர்கள் நம்முடைய செல்வத்தைச் சுரண்ட வந்தவர்களே. மிஷனெரிகள் கொண்டு வந்த சுவிசேஷம் மக்களை விடுவிக்கக்கூடிய சக்தி படைத்ததாய் இருந்ததால் காலனி ஆட்சியாளர்கள் தங்களுடைய சுரண்டல் வியாபாரத்திற்கு மிஷனெரிகளால் ஆபத்து வந்துவிடும்[3] என்பதை நினைத்து மிஷனெரிகளை அனுமதிக்கவில்லை. 1813ம் ஆண்டுவரை காலனி ஆட்சியாளர்களுடைய எந்தக்கப்பலிலும் மிஷனெரிகள் பிரயாணம் செய்ய அனுமதிக்கப்படவில்லை! பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைக்காலம்[4] வரை மிஷனெரிகள் தங்கள் காலனி நாடுகளில் பிரவேசிக்கக் கூடாது என்று மிஷனெரிகளுக்கு காலனி ஆட்சியாளர்கள் தடை விதித்திருந்தார்கள்.

இரண்டாவதாக பல இடங்களில் மிஷனெரிகளும் காலனி ஆட்சியாளர்களும் வெவ்வேறு நாட்டைச் சேர்ந்தவர்களாயிருந்ததால் இருவருடைய நோக்கங்களும் ஒத்துப்போக முடியவில்லை. இந்தியாவில் 180 வருடங்களாக பணிபுரிந்த மிஷனெரிகளில் பெரும்பாலோர் பிரிட்டிஷ்காரரல்ல. ஸகாண்டினேவியா, ஜெர்மனி, தெற்கு ஐரோப்பா முதலிய நாடுகளிலிருந்து இந்தியாவுக்கு வந்திருந்த மிஷனெரிமார் இந்தியாவில் நடந்த பிரிட்டிஷ்காரரின் காலனி ஆட்சிக்கு ஆதரவாக இருந்ததில்லை. நியோகி கமிஷன் இந்த விஷயத்தில் பெரிதும அறிவீனமான முடிவுகளை எடுத்துள்ளது.

பிரிட்டீஷ் பார்லிமெண்டில் கிறிஸ்தவ உறுப்பினர்களுடைய வேண்டுதலின் காரணமாக 1837ம் ஆண்டுக்குப் பிறகு பிரிட்டீஷ் ஆட்சியாளர்கள் வெள்ளைக் கார மிஷனெரிமார்களுக்கு இந்தியாவுக்குள் வர அனுமதி வழங்கவேண்டியதா யிற்று இதை அவர்கள் அரை மனதோடே செய்தார்கள்.

"கிறிஸ்தவ மிஷன்களும் காலனி ஆட்சியும்", என்ற தனது பி.ஹெச்.டி படிப்பின் ஆராய்ச்சி நூலில் பேராசிரியர் லால்தேனா இதற்கான காரணத்தைக் கூறுகின்றார். "மிஷனெரிகள் நடத்தும் சீர்திருத்தப் பணிகளால் நாட்டில் அமளி ஏற்பட்டு தங்கள் காலனி ஆட்சிக்கு பங்கம் வந்துவிடும் என்று எப்போதும் காலனிக்காரர்களுக்குப் பயமிருந்தது.[5] எனவேதான் வெல்லெஸ்லி வைரஸ்யாக இருந்த காலத்தில் காலனி ஊழியர் தவிர மற்ற எல்லா வெள்ளைக்காரரும் இந்தியாவைவிட்டு வெளியேறும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இது வெள்ளைக்கார கிறிஸ்தவ மிஷனெரிகளுக்கு எதிராக காலனியார் செய்த சூழ்ச்சியே.[6] இதே காரணங்களுக்காகவே சீகன்பால்க் இந்தியாவில் வந்து இறங்கிய நாளில் தனது சொந்த நாட்டு அரசாங்கத்தினால்[7] தரங்கம் பாடியில் சிறைவைக்கப்பட்டார். இதே காரணத்தால் வில்லியம் கேரி ஆங்கிலேயர் தண்டனைக்குத் தப்பி செராம்பூர் தீவில்[8] போய் அடைக்கலம் புகுந்தார். மனிதரின் சம உரிமை பற்றியும் சமுதாயச் சீர்திருத்தம் பற்றியும் மிஷனெரிகள் பேசியும் போதித்தும் வந்தது காலனி ஆட்சியாளருக்கு ஒரு தலைவலியாகிவிட் டது.[9] அடிமைத்தனத்திற்கு விரோதமான ஃபிரேசரின் ஆவேசப் பிரசங்கங்களும் உடன்கட்டை ஒழிப்புக்காக ஓயாமல் போராடி வந்த வில்லியம் கேரியின் போர்க்குரலும், கஞ்சா வியாபார ஒழிப்புக்காக தைரியமாய் சி.எஃப் ஆன்ட்ரூஸ் நடத்திய போராட்டமும், மது விற்பனைக்கு எதிராய் ஏவான்ஸ் நடத்தி வந்த எதிர்ப்பும் இந்தியாவிலுள்ள புராட்டஸ்டாண்டு சபைகள் அனைத்தும் தீண்டா மைக்கு எதிராய் எழுப்பிய கண்டனக் குரலும் ஒன்று சேர்ந்து காலனி ஆட்சியாளர்களுக்கு அதிக பயத்தை விளைவித்தது. "மிஷனெரிகள் சமுதாயப் பிரச்சினைகளில் தலையிடுவதால் இந்து மக்களுக்குப் புனிதமாய் தோன்றும் இவ்விஷயங்களில் புரட்சி உண்டாகி இறுதியில் வெள்ளைக்காரருக்கு விரோத மாய் இந்திய மக்கள் எழுப்பிவிடுவார்கள் என்றும் இதனால் காலனி ஆட்சியாளர்களின் சுரண்டலுக்கே ஆபத்து உண்டாகிவிடும் என்றும் அவர்கள் அஞ்சினார்கள்".[10]

உதாரணமாக 1910ம் ஆண்டு பாவ்வி அடிமைத்தனத்திற்கு எதிராகப் போராடும்படி லூஷாய் குன்றுகளில் பணிபுரிந்த தனது சகமிஷனெரிகளுக்கு பிரேசர் கட்டளை கொடுத்தார். "அடிமைத்தனம் எந்த விதத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாத விஷயம். பாவ்வி சமுதாய அமைப்பில் அடிமைத்தனம் எந்த விதமாக இடம்பெற்றிருந்தாலும் அதனை அப்படியே விலக்கி விடவேண் டும்" என்று கட்டளை கொடுத்தார்.[11] ஆனால் இந்த அடிமை நிலையை மாற்ற விரும்பாத காலனி ஆட்சியாளர் சமய விஷயங்களை அரசியலில் கலந்து மிஷனெரிகள் குழப்பம் விளைவிப்பதாகக்[12] கூறி அந்தப் பகுதியிலிருந்தே

மி[illegible]னரி மார்களை அப்புறப்படுத்திவிட்டனர்.[13] கடந்த நூற்றாண்டில் வங்காளத் தி[illegible]வெள்ளைக்கார மிஷனெரிகளுக்கும்[14] இன்டிகோ பயிரிடும் வெள்ளைக்கார முதல[illegible]ரிகளுக்கும் நடந்த மிகக்கடுமையான போராட்டம் பற்றி ஓடி தமது நூலில் விளக்குகிறார். இண்டிகோ விவசாயத்தில் ஈடுபட்டிருந்த கூலியாட்களை சுரண்டுவதற்கான உரிமை பறிபோகக்கூடாதென அவர்கள் போராடினார்கள். கூலியாட்கள் எதிர்த்துப் போராட பலமின்றி வாயடைத்து நின்றார்கள். எனவே வங்காளத்திலுள்ள எல்லா பிராட்டஸ்டாண்ட் மிஷனெரிகளும் சேர்ந்து வெள் ளைக்கார முதலாளிகள் செய்வதைக் கண்டித்து ஒரு நீண்டகால போராட்டம் நடத்தினார்கள். வெள்ளைக்கார முதலாளிகள். ''டாக்காநியூஸ்'', ''பெங்கால் ஹீர்க்குரு'' ''இங்கிலீஷ் மேன்'' என்ற பத்திரிகைகளில் மிஷனெரிகளுக்கு அரசியலில் கலந்து கொள்ளும் உரிமை இல்லை என்று ஆவேசமாக எதிர்த்துப் பிரச்சாரம் செய்தார்கள்.

''இந்த நல்ல சேவைக்காக, மிஷனெரிகள் இவ்வளவு கடுமையாக, ஆவேச மாக, ஆபாசமாக, வெள்ளைக்கார முதலாளிகளால் தாக்கப்பட்டார்கள்'' என்று ''ஹிந்து தேசாபிமானி'' பத்திரிக்கை எழுதியதை ஓடி குறிப்பிடுகிறார். வெள்ளை முதலாளிகளுக்கு விரோதமாக நடத்திய மிஷனெரிகள் போராட்டம் காரணமா கவே இறுதியில் 1860ம் ஆண்டில் ஏற்பட்ட சட்டத்தில் 11வது பிரிவு நிறைவேற்றப்பட்டது.

காலனி ஆட்சிக்கு மதுபான வரிப்பணம் மூலம் ஏராளமான பணம் கிடைத்தது. எனவே நாடெங்கும் மதுபானக் கடைகளை நடத்த மக்களைத் தூண்டியது. அரசு காலனி ஆட்சியாளர்கள் குடியில் மூழ்கினவர்கள். பீஹாரில் மிஷனெரியாயிருந்த எவான்ஸ் என்பவரும் இந்தியா முழுவதிலும் இருந்த சீர்திருத்தக் கிறிஸ்தவர்களும் சேர்ந்துதான் காலனி ஆட்சியாளர்களால் கலால் வரிகள் பற்றிய விதிகளையும் தோல்வி அடையச் செய்தனர். லால்தேனா தன்னுடைய டாக்டர் பட்டப் படிப்பிற்காக எழுதிய ஆராய்ச்சி நூலின் முடிவில் இப்படிக் கூறுகிறார். பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கும் மிஷனெரிகளுக்கும் உள்ள உறவு ஒருவர் காரியத்தில் ஒருவர் தலையிடக் கூடாது என்ற உடன்பாட்டின் அடிப்படையில் அமைந்திருந்தது. அவர்கள் கொள்கைகள் ஆதரவாய் இருப்ப தற்காக உண்டானதல்ல. மிஷனெரி இயக்கங்கள் அரசியல் அதிகாரம் அல்லது அமைதிக்கு இடையூறு உண்டாக்குவதாய் தெரிந்தால் காலனி ஆட்சியாளர்கள் மிஷனெரி இயக்கங்களைத் தடை செய்ய ஒரு போதும் தயங்கினதில்லை.[15]

இவ்வாறு வெள்ளைக்கார மிஷனெரிகளால் தொடங்கப்பட்ட இந்திய சமூக சீர்திருத்த இயக்கம் பிற்காலத்தில் இந்திய சுதந்திர இயக்கம் இந்தியாவில் தோன்றக் காரணமாயிருந்ததோடு வெள்ளைக்காரக் காலனி ஆட்சியை இந் நாட்டை விட்டே வெளியேற்ற அதுவே முதலில் அடிகோலியது.

---

# 8

# கலாச்சாரத்தைக் களங்கப்படுத்தும் கிறிஸ்தவம்

'சத்தியசோதனை' என்ற தமது நூலில் காந்தி "நான் சிறுவனாயிருந்த காலத்தில் ஒரு இந்து கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்தது எனக்கு நினைவில் உள்ளது. அந்த பட்டணத்தில் உள்ள அனைவரும், பூர்வீக இந்து ஒருவர் இயேசு கிறிஸ்துவின் பெயரில் மாட்டுக்கறியும், பிராந்தியும் சாப்பிட்டு கிறிஸ்தவ மதத்தில்' சேர்ந்து விட்டார். என்று பேசிக் கொண்டார்கள். இது என்னைக் கோபமடைய வைத்தது."[2] என்று எழுதியுள்ளார். மேலே குறிப்பிட்ட இந்து மனிதருக்கு தீட்சை கொடுத்த கிறிஸ்தவப் பாதிரியார் ஹெச்.ஆர். ஸ்காட் என்பவர், காந்திக்கு, அவர் எழுதிய இந்த வரிகள் உண்மையைக் கூறும் வரிகள்தானா? என்று கேட்டு ஒரு கடிதம் எழுதினார்.[3] ஸ்காட் பாதிரியார் குஜராத்தி மொழியில் புலமை படைத்தவர். குஜராத்தி கவிதை[4] இலக்கியத்தில்

வல்லுநர். இந்தியப் பண்பாட்டு விஷயங்களில் அதிக அன்பும் மதிப்பும் கொண்டவர். ''கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வதென்றால் மாட்டிறைச்சி சாப்பிட்டு மது அருந்தி ஐரோப்பிய உடை அணிய வேண்டும் என்ற நிலைகள் கேள்விப்பட்ட வதந்தி உங்களை கோபமடைய வைத்ததில் ஆச்சரியமில்லை தான். இவ்வதந்தியை நீங்கள் உண்மை என்று நம்பிவிட்டதாலேயே அப்படி ஆனது. ஆனால் நாங்கள் கொடுக்கும் போதனையும் நம்பிக்கையும், செய்யும் காரியங்களும் நீங்கள் கேள்விப்பட்ட வதந்திக்கு முற்றிலும் மாறுபட்டவை!''[5] என்று மறுப்புக்கடிதம் ஒன்றை காந்திக்கு ஸ்காட் பாதிரியார் எழுதி அனுப்பினார்.

ஸ்காட் எழுதிய கடிதத்திற்கு காந்திஜி பதில் எழுதிய போது[6] ''மாட்டிறைச்சி சாப்பிடுவதும், பிராந்தி குடிப்பதும் ஞானஸ்நானத்தின் போது நடக்கும் என்பது நான் பிறர் சொல்லக் கேள்விப்பட்ட காரியம்தான்.[7] அதை அப்படியே, எழுதிவிட்டேன்'' என்று தன் தவறை கடிதத்தில் ஒப்புக் கொண்டுவிட்டார். ஆனாலும் காந்தி தனது தவறைத் திருத்திக் கொள்ளவில்லை. தனது ''சத்திய சோதனை நூலில் இதனைத் திருத்தி வெளியிடாமல் போனதால், அவருடைய சுயசரிதை நூலின் மறு பதிப்புக்களிலும் அதனை மேற்கோள் காட்டி எழுதப்பட்ட மற்ற நூல்களிலும் இது திருத்தப்படாமலேயே வெளியாகிவிட்டது.[8] இந்த அவதூறான குற்றச்சாட்டுக்கு காந்தியும் உடன்பாடு தெரிவிப்பதாக ஆகிவிட்டது. காந்தியின் ''சத்திய சோதனையில்'' ஒரு அசத்தியம் இது.

இந்த வதந்தி ஏன் பரவிற்று? இதனைப்புரிந்து கொள்ள நாம் ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன் சென்று, அதன் இந்தியாவின் மேற்குக் கரையோரம் குடியேறிய போர்ச்சிக்கீசியர்கள் கடைப்பிடித்த கிறிஸ்தவ மதம் எப்படி பரவியது என்று நாம் அறிய வேண்டும். போர்ச்சிக்கீசியர்கள் தங்கள் மத ஆசாரத்தில் பிரிக்கமுடியாத ஒரு அம்சமாக தங்கள் 'பரங்கி' நாகரீகத்தைக் கருதினார்கள். ஒரு இந்தியனுக்கு பரங்கி நாகரீகம் இல்லாமல் கிறிஸ்தவம் கிடைக்காது என்று அவர்கள் நம்பினார்கள்.[9] இந்தப் பிடிவாதமான போக்குள்ள போர்ச்சிக்கீசியர்கள்[10] குடித்து வெறிக்கும் காரியங்களுக்கப் பேர்போனவர்கள். மிகக் குறுகிய காலம் இவர்கள் நடத்திய இந்த 'கலாச்சார மாற்றம்' கோவாவைச் சுற்றி சிறிய பகுதியில் நடந்து வந்தது. ஆனால் இது மேற்குக் கடற்கரையில் வாழ்ந்த இந்திய மக்கள் அனைவர் மனதில் கிறிஸ்தவத்தைப் பற்றி அழியாத ஒரு அச்சத்தை ஏற்படுத்திவிட்டது.

இதன் பிறகு கடந்த நான்கு நூற்றாண்டுகளில் இங்கிலாந்து பிரான்ஸ் மற்றும் நாடுகளிலிருந்து வந்த காலனி ஆட்சியாளர்களும் தங்கள் வாழ்க்கை முறைக ளில் போர்ச்சிக்கீசியர்களைப் போலவே இருந்தனர்.[11] ஒரே ஒரு வித்தியாசம் என்னவென்றால் போர்ச்சிக்கீசியர்களைப் போல் இவர்கள் இந்தியர்களை மதமாற்றம் செய்யவில்லை, செய்யும் எண்ணமும் இல்லை.

கடைசியில் வெள்ளைக்காரர்களான மிஷனெரிமார் கப்பலில் வந்து இறங்கிய போது அவர்கள் கடவுள் பணி செய்யும் தூய நோக்கத்தோடும் அறநெறி ஒழுக்கத்தோடும் வந்தாலும் அவர்களையும் காலனி ஆட்சியாளர்களைப் போலவே இந்தியர்கள் எண்ணினார்கள். ஆன்மீக குருக்களாக வெள்ளை மிஷனெரிகளை இந்தியரால் எண்ணிப்பார்க்க முடியவில்லை.

இந்தியக் கிறிஸ்தவர்களும் கூட சரிப்படுத்திக் கொள்ள வேண்டிய காரியங்கள் நிறைய உண்டு. பெருமளவில் இந்தியக் கிறிஸ்தவம் அந்நியக் கலாச்சாரத்தில் வார்க்கப்பட்டு மேற்கத்திய பாணிகளில் சமயச் சடங்காச்சாரங்கள், பண்டிகை கள், இசை, கட்டிடக்கலை, அர்த்தம் புரியாத பெயர்கள், என்ற நிலையில் காணப்படுகின்றது. இந்தியக் கிறிஸதவ ஆசாரங்கள் பல இந்தியப் பண்பாட் டிற்கோ வேதாகமத்தில் சொல்லப்பட்ட காரியங்களுக்கோ ஒவ்வாத நிலையில் திரிந்து உள்ளன என்பதைச் சற்றுக் கூர்ந்து கவனிப்பவர்கள் தெரிந்து கொள்வார்கள்.

ஆசிய மண்ணில் அவதரித்தவர் இயேசுநாதர். எனவே கிழக்கு நாடுகளில் உள்ள மக்களால் சாதாரணமாகப் புரிந்து கொள்ளக்கூடியவரே அவர். வெளிநாட்டு வெளிப்பூச்சு அவருக்குத் தேவையில்லை. இந்திய கிறிஸ்தவத்தை மேற்கத்திய கலாச்சாரத்திலிருந்து பிரித்தெடுப்பது மிக அவசியம். ஒரு வேளை மற்ற நாடுகளில் மற்ற காலங்களில் மேற்கத்திய கலாச்சாரம் கிறிஸ்தவத்திற்கு தேவையாயிருந்திருக்கலாம். ஆனால் இன்றைய கிறிஸ்தவத்திற்கு அது திட்ட மாய் தேவையில்லை. இந்தியக் கிறிஸ்தவர்களில் சிலர் தங்கள் அன்றாட வாழ்க்கை முறைகளில் கிறிஸ்தவ வாழ்க்கைக்கும் மேற்கத்திய முறைமைகளுக் கும் வேறுபாடறியாத நிலையில் வாழ்ந்துவருகின்றனர். இந்த அன்னியச் சார்பு கிறிஸ்தவர்களை நாட்டின் சில பகுதிகளின் தங்கள் சகமனிதரோடு உறவாடக் கூட முடியாமல் செய்து விடுகின்றன. இதைக்குறித்து நாம் நன்கு பரிசீலித்து இக்குறையைச் சீக்கிரம் சரி செய்ய வேண்டும்.

பண்பாடு கறைப்படும் விஷயத்தில் இன்று நமது பிள்ளைகளைக் கெடுக்கும் வகையில் போதை மருந்துகள் முதல் ஆபாச இலக்கியங்கள் வரை அந்நிய நாட்டு சரக்குகளை டன் டன்னாக இறக்குமதி செய்வதுபற்றி எவருக்கும் இன்று கவலை கிடையாது. நமது அருமையான கிராமிய: கலாச்சாரங்கள் வெளிநாடுக ளிலிருந்து எத்தனையோ அறவொழுக்கமற்ற சுற்றுலாப் பிரயாணிகளால் அழிக்கப்படுவதை எதிர்த்து குரல் எழுப்ப நாதியில்லை. இந்தக் கும்பல்களுக் காக நமது பட்டணங்களின் வீதிகள் எல்லாம் போதை மருந்து சூப்பர்மார்கெட் டாய் மாறிவிட்டன. நமது கடற்கரைகள் யாவும், இக்கும்பல்களின் இச்சைக்காய் விபச்சாரக் கூடங்களாக மாறி வருகின்றன. இப்படிப்பட்ட வெளிநாட்டோருக்கு நமது அரசாங்கம் மேளதாளத்தோடு வரவேற்பளிக்கின்றது. காரணம்? கேவலம் இதன் மூலம்வரும் அற்பமான அந்நியச் செலவாணி வருமானமே!

பிறநாட்டு கலாச்சார ஆதிக்கம் ஒன்று, பிறநாட்டுக் கலாச்சார ஈகை வேறொன்று. நாம் கிரேக்கர்களிடமிருந்து கந்தாரா சிற்பக் கலையையும் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து குர்தாவையும், பைஜாமாவையும், காந்திக் குல்லாவை யும் பெற்றுக் கொண்டோம். பெர்சியா நாட்டிலிருந்து ''இந்து'' என்ற சொல்லைப் பெற்றோம். இவையெல்லாம் பிற நாட்டுச் சரக்குகள் தானே ?

நம்முடைய கலாச்சாரங்களில் எனக்கு அதிக அக்கறை உண்டு. அந்த முறையில் இந்தியாவில் உள்ள நமது பல்வேறு இனக்கலாச்சாரங்களை சராசரி இந்தியன் அறியாதவனாக இருப்பது என்னைக் கவலைப்படுத்துகிறது. பல சந்தர்ப்பங்களில் வெளிநாட்டு ''களங்கம்'' என்பது மற்றொரு பண்பாட்டிற்கு ஏற்றம் தருவதாக இருக்கிறது.

இந்தியாவில் நான்கு மாபெரும் கலாச்சாரங்கள் உண்டு. அதிலிருந்து முளைத்த 40 பெரிய கலாச்சாரங்களும் 1200 சிறிய கலாச்சாரங்களும் உண்டு. எனவே ''தீண்டப்படாத கிறிஸ்தவர்களும், மங்கோலிய கிறிஸ்தவரும் இந்திய கலாச்சாரத்தை விட்டுப் போய்விட்டனர்'' என்று குற்றஞ்சாற்றப்படும்போது, இங்கு ''இந்தியக் கலாச்சாரம்'' என்பது எந்தக் கலாச்சாரத்தை? மக்கள் அதை சமஸ்கிருத (ஆரிய) கலாச்சாரமென்று தவறாக நினைக்கின்றார்கள். ஆனால் இந்நூலில் நாம் பின்னர் காணப்போவது போல தீண்டப்படாதவர்களும் மங்கோலிய இனத்தவரும் சமஸ்கிருத கலாச்சாரத்தில்[12] ஒருபோதும் சேராதவர் கள். ஏன் நாம் அப்படிப்பட்டவர்களை அவர்களுடைய சொந்தக் கலாச்சர்ரத்தில் இருந்து பிரித்து அவர்களுக்கு அந்நிய கலாச்சாரமான ஆங்கிலேய அல்லது சமஸ்கிருத கலாச்சாரத்திற்கு மாறும்படி அவர்களைக் கட்டாயப்படுத்த வேண் டும்.?

ஒரு கலாச்சாரம் மற்றொரு கலாச்சாரத்தின் மேல் திணிக்கப்படும்போது அதனால் பெரிய தீமைதான் உண்டாகிறது. உதாரணமாக இந்தியாவில் உள்ள ஆரியரல்லாத பலகோடி மக்கள் அனைவரும் மாட்டிறைச்சி உண்பதை தங்கள் கலாச்சாரத்தில் கொண்டிருப்பவர்கள். புத்தர் இந்தியாவில் தோன்றும் வரை அனைவரும் குறிப்பாக பிராமணர்களும் மாட்டிறைச்சி உண்டுகளித்தவரே. எவரும் மறுக்கமுடியாத அளவுக்கு இதற்குச் சரித்திரச் சான்றுகள் ஏராளம் உண்டு.[13-21] இன்று அதையாரும் உண்ணக் கூடாதென்று கட்டளையிடுவது கலாச்சார ஆதிக்கம். நான் சைவ உணவை ஆதரிப்பவன். ஆயினும் ஒவ்வொரு கலாச்சாரமும் தன்னிடமுள்ள நல்ல பண்புகளை மற்ற கலாச்சாரங்களுக்குக் கொடுப்பதும் மற்ற கலாச்சாரங்களிலிருந்து பண்புகளை ஏற்றுக் கொள்வதும் தங்களுடைய சில கலாச்சார ஆசாரங்களை மாற்றுவதும், வேண்டாதவற்றை தள்ளி விடுவதும் தொடர்ந்து அக்கலாச்சாரத்தின் வாழ்வுக் கும் வளர்ச்சிக்கும் தேவையான காரியங்களே. பிற கலாச்சாரத்தின் நல்ல பண்புகளை ஒரு கலாச்சாரம் ஏற்பது அதற்கு நன்மைபயக்கும். ஆனால் பிற கலாச்சார ஆசாரங்களை ஒரு கலாச்சாரத்தின் மேல் திணிப்பது நிச்சயம் தீமையே விளைவிக்கும்.

இந்திய கலாச்சாரங்களுக்கு கிறிஸ்தவர்கள் கொடுத்த மாபெரும் காரியங்களில் சிலவற்றை இங்கு குறிப்பிடவேண்டும். இந்திய மொழிகளின் வளர்ச்சி பற்றிய வரலாறு எழுதத் தொடங்கினால் அதில் ஆரம்ப கர்த்தாக்களாக போற்றிப் புகழப்படவேண்டிய பல கிறிஸ்தவர்கள் உண்டு. வில்சன் சமஸ்கிருதம், மாக்ஸ் முல்லர், வில்லியம்ஸ் சமஸ்கிருத-ஆங்கில அகராதி, டபிள்யூ ரீப் இங்கிலிஷ்-கன்னடம் அகராதி, கிட்டல் கன்னட இலக்கண நூல், கிருஷ்ண பிள்ளை தமிழ் இலக்கியம், வர்கீஸ் மாப்பிள்ளை மலையாளம், சவுத்திரி புருஷோத்தம்மன் தெலுங்கு, கரும் ஜாஷ்வா ஜி.யூ.போப் குறள்,[22] கால்டுவெல், வில்லியம் கேரி நாதன் பிரவுன், மைல்ஸ் பிரான்சன்[23] ''இந்திய பண்பாட்டு ஆராய்ச்சி, சமஸ்கிருத மொழி ஆராய்ச்சி ஆகியவற்றில் மேல் நாட்டினர் ஆர்வம் காட்டினதற்கு முக்கிய காரணம் கிறிஸ்தவ மிஷனெரிகளே''[24] என்று டாக்டர் கங்காதரன் கூறுகின்றார்.

இந்தியா சுதந்திரம் அடையுமுன்னர் எத்தனையோ ஆதிவாசிகளின் பேச்சு மொழிகளை ஆராய்ந்து வரி வடிவம் கொடுத்து அவற்றை எழுத்து மொழிகளாக்கும் பெரும் பணியைச் செய்து வந்தவர்கள் அனைவரும் கிறிஸ்தவர்களே.[25] இவர்கள் இதைச்செய்திராவிட்டால் இம்மொழிகள் கவனிப்பாரற்று அழிந்தொழிந்து போயிருக்கும். அதுபோலவே இந்தியாவின் தற்கால கல்விப் பணி வரலாறு எழுதப்படுமானால் அதில் தூண்களாய் விளங்கின அலெக்சாண்டர்ஃப், ஆன்டர்சன், வில்சன் போன்ற அநேக கிறிஸ்தவரைக் குறிப்பிடாமல் எழுதமுடியாது.

மது அருந்தும் பழக்கத்தினை ஒழிப்பதற்கென இந்தியாவில் பெரு முயற்சிகளை மேற்கொண்டவர்கள் கிறிஸ்தவர்களே என்ற உண்மை அநேகருக்குத் தெரியாது. வெள்ளை ஆட்சியாளர் மதுவுக்கு அடிமைப்பட்டுக் கிடந்தனர். ஆனால் வெள்ளைக்கார மிஷனெரிகள் அப்பழக்கத்தை ஒழிப்பதற்கான சேவையில் மும்முரமாக இறங்கியிருந்தனர். இதில் தீவிரமாகப் பாடுபட்ட எவான்ஸ், கயினி மற்றும் பலரைப் பற்றி ஒடி என்பவர் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். 1897ல் இவர்கள் எடுத்த பிரயாசங்களின் மூலம் இந்தியாவின் எல்லாப் பாகங்களிலும் மொத்தம் 260க்கும் மேற்பட்ட மது ஒழிப்பு மையங்கள் கிறிஸ்தவர்களால் தோற்றுவிக்கப்பட்டன.[26]

சதி உடன்கட்டை ஏறுதல் சிசுக்கொலை,[27] தீண்டாமை, அடிமை வியாபாரம்[28] கோயில்களில் தேவதாசி லீலை, பொட்டுக்கலியாணம் ஆகியவற்றை ஒழிக்க மக்களின் மழுங்கிப் போன மனச்சான்றைக் கூர்மைப்படுத்தி அவர்களின் ஆதரவைத் திரட்டிய வேலைகள் யாவும் கிறிஸ்தவர்களின் சேவைகளே.

கிறிஸ்தவர்களின் முயற்சிகளால்தான் இந்தியாவில் முதல் முதல் சமூக சீர்திருத்த இயக்கம் தோன்றிற்று என்ற உண்மையை ஜீரணிக்க முடியாமல் பலர் இன்று தவிக்கிறார்கள். இவ்வியக்கத்தின் வாரிசுகளே ராஜாராம் மோகன்

ராய், தேவேந்திரநாத் தாகூர், கேசவ் சந்திரசென் போன்றவர்கள் ஆவர். மற்றும் மேற்கு இந்தியாவில் சமூக சீர்திருத்தவாத சிற்பியாக தயானந்த் சரஸ்வதி திகழ்ந்தார். பிரமோ சமாஜம், ஆரியசமாஜம் போன்ற எண்ணற்ற சீர்திருத்த இயக்கங்கள் இன்று இந்தியாவில் தோன்றியுள்ளன என்றால் இதற்கெல்லாம் காரணம் கிறிஸ்தவத்தின் செல்வாக்கே[29] என்று நாம் சந்தேகமின்றி கூறலாம்''. இவ்வாறு காந்திஜி எழுதியுள்ளார்.

சாதாரணமாக மக்கள் நினைப்பது போல் பழங்குடிமக்கள் கிறிஸ்தவர்களாகும் போது தங்கள் பழக்க வழக்கங்களை மாற்றிக்கொள்ளும்படி வற்புறுத்தப்படுவதில்லை. ''கிறிஸ்தவர்களான பிறகும் அவர்கள் சொந்தக் கலாச்சாரத்தில் தொடர்ந்து நீடிக்கிறார்கள். பில்லி சூன்யம், அல்லது பேய் பிசாசுகள் போன்ற காரியங்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்குப் புறம்பானவை. இவை தவிர அவர்கள் தங்கள் மற்ற எல்லாவற்றிலும் தங்கள் பழக்கவழக்கங்கள், கலாச்சாரத்திலேயே வாழுகின்றார்கள்''[30] என்று மஜீம்தார் தமது நூலில் குறிப்பிடுகிறார். ஆதிவாசிகள் தலைவர் டாக்டர் பாரே இதனைப்பற்றி கீழ்க்கண்டவாறு கூறுகிறார். ''மற்றவர்கள் குற்றம் சாட்டுவது போல கிறிஸ்தவம் எங்கள் கலாச்சாரத்தின் தனித்தன்மையை அழித்துவிடவில்லை. மாறாக கிறிஸ்தவம் எங்கள் கலாச்சாரத்தை பல்வேறு வழிகளில் வளர்த்துவிட்டது. எங்கள் மொழியில் வேதாகமம், ஜெபபுத்தகம், பாட்டுப் புத்தகங்கள் வெளிவந்தபோதுதான் எங்கள் மொழிகள், முதன்முதலாக எழுத்து வடிவம் பெற்றன. இது எங்கள் மொழிகளைப் பாதுகாக்கும் ஒரு மகத்தான முயற்சியே. எங்கள் கலாச்சாரத்தில் எங்கள் மொழிகள்தான் நாங்கள் பொன்போல் பாதுகாக்கும் பொக்கிஷங்கள்''[31] இவ்வாறு பாரே கூறுகிறார்.

''ஓரான் பழங்குடிமக்கள் கிறிஸ்தவமதத்திற்கு மாறின போது கிறிஸ்தவ கோட்பாட்டுக்கு முரணற்ற எல்லா பழக்க வழக்கங்களையும் தொடர்ந்து கைக்கொண்டார்கள்''[32] என்று சோட்டா நாக்பூரில் உள்ள மிகப்பிரசித்தி பெற்ற மனித இயல் வல்லுனர் சரத்சந்திரரே குறிப்பிடுகிறார்.

ஒரு கலாச்சாரத்தில் உள்ள தீமையான காரியங்களை வேண்டாமென்று விடுவது அக்கலாச்சாரத்தைப் பாதிக்காது. அப்படிப்பட்ட தீமையான காரியங்களை வைத்துக் கொண்டிருப்பதுதான் வயிற்றில் விஷத்தை வைத்திருப்பது போன்றது. வெரியர் எல்வின் என்பவர் கிறிஸ்தவ மதத்தின் காரியங்கள் எல்லா கலாச்சாரத்தைக் கெடுப்பதாகக் கூறுகிறார். குடிப்பழக்கம், விபசாரம், நரபலி ஆகிய எல்லாமே கலாச்சாரம் என்று அவர் கூறுகிறார் போலும்! [33] கோண்டு மனிதர்கள் வாழும் கலாச்சார நிலையில் எந்த மாற்றமும் வரக்கூடாது என்பது அவருடைய எண்ணம். எனவே கிறிஸ்தவத் தீட்டு அதில் வந்து விடாமல் அதனை நன்கு காப்பாற்ற முயன்றார்.
அவருடைய மண வாழ்க்கையே கோண்டு மனைவி விபச்சாரத்தில் உடைந்தது.

அருணாச்சலப் பிரதேசத்தில் உள்ள மக்கள்கட்சியின் பொதுக் காரியதரிசியாக இருந்த லோவாங்ச்சா, ''கலாச்சாரத்தை அழிப்பவர்கள் கிறிஸ்தவர்களே'' என்று குற்றஞ்சாட்டினவர்களைப் பலமாக எதிர்த்து ஒரு கேள்வி கேட்டார் ''என்னுடைய கலாச்சாரம் எனக்குத் தெரியாதா? எங்களை இந்தியர்களாக்கப் பார்க்கிறார்களா? நான் ஏற்கனவே இந்தியன்தான். என் தகப்பனார் மனிதர்களின் தலைகளை வெட்டுகிறவர். தலை வெட்டுவதை ஒவ்வொரு வருஷமும் பண்டிகையாகக் கொண்டாடுபவர்கள் நாங்கள். எங்களை மீண்டும் தலை வெட்டுகிறவனாக மாறச் சொல்கிறீர்களா?'' [34] எது கலாச்சாரத்தீட்டு.?

தர்மபுரி மாவட்டத்திலுள்ள காடுகளில் சாயம் தயாரிக்கும் விதை வாங்கும் காண்டிராக்டர் விதைகளை பூசாலி பழங்குடிப் பெண்ணிடமிருந்து பெற்றுக் கொள்ளுமுன் அவள் தன்னுடன் பால் உறவு கொள்ள இணங்க வேண்டும். வட்டிக் கடைத்திருடன், காண்டிராக்டர், மதுபானக் கொள்ளையன், போதை மருந்து வியாபாரி, விபச்சாரவிடுதி மனித மிருகங்கள், பழங்குடி மக்களின் கலாச்சாரங்களை தொடர்ந்து தீட்டுப்படுத்தி அழிக்கின்றனர். ''இவர்கள் பழங்குடி மக்களுக்கு வெகுமதியாக கொடுப்பது சிபிலிஸ், தட்டம்மை, அபீன், கஞ்சா சாப்பிடும் போதைப் பழக்கமும், குடிப்பழக்கமும்தான். அந்தமான் தீவுகளில் உள்ள 4000 பழங்குடி மக்களில் இவர்களுக்கு தப்பிப் பிழைத்து இன்று வாழ்ந்திருப்பது 24 பேரே "[35] யார் நமது கலாச்சாரத்தை தீட்டுப்படுத்துகிறவர்கள்.?



# 9
# தேசப்பற்றில்லாத கிறிஸ்தவர்கள்

1853ம் வருஷம் தானாவுக்கும் பம்பாய்க்கும் இடையில் ரயில் தண்டவாளம் முதன் முதலாகப் போடப்பட்டபோது போராட்டம் செய்ய ஒரு பெருங்கூட்டமக்கள் கூடிவிட்டனர். காரணம்? இந்தியாவை நீள இரும்புக் கயிறு போட்டுக்கட்டி இங்கிலாந்திற்கு சீக்கிரமே வெள்ளையர்கள் இழுத்துச்செல்லப் போகிறார்கள் என்று பெரும் புரளி ஒன்று கிளப்பி விடப்பட்டது. இதைப் படிக்கும் போது நீங்கள் சிரிக்கலாம். அப்போது கூடியிருந்த மக்கள் சிரிக்கவில்லை. ரொம்ப சீரியஸ். கட்டுக்கடங்காத கூச்சல் எழுந்தது. 'தேசப் பற்றுள்ளவர்களின்' நரம்பு நாளங்கள் எல்லாம் துடித்தன! அநேகர் தங்கள் உயிரை துச்சமாய் எண்ணி தண்டவாளத்தின் மேல் தலைவைத்துப் படுத்துப் போராட்டம் செய்தார்கள்!!

பாமர மக்களின் மனதைக் கிளறி விட்டுக் காரியங்களை சாதிப்பவர்களுக்கு மக்களின் மடமை ஒரு தங்கச் சுரங்கம். இதற்கு நல்ல உதாரணமாக நியோகியின் கற்பனையைக் கூறலாம். மத்திய பிரதேசத்தில் நடைபெற்ற கிறஸ்தவ ஊழியம் பற்றி தமது அறிக்கையில் அவர் கூறும்போது, "இந்தியா

வுக்கு அரசியல் சுதந்திரம் வந்ததும் ஆதிவாசிகள் தங்களுக்கு சுதந்திர நாடு வேண்டும் என்று தொடங்கிய போராட்டத்திற்குக் காரணம் அப்படி ஆதிவாசிகளுக்கு சுந்திரநாடு கிடைத்தால் அதை இணைப்புப்பாலமாக வைத்து வங்காளத்தை ஹைதராபத்துடன் இணைத்துவிடலாம். அப்படிச் செய்து விட்டால் பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் யுத்தம் வந்தால் இந்தியாவுக்கு விரோதமாய் பாக்கிஸ்தான் தனது படைகளை அனுப்ப அது உதவியாக அமையும்''[1] என்று கிறிஸ்தவ மிஷனெரிகள் சூழ்ச்சி செய்வதாகக் கூறினார்.

தேசப்பற்று குறித்து சற்று விளக்கம் தேவை. யார் தேசபக்தன்? எல்லா சமுதாயங்களிலும் தேசபக்தர்கள் உண்டு. ''திருவாங்கூரில் உள்ள எல்லாக் கிறிஸ்தவர்களும் திருவாங்கூர் சமஸ்தானம் சுதந்திர இந்தியாவோடு இணைக்கப்பட வேண்டும் என்று போராடிய போது, அதற்கு எதிராக பிரிட்டீஷ் ஏகாதிபத்தியத்தோடு அந்த சமஸ்தானம் தொடர்ந்து இருந்து வர வேண்டும் என்று பேசியது யார்? இதற்காக இச்சமஸ்தானம் உடனே பாகிஸ்தான் நாட்டோடு தூதுவர்களைப் பரிமாற்றம் செய்து கொள்ளவேண்டும் என்று சொன்னவர் பெரிய இந்து பக்தரான சர்.சி.பி.இராமசாமி அய்யரல்லவா? மிகவும் நெருக்கடியான கட்டத்தில் இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைக்கவொட்டாமல் அதைக் காட்டிக் கொடுத்து நாட்டுக்கே துரோகமிழைத்தார். இதை குறிப்பிடுவதன் நோக்கம் நாம் தேசபக்தர்கள் எல்லாச்சமுதாயங்களிலும் காணப்படுவது போல் தேசத்துரோகிகளும் எல்லாச் சமுதாயங்களிலும் உண்டு.''[2] இவ்வாறு பிரபல சட்ட நிபுணர் தேவதாசன் தமது நூலில் கூறுகின்றார்.

சுதந்திரப் போராட்ட காலத்திலே தேசபக்தர்கள் யார் யார் என்று குறிப்பிடுவது மிகச் சுலபமாய் இருந்தது. வெள்ளையனே வெளியேறு என்று கோஷம் போட்டவனை தேசபக்தன் என்று அன்று கூறிவிட்டோம்.

இப்போது 'வெளியே' என்று சொல்வதற்கு எந்த அந்நியனும் இங்கு இல்லை. எனவே இப்போது தேசபக்தன் யார்? இந்தக் கேள்விக்கு விடை தருவது மிகக் கடினமாகிவிட்டது. இன்று தேசிய நிலையில் தேசத்தின் நன்மையை அடிப்படையாக வைத்துப் பார்க்கும்போது எவரையும் தேசபக்தன் என்று திட்டவட்டமாகச் சொல்ல முடியவில்லை. காரணம் ஒவ்வொருவரும் சுயநலத்தோடு, தான் நினைப்பதும் தனக்கு வேண்டியதும் தான் தேசபக்தி என்று கூற ஆரம்பித்து விட்டார்கள்.

பழங்குடி மக்களின் பிரசித்திபெற்ற தலைவராக விளங்கும் டாக்டர் பாரே என்பவர் ''இந்தியாவில் உள்ள ஆதிவாசிகளும் சரி மற்றவர்களும் சரி பாரம்பரியமாக எந்த சமுதாயப் பிரிவைச் சேர்ந்தவர்களானாலும்

நாம் அனைவருமே தனித்தனி இனங்களாக அவரவர் கலாச்சாரப்படி வாழ்ந்து வந்தோம். கொஞ்ச காலமாகத்தான் நாம் ஒரு தேசிய இனமாக சிந்திக்கத் தொடங்கியுள்ளோம்''.[3] என்று ஒரு பெரிய உண்மையைச் சொன்னார்.

ஒதுங்கி வாழும் எண்ணம் ஆதி வாசிகளுக்கு கிறிஸ்தவ மதத்தால் புகட்டப்பட்டதல்ல, கிறிஸ்துவுக்குள் சாதி இன பேதங்கள் இல்லை என்ற உபதேசங்களையெல்லாம் கேட்டறிந்தும் அவர்கள் இன்னும் ஓரளவு பழைய தனி இன உணர்ச்சியோடு காணப்படுகின்றனர். இதில் தவறென்ன? மனிதரின் தலைகளை வேட்டையாடும் நாகா இன மக்களிடையே உள்ள தனித்து வாழும் தன்மையும், அதனால் ஏற்படும் இனப் போர்களையும் குறித்து புத்துவாயில் என்பவர் ஒரு புள்ளிவிபரம் தருகிறார்''. உண்மையாக நடந்த சம்பவங்கள் இவை; நான்கு பேர்வெட்டின தலைகளின் விபரம் வருமாறு; ஒருவர் 42, மற்றொருவர் 50, மூன்றாமவர் 62, நான்காமவர் 60,'' என்கிறார். இப்படிப்பட்ட மக்கள்தான் கிறிஸ்தவர்களாக மாறினார்கள். ஒன்றிணைந்தார்கள். மனித இயல் வல்லுநர்கள் அறிந்துள்ளபடி ஒவ்வொரு பழங்குடி இனத் தலைவனும் ஒரு இராஜா. ஒவ்வொரு பழங்குடி இன மக்கள் கூட்டமும் ஒரு தனி ராஜ்யம். கிறிஸ்தவம்தான் இவ்வினங்களையெல்லாம் ஒன்றாக்கி மற்ற இந்திய மக்க ளோடு இணைப்பதற்கு ஒரு பாலமாகப் பயன்பட்டது. சமரசப் பேச்சுக்களை நடத்தும் அளவுக்கு அவர்களை மாற்றி விட்டது. தலைவெட்டும் தலைவர்கள் சமரசப் பேச்சுக்களில் பங்குபெறும் தலைவர்களாக மாறியதற்குக் காரணம் கிறிஸ்தவமே![4] இது பிரிவினைச் சக்தியா?

''நாம் நமது அரசியல் சட்டத்தை நமக்கு ஏற்றபடி திருத்தாவிட்டால் காலாகாலமாக இருந்துவரும் நமது ஆரியக் கலாச்சாரம் அழிந்து நூறு நாகாலாந்துகள் நம் நாட்டில் உருவாகிவிடும்.''[5] இது ஒரு பெரிய ஆரியத் தலைவரின் கூக்குரல்.

இந்தக் குற்றச்சாட்டிற்கு ஆதிவாசிகள் தலைவர்கள் தகுந்த விதத்தில் பதில் கூறியுள்ளார். ''இந்திய பாரம்பரியத்தில், இந்திய நாகரீகத்தில், இந்திய கலாச்சாரத்தில் பெருமிதம் கொள்பவர்கள் தான் இந்தியர்கள் என்று சொல்கிறீர் கள். அப்படிச் சொல்லிவிட்டு இந்த நாகரீகம், இந்திய கலாச்சாரம் என்பது இந்துமத நாகரீகம் இந்துமதக் கலாச்சாரம் என்கிறீர்களே! இது என்ன! இந்த ஒரு காரணத்தாலேயே நாங்கள் எங்களை இந்திய இனத்தவர் அல்ல இந்திய நாட்டுக் குடிமக்கள் என்கிறோம்.''[6] யார் பிரிவினைகளைத் தூண்டுகிறார்கள் என்பதை இது தெளிவாக்குகிறது. பாரே கூறுவது போல் ''இந்திய தேசியம் என்பது இந்தியாவில் வாழும் ஆரியரின் மதம், கலாச்சாரம், மொழி, ஆகியவற்றில் மட்டும் அடங்கி உள்ளது என்ற தவறான யூகமே தேசிய ஒருமைப்பாட்டிற்கு அதிகக் கேடு விளைவிக்கிறது.''[7]

1981ம் ஆண்டில் சஞ்சய், விஜய், பிரிதிபால் சிங் என்ற பெருங்கொள்ளையர் கள் பழங்குடி மக்கள் இருந்த காடுகளின் செல்வங்களைக் கொள்ளையடித்த குற்றத்தை வெளியே சொன்ன காரணத்திற்காக, ஆதிவாசிகளிடையே குழப்பம் உண்டாகிறது என்று பொய்காரணங்கள் காட்டி மத்திய பிரதேச அரசு கிறித்தவ ஊழியர்களை வெளியேற்ற முயற்சிகள் செய்வதை வெளிப்படையாகக் கண்

டித்த பழங்குடி இனத்தவரின் மந்திரியாக இருந்த ஆதிவாசிக்கிறிஸ்தவர் பிலாசியஸ் எக்கா என்ற மத்தியப் பிரதேச மந்திரியை ஆதிவாசிகள் இனத்தைச் சேராத அரசியல் வாதிகள் தங்கள் கொள்ளையைக் காப்பாற்றிக் கொள்வதற்காகப் பழிவாங்கிவிட்டார்கள். (இல்லஸ்டிரேட்டட் வீக்லி, டிசம்பர் 22, 1985) யார் சமூக விரோதிகள்? சமூக விரோதிகளைக் கண்டுபிடித்துக் கொடுக்கும் கிறிஸ்தவர்கள் சமூக விரோதிகளா?

பழங்குடியினர் மத்தியில் தோன்றிய அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்களுக்கான காரணத்தை சைத்தன்யா கால்பக் நன்கு ஆராய்ந்து எழுதுகிறார். ''வட கிழக்கு இந்தியாவில் வசிக்கும் மங்கோலிய இனத்தைச் சேர்ந்த மக்கள் என்றுமே தங்கள் இனத்தவர்களோடு மட்டுமே பழகி நெருக்கமாக வாழ்ந்து வந்தவர்கள். இன்று இவர்கள் இந்தியாவின் மற்ற பாகங்களுக்குச் செல்லும் போது இவர்களை மற்றவர்கள் வெளிநாட்டராகப் பாவித்து நடத்துகிறார்கள். இந்த அறியாமை தாங்கள் தனித்து வாழவேண்டிய அந்நியர்களே என்ற உணர்வை அவர்களுக்கு இன்னும் அதிகரிக்கச் செய்கிறது''

இப்படி அறியாமை உள்ள அதிகாரிகள் இந்தியாவின் வட பாகங்களிலிருந்து வந்து நிர்வாகம், அதிகாரம் செலுத்துவதில் உள்ள பெறும் தவறுகள் இம்மக்களின் இன உணர்ச்சிகளைப் பொங்கி எழச் செய்கிறது. இந்த அதிகாரிகள் இப்பகுதிகளில் வாழும் மக்களை காலனி ஆட்சி நடத்துவதுபோல் நடத்தி வருகிறார்கள். இதனால் இப்பழங்குடிமக்களுக்கு இந்திய அரசு வெள்ளைக் காலனி ஆட்சியாளர்களுக்குப் பதிலாக இப்போது தங்களை ஆண்டு வரும் ஒரு ஆரிய காலனி ஆட்சியாகத் தோற்றமளிக்கிறது.''[8]

இதனால் ஏற்படும் விளைவுகள் என்னாவாயிருக்கும் என்று எளிதில் நாம் கூறிவிடலாம். மெய்த்தி இனமக்கள் அரசுக்கு விரோதமாகக் கிளர்ச்சி செய்வதற்க்குக் காரணம் அவர்கள் வாழும் இடங்களில் மற்ற மக்களை அதிகமாகக் குடியேற்றுவதும், நிர்வாக ஊழல்களும், வேலையில்லாத் திண்டாட்டமும், அத்துடன் இவர்கள் மேல் இந்து மதத்தையும் கலாச்சாரத்தையும் திணிக்கும் முயற்சிகளுமே ஆகும். மிசோ இனத்தவரின் கிளர்ச்சி ஒரு பொருளாதாரக் கிளர்ச்சியும் கலாச்சார எழுச்சியும் ஆகும். அரசாங்கம் அம்மக்களின் உணர்வை சரியாக மதிக்காததால் இது ஏற்பட்டது.

மிசோரம் மாநிலத்தின் முதன் மந்திரியாக இருந்த பிரிகேடியர் சைலோ கூறுவதுபோல் ''இக்கிளர்ச்சிக்களுக்கான சில முக்கிய காரணங்கள் பிரச்சினைகளைக் கவனிப்பதில் உள்ள நிர்விசாரம், நேரடியாக அவற்றைச் சந்திக்க இயலாமை, அரைகுறை மனதோடு அளிக்கும் தீர்வுகள், தீர்வுகளைக் காண்பதில் மிகமிகத் தாமதம் போன்றவை.''[9]

ராஜ்சேகர் நன்கு ஆராய்ந்து பார்த்த பிறகு ''ஆந்திரப்பிரதேசம் முதல் இந்தியாவின் வடகிழக்குப் பகுதிவரை இந்தியா முழுவதிலும் உள்ள ஆதிவாசி

கள் தங்கள் உரிமையில் மற்றவர்களின் ஆதிக்கம் வலிந்து கொண்டு குறுக்கிடுவதை எதிர்த்து தீர்மானமாகக் கிளம்பிவிட்டார்கள்''. [10] என்று கணித்துச் சொல்கிறார்.

தினேஷ்சிங் பார்லிமெண்ட் கமிட்டி இப்பிரச்சினையின் மூலகாரணத்தையே அம்பலப்படுத்தி விட்டது. ''மொத்தத்தில் வட கிழக்குப் பிராந்தியத்தில் மக்களின் உண்மையான தேவைகளைச் சரியாக அறிந்து கொள்ள எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை. ஆதிவாசிகள் தங்களுக்கு இனிமேல் பாதுகாப்பில்லை என்று உணர்ந்து மற்றவர்கள் தங்கள் மீது ஆதிக்கம் செலுத்தி தங்களை எல்லாவகையிலும் சுரண்டுவதை கண்டு பயப்படுகிறார்கள்''.[11]

ஆனாலும் சம்பளத்துக்கு வேலைபார்க்கும் சர்க்கார் அதிகாரிகள் இதுபற்றி வேறு விதமாகச் சொல்லுகிறார்கள். உக்ருள் மாவட்டக் கலெக்டர் பரிசு ஆணவத்தோடு கூறினார். ''பழங்குடி மக்களை அடிகொடுத்துத்தான் ஆள முடியும். வேறு எந்த முறையும் அவர்களுக்கு விளங்காது''[12]

இந்தக் 'காட்டுமிராண்டி பழங்குடியினரோடு' யார் உட்கார்ந்து பேசுவார்கள். எனவே சமாதானம் என்பதை இராணுவத்தைக் கொண்டும், விமானப்படையைக் கொண்டும்தான் உண்டாக்க முடியும் ! 1966ம் ஆண்டு அய்ஸ்வாலில் உள்ள மக்களுக்கு எதிராக குண்டு வீசித் தாக்கும் விமானங்களும் பயன்படுத்தப்பட்டன. [13] இதில் கற்பழிப்பு, சித்திரவதை, மக்களைக் கொன்று குவித்தல் ஆகியவை பாதுகாப்புப்படையினர் நடத்தும் ''அமைதி காக்கும் பணிகளும்'' அடங்கும். யாருடைய அமைதிக்காக இப்பணி. [14] ?

பிரிகேடியர் சைலோ அனுப்பிய மனித உரிமைக் குழு ஒன்று ஆதிவாசிகள் மீது ஏற்பட்ட வன்முறைகள் பற்றி பாராளுமன்றத்திற்கு ரிபோர்ட் சமர்ப்பித்தது. [15] ''கடந்த காலத்தில் பாதுகாப்புப் படையினரும், காவல் துறையினரும் கிளர்ச்சியை அடக்குவதற்கு மிக மோசமான அளவில் வன்முறை கையாண்டனர்[16] என்று கூறியது.

மூன்று விஷயங்கள் இதிலிருந்து தெளிவாகின்றன. 1. சுதந்திரம் இந்தியாவுக்கு கிடைப்பதற்கு பல ஆண்டுகளுக்கு முன்னதாகவே ஆதிவாசிகளின் கிளர்ச்சி தோன்றிற்று. பிரிட்டீஷ் காலனி ஆட்சியாளர் பழங்குடி மக்களின் வாழ்க்கையில் அநாவசியமாக தலையிட்டு பழங்குடி மக்களின் இராஜ்யத்தை பிரிட்டீஷ் ராஜ்யத்தோடு இணைக்க முயன்றபோதே அவர்கள் எதிர்ப்புத் தெரிவிக்க ஆரம்பித்தார்கள்.

உதாரணமாக ஜீலியோங்காங் தொடங்கப்பட்ட இயக்கம் பிரிட்டீஷ்காரருக்கு எதிரானதும் கொஞ்சம் கிறிஸ்தவர்களுக்கும் எதிரானதுமான இயக்கம்.[17] பழங்குடி மக்கள் இந்திய அரசாங்கத்தின் ஆதிக்கத்துக்கு விரோதமாகக் கிளர்ச்சி செய்தபோது வெளிநாட்டுக்காரர்கள்தான் அதற்கு தூண்டுதலாக இருந்தார்கள்

என்று தவறாகக் குற்றம் சாட்டப்பட்டது. இக் குற்றச் சாட்டுக்கு வடகிழக்குப் பகுதிகளில் உள்ள பழங்குடித் தலைவர் மறுப்பு தெரிவித்து'' காசி, காரோ, அங்கமீஸ், மிசோ, குக்கி ஆகிய பழங்குடி மக்கள் பிரிட்டிஷாரின் வலுமையான பட்டாளங்களை எதிர்த்துத் தங்கள் சுதந்திரத்தைக் காக்கப் போராடியவர்கள். நூறு ஆண்டுகளுக்கு முன் போராடுவதற்கு எங்களுக்குத் தெரியுமானால் இன்று போராட எங்களுக்கு யாரும் கற்றுக் கொடுக்க வேண்டியதில்லை'' [18] என்கிறார்கள்.

அங்ஙனமே, சோட்டா நாக்பூரில் வாழும் முண்டாக்கள் நடத்திய பிரசித்தி பெற்ற கோல் புரட்சியும், [19] பீஹாரில் உள்ள சாந்தால் கிளர்ச்சியும், மத்திய பிரதேசத்தில் பில்கள் நடத்தும் எதிர்ப்பு இயக்கமும், பிரிட்டிஷ் காலனியாட்சிக் காலத்திலேயே உண்டானவைதான். அப்படியானால் பிரிட்டிஷ் ஆட்சிக்கு விரோதமாக பழங்குடிமக்களை கிறிஸ்தவ மிஷனெரிகளா தூண்டிவிட்டார்கள் ?

2. எல்லாம் பிரிவினை இயக்கங்கள் அல்ல. அநேகர் பழங்குடி மக்களை மிருகத்தனமாகச் சுரண்டுகிறார்கள்; அடிமைப்படுத்துகிறார்கள். அந்நியக் கலாச்சாரத்தை, மத நம்பிக்கைகளை பழங்குடி மக்கள்மீது திணிக்கிறார்கள். காரணமில்லாமல் அவர்களைக் கொடுமைப்படுத்துகிறார்கள். பழங்குடி மக்களின் கிளர்ச்சிகள் பலவும் இப்படிப்பட்ட சமூக விரோத சக்திகளுக்கு எதிராக அரசியல் சட்டத்துக்குட்பட்டு ஆதிவாசிகள் நடத்தும் நியாயமான போராட்டங்களாகும். எல்லாப் போராட்டங்களையும் பிரிவினை இயக்கங்கள் என்று கூறிவிடுவது அரசு அதிகாரிகளின் மடமையே. பல வருடங்கள் இத்தகைய ஆதிவாசிகள் மத்தியில் வாழ்த்திருந்தவன் நான். இப்படிக் குற்றம் சாட்டுவது முழுக்க முழுக்க நியாயமற்ற காரியமாகும்.

ஆதிவாசிகள் தங்களுக்கென்று மாநில உரிமைகளைக் கேட்பது தேசத்துரோகக் குற்றமாகும் என்றார் திரு.நியோகி. ஒரு இனத்தை சேர்ந்த மக்கள் தங்களுக்கென்று தனி மாநிலம் கேட்பது எப்போதிருந்து தேசத்துரோகக் குற்றமாயிற்று ? [20] பழங்குடிமக்கள் மாநிலம் கேட்பது தேசத்துரோகமென்றால் தமிழ் மாநிலம், குஜராத்தி மாநிலம் அமைத்ததும் தேசத்துரோகச் செயல்தான். பிரிவினை இயக்கங்களுக்கு வித்திட்டவர்கள் கிறிஸ்தவர் அல்ல, நமது அறிவில்லாத அரசுத் தலைவர்களே. 3. எல்லாக் கிளர்ச்சிகளும் கிறிஸ்தவ ஆதிவாசிகளால் உண்டானவை அல்ல. ஆதிவாசிகள் கிளர்ச்சியை தனது டாக்டர் பட்டப்படிப்பிற்கு எடுத்து, ஆராய்ச்சி செய்தலால் தேனா கூறுகிறார். ''தனி உரிமை கேட்டுப் போராடும் இயக்கங்களுக்கு ஆதிகர்த்தாக்கள் கிறிஸ்தவ மிஷனெரிகள் என்பது தவறான கூற்றாகும்'' [21] என்கிறார். குறிப்பாக அவர் ''மணிப்புரி மாநிலத்தில் உள்ள மெயத்தீகள் கிறிஸ்தவரல்ல. மலைகளில் மணிப்பூரில் உள்ள சிறுபான்மைக் கிறிஸ்தவர்கள் வாழ்கிறார்கள். சமவெளிகளில் வாழும் கிறிஸ்தவரல்லாத மெய்த்தீக்கள்தான் விஷ்ணு மதத்தை எதிர்த்து, அந்நிய கலாச்சாரத்தை எதிர்த்துப் போராடுபவர்கள். தங்கள் மெய்த்தீ மதமும்

கலாச்சாரமும் வளரவேண்டும் என்று போராடுகிறார்கள். கிறிஸ்தவரல்லாத அசாமியர்களும் மெய்த்தீகளும் என்றுமே கிறிஸ்தவ மிஷனெரி வேலைகள் நடக்க விடாமல் தடுப்பவர்கள். இவர்கள் போராட்டத்தின் முன்னணியில் நிற்பதன் காரணம் என்ன?''[22] என்று டாக்டர் மங்க்கோ சாத் கிப்துன் கேட்கிறார்.

தினேஷ்சிங் எம்.பி.தலைமையில் மத்திய அரசினால் அனுப்பப்பட்ட ஆறுபேர்கொண்ட ஆராய்ச்சிக்குழு சொல்வதைக் கவனியுங்கள். ''திரிபுராவில் கிறிஸ்தவ மிஷனெரிகளின் வேலை மிகச் சொற்பம். அங்கே ஒரு சதவீதக் கிறிஸ்தவர்களே இருக்கிறார்கள்''[23] அப்படியானால் திரிபுராவின் பிரச்சனைகளுக்கு காரணம் கிறிஸ்தவரா?

இவைகளை நன்கு தொகுத்து 'ஸ்டேட்ஸ்மன்' பத்திரிகை இவ்வாறு கூறுகின்றது. ''குழப்பத்திற்குள்ள காரணத்தைக் கவனியாமல் இந்திய அரசாங்கம் மிஷனெரிகளையும்' வெளிநாட்டுக்காரர்களையும் குறை கூறிக் கொண்டே இருக்கிறது."24 மொத்த வடகிழக்கு இந்தியப் பகுதியிலும் இப்போது ஒரு வெளிநாட்டு மிஷனெரிகூட கிடையாது என்பதை நீங்கள் கவனிக்க வேண்டும் பொய்யில் பிறந்து பொய்யிலேயே வளரும் படை இந்திய நாசிசம் என்பதற்கு இதுவே தக்க சான்று.

கிறிஸ்தவ மிஷனெரிகளுக்கு இந்தியா முழுவதிலுமுள்ள பழங்குடிமக்களின் போராட்டங்களில் ஏதாவது பங்குண்டா? உண்டு. கிறிஸ்துவின் பணிபுரியவந்தவர்கள்தான் ஆதிவாசிகளுக்குப் படிக்கக் கற்றுக் கொடுத்தார்கள். தங்கள் இனத்தின் சரித்திரத்தை, இந்திய சரித்திரத்தை, உலக சரித்திரத்தை அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தார்கள். ஆதிவாசிகளுக்கு இன உணர்வு, சமூக உண்வு இன்னும் பிரஜைகளாக, மனிதர்களாக, இருப்பதால் தங்களுக்குள்ள அடிப்படை உரிமைகளை அறிந்து கொள்ளும் உணர்வு உண்டாகச் செய்தவர்கள் கிறிஸ்தவர்களே! தங்களை ஒடுக்கிறவர்களோடு சரிசமமாக உட்கார்ந்து பேச, தங்களின் உரிமைகளைக் கேட்கப் பயிற்றுவித்தது கிறிஸ்தவர்களே. இது தேசத்துரோகச் செயல் என்றால் இதே கிறிஸ்தவப் பணியைத்தான் நாட்டின் சுதந்திரம் கேட்டுப் போராடின நமது தலைவர்களுக்கும் அவர்கள் செய்தார்கள். நமது சுதந்திரத்திற்குக் காரணமாயிருந்த தலைவர்களுக்கு கிறிஸ்தவம் ஆற்றிய அருந்தொண்டைத்தான், அன்றுபோல் இன்றும் செய்து வருகிறது. கிறிஸ்தவப்பணி தேசத்துரோகமா?

# 10

# இந்திய அடிமை

காலாகாலமாய் தீண்டப்படாதவர்கள் மனிதர்களாகவே மதிக்கப்படவில்லை. எனவே அவர்களைப் பற்றிய ஆராய்ச்சி கூட தீட்டாகவே கருதப்பட்டது. ஆனால் சமீபகாலங்களில் அவர்களும் மனிதர்களின் வரிசையில் வைத்து எண்ணப்படுகிறதைக் காண்கிறோம். இதுவே ஒரு புரட்சி. இன்று இனப்பகுப்பு ஆராய்ச்சியாளர்கள் தீண்டப்படாதவர்களைப் பற்றி நல்ல ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுள்ளனர். ஆனாலும், தீர்மானம் எடுக்கும் முக்கிய இடங்களான சட்டசபை, சட்டசபைகளில் நீதிமன்றங்களில், மக்கள் தொகை கணக்கெடுப்புச் சமயங்களில் கீழ்காணும் உண்மைகள் தொடர்ந்து வேண்டுமென்றே புறக்கணிக் கப்படுகின்றன. எனவே அந்த உண்மைகளை விபரமாக இங்கு நாம் பார்க்கப்போகிறோம்.

சரித்திர காலத்திற்கு முற்பட்ட இந்தியாவில் வாழ்ந்த மிகப் பூர்வீகக் குடிகள் நிக்ரிட்டோக்கள் ஆவர். பிறகு புரோட்டோ ஆஸ்ட்ரோலாயிடுகளும் திராவிட

ரும் மங்கோலியரும் வந்து குடியேறினர். இந்திய பிரசித்தபெற்ற அரசியல் அறிஞரும், வரலாற்று வல்லுநருமான கே.எம்.மூன்ஷி ''இந்தியாவில் ஆதியில் குடியேறினவர்கள் ஆப்பிரிக்காவிலிருந்து வந்த நிக்ரிட்டோக்கள்தான். புரோட்டா ஆஸ்ட்ரோலாயிடுகள் மத்தியத் தரைக் கடல் பகுதியிலிருந்து வந்தார்கள். அதன் பிறகு மத்தியத் தரைக் கடல் பகுதியிலிருந்து வந்து இந்தியாவில் குடியேறியவர்கள் திராவிடர்கள் கடைசியில் ஐரோப்பியருக்கு உறவான ஆரியர்கள் இங்கு குடியேறினார்கள்''[1] என்கிறார்.

கேரளாவிலும் தமிழ் நாட்டிலும் அந்தமான் நிக்கோபார் தீவுகளிலும் மலைவாசிகளாக இன்றும் சிறு சிறு எண்ணிக்கையாக நிக்ரிட்டோக்கள் இருக்கிறார்கள். உலகளவில் சிறந்த மனிதயியல் வல்லுநரான டாக்டர் வித்தியார்த்தியும், டாக்டர் குஹாவும் ஒருமிக்க இந்த் நிக்ரிட்டோக்களே இந்தியாவின் பூர்வீகக் குடிகள். இவர்களே காடர்கள் புலையர்கள் இருளர்கள் ஆவர்'' [2] என்கின்றனர்.

பண்பாட்டு மனித இயல் கோணத்திலிருந்து ஆராய்ச்சி செய்து நிக்ரிட்டோக் கள் இன்றும் அந்தமான் தீவுகளில் வாழ்வதாக புதை பொருள் ஆராய்ச்சியாளர் கோயட்ஸ் கூறுகிறார். தென் இந்தியாவில் காடுகளில் வாழும் காடர்களும், புலையர்களும், மலையாவில் உள்ள சீமாங்குகளும் நிக்ரிட்டோமக்களின் குணவியல்புகள் உடையவர்களாக இருப்பதாக அவர் கூறுகிறார்.[3]

இந்தியாவில் வந்து குடியேறியதாகத் திட்டமாய் குறிப்பிடக்கூடிய இரண்டா வது இனமக்கள் ஆஸ்டிரலாயிடுகள், தெற்கு ஆசியாவில் உள்ள ஆஸ்டிரலாயிடு கள் சிறுசிறு குழுக்களாக ஆசியா முழுவதிலும் பல இடங்களில் காணப்படுவதா கக் கூறுகிறார்கள். சிலோனிலுள்ள வேடாக்கள் இந்தியாவில் பில்கள் மற்றும் முண்டாமொழி பேசும் ஆதிவாசிகளிலும், தென்கிழக்கு ஆசியாவில் உள்ள சிறு சிறு குழுக்களிலும், வேடாயிட் வகையினர் காணப்படுகின்றனர்.[4] பலுஸ்தினாவிலிருந்து வந்து குடியேறி புரோட்டோ ஆஸ்டிரலாயிடுகள் மத்திய இந்தியாவில் வசிக்கின்றனர்.[5]

டாக்டர் ஸ்டென்நோ என்பவர் கருத்துப்படி வட இந்தியா முழுவதும் கோல் இனத்தவர் பரவியிருந்தனராம். இன்று இங்கு வாழும் கோல் சாந்தாலிகள், பில்கள் ஆகியோர் ஆஸ்டிரோ ஆசியாடிக் இனத்தவர்.[6]

இந்தியாவில் குடியேறியதாக திட்டமாய் கூறக்கூடிய மூன்றாவது இன மக்கள் மங்கோலியர் இனத்தவர்கள். இவர்கள் தங்களின் கலாச்சார, இன, மத, தனித்தன்மையை இன்றுவரை பத்திரமாக காத்து வந்திருக்கிறார்கள். இவர்க ளைக் குறித்து 17ம் அத்தியாயத்தில் விரிவாகப் படிக்கப்போகிறோம்.

பண்டைய இந்தியாவில் வந்து பெருமளவில் குடியேறிய நான்காவது கூட்டம் திராவிடர்கள். இவர்களைக் குறித்து இங்கு கொஞ்சம் விவரிப்பது அவசியம்.

பழங்காலத்து கிரேக்க நூலாசிரியரான உறிரோடிட்டஸ் லிசியர்கள் ஆதியில் கிரேத்தா தீவிலிருந்து வந்தவர்கள்; அந்தத் தீவில் வாழ்ந்த ஹெலனிய நாகரீகத்திற்கு முற்பட்ட ஆசிய மக்கள் கிரேக்கர்களால் 'தெர்மிளை' என்று எழுதப்பட்டுள்ள ஒரு பெயரால் அறியப்பட்டிருந்தனர். எனவே கிழக்கு மத்திய தரைக் கடல் பகுதியிலிருந்து வந்த திராவிட மக்கள் அவர்களுடைய பழங்குடிப் பெயரான 'தெர்மிளை' என்ற பெயரை வைத்திருந்திருக்கலாம் இதுவே தமிழ் என்று மாறியிருக்கலாம். திராவிடர்கள் இன்றைக்கு 5,000 ஆண்டுகளுக்கு முன் வந்திருக்க வேண்டும். காரணம் ஆரியர் கிமு 1400ல் இந்தியாவை ஆக்கிரமிப்பு செய்த வேளை வட இந்தியா எங்கும் பலுசிஸ்தான் முதல் பங்களா தேசம் வரை திராவிடர் பரவி வாழ்ந்திருந்தனர். பலுசிஸ்தானில் இன்றும் பேசப்படும் பிரகுயி என்ற திராவிட மொழி இதற்குச் சான்று. வட இந்தியா முழுவதும் திராவிட நாகரீகம் உயர்ந்த நாகரிகமாகப் பரவியிருந்து. இந்தக் கருத்தில் அறிஞர்கள் யாவரும் உடன்படுகிறார்கள்.

''ஆதியில் இந்தியாவில் கி.மு. 2,000க்கு முன் வந்த குடியேறிய திராவிடர்கள் சிறந்த முன்னேற்றமடைந்த பண்பாட்டுடன் காணப்பட்டார்கள். இந்த உண்மையை ஆதியில் இருந்த அவர்களின் பேச்சு மொழி வடிவங்களிலும், மொகஞ்சதாரோ, ஹாரப்பா லோதால் என்ற இடங்களில் நடந்த புதை பொருள் ஆராய்ச்சிகளிலும் காண்கிறோம்.[7] இவர்கள் நாகரீகத்தில் கோட்டைகள் பொதுக் குளியறைகள், கப்பல்கள் கட்டும் தொழில், பல நாடுகளோடு வியாபாரம் செய்தல், ஆகியவற்றைக் காண்கிறோம் என்று முன்ஷி கூறுகிறார். கி.மு. 3000 முதல் 1400 வரை சிந்து சமவெளிநாகரீகம் லோதால் முதல் மொகஞ்சதோராவரை பரவியிருந்ததாகவும், உலகத்தின் ஆதி நாகரிகத்தின் தொட்டில் எனப்பட்ட சுமேரிய நாகரீகத்தோடு அதற்கு உறவு இருந்ததாகவும் கோயட்ஸ் கூறுகிறார். உலக அறிஞர்கள் கருத்துக்களை ஏற்றுக் கொண்டவராக ஜவஹர்லால் நேரு ''சிந்து சமவெளியில் வாழ்ந்த மககளுக்கும் தென் இந்தியர்வில் வாழும் திராவிட மக்களுக்கும் அவர்கள் கலாச்சாரத்திற்கும் அதிக அளவில் ஒற்றுமை இருக்கிறது. எனவே அவர்களை இந்தியாவின் பூர்வீக குடிகளாகவே எடுத்துக் கொள்ளவேண்டும்'' [8] என்கிறார். மொகஞ்சதோராவின் திராவிட நாகரீகத்திற்கும், சுமேரியர்களின் நாகரீகத்திற்கும் உள்ள உறவு பற்றி மேலும் அதிகமான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. சுமேரிய நாகரீகத்தின் ஆராய்ச்சி வல்லுனர்கள் இந்து சமவெளி நாகரீகத்திற்கும் சுமேரியா, மொசபொத்தோமியா நாகரீகங்களுக்கும் உள்ள நெருங்கிய உறவுகள் பற்றிக் குறிப்பிடுகின்றனர்.

கி.மு. 1400 வட இந்தியாவில் வாழ்ந்த திராவிட மொழி பேசிய மக்கள் எங்கெல்லாம் வாழ்ந்திருந்தார்கள் என்பதில் மொழி ஆராய்ச்சியாளர்களும் புதைபொருள் ஆராய்ச்சியாளர்களும் ஒரே கருத்துக்கு வருகின்றனர் கமிஷனர் நிகம் இந்திய ஜனத்தொகை கணக்கெடுப்பில் கூறுகின்றார். 'இந்தோ ஆரியர்கள் அல்லது இன்டிக்மொழி பேசும் மக்கள் இந்தியாவுக்குள் வந்தபோது

திராவிட மொழி பேசுபவர்களை இந்தியாவின் எல்லா பகுதிகளிலும் கண்டார்கள் என்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படும் ஒரு உண்மை''[9] பந்தார்க்கர், [10] ராப்சன்[11] உறிராஸ்''[12] மற்றும் பலர் ''வடநாட்டிலிருந்த திராவிட மொழி ஆரியர்கள் படையெடுப்பால் அழியலானது'' என்கின்றனர். ஜனத் தொகை கணக்கை ஆராய்ச்சி செய்வோரும் அதனையே நிரூபிக்கின்றனர். சண்டாளர், தாஸ், தாஸர்கள் என்ற பெயர்கள் தீண்டப்படாத ஜாதிகளைக் குறிக்கும் ரிக் வேதப் பெயர்கள். இவையாவும் இந்தியாவின் பூர்வீகக் குடிகளான திராவிட மொழிப் பெயர்களே. இவை இந்தியாவின் மக்கள் தொகை கணக்கெடுப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஹரிசனப் பெயர்களே.[13] இவர்கள் இன்றும் ஆந்திரா, கேரளா, கர்நாடகா, ஒரிசா, ராஜஸ்தான், குஜராத், தமிழ்நாடு, உத்திரபிரதேசம் ஆகிய மாநிலங்களில் இதே திராவிடப் பெயர்களில் காணப்படுகிறார்கள். சுந்தர்லால் சாகர் ஆதி இந்தியாவைக் குறித்த விஷயங்களில் அறிஞராக விளங்குபவர். இவர், ''வட இந்தியாவிலுள்ள திராவிடர்கள் தங்களிடையே ஜாதி வேற்றுமை இல்லாமல் வாழ்ந்து வந்தார்கள்.''[14] என்கிறார்.

கடைசியாக ஆரியரின் ஆக்கிரமிப்பு ஏற்பட்டபோது இந்தியாவில் பல இனங்கள் சிதறிக்கிடக்கும் ஒரு நிலையைக் காண்கிறோம். ஐந்து இனங்கள் தெளிவாகக் காணப்படுகின்றன. நிகிரிட்டோக்கள். இவர்கள் இன்னும், தமிழ் நாடு, கேரளா, அந்தமான் நிக்கோபார், தீவுகளில் காணப்படுகின்றனர். ஆஸ்டிரலாய்டுகள், இவர்கள் மொழி அடிப்படையில் ஆஸ்ட்ரோ ஏசியாடிக் கோலாரியன் இனமக்கள். இவர்கள் முண்டர்கள், காரியாக்கள், சாந்தாலிகள், இந்தோ-ஆரிய மொழி பேசும் ஆரியரல்லாத பில் இனத்தவர். மங்கோலாய்டுகள், இவர்கள் சீன-திபெத்திய மொழி பேசும் மக்கள். வடகிழக்கு இந்தியா முழுவதிலும் வாழ்கிறவர்கள். திராவிட இனமக்கள். இவர்கள் தென் இந்தியா முழுமையும் உள்ள மக்கள். மற்றும் மத்திய பிரதேசத்தில் உள்ள கோண்டாக்கள், கோண்டர்கள், ஒரிசாவிலுள்ள குயீக்கள் பீகாரிலுள்ள ஒராவோன் மாலர் இனத்தவர். ஆரியர்கள். இவர்கள் பல இனங்களைச் சேர்ந்தவர்களாக அதிக அளவில் வட இந்தியாவிலும் மிகச் சிறுபான்மை பிராமணராகத் தென் இந்தியாவிலும் காணப்படுகின்றனர்.

கிறிஸ்துவுக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்னதாக இரானிய ஆரியர்களை விட்டுப் பிரிந்து பெருமளவில் நாடோடிகளாக மாறிவிட்டவர்களே இந்தியாவுக்கு வந்த ஆரியர் இனம்.[15] இவர்கள் தங்கள் சொந்த நாடான இரான்வேஞ்சிலிருந்து இது இன்று ரஷ்யாவில் உள்ள துருக்கிஸ்தான் என்பதாகும்.[16] புறப்பட்டு ஆப்கானிஸ்தான் வழியாக இந்தியாவுக்கு வந்தார்கள்.[17] அதே சமயம் இரானிய ஆரியர்கள் ஈரானில் பெர்சியாவில் நிரந்தரமாகத் தங்கி விட்டனர். இப்படி ஆரியர்கள் கிழக்கு நோக்கிப் புறப்பட்டு பூர்வீகக் குடிகளான திராவிடர்களோடு சண்டையிட்டு அவர்களைக் கொன்று அல்லது அடிமைகளாக்கி பரவினர். அவர்கள் திறந்த வெளிகளில் வாழ்ந்த திராவிடர்களை

எளிதாக வென்று, மதிலிட்ட பட்டணங்களைப் போரிட்டுத் தாக்கி மெல்ல மெல்ல இந்துசம வெளியின் கிழக்கில் சென்று குடியேறினார்கள். கி.மு. 1400முதல் 1000 வரையுள்ள காலத்தில் வட இந்தியா முழுவதையும் ஆக்கிரமித்துக் கொண்டுவிட்டார்கள்.[18]

பேராசிரியர் டி.பரோ கருதுவது போல் ஆக்சஸ், யக்சார்த்தாஸ், ஆரல், காஸ்பியன் கடல் இவை ஒட்டிய பகுதிகள் ஆரியர்களின் பூர்வீக இருப்பிடமாயிருந்திருக்க வேண்டும். இவர்களில் ஒரு பகுதியினர் இந்தியாவுக்குள் வந்தனர். மற்றப் பகுதியினர் ஈரானில் போய்க் குடியேறினர். கி.மு.9ம் நூற்றாண்டைச் சேர்ந்த அசீரிய ஏடுகளல் முதல் முதலாக இவர்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. அறிஞர்களின் கருத்துக்களோடிசைந்து நேருஜியும், "ஆரியர்கள் செழிப்பான இந்தியாவுக்குள் அன்னியராக வந்து குடியேறினபோது அவர்கள் உள்ளங்களில் பொங்கி எழுந்த இலக்கியங்களே வேதங்கள். ஈரானில் எழுதிய அவெஸ்தா நூலை ஆரியர்கள் கொண்டுவந்து இந்தியமண்ணில் அவற்றை விரித்துரைக்க அதுவே வேதம் ஆயிற்று. வேதங்களின் மொழி நடை அவெஸ்தாவின் மொழி நடைக்கு மிக நெருங்கிய தொடர்புடையதாகக் காணப்படுகிறது"[19] என்கிறார்.

வர்ணாசிரமதர்மம் எங்ஙனம் தோன்றிற்று என்பதை அறிய நாம் அவசியம் ஆரியர்களின் அடையாளம் சம்பந்தப்பட்ட காரியங்களைப் பார்க்க வேண்டும். இன இயல் வல்லுனர் ஹெரால்ட் வாட்ஸ்' "இந்தியாவிலுள்ள ஆரியர்களின் மொழி அவர்கள் வழிபாடு செய்து வந்த கடவுள்கள் ஆகியவைகளை வைத்துப் பார்க்கும் போது இவர்கள் ஆகயர்களையும் தோரியர்களையும் ஒத்திருக்கின்றனர் இவர்கள் கி.மு. இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் கிரேக்க தீபகற்பத்தை தங்களுக்கு சுதந்திரமாக்கிக் கொண்டவர்கள்."[20] ஐரோப்பாவின் ஆரியா இனத்திலிருந்து பிரிந்து இனவியல் ஆராய்ச்சியாளர் விக்டர் பர்னோ என்பவர் ஆரியர்களை இவ்வாறு குறிப்பிடுகிறார். "காக்கசாயிடுகள் வெள்ளையர்கள் என்று அழைக்கப்படுகிறவர்கள். இவர்களில் வடக்குப் பகுதி ஐரோப்பியர்கள் வெள்ளை நிறத்தவராகவும், நீலக்கருவிழியோடு, செம்பழுப்பு நிறமயிரோடு காணப்பட்டனர். ஆனால் தென்பகுதி காக்கசாய்டுகள் மத்தியதரைக் கடலின் இருபுறங்களிலும் சமீப கிழக்கு நாடுகள் வழியாக இந்தியா வரையிலும் பரவியிருந்ததோடு வெள்ளை நிறமும் கருப்பு மயிரும் கருத்த கண்களும் உடையவர்களாயிருந்தனர்."[21] ஆரியர்கள் கி.மு. 1500க்கு சுமாராக, ஆரியர்கள் இந்தியாவுக்குள் வந்திருக்க வேண்டும். வேதகால ஆரியர்கள் தங்கள் இயற்கைத் தெய்வங்களோடும் நாடு பிடிக்கும் ஆசையோடும் வந்து சேர்ந்தனர்.[22]

திராவிடர்களை அவர்கள் எங்ஙனம் பிடித்தாண்டனர் என்ற சரித்திர உண்மையை கீழ்க்கண்ட மூலநூல்களை எழுதிய அறிஞர்கள் தரும் குறிப்புகளைக் கொண்டு தெரிந்து கொள்ளலாம். கூடுதல் விபரங்களுக்கு இவ்வாராய்ச்

சிப் புத்தகங்களைப் படிக்கவும். இந்தியாவின் பண்பாட்டுச் சரித்திரத்தை எழுதும் டாக்டர் பாஷம் இங்ஙனம் கூறுகிறார் ''அடிக்கடி பட்டணங்கள் அழிக்கப்பட்டது பற்றி ரிக்வேதத்தில் காணுகின்றோம். யுத்ததேவன் இந்திரா ''பட்டணங்களை அழிப்பவன்'' என்ற பொருளில் 'புரம்தரா' என்றழைக்கப்பட்டான். புரம் என்ற திராவிடச் சொல் நகர் அல்லது கோட்டை என பொருள்படும். தரா என்ற சமஸ்கிருதச் சொல் இடி என்று பொருள்படும்.

இதேகருத்தில் அக்னிக்கடவுளும் பட்டணங்களைத் தீயிட்டு அழிக்கும் வல்லமையுடைய கடவுள் என்றே அதிகமாய்க் குறிப்பிடப்படுகிறது. இந்து சமவெளியின் பட்டணங்கள் பல தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. இப்படி அதிகமாய் நாம் படிப்பதிலிருந்து ஆரியர்கள் தான் இந்து சமவெளியில் பட்டணங்களைத் தீக்கிரையாக்கி அழித்தனர் என்பது தவிர்க்க முடியாத உண்மை''[23] புதை பொருளாராய்ச்சியாளர் மிஷ்ராவும், இக்கருத்தை ஆமோதிக்கிறார்.[24] இது வீலர் எழுதிய காரியங்களுக்கு ஒத்திருக்கிறது. வீலர் இந்து சமவெளி நாகரிகத்தின் தலையான ஆராய்ச்சியாளர்.[25] அவர் கூறுவது ''கி.மு.1400ல் இந்து சமவெளி நாகரிகம் அழிந்து விட்டது. மொகஞ்சதாரோவில் ஆரியரின் முறியடிப்பில் செத்து வீழ்ந்தவரின் எலும்புகள் புதைக்கப்படாமலே கிடந்ததை புதை பொருள் ஆராய்ச்சியில் பல இடங்களில் அகழ்ந்து கண்டு பிடித்துள்ளவர். இவர்கள் எதிரிகளால் வெட்டப்பட்ட இடங்களில் புதைக்கப்படாமல் உள்ள நிலையிலேயே எலும்புக் கூடுகளாக கிடக்கின்றனர்.[26] இந்த வெற்றி ரிக் வேதத்தில் அழகான பாடல்கள் பலவற்றில் எழுதப்பட்டுள்ளன.[27] ''விரத்தாவைக் கொன்ற இந்திரா எல்லோரையும் பொடிப்பொடியாக நொறுக்கி விட்டான். தாசுக்களைக் கொன்றவன் புஜபுல பராக்கிரமம் செய்தான். அதன் பிறகு முப்பது குடம் சோம ரசம் குடித்து ஒரே நேரத்தில் தன் தாகம் தீர்த்துக் கொண்டான்.'' அங்குள்ள பூர்வீகக்குடிகள் ரிக்வேதத்தில் கருப்பு மனிதர்களாகவும் மூக்குசப்பினவர்களாகவும் அநாசர் வர்ணிக்கப்பட்டுள்ளனர். இந்திரனிடம் மக்கள் இப்படி பேசுகிறார்கள். ''நாங்கள் எப்பக்கமும் தாசுக்களால் சூழப்பட்டுள்ளோம். அவர்கள் பலியிடுவதில்லை. அவர்கள் சடங்காச்சாரங்கள் வித்தியாசமாயுள்ளன, அவர்கள் மனிதர்களல்ல; சத்துருக்களை அழிப்பவனே! இவர்களைக் கொன்று போடு''[28] மார்ஷல், கன்னிங்ஷம்[29] போன்றவர்கள் முதன் முதலாக இந்த சமவெளி நாகரிகத்தை புதைபொருள் அகழ்வு மூலம் ஆராய்ந்து படித்தவர்கள். ஹிராஸ்[30] என்பவர் பட எழுத்துக்களால் அங்கு எழுதப்பட்டிருந்தவைகளின் பொருளைக் கண்டு பிடித்தவர். மதோ சரூப்வாட்ஸ்[31] தீக்ஷித்,[32] னெ மஜீம்தார்,[33] ராப்சன் வீலர்,[34] ஆர்.டி.பானர்ஜி, பிபிலால்[35] இவர்கள் அனைவரும் குறிப்பிடும் உண்மைகள் என்னவென்றால் ''கருப்புநிற திராவிடர்கள் வெள்ளை நிற வெளிநாட்டு ஆரியர்களால் கொல்லப்பட்டனர். அவர்களுடைய ''புரம்'' கோட்டை அல்லது பட்டண நாகரீகம் அழிக்கப்பட்டது. இவர்களில் ஆரியரால் கொல்லப்படாதவர்கள் அடிமைகளாக்கப்பட்டனர்.''[33] மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் நடந்த காரியங்க

ளைப் பற்றி நாம் இப்போது படிக்கிறோம். அந்த நாட்களில் பழக்கத்தில் இருந்த வழக்கங்கள், கொள்கைகள் ஆகியவற்றை இந்த நாட்களின் ஒழுக்கத்த ரங்களின் அளவுகளை வைத்து அளவிடக்கூடாது. இவைகளைப் படிக்கும் போது இந்த தெளிவுடன் நாம் படிக்கவேண்டும்.

ஆரியர்கள் பஞ்சாபிலிருந்து கிழக்கேயும் தெற்கேயும் பரவத் தொடங்கின போது பல இடங்களிலும் சிதறிவிட்டார்கள். அதனால் (தாசுக்களை) திராவிடர் களை முழுமையாக அழிப்பது முடியாததாகவும், அவசியமற்றதாகவும் ஆயிற்று. எனவே அழிப்பதற்குப் பதிலாக அவர்களை வீட்டில் அடிமைகளாகவும் கிராமங்களில் பண்ணையாட்களாகவும் வைத்துப் பயன்படுத்தினர். ஆதிகாலத்து நாகரீகங்களில் மக்களை ஜெயிப்பவர்கள் ஒன்று அவர்களைக் கொன்று விடுவார்கள் அல்லது அடிமைகளாக வைத்துக்கொள்வார்கள் என்று அறிந்திருக் கிறோம். அடிமைத்தனம் பெரிய தீமைதான். ஆனால் கொன்று குவிப்பதைவிட அடிமைகொள்வது மேலான செயலே.

ஆரியர்கள் இந்தியாவிற்குள் வந்து சேர்ந்தபோது மகதநாட்டுக்குக் கிழக்கே மங்கோலிய இனமக்கள் இருந்தனர். ஆஸ்ட்ரலாயிடுகள், விந்திய சாத்பூரா காடுகளிலும் மலைகளிலும், ஆரவல்லி, சோட்டா நாக்பூர் பகுதிகளிலும் வசித்து வந்தார்கள். நிகிரிட்டோக்கள் ஆரியர்கள் வருவதற்கு வெகு முன்னரே இந்தியாவில் காணப்பட்ட பெரிய இனமாகிய திராவிடர்களோடு நன்கு கலந்துவிட்டனர். சில மலைகளில் மட்டும் நிகிரிட்டோக்கள் இன்றும் இருளர்கள், காடர்கள், புலையர்கள், நிக்கோபாரிகள் என்ற பழங்குடி மக்களாகக் காணப்படு கிறார்கள்.

எனவே, ரிக்வேதத்தில் சொல்லப்பட்ட தாசுக்கள் விந்தியமலைக்கு வடக்கேயி ருந்த திராவிடர்களே. படையெடுத்து வந்த ஆரியர்களால் இவர்கள் அடிமைப்ப டுத்தப்பட்டனர். இந்து கலாச்சாரவியல் வல்லுனரான பாஷம் கூறுவதுபோல ஆரியர், ''யுத்தத்தில் பிடித்த அநேக தாசுக்களை அடிமைகொண்ட காரியமே நாளடைவில் இந்தியாவில் காணப்படும் அடிமைத்தனத்திற்கு அடிகோலியது.''[36]




# 11

# தீண்டா ஜாதிகள் யார்?

அடிமை கொண்ட ஆரிய மக்களுக்கும் அடிமையான திராவிட மக்களுக்கும், நிறத்தில் காணப்பட்ட வேறுபாடே இந்தியாவில் உள்ள ஜாதி முறைக்கு அடிப்படையாகும்.[1] இந்திய அடிமை முறையில் இருந்து பிறந்ததே ஜாதி முறை. ஈரானில் வாழ்ந்த ஆரியர்களுக்கு, சென் அவெஸ்தாவின் கருத்துப்படி, செய்கிற வேலையை அடிப்படையாகக் கொண்டு மூன்று பிரிவுகளாக மனிதர்கள் காணப்பட்டனர். இது உலகெங்கிலும் காணப்படும் தொழில் பிரிவுகள் போன்றதே. இதனை இந்தியாவில் காணப்படும் ஜாதிப் பிரிவுகளோடு ஒன்றுபடுத்தக்கூடாது.

இந்தியாவின் ஜாதி அமைப்புக்கு அடிப்படைக் காரணம் அடிமையாக்கப்பட்ட தாசர் இனத்திற்கும் ஆரிய இனத்திற்கும் உள்ள வேறுபாடே தண்டேகர் குறிப்பிடுவது போல் கருப்புத்திராவிட அடிமைகள் 'தாசர் வருணம்' என்றும், அவர்களை ஆண்டுவந்த ஆரியர்கள் ஆகியவருணமென்று அன்றுள்ள ஆரிய

வேதங்களிலெல்லாம் எழுதப்பட்டுவிட்டது.[2], ரணடே[3], சாகர்[4], ஃபடேசேயல்[5] நேரு[6], அம்பேத்கார்[7], பர்ஜுவல்[8], மற்றும் பலர் கூறுவது போல் இந்தியாவில் உள்ள ஆரிய எஜமான்களுக்கும் திராவிட அடிமைகளுக்குமுள்ள வித்தியாசம் ஸ்பார்டன்களுக்கும், ஹெலெட்டுக்கும், எகிப்தியருக்கும், எபிரேயருக்கும், ரோமருக்கும் பிளெபியருக்கும், அயர்லாந்து ஃபுதிரிக்கும், ஜெர்மானிய செர்ஃப் வெள்ளையருக்கும், நீக்ரோவுக்கும் உள்ள வேற்றுமை போன்றதே.

ஆனால் இந்தியாவில் உள்ள அடிமைத்தனத்தின் சிறப்பு என்னவென்றால் இதிலே தெய்வத்தின் முத்திரை போடப்பட்டுள்ளது! ஆகவே மூவாயிரம் ஆண்டுகளாக இதை எதிர்த்துக் கேள்வி கேட்க நாதியில்லாமற் போயிற்று![9] ரிக் வேதத்தில் 'தாசர்' என்ற சொல் 55 பாடல்களிலும், தஸ்யூ' என்ற சொல் 76 பாடல்களிலும் வருகின்றன. இவைகளில் ஆரியர்களின் வெற்றியும் 'தாஸப்பிரதா' என்ற அடிமை முறை ஆரியர் வென்ற இடங்களிலெல்லாம் அது சமூக ஒழுங்குமுறையாக எங்கும் பரவத் தொடங்கிற்று என்ற விஷயமும் எழுதப்பட்டுள்ளது. அக்காலத்தில் எழுதப்பட்ட மற்ற நூல்களும், இந்த அடிமை முறையை விபரமாக வருணிக்கத் தொடங்கின. சர்வவல்ல கடவுளே, எனக்கு நீ நூறு கழுதைகளையும், நூறு ஆடுகளையும், நூறு தாசர்களையும் கொடுத்தாய் ''சதம்மே கர்தபனா சத மூர்ணவிதினம் ஸதம் அதி ஸ்ரஜா அடிமை முறை பொருளாதார அமைப்பில் கலந்து விட்டதை இவை வர்ணிக்கின்றன.

இங்கு நாம் பேசுவது ஏதோ மிகப் பழைமையான காலத்தில் நடந்து இன்று இங்கு அருங்காட்சி பொருளாகிவிட்ட ஒரு காரியத்தைக் குறித்து இல்லை. மூவாயிரம் ஆண்டுகளாக வெற்றி நடைபோட்டு இன்னமும் இந்திய சமுதாயத்தின் உயிரூட்டமாய்க் காணப்படும் இந்திய அடிமை முறையைப் பற்றித்தான் இங்கு நாம் பேசிக் கொண்டிருக்கிறோம். கொத்தடிமைத் தீமை இந்தியாவில் இந்த அடிமை அமைப்பின் விளைவாக உண்டான ஒரு தீமையே என்கிறார், ஜெகஜீவன்ராம்.[10]

வேத இலக்கியங்கள் அனைத்தும் மக்களை 'ஆரியர்கள்', ஆரியரல்லாதார், அல்லது தாசுக்கள்' என்று இரண்டு தெளிவான வகுப்புக்களாக பிரிக்கின்றனர். இவ்விரு மக்களிடையே அமைந்திருந்த திட்டமான சில வித்தியாசங்களைக் கொண்டே இப்படிப் பிரித்து வைத்தன.

ஒன்று மத வித்தியாசம். மனித இயல் அறிஞரான சுவாமி அகேநந்த பாரதி கூறுகிறார் ''லிங்க வழிபாட்டு முறை இந்தியாவில் சுயமாக, ஆதியில் தோன்றியவையே. இவைகளுக்கு எதிராக ஆரியர்களுக்கு உண்டரன பெரிய வெறுப்புகுறித்து ரிக்வேதத்தின் முதல் மண்டலத்திலேயே காண்கிறோம்''.[11] நரபலி வணக்கம், இயற்கையை வழிபட்ட ஆரியர்களுக்கு சகிக்கக்கூடாத காரியங்களாக இருந்தன. வேதத்தில் வரும் உதாரணங்களும் வருணனைகளும் மற்றும் ஆதிகாலத்தில் தோன்றிய இலக்கியங்களும் இத்துவேஷத்தைக் காண்பிப்பவையே.

மற்றொரு வித்தியாசம் சரீர தோற்றம் தலை அளவு, தோலின் வருணம், மூக்குத்தண்டின் அமைப்பு, உதடுகளின் அமைப்பு, ஆகியவற்றின் வித்தியாசங்கள். இதில் வருணம்தான் மிகமுக்கியமான வித்தியாசம். ரிக்வேதம் கூறுவது போல ஆரியர்களின் நிறம் வெள்ளை! தாசர்களின் நிறம் கருப்பு! யோதாஸம் வர்ணா மாத்ரே குஹக்கா''.

ஆரிய இனத்தையும் திராவிட இனத்தையும் பிரித்து வைப்பதற்காகவே அடிமை அமைப்பு தோன்றிற்று. இனங்களின் தோற்றவியல் நிபுணரான சோவியத் நாட்டு செபொக்சராவ் கூறுவது போல் ''மனிதர்கள் தங்கள் தோலின் நிறத்திலும், தலையிலுள்ள உரோம வகையிலும், மூக்கின் அகலத்திலும், மற்றும், உறுப்புகளின் தோற்றத்தில் வேறுபட்டால் அங்ஙனமே தங்கள் மன வளர்ச்சியிலும் அவர்கள் வித்தியாசப்படுவார்கள், என்பது இனவெறியரின் திடமான நம்பிக்கை. இந்த நம்பிக்கையே பல நாடுகளில் நடந்துவரும் இனப்பாகுபாடு, இனஒதுக்கு, இனப்படுகொலைகள், ஆகியவற்றிற்குக் காரணமாகிவிட்டது''.[12] ஆரியர்களின் கண்டுபிடிப்பாக இந்த அடிமை முறையை நாம் எண்ணக் கூடாது. இன்றும் உலகின் பல பாகங்களிலும் வெவ்வேறு விதத்தில் வெவ்வேறு அளவில் இவ்வினப் பாகுபாடுகள் இருந்து வருகின்றன. நம் நாட்டுக்கு வெளியேதென் ஆப்ரிக்காவில் இன்றுகூட இன வேறுபாடு காணப்படுகிறது. இப்படி இனங்களை பாகுபடுத்தி வைப்பதற்காகவே 'ஆரிய வர்ணம்', தாச வர்ணம் என்ற பதங்கள் முதன் முதலில் ரிக் வேதத்தில் பயன்படுத்தப்பட்டன. இனப்பாகுபாடும் நிற வேறுபாடுமே இந்தியாவில் உள்ள ஜாதி வித்தியாசத்திற்கு அடிகோலியது.[13] தண்டேகர் கூறவது போல் ''வருணம் என்ற சொல் ஒன்றே ஜாதிக்கு அடிப்படையானது என்பதை தெளிவாக்குகிறது. ஆரிய வர்ணம் ஆரியர்களின் நிறம் தாசவர்ணம், அடிமைகளின் நிறம் என்ற பதங்களை ரிக் வேதத்தில் நாம் நிறைய பார்க்கிறோம்.[14]

இந்திய அரசு வெளியிடும் அரசுப்பதிவேடு கூறுகிறது. ''சமுதாயத்தில் தேவர்கள் அசுரர்கள் பேய்கள் என்றும், அல்லது ஆரிய ஆண்டவன் இனம், தாச அடிமை இனம் என்றும் சமுதாயத்தைப் பிரித்து வைத்துவிட்டார்கள். வெள்ளைத் தோல்காரர்கள் ஆண்ட ஜாதி கருப்புத்தோல்காரர்கள் அடிமை ஜாதி என்று ஏற்பட்டுவிட்டன''.[15] இரண்டு ஜாதிகள் அல்லது வருணங்கள் மனித ஆராய்ச்சி வல்லுநர்களான ஜேக்கபஸ் என்பவரும் ஸ்டான் என்பவரும் சொல்வது போல, ''பிறப்பால் உயர்ந்த இனம், தாழ்ந்த இனம், உண்டு என்று இனவெறிக் கொள்கையினர் நம்புகின்றனர்.

தோல் நிறத்திற்கும், மனோவளர்ச்சிக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.[16]

அகேநந்த பாரதி கூறுகிறார், ''வெள்ளை நிறம் இந்தியக் கலாச்சாரத்தில் மிக அதிக அந்தஸ்து பெறுகிறது. ஜாதிப்பிரிவு முறையில் உள்ள வெள்ளை நிறத்தை உயர்ந்த ஜாதியோடும் கருப்பு நிறத்தை ஆரியரல்லாத மக்கள்

வகுப்புகளோடு தொடர்புபடுத்தும் கருத்தும் மேற்கு நாடுகளில் உள்ள நிற வெறிக் கொள்கையும் ஒன்றே. 'வர்ணா' என்ற ஜாதிச் சொல்லின் நேரடியான பொருள் 'நிறம்' என்பது. நல்ல உயரம், வெள்ளை நிறம், ஒடுக்கமான முகம், நேரான தலை முடி அமைப்புக்கள் கொண்ட சில மனித இனத்தவர் பஞ்சாபிலும் காஷ்மீரிலும் மேற்கு பாகிஸ்தானிலும் காணப்படுகிறார்கள். அறியாமையினால் இவர்கள், தங்களை மிச் சிறந்த ஜாதி மனிதர்களாகக் கருதுகிறார்கள். ஆபத்தான ஜெர்மானிய நாசிக் கொள்கை போன்றது இது''.[17]

வர்ணாஸ்ரம தர்மா அல்லது நிறத்துவேஷம் என்பது வேதகாலத்தில் உள்ள மதத்திலும் சமுதாயத்திலும் மிக மிகத் தேவையான ஒரு சட்டமாக இருந்தது. ரிக்வேதம் இதனை 22 பாடல்களில் ஆறு மண்டலங்களில் குறிப்பிட்டுப் பேசுவதிலிருந்து இதன் முக்கியத்துவத்தை நாம் அறிந்து கொள்ள முடிகிறது. இந்த நிற வித்தியாசத்தைப் பற்றி கோயட்ஸ் என்பவர் பேசும் போது ''வடக்கிலுள்ளவர்கள் பேசும் இந்தோ-ஆரிய மொழிகள் ஐரோப்பியர்களோடு தொடர்புள்ளவை. தெற்கிலுள்ளவர்கள் பேசும் மொழிகள் திராவிட மொழிகள் ஆகும். உயர்ந்த வகுப்பினர் தாழ்ந்த வகுப்பினரைக் காட்டிலும் நல்ல நிறமாக இருப்பார்கள்'' என்று குறிப்பிடுகிறார்.[18]

இந்தியாவிலுள்ள அடிமைத்தன முறை உலக வரலாற்றிலேயே மிகப் பழமையானதும் மிகப் பெரிய அளவில் உள்ளதுமான ஒன்று. இந்த அடிமைத்தன முறை இன்று வரை சட்ட பூர்வமான அகற்றப்பட்டாலும் நடைமுறையில் அது இருந்தே வருகின்றது. இந்தியாவில் அடிமைகளை விலைக்கு வாங்குவதும் மனிதர்களை அடிமை கொள்வதும் 1843ல் இயற்றப் பட்ட அடிமை ஒழிப்புச் சட்டத்தின் மூலம் அகற்றப்பட்ட நாளில் பெரிய சரித்திர ஆசிரியரான டாக்டர் மிக்ஸ் என்பவரின் கணிப்பின்படி 2 கோடி அடிமைகள் இந்தியாவில் இருந்தார்கள். திருவாங்கூர் சமஸ்தானத்தில் மட்டும் 2 லட்சம் அடிமைகள் இருந்தனராம்.[19] அடிமைகள் விலைக்கு வாங்கப்பட்டார்கள்; விற்கப்பட்டார்கள்; பரிசுப் பொருளாகக் கொடுக்கப்பட்டார்கள்; கூலிகளாக அமர்த்தப்பட்டார்கள்; கடத்திச் செல்லப்பட்டார்கள். பிராமணர்கள் எழுதிய நூல்களில்[20] அடிமை வியாபாரம் குறித்து மிக அதிகமாய் விவரிக்கப்பட்டுள்ளது.

வேதங்களில் இப்படி ஜாதிப்பிரிவினை கண்டிப்பான முறையில் காணப்பட்டா லும் லேசான இனக் கலப்பு கிழக்குப் பகுதியிலும் தெற்குப் பகுதியிலும் உள்ளவர்களிடையே ஆயிரம் வருஷத்திற்கு இருந்து வந்தது. கௌடில்யா எழுதிய அர்த்த சாஸ்திரத்திலும், ஐத்திரேயு பிராமணம் மற்றும் நூல்களிலும் கண்ட படி அடிமைப் பெண்ணோடு பால் உறவு கொள்வதற்கு பூரண அதிகாரம் அவளை அடிமை கொண்ட எஜமானுக்கிருந்தது. இந்த அடிமைப் பெண்கள் தாசி, விஷ்டி, கும்பதாசி, அகிதகாதாசி என்று பெயர் பெற்றிருந்தார்கள். மேலே குறிப்பிட்ட நூல்களில் இந்த அடிமைப்பெண்களுக்குப் பிறந்த பிள்ளைகளுக்கு ரிய அந்தஸ்தும் சொல்லப்பட்டுள்ளது. உமா சக்ரவர்த்தி,[21] ஆர்.எஸ்.சர்மா,[22]

சுரேஷ் சந்திரபால்[23] ஆகியோரும் மற்றும் பலரும் வேதகாலத்தில் அடிமைப் பெண்களுக்கும், எஜமானர்களுக்கும் உள்ள உறவுகள் பற்றியும் அதனால் பிறக்கும் குழந்தைகள் குறித்த அந்தஸ்து பற்றியும் விரிவாக ஆராய்ச்சி செய்துள்ளனர். ஐத்திரேய பிராமணம் என்ற நூலில் பொன், வெள்ளி மற்றும் ஆடுமாடுகள் ஆகிய செல்வங்களோடு 10 ஆயிரம் அடிமைப் பெண்களையும் சேர்த்து அங்க தேச அரசன் பிரதான பூசாரிக்கு தானம் வழங்கியதாக எழுதியிருப்பதையும், மற்றும் ரிக்வேதப் பாடல் ஒன்றில் 50 தாசிகளை பூசாரி தானமாகப் பெற்றதாக எழுதப்பட்டிருப்பதையும், சக்ரவர்த்தி தமது நூலில் குறிப்பிடுகிறார். சாண்டோகியா உபநிடதத்தில் வீடு வயல் தங்கம், குதிரை ஆடுமாடுகள் சேர்ந்த பட்டியலில் அடிமைப் பெண்களும் சேர்க்கப்பட்டுள்ளனர். ஆதிகால வேத இலக்கியங்களில் ஆடுமாடுகளும் அடிமைப் பெண்களும் கைவிட்டுக் கை மாறக்கூடிய ஆஸ்திகளாகக் கருதப்பட்டன. தாசிகளை பூசாரிக்கு தானமாக அல்லது தட்சிணைக்கு உரிய பொருட்களாக ராஜாக்கள் கொடுத்துவந்ததாக அடிக்கடி இவ்விலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆயிரம் வருஷங்களாக இரத்தக் கலப்பு ஏற்பட்டதன் விளைவாக சூத்திரர்கள் என்ற பெயருடன் ஒரு கலப்பு ஜாதி தோன்றிற்று. அமெரிக்கக் கண்டத்திலும், கலப்பு ஐரோப்பிய இனம் தோன்றியது போலவும் இந்தியாவில் ஆங்கிலோ இந்தியர்கள் தோன்றியது போலவும் இந்த சூத்திர இனம் அன்று தோன்றிற்று.

ஆரியரின் திராவிட இனக்கலப்பு இருந்த காரணத்தால் ஆரியர்களின் வகுப்புப் பிரிவில் சூத்திரர்கள் நான்காவதும் கடைசியுமான வகுப்பென்று ஒருவாறு ஏற்றுக் கொள்ளப்பட்டனர். ஆனாலும் முழு ஆரியனாகும் அந்தஸ்து அதாவது, உபநயனம் செய்யப்படுவது பூநூல் அணிவது சூத்திரர்களுக்கு மறுக்கப்பட்டுவிட்டது. சுத்தமான ஆரியர்கள் 'துவிஜிகள்' இரு ஆரிய பெற்றோருக்கு பிறந்தவர் என்றும், சூத்திரர்கள் 'அத்விஜிகள்' என்றும் அழைக்கப்பட்டனர்.

இனக்கலப்பினால் ஆரிய இன அடையாளத்திற்கும் ஆரிய இனத்தின் சிறப்பான கலாச்சாரம், மதம் ஆகியவைகளுக்கும் ஆபத்து வந்துவிடும் என்ற பயத்தால் ஆரிய இனம் ஆரியரல்லாத இனத்தோடு எந்தக் கலப்புமின்றி தூய்மையாய் வாழக் கடுமையான கட்டுப்பாடுகள் உண்டாக்கப்பட்டன. இது சம்பந்தமாய் ஏற்படுத்தப்பட்ட மத ஒழுங்குகள் குறித்த விரிவான தகவல்களை புராணங்களும் ஸ்மிருதிகளும் நமக்குத் தருகின்றன. இவைகளை எழுதியர்வகளில் பிராமணிய சட்டங்களை ஏற்படுத்திய மனு என்பவர் மிக உயர்ந்தவராக கருதப்படுகிறார். இதைக் கருத்தில் கொண்டு தான் மனுவின் சீடரான ஹிட்லர் "உயர்ந்த இனம் தாழ்ந்த இனத்தோடு கலப்பது இயற்கைக்கே ஒவ்வாத ஒன்று; ஆரிய இரத்தம் கீழ் இனங்களோடு கலந்து விட்டால் உயர்ந்த இனம் அழிந்து போக அது ஏதுவாகும். என்று கூறினார்.[24]

பிராமணிய காலத்திலும் புராண காலத்திலும் கூறப்பட்டிருந்த படி நான்கு வருணத்தார்களுக்கிடையில் கொஞ்சம் சமூக கலப்பு இருந்ததைக் காண்கிறோம். நல்ல நிறமாக இருந்த ஆரிய வகுப்பினருக்கும் கருப்பு நிறமான நாலாவது வகுப்பிற்கும் (சூத்திரர்களுக்கும்) இந்தக் கூடுதலான உறவுகள் இருந்ததாகவும், ஆனால் இவர்கள் ஆரியரல்லாத அடிமைகளோடு (தஸ்யூக்களோடு) எந்த உறவும் கொள்ளக் கூடாது என்று சட்டம் இருந்ததாகவும் காண்கிறோம். நான்கு வகுப்பினரிடையே ஏற்பட்ட இனக்கலப்பு அவர்களை ஒரே இனமாக்காமல், ஏராளமான இடைநிலை வகுப்புக்களையும்[25] பல்வேறு ஜாதிகளையும் பிரிவுகளையுமே உண்டாக்கிற்று. இதில், நிறத்தின் அடிப்படையில் நல்ல நிறமுடையவர்கள் உயர்ந்த ஜாதிகள் என்றும் நிறம் குறைந்தவர்கள் குறைந்த ஜாதி எனவும், பிரிக்கப்பட்டனர். மிக உயர்ந்த ஜாதி ஆணும் மிகத் தாழ்ந்த ஜாதிப் பெண்ணும் கலந்து பிறந்தவர்களில் தொடங்கும் ஜாதி அமைப்பு 'அனுலாமா' என்னும் இறங்குமுறை ஜாதி அமைப்பு. மிகத்தாழ்ந்த ஜாதி ஆணுக்கும் உயர்ந்த ஜாதிப் பெண்ணுக்கும் கலந்து பிறந்தவர்களில் தொடங்கும் ஜாதி அமைப்பு 'பிரதிலாமா' என்னும் ஏறுமுறை ஜாதி அமைப்பு.[26] இப்படியாக தோலின் நிறம் ஆரிய இரத்தத்தின் கலப்பு அளவாக எண்ணப்பட்டு ஆரிய இனங்களில் அதுவே முக்கியமான ஜாதிக்குறிப்பாக ஆரிய சமுதாயத்தில் இருந்ததாக படிக்கிறோம்.

ஒரே இன நாகரீகங்களில் சமூக பொரளாதாரப் போராட்டங்களின் அடிப்படையில் மக்களின் தொழில் இனப் பிரிவுகள் காணப்பட்டன. மார்க்ஸ்[27] இவைகளைத் தனது கொள்கை அறிக்கை நூலில் குறிப்பிட்டுள்ளார். இந்தியா, தென் ஆப்பிரிக்கா போன்ற நாடுகளில் பல இனமாக மக்கள் வாழ்ந்த நாகரீகங்களில் இன மதப் போராட்டங்களின் அடிப்படையில் தொழில்கள் அமைந்தன. ஜெயித்த இனங்கள் ஆளும் இனங்களாக மாறி, ஜெயிக்கப்பட்டு அடிமை கொள்ளப்பட்ட எளிய இனங்கள் மீது குறைவானதும் இழிவானதுமான வேலைகளைச் சமத்தி அவைகளை அவர்கள் செய்யும்படி கட்டாயப்படுத்தி வந்தன.

ஏதாவது ஒரு வகையில், ஏதாவது ஒரு அளவில் தீட்டு உண்டாவது உலகெங்குமுள்ள அனைத்து நாகரீகங்களிலும் காணப்படும் ஒரு விஷயமாகும். நீடா,[28] ஹீவர்ட்,[29] வித்தியார்த்தி,[30] ஹனுமந்தன்[31] மற்றும் பலர் தொழில் அடிப்படையில் பிரிவுபடுத்தும் தீட்டு தகாத பழக்க வழக்கங்கள், சுத்தத்தன்மைகள் ஆகியவற்றைக் காரணம் காட்டி ஆளுகிற நாகரீக இனங்கள் தங்களை உயர்ந்த ஜாதி[32] என்று பிரித்து வைத்துக் கொண்டு குறைவான தொழில் செய்யும் பழங்குடிமக்களையும் மற்ற இனங்களையும் குறைவுபடுத்தி விட்டன. பஞ்சாபில் வாழும் நகர சுத்தம் செய்யும் சூராஸ்கள், மத்திய இந்தியாவில் தோல் பதனிடும் சாமார்கள், பாண்டிய நாட்டில் கள் இறக்கும் சாணார்கள் இந்தவிதமாக தொழில் அடிப்படையில் களங்கம் கற்பிக்கப்பட்டு ஒதுக்கி வைக்கப்பட்ட இனங்களுக்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.[33]

ஆரியரல்லாத அடிமைகள் என்று கருதப்பட்ட தஸ்யூக்கள் சமூக நிலையில் ஆரியர்களைவிட்டு கீழாகப் பிரித்து வைக்கப் பட்டனர்.. மேற்கூறப்பட்ட நூல்களில் இவர்கள், ஜாதியற்றவர்கள், வேறு இனத்தார் தீண்டப்படாதவர்கள் என்று பொருள்படும், அஸ்பிரஷ்பா, அந்தியாஜா, அவர்ணபாகியா, அந்நியாவசின் என்றழைக்கப்பட்டுள்ளனர். இக்காலக்கட்டம்தான் இந்தியாவின் தீண்டாமை பிறந்த காலம்.

சூத்திரர்கள் என்ற கலப்பு ஜாதியை ஆரியர்கள் வேறு வழியில்லாமல் நான்காவது கடைசி ஜாதியாக ஏற்றுக் கொண்டபோது அது குறித்து மற்ற ஜாதியினரிடையில் அதிகமான சச்சரவு உண்டாயிற்ற. சில நூற்றாண்டுகள் இவர்கள் தீண்டப்படுபவர்களும், தீண்டப்படாதவர்களுமான இரண்டும் கெட்டான் நிலையில் வைக்கப்பட்டு இருந்தனர். இக்காலங்களில் எழுதப்பட்ட நூல்களில் இந்த சூத்திரர்கள் ஆரியரல்லாத அடிமைகளாகிய தஸ்யூக்களோடு சேர்ந்தெண்ணப்பட்டும் பேசப்பட்டும் வந்தனர். சமூகப் பிரிவினை வரிசையில் தீண்டாமைத் தடுப்புச்சுவர் சூத்திரர்களுக்கு அப்பால் போடப்பட்டதால் கலப்பு ஜாதியாக இவர்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டனர். ஆரியரல்லாத கலப்பில்லாத அந்த தஸ்யூ அடிமைகள் ஆரிய சமுதாயத்தில் இடம் பெற்றதேயில்லை.

மேலே சொல்லப்பட்ட தீண்டா தர்மா என்னும் தீண்டாமை முறையில் தஸ்யூக்கள் என்ற வீட்டுவேலை செய்யும் அடிமைகள் சவர்ணா வீடுகள் இருந்த இடத்தை விட்டுத் தனித்து அவர்ணா குடியிருப்புகளில் வாழ வேண்டியதாயிற்று. இதுதான் ஹரிஜன் காலனிகள் பிறந்த நாள் அந்த நாள் தொடங்கி தனிப்பட்ட வீட்டு வேலையாட்களை வேலைக்கு அமர்த்திக் கொள்ளும் முறையல்லாமல் மொத்தமாக அடிமை வேலை செய்யும் ஜாதிகள் , என்று எஜமான் [34], படியாள் [35] அடியார், கொத்தடிமை [36] முறைகள் செயல்படத் தொடங்கிற்று. ரிச்சர்டு லென்னாய் [37] கூறுவது போல் இந்த எஜ்மானி ஜாஜ்மணி வேதங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதுபோல் வருடம் முழுவதும் செய்ய வேண்டிய அடிமை வேலைக்குப் பணம் கொடுத்து அடிமைகளை அமர்த்தும் ஒப்பந்த முறையே ஜாஜ்மணி முறையாகும். ஆனால் மொத்தமாக அடிமைகளை வேலைக்கமர்த்தும் முறை ஜாஜ்மணி முறையோடு இணைந்துவிட்டபோது சவர்ணா ஆரியர்கள் தாங்கள் குடியிருந்த கிராமங்களில் அங்கு வழிவழியாக வாழ்ந்து வந்த அவர்ணா தஸ்யூக்களை அடிமைகளாக வைத்துக் கொண்டனர். ஜாஜ்மணி ஒப்பந்தம் இரு தரப்பினருக்கிடையிலான ஒப்பந்தமாக இல்லாமல் ஆரியர்கள் தஸ்யூக்களுக்கு எஜமான்களாக இருக்கும் ஒரு தலைப்பட்சமான ஒப்பந்தமாயிற்று. இந்த முறையில் காலமெல்லாம் அந்த அடிமையும் அவன் மனைவியும் பிள்ளைகளும் அவன் வருங்கால சந்ததியும் கூட அந்த எஜமானுக்கு அடிமைகளானார்கள்.

ஹெய்ஜிலியும், [38] சர்க்காரும், [39] தீண்டப்படாதவர்களின் அடிமை வாழ்வு குறித்து செய்த ஆராய்ச்சியில், அடிமை ஒழிப்புச்சட்டம் வந்த பிறகும் இந்திய

அடிமை முறை செழித்து வளர்ந்து கொண்டே போவதாகக் கூறுகின்றனர். வகுப்புப்பிரிவுகளும் அடிமை முறைகளும் தொன்றுதொட்டே எகிப்து, சீனா, ரோம், ஜப்பான், ஈரான், பிரிட்டன், அயர்லாந்து, ஜெர்மனி, மற்றும் பல நாடுகளில் இருந்தன என்பதற்கு ஆதாரம்* உண்டு. ஆனால் அங்கெல்லாம் அடிமைமுறையோ தீண்டாமையோ மதக்கட்டளைகளாக மாற்றப்படவில்லை. நமது முன்னால் துணைப்பிரதமர் ஜகஜீவன்ராம் ஒரு விசை குறிப்பிட்டது போல் " இந்திய நாடு அடிமைகளும் அரை அடிமைகளும் நிறைந்த ஒரு நாடாகவே இருந்து வருகிறது". [40]

தர்ம சூத்திரங்களிலும், விஷ்ணு, வசிஷ்டா, அபஸ்தம்பா, கௌதமா, வசிஷ்டா நூல்களிலும் கட்டியமா, மனு, யக்ஞவல்கியா, அத்ரே, லிக்கிதா, நாரத், சஹிய திரிகந்த் எழுதிய ஸ்மிர்திகளிலும் மகாபாரதத்தில் சாந்தி பர்வத்திலும் மாத்திய மங்கிராவிலும், பிரகதியான ஸ்மிர்திகளிலும், வேத வியாஸ்களிலும் வர்ணாஸ்ரம தர்மம் பற்றியும் தீண்டாமை தர்மம் பற்றியும் விரிவான அளவில் விதிமுறைகளும் நடை முறைகளும் அப்யாசங்களும் குறிப்பிட்டுள்ளன. மத்திய மங்கிராஸ், மனு, ஆத்ரி, வேதவியாஸா ஆகியவை தெளிவாக இவைகளைக்குறித்த பட்டியல் தருகின்றன. பிராமணிய சட்டங்களை இயற்றிய பிரசித்தி பெற்ற மனு கட்டளை இட்டது "சண்டாளர்களின் ஸ்வாபக்தர்களின் குடியிருப்புகள் கிராமத்திற்கு வெளியே இருக்க வேண்டும். அவர்கள் அபாத்திராக்கள். எனவே நாய்கள், கழுதைகள் போன்றவற்றையே தங்களுக்கென சொந்தமான செல்வங்களாக வைத்து கொள்ளலாம். அவர்கள் உடை செத்துப்போன பிராணிகளின் தோல்களாக இருக்க வேண்டும். அவர்கள் உடைந்த ஓட்டைப் பாத்திரங்களில் தான் உணவு உண்ணவேண்டும். இரும்பினால் செய்யப்பட்ட ஆபரணங்களை மட்டுமே அவர்கள் ஆபரணங்களாக அணியலாம்". [41]

பாகியான் என்ற பிரசித்திபெற்ற சீனயாத்திரீகர் கி.பி. 400ல் "சண்டாளர்கள் நல்லூ அடிமைகள் 'தீயவர்கள்' என்ற பெயரோடு மற்றவர்களிலிருந்து பிரிந்து வாழ்கிறார்கள். அவர்கள் ஒரு பட்டணத்திலோ சந்தைகளிலோ நுழையும் போது மரக்கட்டைகளால் தட்டி சப்தம் செய்து கொண்டு வருவார்கள். அப்பொழுது மற்றவர்கள் அவர்கள் வருவதை அறிந்து அவர்களைத் தொடாமல் விலகிக் கொள்வார்கள்" என்று எழுதியுள்ளார். மற்றொரு சீனயாத்திரிகரான யுவான் சுவாங்கும் கி.பி. 629ல் இதுபோன்ற ஒரு காரியத்தையே தாம் கண்டதாகக் கூறுகிறார். "கறிக்கடைக்காரர்கள், மீன் பிடிப்பவர்கள், நாடக நடிகர்கள், தலை வெட்டியான்கள், தோட்டிகள் ஆகியோரின் குடியிருப்புகள் தனியாக அடையாளம் போட்டுக் காட்டி நகருக்கு வெளியே வைக்கப்பட்டுள்ளது" என்கிறார். திபேரிய ராயன் காலத்தில் பொந்து பட்டணத்தில் குடியிருந்த கிரேக்க நூலாசிரியர் ஸ்டிராபோ என்பவரும் "தீண்டப்படாதவர்கள் எவரும் அவர்கள் ஜாதிக்கும் வெளியே திருமணம் செய்ய அனுமதிக்கப்படவில்லை. அதுபோல் செய்து வரும் தொழிலையும் அவர்கள் மாற்றக்கூடாது. அவர்கள் மற்றவர்க

ளோடு சரிசமமாக அமர்ந்து சாப்பிடவும் கூடாது'' என்று எழுதியுள்ளார். கி.மு. 300ல் மௌரிய அரசர்கள் காலத்தில் பாடலிபுத்திராவில் சிரியா நாட்டின் தூதுவராக இருந்த மெகஸ்தனீஸ் என்பவரும் இவ்விதமே கூறியுள்ளார்'' ஒருவரும் தங்கள் ஜாதிக்கு வெளியே திருமணம் செய்ய அனுமதிக்கப்படுவ தில்லை. செய்து வரும் தொழிலைத்தவிர மற்ற எந்தத்தொழிலும் செய்ய அனுமதிக்கப்படவில்லை. என்று எழுதி வைத்துள்ளார்.

மைசூர் உயர்நீதிமன்றம் தீண்டாமையை ''தென் ஆப்பிரிக்காவில் உள்ள இனவெறிக் கொள்கையோடு ஒப்பிட்டு அது ஜாதிகள் மேல் காலாகாலமாக திணிக்கப்பட்டு வந்துள்ள சமூக அநீதியாகும்'' [42] என்கிறது. தீண்டப்படாதவர்க ளைக் குறித்து அம்பேத்கார் எழுதும் போது ''அநேகர் தீண்டாமையை மத சம்பந்தமான அமைப்பாகக் கொள்கின்றனர். இது உண்மையே. ஆனால் அது அடிமைத் தனத்தைக் காட்டிலும் கொடிய பொருளாதார அமைப்பாக உள்ளது என்பதும் உண்மை'' [43] என்கிறார். இந்தியாவில் உள்ள அடிமைத்தன முறைபற்றி நேருஜி எழுதும் போது கிரேக்க நாகரீகம் உட்பட பழங்கால நாகரீகங்கள் அனைத்தும் தாழ்த்தப்பட்ட மக்களை அடிமையாக்குவதையே தங்கள் பிழைப்புக்கடுத்த காரியமாகக் கொண்டுள்ளனர்''.[44] என்கிறார்.

ஆரியர்களின் ஆதிக்க முக்கியத்திற்குக் காரணம் அவர்களின் சவர்ணா மொழி. [45]அவர்ணர்களின் மொழிகளின் மீது ஆதிக்கம் செலுத்தியதேயாகும். சில நூற்றாண்டுகளுக்குள்ளாக அடிமைச் சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் தங்கள் திராவிட தாய் மொழி இழந்து எஜமானர்களின் மொழியை ஏற்றுக் கொண்டு விட்டனர். [46] இன்று அம்மொழிகளில் சில பெயர்கள் மட்டுமே அருகிக் காணப்படுகின்றன. உதாரணமாக வட இந்தியாவில் உள்ள அனைத்து ஷெட்யூல்ட் ஜாதிப் பெயர்களும் திராவிடப் பெயர்களே. ஆரிய மொழியில் இவை எழுதப்பட்டாலும் இப்பெயர்கள் இன்னும் மாறவில்லை. இவர்களைப் பற்றி சோவியத் மனித இயல் அறிஞர் கிரிகுலேவிச் இங்ஙனம் கூறுகிறார். ''தனிப்பட்ட சிறு குழுக்களில் வாழும் பழங்குடி மக்களும், மற்றவர்களும், குறிப்பாக பின்தங்கிய நிலையில் வாழ்பவர்கள் தாங்கள் வாழும் பகுதியில் தங்களை விட ஜனத் தொகையில் பெருகி முன்னேறியவர்களின் மொழியைத் தங்கள் மொழியாக்கிக் கொண்டு விடுகின்றனர்''.[47] இது தான் ஆரியவர்த்தாவில் வாழ்ந்து தஸ்யூக்களுக்கு நடந்தது.[48] தென்னிந்தியாவில் வாழும் பிராமணர்களும் தங்கள் ஆரிய மொழியை இழந்து விட்ட காரணமும் இதுவே.

தீண்டப்படாதவர்களின் தாய்மொழியை ஒழித்து விடும் வேலை ஆரிய வர்த்தாவில் கி.மு. 2ம் நூற்றாண்டில் எவ்வளவு வேகமாக நடைபெற்றது என்பதை மனு என்பவர் மீண்டும் தீண்டப்படாதவர்களுக்கான இலக்கணம் கூறும் போது தாய் மொழியைப்பற்றிக் குறிப்பிட இடமில்லாத நிலை ஏற்பட்டதிலிருந்து நாம் அறிந்து கொள்ளலாம். ''பிரம்மனின் வாயிலிருந்து, புயங்களிலிருந்து, தொடையிலிருந்து, பாதங்களிலிருந்து பிறந்தவர்கள் தவிர

மற்றபடி சமுதாயத்திலிருந்து புறம்பாக்கப்பட்ட எல்லாப் பழங்குடி மக்களும் 'தஸ்யூக்கள்' என்றே அழைக்கப்பட வேண்டும். அவர்கள் மிலேச்சர்களின் மொழிகளைப் பேசினாலும், ஆரியர்களுடைய மொழிகளைப் பேசினாலும் அவர்கள் தஸ்யூக்களே' என்பது மனுவின திட்டவட்டமான சட்டம்.

தொகுப்புரை : ஆரியவர்த்தாவில் வாழ்ந்த கலப்பு ஜாதி மக்களான சூத்திரர் கள் வேதங்கள் கூறும் ஆரிய தர்மத்தில் நாலாவதும் கடைசியுமான மக்கள் தீண்டப்படாத அடிமை தனது திராவிட இனத்தாலும் மதத்தாலும் ஒருபோதும் வேத ஆரிய தர்மத்தில் இடம் பெறவே இல்லை

# 12

# அடிமை தர்மாவும். ஆரிய தர்மாவும்

தீண்டப்படாதவர்களின் மதம் பற்றி நாம் அறிந்து கொள்ள வேண்டுமானால் மொகஞ்சதாராவில் வாழ்ந்த தஸ்யூக்களில்[1] மதம் பற்றிய விஷயங்களைப் புரிந்து கொள்ள வேண்டும். அவர்கள் மரங்களையும், மிருகங்களையும், ஆவிகளையும் அம்மான் தேவதையையும் வணங்கி வந்தார்கள்.[2] அவர்கள் மந்திரவாதத்தில் நம்பிக்கையுடையவர்களாய் இருந்தார்கள்.[3] லிங்கத்தையும் வணங்கி வந்தனர்.[4] வேதங்களையுடையதான ஆரியர்கள் இவைகளை எல்லாம் வெறுத்தனர். வேத ஆரியர்கள் இயற்கையின் முக்கிய அம்சங்களான பிரிதிவி, வருணா,[5] இந்திரா, சூரியன்[6] ஆகியவற்றைத் தொழுது வந்தனர். திராவிடர்களின் சிவன் பார்வதி வணக்கம் ஊர் எனும் தேசத்தில் வாழ்ந்தவர்களின் சந்திரன் வணக்கத்தைய மலை அம்மன் வணக்கத்தையும் போன்றது என்று ஹெர்மன் கோயட்ஸ் கூறுகிறார். இந்தியாவில் உள்ள சிவா என்னும் அப்பன் தெய்வத்தையும் அவனுடைய காளையையும் சிருஷ்டி கடவுளாகவும் தனது சிங்கத்தோடு கூட

மலைவாழ் மக்களால் தொழப்பட்டு வந்த மா[7] என்னும் அம்மன் தேவதையையும் ஆசியாவின்[8] பல பகுதிகளில் உள்ள மக்கள் வணங்கி வந்ததாக கே.எம். முன்ஷி[9] கூறுகிறார். மேலும் அவர் சுமேரியர்களின் நன்னார் என்னும் சந்திரன் கடவுள் திராவிடர்களின்[10] சிவனாக இருந்ததாகவும் ஊர் தேசத்தில் பல்வேறு கைகளையுடையதும் சிங்கத்தோடு கூடியதுமான இஷ்டார் தெய்வம் திராவிடர்களுடைய காளியாக மாறியதாகவும் அவர் மேலும் கூறுகிறார்.

தாந்திரீக வழிபாடுகள், நரபலி, தீக்கடத்தல் லிங்க வழிபாடு ஆகியவை திராவிடர்களிடம் தோன்றியவையே.[11] கி.மு. 2000 ஆண்டுகளில் கிழக்கு மத்தியத்தரைக்கடல் பகுதிகளில் வாழ்ந்த மக்களிடமும் இது போன்ற வழிபாட்டு முறைகள் காணப்பட்டன. இந்தியாவில் ஆரியர்கள் வருமுன் லிங்க வழிபாடு இருந்ததை இன்னமும் இங்கு காணப்படும் அதிகமான லிங்கங்கள் நிரூபிக்கின்றன.[12] ஆரியர்களுடைய மத நூல்களில் காணப்படுவதுபோல ஆரியர்களுக்கு தாஸ்யூ சமயங்கள் மீது இருந்த வெறுப்புக்கு இதுவே காரணமாகும். தீண்டாமையின் மூலம் பூர்வீகக் குடிமகளின் மதங்களையும் வெறுத்து அவர்களையும் தனிமைப் படுத்தி வைத்து விட்டனர்.

மேலே சொல்லப்பட்டதும் தவிர தஸ்யூக்கள் பேய்களையும் மரங்களையும் மிருகங்களையும் கூட வணங்கி வந்தார்கள். இன்றுவரை வடஇந்தியாவில் உள்ள சாமார்கள் சாலியா, பர்பி என்பவற்றை தெய்வமாகவும் வேடல், பெய்தல், சூரல், காயல், பாரட், பிசாக், மசாவ், தூந்த, பருச்சிராயா, ஃபெர, டோதே, மாரி, சிதாலின் போன்றவற்றைப் பேய்களாக வணங்கி வருகின்றனர். பெங்களூரிலுள்ள நகர சுத்தி தொழிலாளிகளின் முக்கிய கடவுள்கள் காளியும் மாரியம்மனுமாகும். தெற்கு பீகாரிலுள்ள தீண்டப்படாதவர்கள் சர்ஜாகி, பார்க்கி, வீர், பாசுமித், மாசனா, குன்வார் ஆகியவற்றை தெய்வங்களாக வணங்கி வருகின்றனர். தீண்டப்படாதவர்களின் மதம் பற்றி ஆராய்ச்சி செய்துள்ள புகழ்பெற்ற மனித இயல் வல்லுனரான டாக்டர் வித்தியாத்தி இவர்கள் கரம் பூஜா, ஸோகிராய், ஃபகுவா, கட்லெட்டா, நவான், கிட்டாயா, சாத் மற்றும் பல பண்டிகைகள் கொண்டாடுவதாகக் கூறுகின்றார்.[13] இவைகள் அனைத்தும் பூர்வீக திராவிட மக்களிடமிருந்து தோன்றிய திராவிடக் கடவுள்களும் திராவிட வார்த்தைகளுமாம் தீண்டப்படாதவர்கள் தீண்டாமை என்னும் இரும்புப் பிடிக்குள் தங்கள் ஆதிகால மத நம்பிக்கையை மூவாயிரம் ஆண்டுகளாகக் காத்து வந்துள்ளனர். ஆரிய மதக் கலப்பில்லாத இவர்கள் மதம் மற்றவர்கள் தொடமுடியாதபடி பாதுகாக்கப்பட்டதன் இரகசியம் தீண்டாமையே. தஸ்யூ ஒன்றைத் தொட்டாலும், அவன் நிழல் பட்டாலும், அவன் வந்து நின்றாலும் போதும் எல்லாம் தீட்டாகிவிடும்![14] இப்படிப்பட்ட காரணத்தாலேயே அவனுடைய மதம் காக்கப்பட்டது. ஸ்மிருதிகள் கூறுகிறபடி சமஸ்கிருத வேதங்களைப் படிக்கவோ எழுதவோ, கேட்கவோ அவனுக்கு அனுமதி இல்லை. மிலேச்சர்களை வருணிக்கும் போது மனு அவர்களை வேதங்களில் நம்பிக்கையற்றவர்கள் என்கிறார்.[15]

வட இந்தியாவிலுள்ள தீண்டப்படாதவர்களின் மதவிஷயங்களுக்கும் தென் இந்தியாவில் உள்ள தீண்டப்படாதவர்களின் மத காரியங்களுக்கும் மத்திய இந்தியாவில் வாழும் திராவிட பழங்குடிகளான கோண்டர்கள், குயிக்கள், மாலர்கள் ஆகிய பூர்வீகக் குடிகளுடைய மத நம்பிக்கைகளுக்கும் நெருங்கிய தொடர்பிருப்பதை நாம் கவனிக்க வேண்டும். இவர்களின் மதங்களும் வழிபாட்டு முறைகளும் மட்டுமல்லாமல் தெய்வங்களின் பெயர்களும் ஒன்று போல் இருக்கின்றன. மேலே கூறப்பட்ட இந்த மூன்று குழுக்கள் மட்டுமே வாழுகின்ற நிலப்பரப்பால், சமூகக்கட்டுப்பாட்டு இடைவெளிகளால் மூவாயிரம் ஆண்டுகளாக முழுக்கத் தனித்து விடப்பட்ட காரணத்தால் இன்னமும் ஆரிய மதக் கலப்பின்றி திராவிட சமய மக்களாக வாழ்ந்து வருகின்றன. தீண்டாமை மதில் சுவர் இருந்துவந்த காரணத்தாலேயே இன்றும் குருதாஸ்பூரில் உள்ள சுராக்களின் மதத்திற்கும் தமிழ் நாட்டில் மீனாட்சிபுரத்தில் உள்ள பள்ளரின் மதத்திற்கும் பீஹாரிலுள்ள மாலர்களின் மதத்திற்கும் நெருங்கிய ஒற்றுமை இருப்பதை நம்மால் காண முடிகிறது.

அங்ஙனமே, ரிக்வேதத்திலிருந்து ஸ்மிருதிகள் வரை ஆரிய வேதங்களில் ஆரியரல்லாத அவர்ணா மக்களான தீண்டப்படாதவர்களின் பெயர்கள் சண்டாளன், ஸ்வபகன், கஷ்ட்டான், நாடான், மேடா, பின்ன, சூடா, வைதேகிகா, சார்ம்கார், காயவர்த்தா, தாசா, பாட், காலிகா, புஸ்கார், கார்மணா, பல்க்கா'சா, விதலக்காரா, வசா்பல் புலி என்ற பெயர்கள் ஆரிய வேதங்களில் எழுதப்பட்டுள்ளன• இவையனைத்தும் இன்றுள்ள ஷெட்யூல்ட் ஜாதியினரின் அல்லது ஷெட்யூல்ட் பழங்குடி வகுப்பினரின் பெயர்களாக உள்ளன. மொழியடிப்படையில் இவையனைத்தும் திராவிடப் பெயர்களே.

இந்த இடத்தில் ஆரியவர்த்தாவில் வந்து குடியேறிய ஆரியர்களின் மத நம்பிக்கையை நாம் சரியாக விளக்கவேண்டும். ஆரியர்கள் பஞ்சாப் தொடங்கி தெற்கிலும், கிழக்கிலும் பரவியிருந்தார்கள். கி.மு. ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த பிராமணா இலக்கியத்தில் ஆரியவர்த்தா என்ற நாடு இமயமலைக்கும், விந்தியமலைக்கும் இடைப்பட்டு கிழக்கிலும் மேற்கிலும் கடலை எல்லையாகக் கொண்டு அமைந்திருந்தது என்று கூறப்பட்டுள்ளது. ஆரியர்களுடைய மதம் வேதங்களின் தர்மம் என்ற பெயரில் இருந்தது. "இந்து மதம் என்று குறிப்பிட்டுச் சொல்வது பிற்காலத்தில் ஏற்பட்ட ஒரு பெயரே" என்றார் நேரு.[16] பௌத்தமும் ஜைனமும் கூட ஆரிய தர்மங்கள் என்ற வரிசையில் அடங்கும் என்றாலும் பிராமணிய மதமே வேத ஆரிய தர்மம் ஆகும். அவெஸ்தா காலத்திய இரானிய மத நம்பிக்கைக்கும் வேதகாலத்தில் ஆரிய தர்மத்திற்கும் உள்ள உறவை அறிஞர்கள் அனைவருமே உறுதிப்படுத்துகிறார்கள். கி.மு. 14ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த மிட்டானி அரசனுக்கும் ஏத்தியர்களின் அரசனுக்கும் ஏற்பட்ட உடன்படிக்கைகளின் மித்ரா, வருணா, இந்திரா, நசாத்தியாஸ் என்று சில கடவுள்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.[17] இவைகள் ரிக்வேதத்தில் காணப்படும் அதே

பெயர்கள் தான். ஆரியதர்மம் ஆரியர்கள் இந்தியாவுக்கு வரும் முன்பே தோன்றினாலும் வேதங்கள் ஆரியவர்த்தாவில்தான் எழுதப்பட்டன என்பது உண்மை. "இந்துக்களும் ஐரோப்பிய இனமக்களில் பலரும் ஒரு காலத்தில் மத்திய ஆசியாவில் வாழ்ந்து வந்தனர். அங்கிருந்து இவர்களில் சிலர் குடி பெயர்ந்து ஐரோப்பாவிற்குச் சென்றனர். மற்றவர்கள் தென் கிழக்கு மார்க்கமாக ஈரான் வழியாக இந்தியாவில் நுழைந்து ஆரிய மதத்தை எங்கும் பரவச் செய்தனர். இந்துச் சமவெளிப் பகுதிகள் வழியாய் ஊடுருவி வந்தவர்கள் பிறகு இந்தியாவின் பல பாகங்களில் குடியேறின போது அவர்கள் இந்துக்கள் என்று அழைக்கப்பட்டனர். இந்து மதம் என்பதற்குப் பதிலாக ஆரிய மதம் என்று அழைக்கப்பட்டிருந்தால் அதுவே மிகப் பொருத்தமாயிருந்திருக்கும்[18]" என்று காந்திஜியும் கூறுகிறார்.

டாக்டர் ராதாகிருஷ்ணன் இது குறித்து "இந்து என்ற மதம் மத நம்பிக்கை வகை சேர்த்ததல்ல. ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பில் வாழ்ந்ததையே அது அர்த்தப்படுத்துகிறது. நாகரீகமற்ற ஆதிவாசிகள் அரைகுறை நாகரீகத்தில் வாழ்ந்தவர்கள், நாகரீகமிக்க திராவிடர்கள், ஜீக ஆரியர்கள் இப்படிப்பட்ட எல்லோரும் இந்துக்கள் என்ற பெயரில் இந்து சமவெளியில் ஒரேமண்ணில் வாழ்ந்தனர். இந்தியாவில் வாழ்ந்த ஆண்களும் பெண்களும் வெவ்வேறு இனமக்களாய் வெவ்வேறு கடவுள்களை வணங்கி வந்தனர்".[19]

ஆசாரிய இனம் என்ற முறையில் ஆரியர்கள் தங்கள் மேன்மையைக் காத்துக் கொள்ளவும் அதை வளர்க்கவும் கருத்தாய் இருந்தார்கள். ஆரியா என்ற சொல்லுக்கு நாளாவட்டத்தில் 'மேன்மையான' என்று பொருள் வரலாயிற்று. வர்ணாஸ்ரம தர்மமும் தீண்டாமை தர்மமும் இந்த மேன்மையை உண்டாக்கவும் காக்கவும் பெரிதும் உதவியாயிருந்தன. ஆயினும் ஜெயிக்கப்பட்ட இனத்திற்கு சமுதாய நிலையிலும் சமய நிலையிலும் நிரந்தரமாகவும் முழுமையாகவும் ஒதுக்கப்படும் நிலை ஏற்பட்டதற்கு தீண்டாமையே பெரிதும் காரணமாயிற்று. பாஷாம் என்ற புகழ் பெற்ற சரித்திர ஆசிரியர் "வேண்டுமென்றே தங்கள் சமயத்தின் சடங்காச்சாரத்தன்மையை கலப்பின்றிக் காப்பதற்காகவே தீண்டப்படாதவர்களோடு உள்ள எல்லா உறவுகளையும் ஆரியர்கள் விலக்கிக் கொண்டனர்"[20] என்று எழுதுகிறார்.

தொகுப்புரை: வைதீக ஆரியர்களும் தஸ்யூ அடிமைகளும் தங்கள் தனித்தனி மதங்களை காத்துக் கொண்டனர். வரலாற்றில் இந்த இரண்டு மதங்களும் கலப்பதற்கான வாய்ப்பு அளிக்கப்படவில்லை. காரணம் தீண்டாமை ஒதுக்கப்பட்ட நிலை ஆகிய விஷயங்களில் கண்டிப்பான விதிகள் அனுசரிக்கப்பட்டு வந்தது. இன்னும் தெளிவாகக் கூறினால் இந்த இரண்டு மதங்களின் தனித்தன்மைகள் காப்பாற்றப்பட வேண்டும் என்ற பெரிய அக்கறையோடுதான் தீண்டாமையும், ஒதுக்கப்பட்ட நிலையும் மிகவும் கண்டிப்பான நிலையில் கடைப்பிடிக்கப்பட்டன.

13

# திராவிட நாட்டில் பிராமணர்களின் மிஷினரி வேலை

புத்தரின் காலத்திலும் அதற்குப் பிறகும் ஆரியவர்த்தாவில் குறிப்பிடத்தக்க குழப்பங்கள் நடந்து கொண்டிருந்த போது விந்திய சாத்பூரா மலைகளுக்கு தெற்கே உள்ள பகுதியில் மக்களும் மன்னரும் நன்கு அமைதியாக வாழ்ந்து வந்தனர். நாகரிகங்களும் மதமும் நன்கு செழித்து வளர்ந்து வந்தன. சரித்திரம் கூறுவது போல் தெற்குக் கடற்கறைப் பகுதிகளில் உள்ள தமிழ் மன்னர்கள் கடல் வழியாக கிரேக்கர்களோடும், பெர்சியர்களோடும், மலேசியா மக்களோடும் அதிக அளவில் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். கி.மு. 1000த்தில் இஸ்ரவேல் நாட்டின் அரசனாகிய சாலமோன் ராஜாவுக்கு தமிழ் நாட்டிலிருந்து மயில்களும், குரங்குகளும், தந்தமும் அனுப்பப்பட்டன. சால மோன் ராஜா அவற்றைத் தனது எபிரேய ஏடுகளில் தமிழ் பெயர்களிலேயே

எழுதிவைத்துள்ளார். மகாபாரதமும், மெகஸ்தனிசும் அசோகமன்னனின் கல்வெட்டுகளும் புகழ் வாய்ந்த சோழ மன்னர்கள் பற்றிக் குறிப்பிடுகின்றன. பாண்டிய அரசன் கிரேக்கப் பேரரசனாகிய அகுஸ்து ராயனுடைய அரசவைக்கு தனது தூதுவர்களை அனுப்பியிருந்தான்

பிராமணர்களின் உன்னத செல்வாக்கு திடீரென்று குறைந்து பௌத்த மதத்தினால் ஆரிய தர்மத்திற்கு அரசாங்க ஆதரவோடு கூடிய பெரும் எதிர்ப்புக் கிளம்பிய போது பிராமணியத்தின் காவலர்களாக இருந்த சில பிராமணர்கள் தங்கள் மதத்தை இந்தியாவின் தென் பகுதிக்குக் கொண்டு செல்ல ஆரம்பித்தனர். இங்கு நாம் கவனிக்க வேண்டிய விஷயம் ஆரியர்கள் மொத்தமாக தெற்கே வந்து குடியேறவில்லை ஆரிய மிஷனெரிகள் மட்டுமே தெற்கே வந்துசேர்ந்தனர் என்பதுமே. ஆரியர்கள் வட இந்தியாவில் படையெடுத்து ஜெயித்துக் குடியேறினார்கள். ஆனால் தென் இந்தியாவில் அவர்கள் தங்கள் மதத்தைப் பரப்புவதற்காக மிஷனெரிகளாக வந்து குடியேறினார்கள். இவர்களில் சிலர் சிறந்த முனிவர்களாக இருந்து திராவிடர்களுடைய கலாச்சாரத்தை மாற்றும் அளவுக்கு செல்வாக்குப் பெற்றிருந்தனர். கிறிஸ்து பூமியில் வாழ்ந்த காலக் கட்டத்தில் பிராமண மிஷனெரிகள் தொடர்ந்து சில நூற்றாண்டுகள் இந்தியாவின் மேற்குக் கடற்கரைவழியாகச் சென்று தென் இந்தியாவில் வந்து குடியேறினார்கள். தமிழ் நாட்டிலும், ஆந்திராவிலும், ஒரிசாவிலும் இருப்பதைவிட மகாராஷ்டிரத்திலும், கர்னாடாகத்திலும் ஆரியத்தின் செல்வாக்கு அதிகமாயிருப்பதற்குக் காரணம் இதுதான். இந்திய கலாச்சார ஆராய்ச்சியாளரான கே.எம். முனிஷி கூறுவது போல் "லோபமூத்ரா", அகஸ்தியா என்பவர்களின் சீடர்கள் விந்திய மலையைக் கடந்து ஆரிய கலாச்சாரத்தை தெற்கேயும் தென்கிழக்கு ஆசியாவிற்கும் கொண்டு சென்றார்கள். அதே நேரத்தில் மேற்குக் கடற்கரையில் சென்று பிருகுகள் தாங்கள் குடியிருப்புக்களை அமைத்துக் கொண்டதாகத் தெரிகிறது. காம்பே முதல் கன்னியாகுமாரி வரை வாழும் பிராமணர்கள் இன்றும் கூட தங்களை, பரசுராமனின் வழிவந்தவர்கள் என்று சொல்லிக் கொள்கிறார்கள்".[1] வைதீக ஆரியர்களின் மிஷனெரி விரிவுப் பணி திராவிட நாட்டின் கடற்கரைகளோடு நின்று விடவில்லை.[2] மஜீம்தாரும் நூருல் ஹசானும் [3] மற்றவர்களும் கூறுவதுபோல் இந்த மிஷனெரிப்பணி கடல் தாண்டி தீவிரமாகப் பரவி தென்கிழக்கு ஆசியாவிலுள்ள பல நாடுகளுக்கும் சென்றது. உதாரணமாக, முதல் நூற்றாண்டில் கம்போடியா பற்றி எழுதியுள்ள ஒரு சீன யாத்திரீகர் ஆயிரத்துக்கும் அதிகமான பிராமணர்கள் இந்தியாவிலிருந்து சென்று அங்கு குடியேறியதாகவும் கம்போடிய மக்கள் இந்தப் பிராமணர்களின் உபதேசங்களை பின்பற்றினதாகவும்".[4] எழுதுகிறார்.

தெற்கில் பிராமணிய மிஷனெரிப் பணி குறித்து எழுதும் பேராசிரியர் பண்டார்க்கர் "இந்தக் காலகட்டத்தின் முக்கிய அம்சம் என்னவென்றால், தென் இந்தியாவில் குடியேறின ஆரியம் முழுமை பெற்றதே ஆகும். விந்தியமலைகளுக்குத் தெற்கே பிராமணர்கள் திடமாக வேர் ஊன்றிவிட்ட பல இடங்கள்

இருந்ததை நாம் அறியவருகிறோம். நல்ல மிஷனெரி ஆர்வத்துடன் தென்இந்தியாவில் சென்று குடியேறுவதில் ரிஷிகள்தான் சிறந்த மிஷனெரிகளாக முன்னணியில் நின்று இவ்வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர். அஸ்மகாவிலிருந்து தெற்கு நோக்கி ரெய்ச்சர், சித்ராதுர்க் முதல் மதுரைவரை இவர்கள் வந்தனர். இன்றும் தமிழ்ப் பிராமணர்கள் பாரம்பரியமாக கொண்டாடுவது 'பிரிகச் சரண' அதாவது குடிபெயர்ப்பு. தெற்கு நோக்கிச் சென்று ஏராளமான பிராமணர்கள் குடியேறினதைக் காண்கிறோம்''.[5]

பிரபல சரித்திர ஆசிரியரான தண்டேகர் தமது நூலில் ''திராவிடர்களின் இடமான தென் இந்தியா என்றுமே பிராமணக் கலாச்சாரம் உடையதல்ல. புத்தமத மிஷனெரிகளும் ஜைனமத மிஷினெரிகளும் சென்று தென்இந்தியாவில் தங்கள் மதத்தைப் பரப்பினார்கள். அதன்பிறகு பிராமணர் முக்கியஸ்தர்கள் பிராமணியத்தைப் பரப்பினார்கள். இந்த பிராமணிய இயக்கம் தெற்கில் பரவியபோது பல்லவ அரசர்களை பிராமண மிஷனெரிகள் தங்கள் மதத்திற்கு மதமாற்றம் செய்தனர்.''[6]

தெற்கிலுள்ள திராவிடர்களின் கலை, இலக்கிய, பண்பாட்டின் வளர்ச்சிக்கு பிராமண மிஷனெரிகள் உதவியிருக்கிறார்கள். தமிழ்மொழிக்கு முதல் இலக்கண நூலைச் செய்து கொடுத்தவர் பிராமண மிஷனெரியான அகஸ்திய முனிவர் ஆவார். திராவிட இனமொழிகளின் மீது சமஸ்கிருதத்தின் செல்வாக்கு கணிசமான அளவில் மிகுந்தது. இன்னும் பல கலாச்சார விஷயங்களில் பிராமணர்களும் திராவிடர்களும் பரிமாற்றம் செய்து கொண்டதால் சில நன்மையும் காணப்பட்டது.

காலப்போக்கில் வேதம் ஓதுவதற்கு சமஸ்கிருத மொழியை வைத்துக் கொண்டது தவிர மற்றபடி தென்இந்தியாவிற்கு வந்த பிராமணர்கள் தங்கள் தாய்மொழியைப் பேசுவதை விட்டு திராவிட மொழிகளையே பேசத்தொடங்கினார்கள். இது வடஇந்தியாவில் உள்ள தீண்டப்படாதவர்களாகிய திராவிடர்கள் தங்கள் மொழிகளை பேசுவதைவிட்டு ஆரியர்களின் மொழிகளைப் பேச ஆரம்பித்தது போலாகும்.

திராவிடர்களுக்குப் பிராமணர்களால் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க மாற்றம் மதவிஷயத்தில் தான். ரிக்வேதத்தில் எழுதப்பட்டிருப்பது போல் திராவிட தர்மம் மதம் என்பது ஒரு தனித்தன்மையுள்ள மதமாகும். ஆரியர்களின் கடவுள்களில்லாத மாயோன், சியோன், கந்தாளி[7] போன்ற கடவுள்களை திராவிட மக்கள் வழிபட்டு வந்தனர்.

படிப்படியாக திராவிட மக்களில் ஒரு பகுதியினருக்கு பிராமணர்கள் மத குருக்களாக மாறிவிட்டனர்.[8] முதலாவது சின்னஞ்சிறு ராஜாக்களுக்கும் அவர்கள் சமஸ்தானங்களுக்கும் அதன்பிறகு ஜமீன்தாரர்களுக்கும் இவர்கள் பூசாரிகளாக மாறினார்கள்.[9] படிப்படியாக ஆதியில் புலவர்களுக்கு திராவிட அரச

அவைகளில் புலவர்கள் கவிஞர்களாகவும் ஆலோசனை கூறும் குருக்களாகவும் ஆசிரியர்களாகவும் இருந்தவர்கள் இருந்த மேன்மையான அதிகார பீடத்தை பிராமண பூசாரிகள் பிடித்துக் கொண்டனர். இந்தவிதமான அதிகார பீடத்தை பிடிப்பதற்கு பிராமணர்களின் சிவப்பு நிறமும் படிப்புத்திறமையும் பெரிதும் உதவியாயிருந்தது. முதலாம் இராஜேந்திர சோழன் கங்கைக்கரைகளில் வாழ்ந்த பிராமணர்களில் ஏராளமான பேரை சோழநாட்டிற்கு அழைத்துக்கொண்டு வந்தான்.''[10]

பிராமணர்கள் செல்வாக்குப் பெறுவதற்கு இரண்டாம் தந்திரமாக, வர்ணாசிரம தர்மத்தை அவர்கள் கையாண்டனர். பாஷாம் கூறுவது போல் `தமிழ் இலக்கியங்களில் ஜாதி முறைகள் அறவே குறிப்பிடவில்லை. ஆனால் பிராமணர்களின் செல்வாக்குப் பரவிய போது அவர்கள் ஜாதிமுறைகள் வட இந்தியாவில் இருந்ததை விட தென் இந்தியாவில் மிகவும் கண்டிப்புடன் திணிக்கப்பட்டன' [11]

திராவிடர்களில் பெரும்பகுதியினரின் மத விஷயங்களில் பிராமணர்கள் தங்கள் கட்டுப்பாடுகளைக் கொண்டுவந்து அவர்கள்மீது ஆதிக்கம் செலுத்த அரசர்களின் ஆதரவையும் பெறுவதற்கு யுத்திகளையும் இழிவான தந்திரங்களையும் கையாண்டு திராவிட மக்களைத் தங்களுக்கு கீழ்ப்படுத்திக் கொண்டனர்

பிராமணர்கள் தங்கள் உயர்ந்த செல்வாக்கை உறுதிப்படுத்துவதற்காக தெய்வத்தின் பெயரால் அதற்கு முத்திரை போட்டு வர்ணாசிரமதர்மத்தை தெற்கே புகுத்தின போது பிராமணர்களுக்கு எதிராகச் செயல்படக்கூடிய ஜைனர்களின், புத்தர்களின், கிறிஸ்தவர்களின் கொள்கைகளோ அதற்கான ஆதாரங்களோ காணப்படக்கூடிய எல்லா ஏடுகளையும் அழிப்பதற்கான நடவடிக்கைகளை மிகத் துல்லியமாக செய்துமுடித்தனர்.

சமூக வரலாற்று ஆசிரியர் சிதம்பரம்பிள்ளை தமது நூலில் ''தமிழ் நாட்டில் கோயில்கள் கட்டும் பணி கி.பி.10ம் நூற்றாண்டில்தான் தொடங்கிற்று. தமிழ் நாட்டில் இருந்த பல கோயில்கள் புத்தமத அல்லது ஜைனமதக் கோயில்களாகவே இருந்தன. பிற்காலத்தில் இவை இந்துக் கோயில்களாக மாற்றப்பட்டுவிட்டன''. [12] என்று கூறுகிறார். பிராமணர்களின் தூண்டுதலின் பேரில் தென்னிந்தியாவில் உள்ள அரசர்கள் பௌத்தர்களைக் கொடுமைப்படுத்தினதாக போரேல் குறிப்பிடுகிறார். [13] சங்கர விஜயாவின் கருத்துப்படி சுதாவன் என்ற அரசன் தனது அரச ஆணையில் ''இலங்கை பாலம் தொடங்கி, இமயமலை வரை ஒருவன் புத்தர்களைக் கண்டும் கொல்லாமல் விட்டுவிடுவானாகில் அவனும் கொலை செய்யப்படவேண்டும்'' [14] என்று கட்டளை பிறப்பித்திருந்தார். இன்றும்கூட மதுரை திருநெல்வேலி மாவட்டங்களில் கழுவேற்றல் ஊசி மாத்தில் கொல்லுதல் என்ற கொண்டாட்டம் வழக்கில் உள்ளது. [15] இது தென்இந்திய பிராமணர்களின் இயக்கம் ஜைனர்களை கொன்று போட்டதை

நினைவுப்படுத்திக் கொள்ளும் ஒரு கொண்டாட்டமாகும்''.[16] முதலாம் மகேந்திரவர்மன் ஜைனர்களைச் சித்ரவதை செய்ததைக் குறித்து நாம் அறிவோம்.''[17] ''இந்த உபவத்திரங்களின் போதும் சித்திரவதைகளின் போதும் முழுப்பட்டணங்களும் கிராமங்களும் அழிக்கப்பட்டன. தெற்கு கர்னாடக மாநிலத்தில் நல்லதொரு சான்றாக உள்ளது.[18] கர்னாடகாவில் உள்ள ஆய்கோல் கோவிலும் நாகர்கோயிலிலுள்ள சிவா ஆலயமும்[19] ஜைனமதக் கோயில்களை பிராமணர்கள் தங்கள் கோயில்களாக மாற்றினர் என்பதற்கு நல்ல சான்றும் ஆகும். வள்ளுவர்கள் பல்லவ அரசர்களின் புத்த ராஜகுருக்களாக இருந்துவந்தனர். இவர்களைத் தள்ளிவிட்டு இந்த இடங்களை பிராமண குருக்கள் பிடித்துக்கொண்டனர்.[20] இந்த வள்ளுவர்கள் தமிழ்நாட்டில் புத்தமதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். இவர்களுக்கு திருவாரூர், மைலாப்பூர், திருப்போரூர், சீரங்கம், நாகப்பட்டினம், திருப்பதி[21] ஆகிய இடங்களில் புத்தமடங்கள் இருந்தனர். இவர்களை தீண்டப்படாதவர்கள் பறையர் என்று பிராமணர்கள் ஆக்கிவிட்டனர். தர்ஸ்டனும்[22], நஞ்சுண்டையாகவும்[23] சீனிவாச ஐயங்காரும்,[24] மற்றவர்களும் இப்படித்தான் தென்னிந்தியாவில் பிராமணர்கள் திராவிடர்கள் மதக்குருக்களை அகற்றிவிட்டு அந்த இடத்தில் தாங்களே மதக்குருக்கள் ஆகிவிட்டனர் என்று விளக்குகின்றனர். சாது செல்லப்பா[25] புலவர் தெய்வநாயகம்[26] ஆர்ச்பிஷப் அருளப்பா ஆகியோர் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் நடைபெற்ற சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த[27] ''குகை/இடிக்கலகம்'' பற்றிக் கூறும்போது அது அந்நாட்களில் சோழநாட்டிலிருந்த எல்லா ஜைனமதம் புத்த மதம் மற்றும் ஆரியரல்லாத மதங்களின் இலக்கியங்களை கருத்தெரியாமல் அழித்த ஒரு முயற்சி என்கின்றனர்.

மேற்கூறப்பட்ட சமயஇனக் கலவரம் கீழ்க்காணும் விளைவுகளை உண்டுபண்ணிற்று. அவைகள் நம்முடைய ஆராய்ச்சிக்கு மிகவும் தொடர்பானவை.

தென்இந்தியாவில் பிராமணர்களின் மிஷனெரி முயற்சியால் ஏற்பட்ட விளைவு என்னவெனில் பிராமணர்கள் மதகுருக்களாக திராவிடர்களின் அரசவைகளிலும், ஜமீன்தார் அவைகளிலும், பட்டணங்களிலும், பெரிய கிராமங்களிலும் அமர்த்தப்பட்டனர்.

மெல்ல மெல்ல திராவிட அரசர்களின் ஆதரவை இந்தப் பிராமண மிஷனெரிகள் பெற்று விட்டனர். ''அரசர்கள் அவர்களை ஆதரித்து ஏராளமான பசுக்களையும் நிலங்களையும் கிராமங்களையும் அவர்களுக்கு தானமாகக் கொடுத்தனர்''[28] விஜயநகர இராஜா பிராமணர்களை ஆதரித்து அவர்களுக்கு பெரிய நிலங்களையும் அதிகமான பணத்தையும் வாரி வழங்கினார். இதற்கு 'இரஜாவின் ஆனந்த நிதி'[29] என்று பெயர். தமிழ் நாட்டில் பிராமண தேயங்கள் சதுர் வேதிமங்கலங்கள் என்ற பெயரில் முழுக்கிராமங்கள் இப்படி தானமாக பிராணமர்களுக்குக் கொடுக்கப்பட்டது. இத்தகைய தானங்கள் பற்றி ஆயிரக்கணக்கான கல்வெட்டுகள் நமக்கு உள்ளன.[30] 'நிலச்சுவான்தாரர்களாக வேலை

கொடுக்கும் எஜமான்களாக மக்கள் உற்பத்தி செய்த பொருட்களையும் அவர்கள் உடல் உழைப்பையும் பெற்று அனுபவிக்கும் மாபெரும் இடங்களாக இடைக்காலத்தில் பிராமண கோவில்கள் இருந்தன. மனித வரலாற்றிலேயே இப்படிப்பட்ட கோவில்கள் என்றுமே இருந்ததில்லை''[31] என்று நீலகண்ட சாஸ்திரி கூறுகிறார். ஆஸ்திகளிலும் வருமானத்திலும் தஞ்சை மாவட்டத்திலுள்ள திருவாடுதுறை ஆதினம் மிகவும் பணச் செழிப்புள்ள ஒரு ஆதினமாகும். இந்த மடாதீனத்திற்குச் சொந்தமாக ராஜராஜ சோழன் கொடுத்த ஆயிரமாயிரம் ஏக்கர் வயல்நிலங்கள் உள்ளன.[32] தஞ்சாவூர் கோயிலுக்கு 1.25 லட்சம் கலம் நெல் வருடந்தோறும் மானியமாகக் கிடைத்தது. இன்றைக்கும்கூட தஞ்சை மாவட்டத்தில் இரண்டு லட்சம் ஏக்கர் வயல்நிலங்கள் கோயில்களுக்குச் சொந்தம். இது தஞ்சை மாவட்டத்திலுள்ள மொத்த நிலங்களில் ஆறில் ஒரு பங்கு ஆகும்.[33]

''அஸ்வமேத யாகம் குதிரைகளைப் பலியிடுதல் உட்பட பெரிய அளவில் கணக்கற்ற பலிகள் செலுத்தும் முறைகளை பிராமண மிஷனெரிகள் தென்னந்தியாவில் புகுத்திவிட்டனர். சோழ அரசர்கள், பல்லவ அரசர்கள், விஜயநகர அரசர்கள், பிராமணர்களுக்குப் பொன்னை தட்சனையாகக் கொடுத்தார்கள். மக்கள் மத்தியில் பிராமணீய கோயில்கள் மிகுதியான பணம் படைத்தவைகளாக இருந்தன. அவற்றில் உள்ள பிராமண குருக்கள் கோயில் பேரைச்சொல்லி திராவிடர்களின் நாட்டில் உள்ள பயிர் நிலங்களில் பெரும் பகுதியை சொந்தமாக வைத்து அனுபவித்து வந்தனர். திருவாங்கூர் குறித்துப் பேசிய சுவாமி விவேகானந்தா ''அது கோயில் குருக்கள் நிறைந்த நாடு. அங்கு ஒவ்வொரு துண்டு நிலமும் பிராமணர்களுக்கும் சொந்தமாய் இருக்கிறது''[34] என்றார்.

தென் இந்தியாவில் பிராமணர்களின் மிஷனெரிப் பணிகளின் இரண்டாவது முக்கிய விளைவு வர்ணாஸ்ரம தர்மம். ஏற்கனவே நாம் குறிப்பிட்டது போல் திராவிட இனத்தில் ஜாதி அமைப்பே கிடையாது. அதில் இனப் பிரிவுகளும், குடும்பங்களின் பிரிவுகளுமே உண்டு.[35] மேல் ஜாதி, கீழ் ஜாதி என்று அமைக்கப்பட்ட ஜாதி அமைப்பு அங்கே இருந்ததில்லை. அவர்கள் தீண்டாமை பற்றிக் கேள்விபட்டதும் கிடையாது. சங்க இலக்கியங்கள் இந்த வராலாற்றுப் புகழ்மிக்க உண்மையை நன்கு உறுதிப்படுத்துகின்றன.

தென்னிந்தியாவுக்கு வந்த பிராமண மிஷனெரிகள் வைதீக ஆரிய தர்மத்தை திராவிடர்களுக்கு அறிமுகம் செய்வதில் ஒரு பெரிய பிரச்சினை இருந்தது. ஆரிய மதத்தை இனக்கலப்பின் மூலம் தென் இந்திய திராவிடர்களை ஏற்றுக் கொள்ளச்செய்ய முடியாது. காரணம் பிராமணர்கள் எண்ணிக்கையில் மிகக் குறைவாயிருந்தார்கள். வேதசமய அடிப்படையிலும் அது முடியாத காரியம். காரணம், திராவிடர்கள் இயற்கை வழிபாட்டுடன் கூடிய பல தெய்வ வணக்கம் பிராமணர்களின் வைதீக தர்மத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டிருந்தது. இந்த இக்கட்டான நிலைமையைச் சமாளிக்கவே பிராமணர்கள் ஜாதி அமைப்பைப் புகுத்தினார்கள். ''ஒருவன் எந்த இஷ்டதெய்வத்தையும் மதகுருவையும்

தெரிந்து கொள்வதற்கு தடை சொல்லப்படவில்லை. கட்டுப்பாடற்ற வகைகளில் மதமானது வளர்ந்து சென்றது. இப்படிப்பட்ட முடிவில்லாத சமய வேறுபாடுகளும், இந்தியாவில் ஒரு குறிப்பிட்ட ஸ்திரநிலைக்குக் கொண்டு வரப்படவேண்டியதாயிற்று இதற்கு ஜாதியே கருவி ஆயிற்று, என்று சுவாமி விவேகானந்தர் கூறியுள்ளார்.[36] சதுர்வர்ண அமைப்பு இந்து சமயத்தின் அடித்தளமாகும். இந்த அடித்தளம் சரிந்தால் இந்து சமயம் இல்லாமற்போகும் என்று காமகோடி பீடம் சங்கராச்சாரியார் கூறியுள்ளார்.[37] வர்ணாஸ்ரதர்மம் கூறும் ஏற்றத்தாழ்வு அடிப்படையில் திராவிட சமுதாயம் பிரித்து வைக்கப்படுவது தென்னிந்தியாவில் வாழ்ந்த திராவிடர்களின் ஆரிய மத மாற்றத்திற்கு அத்தியாவசியமாயிற்று.

இங்கு வேறொடு பிரச்சினையும் எழுந்தது. வர்ணாஸ்ரமதர்ம ஏற்றத்தாழ்வு திராவிடர்களுக்கு எந்த அடிப்படையில் அமைப்பது ? வர்ணத்தைக் கொண்டா அல்லது ஆரிய இரத்தம் இனக்கலப்பில் எவ்வளவு உள்ளது என்பதை வைத்தா ? இரண்டும் சாத்தியமில்லை. மதுரையில் உள்ள பறையரும் பாண்டிய அரசனும் ஒரே கருப்பு நிறம். காரணம் அவர்கள் இருவருமே முழுக்க முழுக்க் சுத்தமான திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள். ஆனால் வைதீக ஆரிய தர்மத்தை தென்னிந்தியாவில் நிலைநாட்ட வர்ணாஸ்ரம அமைப்புதான் ஒரே சாத்தியக்கூறு. நிறத்தால் மக்களை வித்தியாசப்படுத்த முடியாது. வர்ணாஸ்ரம உயர்வு தாழ்வு அமைப்பையாவது நிலைவரப்படுத்தியாக வேண்டும். எனவே வடஇந்தியாவில் அத்தியாவசியமாகக்கண்ட ஜாதி முறையான வர்மாஸ்ரம தர்மம்[38] இங்கு தென்னிந்தியாவில் ஆரிய மதத்திற்குள் திராவிடரைக் கொண்டுவர வலிந்து புகுத்தப்பட வேண்டியதாயிற்று. வடஇந்தியாவில் உள்ள பிராமணீய முறைகளை குருட்டுத்தனமாய் திராவிடர்கள் இன்றும் கூட பின்பற்றுவது பெரும் நகைப்புக்குரிய ஒரு விஷயமாயுள்ளது. நெல்லூர் கிராமத்தில் வாழும் ஒரு கருப்பு நிறத்திராவிடன் மற்றொரு கறுப்பு நிறத் திராவிடனைப் பார்த்து "உன் வர்ணம் என்ன?" என்று கேட்பது வேடிக்கையே. ஆனால் வர்ணாஸ்ரமம் வேடிக்கையான காரியமல்ல. மகா வேதனையானது. திராவிடர்களில் பொருளாதார நிலையில் ஏழைகளாயிருப்பவர்களும் பிராமணர்களின் ஆதிக்க நிலையை ஏற்றுக் கொள்ளாத மக்களும், வேண்டுமென்றே தீண்டப்படாதவர்களாக ஆக்கப்பட்டுவிட்டனர்.[39] பிராமணர்களை ஆதரித்த செல்வந்தர்கள், சின்னச்சின்ன ராஜாக்கள், ஜமீன்தார்கள் மற்றும் களவு கொலை போன்ற மறத் தொழில் செய்யும் பல வகுப்பார் ஷத்திரியர்கள் ஆக்கப்பட்டனர்.[40] காலப்போக்கில் மற்ற வகுப்பாகும் பிரிவாரும் ஜாதி அமைப்புக்குள் கொண்டு வரப்பட்டனர். நாளடைவில் கண்டிப்பான ஜாதி சட்டத்திட்டங்கள் சமஸ்கிருத முறையில் உயர்வு தாழ்வு கற்பிக்க ஏற்படுத்தப்பட்டன. காரணம் பிராமண மதம் என்ற வைதீக ஆரிய தர்மத்தில் ஆரியரல்லாதாரைக் கொண்டு சேர்க்க இந்த ஜாதி-ஏற்றத்தாழ்வு ஒன்றே ஒன்றுதான் கை கூடிற்று.

ஹனுமந்தன் தமது முதல் ஆராய்ச்சி நூலில் தமிழ் நாட்டில் உள்ள வலங்கை-இடங்கை ஜாதிப்பிரிவுகளைக் குறித்து எழுதினார். மக்களைப்பிரித்து வைப்பதற்கு பிராமண மிஷனெரிகள் கையாண்ட பல சூழ்ச்சிகளில் இதுவும் ஒன்று. இந்தவிதமான நித்திய ஜாதிப் பிரிவுகள் தென்னிந்திய திராவிடர்களை வழிவழியாக பிராமணர்கள் அடிமை கொள்ளச் செய்துவிட்டது. ஆரியர்களின் வடக்குப் பகுதியை விட, திராவிடர்களின் தெற்குப்பகுதியில் ஜாதி அமைப்பு கடினமாக காணப்படுவதற்கு இதுதான் காரணம்.

கடந்த நூற்றாண்டில் " மாகர்களும் மாங்குகளும் பூனா பட்டணத்திற்குள் வர காலை 9 மணிமுதல் மாலை மணி 3 வரை தான் அனுமதி உண்டு. காரணம் மற்ற நேரத்தில் அதாவது காலை 9 மணிக்கு முன் மாலை 3 மணிக்கு பின் இவர்களின் நீண்ட நிழல்கள் உயர்ந்த ஜாதியினர் மீது, குறிப்பாக பிராமணர்களின் மீது, பட்டு அவர்களைத் தீட்டுப்படுத்திவிடும் என்பதே அதற்குக் காரணம்'' [41] டாக்டர் அம்பேத்கார் கூறுவதுபோல் மராட்டிய மாநிலத்தில் இந்த மங்குகளும் மகர்களும் தங்கள் கழுத்தில் அல்லது மணிக்கட்டில் கருப்புக் கயிறு கட்டிக்கொள்ள வேண்டும். மற்றவர்கள் அவர்களைத் தீண்டப்படாதவர்கள் என்று அறிந்து கொள்வதற்காக இந்த ஏற்பாடுகள் [42] ஒருகாலத்தில் நல்ல பாரம்பரியங்களும், மனித சுதந்திரமும், சமத்துவமும், வேலை செய்வதில் பெருமித எண்ணமும் கொண்ட இந்த மக்கள் நித்தியகாலமாக தீண்டாமைக் கொடுமைக்குள்ளாகிவிட்டனர்.

குரேயும் அம்பேத்காரும் நூறு ஆண்டுகளுக்குமுன் உள்ள பூனா நகரின் நிலையை வருணிக்கின்றனர். ''மராட்டிய மாநிலத்தில் தீண்டப்படாத வகுப்பினரில் ஒருவரான மகர் வகுப்பினர் ரோட்டில் எச்சில் துப்பக்கூடாது. ஏனென்றால் உயர்ஜாதி இந்து ஒருவர் காலால் அதை மிதித்துவிட்டால் அவர் தீட்டாகிவிடுவார், எனவே மகர் ஜாதி மக்கள் எச்சில் உமிழ்வதற்காக தங்கள் கழுத்தில் ஒரு கலசத்தைக் கட்டித் தொங்கவிட்டுக் கொள்ளவேண்டும்! அத்துடன் தான் நடந்து சென்ற பாதையை சுத்தம் செய்ய ஒரு முள்செடிக்கொம்பு ஒன்றை இழுத்துக்கொண்டே செல்ல வேண்டும். அது மாத்திரமல்ல பிராமணர்களை தொலை தூரத்தில் கண்டமாத்திரத்தில் ஒதுங்கி நின்று அவர்களுக்கு வழிவிட வேண்டும்.'' [43]

50 ஆண்டுகளுக்குமுன் கேரளாவில் இருந்த தீண்டாமை குறித்து சுமாலியேல் விவரிக்கும்போது ''ஒரு நம்பூதிரி பிராமணரை எதிர்த்து ஒரு நாயர் வரலாம்; ஆனால் அவரைத் தொட்டு விடக்கூடாது. அதேநிலையில் ஒரு தீயன்கள் இறக்குபவன் வந்தால் 36 எட்டுத் தொலைவிலேயே அவன் தள்ளி நிற்க வேண்டும். அதுபோல மலையன். அதாவது கூடை முடைபவனும் பேயோட்டியுமான பாணன் என்னும் வகுப்பான் வந்தால் இன்னும் மூன்று நான்கு எட்டு அதிக தொலைவில் நிற்கவேண்டும். புலையன் விவசாயியும் தீண்டப்படாதவனும் ஒரு பிராமணனைக்கண்டால் 96 எட்டு தள்ளி நிற்க வேண்டும். ஒரு தீயன் நாயரைக் கண்டால் 12 எட்டு தள்ளி நிற்க வேண்டும். மாலையன்

கண்டாலும் மேலும் 3 அல்லது 4 எட்டுகள் தள்ளிப் போக வேண்டும். புலையன் நாயரைக் கண்டாலும் பிராமணனைக் கண்டாலும் 96 எட்டு தள்ளி நிற்க வேண்டும். ஒரு பாணன் தீயனை நோக்கி வரலாம்; ஆனால் தொடக்கூடாது. ஒரு புலையனோ பாணனை எதிர்த்து வரக்கூடாது. ஒரு புலையன் பிராமணனைத் தொட்டு விட்டால் உடனே பிராமணன் குளிக்க வேண்டும். அதோடு நிறைய வேதநூல்களைப் படிக்க வேண்டும்''. அவனுடைய பூணுலையும் மாற்ற வேண்டும்'' [44] என்கிறார்.

திருவாங்கூர் சமஸ்தானத்தில் தீண்டாமை நிலை குறித்து அங்கு வாழ்ந்த தமிழரும் வரலாற்று ஆசிரியருமான ஜார்ஜ் இங்ஙனம் கூறுகிறார்; ''தீண்டப்படா தவன் ஒரு நாயருக்கு அருகில் நடந்து சென்றால் உடனே கடுமையாகத் தண்டிக்கப்படுவான். அவன் இடுப்புக்கு மேலே ஆடை அணியக்கூடாது. செருப்பு போடக் கூடாது. குடைபிடித்து நடக்கக்கூடாது. அவன் நல்ல ஆடை உடுத்தவோ அவனுடைய பெண்கள் ஆபரணங்கள் அணியவோ கூடாது. பிராமணர்கள் தவிர எவரும் பொது இடங்களில் குடைபிடிக்கக்கூடாது. ஒரு தாழ்த்தப்பட்ட பெண் உயர்ந்த ஜாதி மனிதர்களையோ அதிகாரிகளையோ கண்டால் அவள் மார்பில் உள்ள துணிகளை அகற்றி விட வேண்டும். அதுதான் அவர்களுக்கு அவள் செய்ய வேண்டிய பெரிய மரியாதை''. [45]

திராவிட நாட்டில் பிராமண மிஷனெரிகள் வந்ததால் ஏற்பட்ட மூன்றாவது மாற்றம் அடிமைகள் (Slavery) ஏற்பாட்டினை அவர்கள் புகுத்தியதேயாகும். ''தென் இந்தியா ஆரியமயமானதும் அதன் விளைவாக அங்கு ஏற்பட்ட ஜாதி அமைப்புமே தமிழ்நாட்டில் அடிமைத்தனம் தோன்றியதற்கான காரணங்கள் ஆகும்'' [46] பிராமணர்கள் வருவதற்குமுன் தென்னிந்தியாவில் இந்த அடிமை வகுப்பினர் நாட்டை ஆள்பவர்களாக உயர்ந்த நிலையில் வாழ்ந்து வந்தனர். 47''அடிமைகள் விலைக்கு வாங்கப்பட்டார்கள் என்பதைப் பல கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.'' [48] இக்கல்வெட்டுகள் பலவற்றில் இந்த அடிமைகள் கோயில்களில் அடிமை வேலை செய்ய விற்கப்பட்டனர் என்றும் எழுதப்பட்டிருக்கிறது. அநேக அடிமைகள் கோயில்களுக்கும் மடங்களுக்கும் சொந்தமாக இருந்தனர். [49] ஒரு அடிமையும் அவன் இரண்டு மகள்களும் 110 காசுகளுக்கு திருப்பாம்புரான் கோயிலுக்கு கி.பி. 1201ல் விற்கப்பட்டனர். [50] இப்படி ஆயிரக்கணக்கில் மக்கள் அடிமைகளாயினர். தென்னிந்தியாவிலுள்ள திராவிடர்களின் சமுதாய அமைப்பின் ஒரு பகுதியான அடிமைகளாக விற்கப்படுவதும் அடிமைகளாக வாங்கப்படுவதும் வந்தது. இப்படிப்பட்ட இருண்ட பண்டைய வரலாற்றை விவரிப்பது நமது வேலையல்ல. ஆனால் அன்று ஏற்பட்ட சமுதாய ஏற்றத்தாழ்வுக் குழப்பங்களை அறிந்து கொள்வது நாம் காணப்போகும் முடிவுகளுக்கு தேவையாயிருக்கிறது.

ஆரியரின் ஜாதி பிளவைப் பின்பற்றி திராவிட மக்கள் கெட்டுப் போனதற்கு காரணமாயிருந்தது பிராமணீயம். மேல் ஜாதி மக்களுக்கு

பிராமணர்கள் தவிர அவர்கள் திராவிடர்களாயிருந்ததால் உபநயனம் பூநூல் அணிவது கிடையாது. உண்மை எது என்றால் எல்லா ஜாதிகளையும் சேர்ந்த திராவிடர்களைப் பிராமணர்கள் சூத்திரர்கள் என்றே இன்றும் அழைக்கிறார்கள். தீண்டாமை அடிமைகளை ஒதுக்கப்பட்டவர்கள் என்று தெளிவாகவும் நிரந்தரமாகவும் ஒதுக்கி வைக்கிறது! அடிமைகள் இல்லாமல் பிரபுக்கள் இருக்கமுடியாதல்லவா? தீண்டப்படாதவர்களைக் கிராமங்களில் அடிமைகளாக வைத்து ஆரிய வர்த்தாவில் உள்ளதுபோல் ஊருக்கு வெளியே அவர்களைத் தனியே குடியிருக்கச் செய்தார்கள். இவ்வாறு தீண்டப்படாதவர்கள் என்னும் சுவர் போடப்பட்டதால் தங்கள் தீண்டாமை சுவருக்குள் கலாச்சாரத்தையும் மதத்தையும் பிராமணீயக் கலப்பின்றி முழுக்க தனித்தன்மையோடு பாதுகாத்து வைத்திருக்கிறார்கள்.

அதுபோலவே தென் இந்தியாவிலும், தென்கிழக்கு இந்தியாவிலுள்ள கிராம மக்களில் பெரும்பகுதியினர் மத்தியில் பிராமணர்கள் வந்து தங்கியிராத காரணத்தால் அவர்கள் ஆரியமதத்திற்கு மாற்றப்படவில்லை.[51] அவர்கள் இனங்களாகவும் இனக் குடும்பங்களாகவும் பிரிந்திருந்தனரே தவிர அவர்களுக்கிடையில் ஜாதிப்பிரிவினை இல்லை. இந்த ஜனங்கள் வேதம், கீதை, ஸ்மிருதிகள், சங்கீதங்கள் பற்றி எதுவுமே கேள்விப்பட்டதில்லை. எனவே தங்கள் கலாச்சாரம் மதம் இவற்றை பிராமணீயம் கலவாமல் சுத்தமாக வைத்திருக்கின்றனர். இவர்களின் மதக்குருக்கள் பிராமணர்கள் அல்ல. இவர்கள் திராவிட இனத்தைச் சேர்ந்த பேயோட்டிகள், வெளிச்சாபட், கொமாரம், அல்லது ஆயாட்டன் என்பவர்களே.[52] இவர்கள் ஆரியர்களின் சில பண்டிகைகளைக் குறித்து கேள்விப்பட்டிருக்கின்றனர். இவர்களுடைய சொந்தப் பண்டிகைகள் கொடை, காவு அல்லது உரச்சில். கள்ளிக் கோட்டையிலிருந்து கட்டாக் வரையுள்ள ஆயிரக்கணக்கான கிராமங்களில் இவைதான் பண்டிகைகள். இன ஆராய்ச்சியாளர் டாக்டர் எல்மோர் குறிப்பிடுவதுபோல் "இருபது கோடி மக்களுக்கும் அதிகமாக திராவிட மக்கள் உள்ளனர். இவர்கள் மதம் தங்கள் திராவிட மூதாதையர்களின் மதமே."[53]

தொகுப்புரை: தென்னிந்தியாவின் நகரங்களிலும் பட்டணங்களிலும் வாழும் திராவிட மக்களில் பெரும்பாலோர் ஆரியர்களின் மதத்தில் பிராமண ஜாதிக்குக் கீழ்ப்பட்ட மூன்று ஜாதிகள் என்ற நிலையில் ஜாதிப்பிரிவின்படி பிராமண மதத்திற்குள் கொண்டு வரப்பட்டவர்களே. ஆனால் தென்னிந்தியாவில் உள்ள தீண்டப்படாதவர்களும் கிராம மக்களும் ஒருபோதும் பிராமண மதத்திற்குள் வரவில்லை.

குறிப்பு : எல்லா பிராமணரும் பிராமணீயத்தைச் சார்ந்தவர்கள் என்பது தவறு. இது எல்லா ஜெர்மானியரும் நாசிசத்தைச் சார்ந்தவர்கள் என்பது போல் ஆகும். பிராமணீயத்தைச் சாராத என் பெருமதிப்பிற்குரிய பிராமணர்கள் உண்டு. பிராமணீயத்தைச் சார்ந்த, பிராமணரல்லாத பலர் உண்டு.

BRAHMINICAL GRADATION OF COMMUNITIES–VARNASANKRATA

(According to all Brahminical Scriptures)



14

# தீண்டப்படாதவர்களின் சமய தாகம்

ஷத்திரிய இளவரசனாகிய சித்தார்த்தன் கயாவிலுள்ள போதி மரத்தடியில் புத்தராக மாறிய போது அவருடைய புதிய மதத்தின் மூலம் இந்தியாவில் மிகப் பெரிய புரட்சி உருவாக்கினார். கௌதமரின் புத்தமதம் பலருக்கு பலவிதங்களில் பொருள்பட்டது. மகதாவிலுள்ள மத்தியதர ஜாதியினருக்கு மிருகபலிகள், பானபலிகள், பிராமண குருக்களுக்கு தட்சிணை கொடுப்பது போன்ற முடிவில்லாத கருமங்களிலிருந்து அது விடுதலை கொடுத்தது. அது பிராமணர்களின் ஆதிக்கத்தின்மேல் ஷத்திரியர்களுக்கு ஒரு மாபெரும் வெற்றி கொடுத்தது.

அது ஆரியவர்த்தாவிலுள்ள தீண்டப்படாத திராவிட அடிமைகளுக்கு, அவர்கள் சுமந்து வந்த நுகத்தடிமையை ஒரே அடியாய் முறித்துப்போட்டது இதனால் திரளானபேர் புத்தமதத்தைத் தழுவினர். காரணம், புத்தமதத்தில் ஜாதிப் பிரிவினை கிடையாது.

ஆத்திரமடைந்த பிராமணர்களால் இதுபோன்ற ஒரு மக்கள் இயக்கத்தினை அழிக்க முடியவில்லை. காரணம் புத்தமதத்திற்கு அரசர்களின் ஆதரவு கிடைக்க ஆரம்பித்துவிட்டது. பிராமணர்களின் கொள்கைகளுக்கும் பழக்கவழக்கங்களுக்கும் எதிரான அரச ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு தூண்களிலும் பாறைகளிலும் உள்ள கல்வெட்டுகளில் அவை எழுதப்பட்டன.[1] பௌத்தர்கள் வேதங்களின்[2] அதிகாரத்தைத் தள்ளிவிட்டதோடு இரத்தபலிகளையும் கண்டித்துவந்தனர்.[3]

''புத்தமதம், ஜைனமதம், அஜிவிகிய மதம் ஆகிய மதங்களும் தத்துவமுறைகளும் அக்காலத்தில் இருந்த பொருளாதார, சமூக, சமத்துவ எண்ணங்களின் காரணமாக எழுந்தவைகளே'' [4] ''சாதாரணமாக ஒரு அடிமைப் பெண் 100 கர்சபணங்களுக்கு விற்கப்படும் நிலையில் தீண்டப்படாத அடிமைகளுக்கு இது ஒரு மாபெரும் விடுதலையாகக் காணப்பட்டது. புத்தமதத்தின் கத்ராக்களை எழுதிய சிறந்த எழுத்தாளர்களான தாசகாவும், பன்னாவும் இப்படிப்பட்ட அடிமை வாழ்விலிருந்து விடுதலை பெற்றவர்களே. இது குறித்து டாக்டர் அம்பேத்கார் எழுதும்போது மௌரிய அரசர்களின் காலம் தான் தீண்டப்படாதவர்களுக்கு விடுதலையளித்த ஒரே காலம் என்கிறார்''[5]

சுதந்திர சமநிலை எண்ணங்களை, பிராமண நூல்கள் ஒரு பெரிய ஆபத்தான நிலைமையாகக் கருதின. யுக புராணம், மகாபாரதம், பதஞ்சாலி, பாஷ்யா, பாணா, மனு பலர் எழுதிய நூல்கள் உதாரணம் ''புத்தமதம் வீழ்த்தபட்டபோது எந்த அளவுக்கு பௌத்தர்கள் பிராமணீய பெருங்கொடுமைக்கும் சித்திரவதைக்கும் ஆளானார்கள் என்பதை அநேக சரித்திர நூல்கள் கூறுகின்றன. புத்த, ஜைன மதநூல்களையும் அப்படிப்பட்ட சிந்தனைகளையும் எதிர்த்து எழுதப்பட்டவையே சூத்திரங்கள் ஆகும். வருணங்களுக்கும், ஆஸ்ரமங்களும் தர்மகாண்டங்களும் மீண்டும் ஏற்படுத்தப்பட்டன. பிற்போக்குச் சக்திகளான பிராமணியமும் மற்றும் சூழ்ச்சிக் கும்பல்களுக்கும் இது ஒரு வெற்றியே எனலாம்''[6] என்று அம்பேத்கார் சுட்டிக்காண்பிக்கிறார்.

இந்த எழுச்சிகளுக்கெல்லாம் முற்றுப் புள்ளி வைக்கும் திட்டமே புஷ்யமித்திரா என்ற பிரா்மணனின் ஆட்சிக் கவிழ்ப்புத் திட்டம். ''கடைசி பௌத்த இளவரசனான பிருஹத்ரத்தா தன்னுடைய தளபதியான புஷ்யரித்திராவினால் ஒழித்துக் கட்டப்பட்டார்.'' ? [7] என்று மஜிம்தார் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். ராணுவ மரியாதையைப் பார்வையிட்டுக் கொண்டிருந்த சமயம் புஷ்யமித்திராவின் தூண்டுதலின் பேரில் அவர் கொல்லப்பட்டார். கி.மு. 184ல் நடந்த புஷ்யமித்திராவின் ஆட்சிக் கவிழ்ப்பு பிராமணர்களுக்கு ஒரு . மாபெரும் மறுமலர்ச்சிக் காலமாக அமைந்தது.[8]

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகுதான் ''ஒரு பிராமணன் வாளெடுக்கலாம்; தேவைப்பட்டால் அரசனையும் கொல்லலாம்''[9] என்று ஸ்மிருதியில் மனு எழுதி வைத்துள்ளார்.

திவ்யவதனா என்ற புத்தநூலில் ''புஷ்யமித்ரா புத்த பிட்சுகளைக் கொன்று பௌத்த மடங்களையும் பௌத்த ஸ்தூபிகளையும் அழித்து சகலாவில் பஞ்சாபின் தலைநகரா ஒரு ஸ்ரமணாவின் தலையைக் கொண்டு வந்தால் நூறு தினராக்கள் பரிசுகொடுப்பதாகவும்''[10] புஷ்யமித்ரா கூறினதாக எழுதி வைக்கப்பட்டுள்ளது. அசுரர்கள் பேய்கள் அல்லது சுரதிவிஷ்கள் கடவுள்களின் பகைஞர்கள் என்ற அடைமொழிப் பெயர்கள் மௌரிய அரசர்களுக்கு மட்டுமல்லாமல் 'புத்தரால் ஏமாற்றப்பட்டவர்கள்' என்ற எண்ணப்பட்ட எல்லோருக்கும் கொடுக்கப்பட்டது'' என்று மஜீம்தார் குறிப்பிடுகிறார்.[11]

புத்தமதத்தை இந்தியாவை விட்டு துரத்தும் வேலை வெற்றிகரமாக முடிந்து விட்டாலும் சமத்துவ நிலையளிக்கும் புத்தமதத்தை சேர்ந்து வாழத் துடிக்கும் தீண்டப்படாதவர்களின் ஆர்வம் ஒழிந்து போகவில்லை. 1956ஆம் ஆண்டு டாக்டர் அம்பேத்காரும் அவரைச் சேர்ந்த ஐந்து லட்சம் பேரும் நாக்பூரில் தொடங்கிய ''நயாபௌத்த'' இயக்கத்தில் சேர்ந்து விட்டதற்கு இதுவே அடிப்படைக் காரணம். அங்ஙனமே சமூக சமத்துவத்தைப் போதிக்கும் மற்ற மதங்களாக கபீர் பந்த, நானக்பாந்த முதலிய மதங்களில் சேரும் ஆர்வமும் தீண்டப்படாத மக்களிடம் காணப்படுகிறது. தீண்டப்படாதவர்கள் மத்தியிலே கபீரின் போதனைகள் பெரும் வரவேற்புப் பெற்றன. ''பக்தரிடத்தில் ஜாதியைப் பற்றிப் பேச வேண்டியதென்ன? பூசாரியும் ஷத்திரியனும் வாணிகனும், இன்னும் முப்பத்தாறு ஜாதிகளும், கடவுளை ஒரே விதமாகத்தான் தேடுகின்றனர் '' என்கிறார் கபீர்.[12]

மலிகல் குறிப்பிடுவது போல் எத்தனையோ பக்தர்கள், கவிஞர்கள், சமூக சீர்திருத்தவாதிகள் சன்மார்க்கரீதியிலும் சமயநிலையிலும் மனிதாபிமான அடிப்படையிலும் ஜாதிப்பிரிவினையைக் கண்டித்துப் பேசி மட்டுமே வந்தனர்.[13] ஆனால் கபீர் அதனைச் செயல் முறையில் நடப்பித்துக் காட்டினார். கபீருடைய 12 சீடர்களும் தீண்டப்படாதவர்களே. அவர்களே பிறகு பந்தின் அப்போஸ்தலராக இருந்தனர். பந்தில் உறுப்பினராகச் சேர்பவர்கள் கைக்கொள்ள வேண்டிய போதனைகளாவன; ஒரே கடவுளின் மீது நம்பிக்கை வைக்க வேண்டும். அவர்கள் புலால் உண்ணவோ மது அருந்தவோ கூடாது. தங்களுக்கு விரோதமாய் தவறிழைப்பவரை மூன்றுமுறை மன்னிக்கவேண்டும். பரத்தையரோடு சேரக்கூடாது, பொய் சொல்லக்கூடாது. பிறருடைய பொருளை வஞ்சிக்கக்கூடாது. பிறனுக்கு விரோதமாய்ப் பொய்ச்சாட்சி கூறக்கூடாது.[14]

தீண்டப்படாதவர்களுக்கு கபீர் போதனைகள் மிகவும் பிடித்தமாயிருந்தது போல் அவைகள் துர்தாசையும் துளசிதாஸையும் குருநானக்கையும் மிகவும் கவர்ந்து விட்டன. எனவே ஆயிரமாயிரம் தீண்டப்படாதவர்கள் கபீர்பந்திலும் நானக்பந்திலும் சேர்ந்துவிட்டனர். ''1901ல் கபீர் பந்தைச் சேர்ந்தவர்களின் எண்ணிக்கை 850,000. இவர்களில் 500,000 பேர் மத்திய மகாணங்களில் இருந்தனர். 1911ல் இவர்களில் 600,000 பேர் மத்திய மாகாணங்களில்

இருந்தனர். அநேகர் சமார் வகுப்பையும் ஜீலகர் வகுப்பையும் சேர்ந்தவர்கள்'' 15 ராமனந்தரின் சீடனும் சமார் வகுப்பைச் சேர்ந்தவருமான ரவிதாஸ் இந்தியாவில் வடமேற்குப் பகுதிகளில் உள்ள தீண்டப்படாதவர்களைக் கவர்ந்து விட்டார். இவருடைய சீடர்களான ரவிதாசர்கள் உத்தர்பிரதேசத்தில் சில பகுதிகளிலும், குஜராத்திலும், டெல்லி, ரோதாக், குர்கவான் என்ற இடங்களி லுள்ள தீண்டப்படாத மக்களே. அவர்கள் மற்ற பந்தைச் சேர்ந்தவர்களைப் போலவே ஒரே கடவுளை உடையவர்கள். சிலை வணக்கமில்லாதவர்கள், மதசடங்குகளற்ற வழிபாடு கொண்டவர்கள்.

ஒருமுகதிய பக்கீரால் போதிக்கப்பட்ட லக்னோவைச் சேர்ந்த ஜகஜீவன்தாஸ் தீண்டப்படாத மக்கள் நடுவில் ஆரம்பித்த ஒரே கடவுளை வணங்கும் பக்தி இயக்கம் ஒன்றைத் தொடங்கி தீண்டப்படாத மக்கள் சத்நாமி என்றழைக்கப்பட்ட இந்த இயக்கம் ஜாதியற்ற சிலை வணக்கமில்லாத ஒரே கடவுள் கொள்கையை உயர்த்திக் கொண்டாடி வந்தது. அவர்களுடைய மதகுருக்களான மகந்துகளில் பலர் தீண்டப்படாத வகுப்பினர். அவுத் முதல் சட்டீஸ்கார் வரை இந்த இயக்கம் வெகு சீக்கிரம் பரவிவிட்டது. 1911ம் வருஷ ஜனத்தொகை கணிப்பின்படி மத்திய பிரதேசத்தில் 4,60,000 சத்நாமிகள் இருந்தனர்.[16]

மேலே சொல்லப்பட்ட இதே காரணங்களுக்காகத்தான் தீண்டப்படாதவர்களில் பலர் முகலாயருடைய ஆட்சிக் காலத்தில் முஸ்லிம்களாக மாறினர். பிராமண மதம் ஆதிகாலத்தில் இந்தியாவுக்குள் வாள் எடுத்து வந்தது போலவே இஸ்லாமிய மதமும் படையெடுப்பின் மூலமே இந்தியாவுக்குள் வந்து பரவிற்று. ஆனாலும் தீண்டப்படாதவர்கள் தாங்களாக விரும்பி இஸ்லாமில் சேர்ந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.[17] காரணம் இஸ்லாமியத்தில் ஜாதியும் தீண்டாமையும் கிடையாது.

தொகுப்புரை : இந்தியாவில் திராவிட இனத்தைச் சேர்ந்த ஆரியமதமல்லாத தீண்டப்படாத அடிமை மக்கள் பலர் கடந்த 2500 வருடங்களாகத் தங்களுக்கு சமய நிலையில் திருப்தி அளிக்கக்கூடியதும் சமூக நிலையில் சமத்துவத்தைப் போதிப்பதுமான பல்வேறு மதங்களைத் தாங்களாகவே தெரிந்து கொண்டு அவைகளில் சேர்ந்து கொண்டனர்.

# 15

# தீண்டப்படாதவர்கள் ஏன் கிறிஸ்துவைத் தேடுகின்றனர்?

"யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை; அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை கிறிஸ்துவில் நீங்கள் அனைவரும் ஒன்றாயிருக்கிறீர்கள்" திருமறை - கலாத்தியர் நிருபம் 3:28

"தாகத்திற்குத் தண்ணீர் கொடுப்பாயா?[1] கி.பி. 32ம் ஆண்டில் கெரிசீம் மலை அடிவாரத்தில் உள்ள ஒரு கிணற்றில் தண்ணீர் இறைத்துக் கொண்டிருந்த தீண்டப்படாதவளாகிய சமாரியப் பெண்ணிடம் இந்த ஆச்சரியமான வேண்டுகோளை விடுத்தார் இயேசு நாதர். உலக முழுவதிலும் தாழ்த்தப்பட்டு ஒடுக்கப்பட்டுப்போன மக்கள் அனைவரையும் பார்த்துக் கேட்ட ஒரு கேள்வி அது. இயேசுவுக்கு தீண்டப்படாத வகுப்பைச் சேர்ந்த சீடர்களில் இவளே முதல். இந்தத் திருப்பணி இயேசுவின் ஊழியர்களால் உலகின் எல்லா

இடங்களுக்கும் எடுத்துச் செல்லப்பட்டது. காந்திஜி கூறியது போல "கிறிஸ்தவ ஊழியர்கள் அதிக மென்மையுள்ளமும் பக்தியுள்ளமும் கொண்டவர்கள் எனலாம். சமுதாயத்தில் தாழ்ந்து கிடப்பவர்கள் மத்தியில் இவர்கள் பணி அன்புப்பணியாய் அமைந்து அநேகருடைய உள்ளத்தைக் கொள்ளை கொண்டது"[2]

தீண்டப்படாத மக்கள் ஏன் கிறிஸ்துவைத் தேடினார்கள்? முதலாவது உள்ளான மனிதத் தன்மைக்கு அவர் முக்கியத்துவம் கொடுத்தார். தீண்டப்படாத மக்களுக்கு பிராமணிய ஜாதி அமைப்பு செய்த ஒரே காரியம் அவர்களைத் தீண்டப்படாதவர்கள் என்று சொல்லி வெட்கத்துக்குள்ளாக்கி வைத்ததுதான். உலகத்தில் ஒவ்வொரு மனித இனமும், பிரிவும் தங்களைக் குறித்து மேன்மையாகப் பேசிக்கொள்ளும்போது தீண்டப்படாதவன் தன்னுடைய ஜாதியைக் குறித்து அதிகம் அவமானப்படவேண்டியதாயிற்று. மனித இயல் அறிஞரான வித்தியார்த்தி "ஹரிஜனங்கள் தங்கள் ஜாதியை மறைக்க தங்கள் பெயர்களுக்குப்பின் 'பிரசாத்', 'சிங்', 'வால்மீகி' முதலிய பட்டங்களைச் சேர்த்துக் கொள்கிறார்கள். சாமார்கள் 'ரவிதாஸ்' என்றும், பாசீக்கள் தங்களை 'வால்மீகி' என்றும் வண்ணார் ஜாதி மக்கள் 'ரஜாக்', 'சாஃபி', என்றும் தங்களை அழைத்துக் கொள்கிறார்கள். இதுதான் சமஸ்கிருத கலாச்சாரத்தால் உண்டானது'[3] என்று எழுதுகிறார். அங்ஙனமே, தூசாதுகள் தங்களை க்ஷத்திரியர்கள் என்று அழைக்கிறார்கள். ராஜ்வார்களும் தாங்கள் க்ஷத்திரியர்களே என்று உரிமைப்பாராட்டுகிறார்கள்.

சுயமரியாதையை அழித்துவிட்ட, மனிதத்தன்மையற்ற பிராமணீயக் கொடுமைகளுக்கிடையில் சமத்துவத்தினை வழங்கும் இயேசுவின் நற்செய்தி வந்தது. இதற்குப் பலமான எதிர்ப்புகள் எழுந்தன.

"1847ம் ஆண்டு தோன்றிய தமிழ் மதுரை கிறிஸ்தவ மிஷன் அதனுடைய ஊழியர்கள் தங்கள் ஜாதிகளைத் துறந்து விட்டதற்கு அடையாளமாக தாழ்ந்த ஜாதிக்காரர் சமைக்கும் சாப்பாட்டினை அன்பின் விருந்துகளில் சாப்பிட வேண்டும் என்று தீர்மானித்தது. இந்த அன்பின் விருந்துகள் பிர்ச்சனையாகி அநேக மிஷன் மையத்தில் உபதேசியார்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டதால் மக்கள் சபைகளை விட்டு வெளியேர ஆரம்பித்தனர்.[4]

"தாழ்ந்த ஜாதி பங்கி ஒரு பங்கியாகவே உயர்ந்த ஜாதியாரிடம் வந்தால் தொற்று நோய் போல் அவனை ஒண்ட விடாமல் விரட்டுவார்கள். ஆனால் அதே பங்கி ஏதாவது ஒரு கிறிஸ்தவப் பாதிரியிடம் கொஞ்சம் தீட்சை கொண்டால் மிகவும் வைதீக ஹிந்துவும் கூட அவனுடன் கைகுலுக்கி விடுகிறான். இது பெரிய வேடிக்கையல்லவா. எனவே திருவாங்கூரில் கிட்டத்தட்ட நாலில் ஒரு பங்கு மக்கள் கிறிஸ்தவர்களாகி விட்டார்கள். நான் அவர்களைக் குறை கூறமாட்டேன்" என்றார் சுவாமி விவேகானந்தர்.[5]

1903ம் ஆண்டு தார்வார் என்னுமிடத்தில் நமது தேசப் பிதாக்களில் ஒருவராகிய கோபால கிருஷ்ண கோகலே இந்த விஷயத்தைக் குறித்து ''நேர்மை உள்ளம் கொண்ட எவரும் நமது மனித இனங்களுக்குள் ஒன்றானதும் நம்மைப்போல் ஒரே வித உடலமைப்பு, சிந்திக்கக்கூடிய மூளை, உணரக்கூடிய உள்ளம், படைத்ததுமான மனிதர்களைத் தீண்டப்படாதவர்களென்று காலாகால மாய் விலக்கி வைத்திருப்பது கடிந்து கொள்ளப்பட வேண்டிய மகாகொடிய பாதகம்'' என்று பேசினார். ''இந்தியாவில் உள்ள பக்திமான்களும் சாதுக்களும் தீண்டாமையை மக்கள் விட்டுவிடவேண்டும் என்று கேட்டுக் கொண்ட போதிலும் அவர்களின் அறிவுரைகளினால் தீண்டாமையின்னும் அதிகரித்துக் கொண்டேதான் போயிற்று''[6] என்றார் மொரார்ஜி தேசாய். ''நாம் தீண்டப்படாத வர்களை நம்முடைய கிணறுகளில் தண்ணீர் எடுக்க அனுமதிப்பதில்லை. நம்முடைய எச்சில் சோற்றை மட்டும் அவர்களை சாப்பிடச் சொல்லுகிறோம். நம்மீது அவர்கள் நிழல்பட்டாலே தீட்டு என்கிறோம். ஆங்கிலேயரை நாம் குற்றப்படுத்திக் கூறும் ஒவ்வொரு குற்றச்சாட்டையும் பறையர்கள் நம்மீது கூறமுடியும்"[7] என்கிறார் காந்திஜி. கிறிஸ்தவரல்லாத ஒரு அதிகாரி 1871ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு அறிக்கையில் நேர்மை உள்ளத்தோடு இவ்வாறு கூறுகிறார் ''காலாகாலமாய் பறையர்களை தீண்டப்படாதவர்கள் என்று நாம் விலக்கி வைத்திருக்கிறோம். ஆனால் கிறிஸ்தவ மிஷனெரிகள் நமது பாரம்பரி யங்களை உடைத்தெறிந்து அவர்களுக்கு சம உரிமைகளையும் வாய்ப்புகளை யும் வழங்கி விட்டார்கள்''[8] இப்படி அவர் எழுதுகிறார். தீண்டப்படாதவர்கள் கிறிஸ்தவ ஆலயங்களுக்குச் செல்வதைக் குறித்து அவர்கள் அப்படிச் செய்வதில் என்ன தப்பு இருக்கிறது? என்று லாலாலஜபதிராய் கேட்கிறார்.

'இந்திய சமூக சீர்திருத்தவாதி' என்ற பத்திரிகை 1890ல் தொடங்கப்பட்டது. இந்தப் பத்திரிகை ''ஒரு நல்ல காரியத்தைக் கிறிஸ்தவ மிஷனெரிகள் நமக்குச் செய்து வைத்தார்கள். அதற்கு நாம் அவர்களுக்கு அதிக நன்றி சொல்லவேண் டும். தீண்டா ஜாதி இவர்கள் தொட்டுவிட்டாலே தீட்டு என்று நாம் விலக்கி வைத்த மக்களை சமுதாய அந்தஸ்திலே உயர்த்திவிட்டவர்கள் ''கிறிஸ்தவ மிஷனெரிகளே''[9] என்று எழுதிற்று. ''இந்தியாவின் போதனைகள் என்ற தமது நூலில் ராஜாராம் மோகன்ராய் ''கிறிஸ்தவ மதத்தின் உபதேசங்களும் கற்பனைக ளும் அற்புதமானவை. ஒரே கடவுள் உண்டு என்ற உயர்ந்த எண்ணத்திற்கு மனிதனுடைய கருத்தை உயரச் செய்கிறது. எல்லா மனிதர்களையும் ஜாதி, அந்தஸ்து, ஏழை, பணக்காரன் என்ற வித்தியாசமின்றி படைத்தவர் கடவுளே என்று போதிக்கிறது''[10] என்று எழுதுகிறார்.

1901ஆம் ஆண்டு திருவாங்கூர் சமஸ்தானத்தின் மக்கள் தொகை கணக்கெ டுப்பு அறிக்கையில் பிரசித்தி பெற்ற பிராமணர் ஒருவர் ''கிறிஸ்தவ மிஷனெரி கள் வந்திராவிட்டால் தாழ்த்தப்பட்ட இந்த சமுதாய மக்கள் தாழ்ந்தே போயிருப்பார்கள். இவர்கள் எளிய மண்வீடுகளுக்குள் நுழைந்து அவர்களோடு பேசி உலகத்தில் உயர்ந்து வாழும் எண்ணத்தை அவர்களுக்கு ஊட்டிய பெருமை கிறிஸ்தவ மிஷனெரிகளையே சாரும்'' என்று எழுதுகிறார்.[11]

தீண்டப்படாதவர்கள் கிறிஸ்துவைத் தேடினதற்கு சமூக விடுதலை இரண்டாவது காரணமாகும். திருச்சபையின் மனிதாபிமான சேவைகள் தீண்டப்படாதவர்களை கிறிஸ்தவ மதத்தை நாடும்படிச் செய்துவிட்டது என்பதில் கடுகளவும் சந்தேகமில்லை. ஸ்மிருதிகளில் கூறப்பட்டுள்ள தஸ்யூக்கள் சொந்தமாக நிலபுலன்கள் வைக்கக்கூடாது [12] என்னும் மதக் கட்டளைகள் இன்றும் இந்தியாவின் பல பகுதிகளில் மிகவும் கண்டிப்பாக கடைப்பிடிக்கப்பட்டு வருவதைக் காணலாம்.[13] பொருளாதார நிலையில் அவர்களை இந்துக்கள் ஒதுக்கி வைத்திருந்த காரியம் தீண்டாதவர்கள எந்த விதமான சொத்துக்களும் சொந்தமாக வைத்துக் கொள்ளக்கூடாது என்பதே.[14] குறிப்பாக நிலம் சொந்தமாக வைத்திருக்கக் கூடாது. அவர்களுக்கிருந்த ஒரே வாழ்க்கை குத்தகைதாரர்களாக[15] அல்லது பண்ணையில் வேலை செய்யும் அடிமைகளாக மற்றவர்களின் நிலங்களில் உழுது பாடுபடுவதேயாகும்.[17]

1978ம் ஆண்டு கர்நாடக மாநிலத்தில் வாழ்ந்த ஹரிஜனங்களைப் பற்றிய காரியங்களை ஆராய்ந்து எழுதிய மும்தாஜ் அலிகான் ''சமீபத்தில் சமூக நல மந்திரியின் அறிக்கை ஒன்று கூறுகிறபடி கோலார் மாவட்டத்தில் மட்டும் 1700 கொத்தடிமைகள் உள்ளனர். இவர்களின் சராசரி குடும்ப வருமானம் 144 ரூபாய். இவர்களில் 80 சதவிகிதம் மக்கள் ஒதுக்கப்பட்ட ஜாதியினர்'' [18] என்கிறார்.

தீண்டப்படாதவர்களின் அடிமைத்தனத்திற்கு கொடுக்கப்பட்ட இன்றைய நாகரீகப் பெயரே Bonded Labour என்னும் சொல் மௌரீய அரசர்கள் காலத்தில் எழுதப்பட்ட குட்டதந்த சூத்திரம் ''முதலாளிகளின் பிரம்படியோடு கண்ணீரில் உழைத்த அடிமைகள்'' என்று அன்று வர்ணித்த மக்களைத்தான் இன்றைய தினசரி பேப்பர்கள் தீண்டப்படாத கொத்தடிமைகள்' என்று அழைக்கின்றன. இந்தக் கொத்தடிமைகளான தீண்டப்படாத மக்களைக் குறித்துப் பேசும் போது பானர்ஜீ என்பவர் ''நிலமற்ற ஒரு ஏழை விவசாயிக்குக் குழந்தை ஒன்று பிறந்தால் இரண்டுமெவண்டுநெல் தானமாக அந்தப் பண்ணையின் சொந்தக்காரர் கொடுப்பார். அதன் பொருள் என்னவென்றால் காலமெல்லாம் இந்தக் குழந்தையும் அந்தப் பண்ணையாரின் கொத்தடிமை ஆயிற்று என்பதே''[19] என்று கூறுகிறார்.

வங்காள தேசத்தில் தீண்டப்படாதவர்களுக்குக் கல்வி கற்றுக் கொடுத்த ஜேம்ஸ்லாங் என்ற அன்புள்ளம் படைத்த கிறிஸ்தவ ஆசிரியர் ஒருவர் இப்படி எழுதிவைத்தார். ''எனது சொந்த மாவட்டமான தாகூர்புக்கூரில் ஜமீன்தார்கள் என்னை அரைப்பைத்தியம் என்கிறார்கள். என்னுடைய பள்ளிக் கூடத்தில் பண்ணைக் கூலிகளின் பிள்ளைகளுக்கு சரித்திரம் பூகோளம் மற்றும் பாடங்களைச் சொல்லிக் கொடுத்து என் தரத்தை தானே குறைத்துக் கொண்டேனாம். எளிய மக்களைக் கண்டால் இவர்களுக்குப் பிடிப்பதில்லை. எல்லோருக்கும் கல்வி கற்றுக் கொடுப்பதை இவர்கள் எதிர்க்கிறார்கள். சாதாரண மக்கள் கல்வி

கற்று கண்திறந்து விட்டால் ஜமீன்தார்கள் இனி தங்கள் பண்ணையாட்களைக் கொடுமைப்படுத்தி வேலை வாங்க முடியாது என்பதே இதற்குக் காரணம்"[20] சமூகவியல் ஆராய்ச்சியாளர் ரான் கூறுவது போல் அன்று வங்காளத்தில் நடந்த அதே கொடுமை இன்று பெங்களூரில் நடக்கிறது. மேலும் அவர் **தீண்டப்படாதவர்கள் படித்து தங்கள் உரிமைகளை அறியவரும்போது தங்கள் உரிமைகளை நிலைநாட்ட விரும்புவது இயல்பான காரியம். அதனால் ஜாதி இந்துக்கள் இதனை பாரம்பரிய சமுதாய அமைப்புக்களுக்கு அறைகூவலாகவும் திமிரான செயலாகவும் முறைகோடான செயலாகவும் கருதி திரும்பவும் அடிமை முறையை நிலைநாட்டுவர். இது மென் முறையிலோ அல்லது வன்முறையிலோ நடந்தேறும்** [21] என்கிறார்.

தலித், ஆதிவாசி அடிமை மக்களுக்கெல்லாம் உடனடி கல்வி ஊட்ட வேண்டும் என்றார் நோபல் அறிஞர் அமர்த்தியா சென். அவரை வெளிநாட்டு கிறிஸ்தவரின் சதி ஏஜண்ட் என்று சாடியது இன்றைய பிராமணீய நாசிசக் கட்சி என்பது நினைவிருக்கட்டும்.

புதிய சமுதாய அமைப்பைக் கிறிஸ்தவப் பிரசங்கிமார் மக்களிடம் எடுத்துக் கூறியதும், அவற்றை மக்களை பின்பற்றி நடக்கச் செய்ததும், கொடுமைப் படுத்தப்பட்ட ஏராளமான மக்களின் அன்பை சம்பாதித்த அதே நேரத்தில் சுயநலக்காரர்களின் கோபத்தையும் பெற்றுக் கொண்டுவிட்டது. இந்த சுயநலக் கும்பலில் உயர்ந்த ஜாதி இந்து ஜமீன்தார்கள் இருந்தனர். இதில் நிலச்சுவான்தார் கள் உண்டு. ஐரோப்பிய வியாபாரிகளும் கூட இருந்தனர். உதாரணமாக சென்னை இராஜதானியில் உள்ள தீண்டப்படாத அடிமைகளுக்கு "படியாள் முறைக்கொடுமை" இருந்தது. இதனை எதிர்த்து 1891–ல் சர்ச்மிஷனெரி சொசைட்டியை சேர்ந்த ஊழியர்கள் கடுமையாகப் போராடியதன் விளைவாக அவர்களின் விடாமுயற்சியால் படியாள் பாதுகாப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டது. அங்ஙனமே வங்காளப் பண்ணையாட்கள் பாதுகாப்புச் சட்டம்,[22] இண்டிகோ பயிரிடுவோர் சட்டம்,[23] அடிமை ஒழிப்புச் சட்டம்[24] ஆகிய சட்டங்கள் அனைத்தும் கிறிஸ்தவர்களின் இடைவிடாத முயற்சியால் கொண்டு வரப்பட்டவையே.

தீண்டப்படாதவர்களை சமூக விடுதலைப் பணிகள் மூலமாகவும், சமத்துவ உபதேசங்கள் மூலமாகவும் கவர்ந்து விட்டார்கள் (INDUCEMENT) என்ற குற்றச் சாட்டினை கிறிஸ்தவர்கள் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

தொகுப்புரை : ஆரியரல்லாத இனத்தைச் சேர்ந்தவர்களும் பிராமணீயமல்லாத மதத்தைச் சேர்ந்தவர்களுமாகிய இந்தியாவின் தீண்டப்படாத அடிமைகளில் சிலர் முதலாம் நூற்றாண்டு காலத்திலிருந்தே தாங்கள் இழந்து போன மனித அந்தஸ்தை மீண்டும் பெறுதற்காகவும் சமூக பொருளாதார அடிமைத்தனத்திலி ருந்து விடுதலை பெறும்படியாகவும் கிறிஸ்தவ மதத்தை தெரிந்து கொண்டனர். இந்த ஆர்வம் உயர்ந்த ஆன்மீக ஆர்வம் அல்ல என்பது உண்மைதான். ஆனால் இதைக் கீழ்த்தரமான ஆர்வம் என்று கூறுபவன் மடையன்.

# 16

# தீண்டப்படாதவர்கள் "இந்துக்களாக்கப்பட்டது" எப்பொழுது ஏன்? எப்படி?

''இந்து'' என்ற பதத்தினைத் தெளிவாகப் புரிந்து கொள்வதற்கு 24ம் அத்தியாயம் படிக்கும்வரை சற்றுப் பொறுத்திருக்கும்படி மதிப்பிற்குரிய வாசகர்களை நான் கேட்டுக் கொள்ளுகிறேன். இந்து என்ற பதத்திற்கு சமஸ்கிருத கலாச்சாரத்தைப் பெற்று இந்தியாவில் பிராமணிய மதத்தைப் பின்பற்றுகிறவர்கள் என்று பொருள் கொள்வது இவ்வத்யாயத்தைப் படிப்பதற்கு போதுமானது. இந்தியாவின் சமூக சமய அமைப்புக் காரியங்களைக் குறித்த இந்த அடிப்படையில் 1910ம் ஆண்டு மக்கள் தொகைக்கணக்கெடுப்பிலிருந்துசென்சஸ் கமிஷன் பலவேறு மதங்களைச் சேர்ந்த மக்களைக் கீழ்க்கண்டவாறு பிரித்து வைத்துள்ளது. இந்துக்கள், முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள், சீக்கியர்கள், பாரசீக ர், இயற்கை

வழிபாடு செய்பவர்களும், பழங்குடி மக்களும், தாழ்த்தப்பட்டவர்கள் அல்லது தீண்டப்படாதவர்கள்.[1] அரசியல் சட்டத்தை உண்டாக்கின அரசியல் நிர்ணயப் பேரவை தீண்டப்படாதவர்களை தனி சிறுபான்மையினராக எப்போதும் கணக்கிட்டது.

பிரசித்தி பெற்ற மனித இயல் வல்லுநர்களான ரிஸ்லி என்பவரும் கெய்ட் என்பவரும் அந்த நாட்களில் மக்கள் தொகை கணக்கெடுப்புக் கமிஷனர்களாக இருந்தனர். இவர்கள் வரலாற்று அடிப்படையில் மூவாயிரம் ஆண்டுகளாக உள்ள பிராமண வேதங்களையும், தொன்று தொட்டு ஆசரித்த பிரிவுகளையும், ஆதாரமாகக் கொண்டு கணக்கெடுப்போருக்கு வசதியாக இந்த பிரிவுகளை எழுதி வைத்தனர்.

இதன்படி இந்துக்களாக இல்லாத மக்கள் கீழ்க்காணும் வகைகளில் பிரிக்கப்பட்டுள்ளனர். 1. பிராமணர்களின் தலைமையை ஒத்துக் கொள்ளாதவர்கள். 2. பிராமணர்களே அல்லது அங்கீகரிக்கப்பட்ட இந்து மதக் குருக்களோ அவர்களுக்கு சடங்கு நடத்துவதில்லை. 3. வேதங்களின் அதிகாரத்தை ஒத்துக் கொள்ளாதவர்கள். 4. இந்துக் கடவுள்களை வழிபடாதவர்கள் 5. குடும்ப விசேஷங்களில் பிராமண குருக்களை வைத்துக் கொள்ளாதவர்கள். 7. இந்து ஆலயங்களில் கருப்பக்கிரகத்தில் அனுமதிக்கப்படாதவர்கள் 8. தொடுவதன் மூலம் பக்கத்தில் வருவதன் மூலம் தீட்டுப்படுத்துகிறவர்கள். 9. செத்துப் போனவர்களை அடக்கம் செய்பவர்கள். 10. மாட்டிறைச்சி தின்பவர்கள். பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த மக்கள் தொகை கணக்கெடுப்புக் கமிஷனர்கள் அனுப்பிய ஜனசங்கி அறிக்கைகள் யாவும் தீண்டப்படாதவர்கள் அனைவரும் மேற்கூறிய தொகுப்பில் அமைவதாகக் கூறியிருந்தன.[4].

இவ்வாறு தீண்டப்படாதவர்கள் தங்களுடைய தனிப்பட்ட இனப்பண்பையும் மதப்பிரிவையும் தொடர்ந்து உறுதிப்படுத்தி வந்துள்ளதை வரலாற்றில் காணலாம். நமது அரசியல் சட்டத்தை உருவாக்கித் தந்தவரும் தீண்டப்படாத வகுப்பைச் சேர்ந்தவருமான டாக்டர் அம்பேத்காரைவிட எவரும் தீண்டப்படாதவர்களின் இனம் மதம் பற்றி அதிகாரப் பூர்வமான உண்மைகளைக் கூறிவிட முடியாது. அவர் தீண்டப்படாதவர்களும், இந்துக்களுக்கும் ஒரே மதம் என்று எவரும் முடிவு செய்யக் கூடாது என்று எச்சரிப்பது அவசியம்'[5] என்கிறார்.

1931வரை வெறும் எண்ணிக்கையளவில் நடந்து வந்த ஜனத்தொகை கணக்கெடுப்பில் ஒரு கடுமையான சூழ்ச்சி செய்யப்பட்டது. இதன் காரணத்தை எளிதில் எவரும் புரிந்து கொள்ளலாம். பிரிட்டீஷ்காரர்கள் சுதேசிகளிடம் ஆட்சியை ஒப்படைக்கத் தீர்மானித்தார்கள். எல்லா சமூகத்தைச் சேர்ந்தவர்களும் அவர்கள் வாழும் தொகுதிகளையும் அவர்கள் சேர்ந்துள்ள இனப்பிரிவுகளையும் அடிப்படையாக வைத்து சுதேசி ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற தீர்மானம் உருவாயிற்று. இது சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட

மக்களின் நலன்களைப் பாதுகாக்கச் செய்யப்பட்ட ஒரு ஏற்பாடு. இது துரதிர்ஷ்டவசமாக பெரும் சதியை உண்டாக்கிற்று. இந்தியாவில் மொத்த ஜனத்தொகை கணக்கெடுப்பைச் செய்த இந்து அதிகாரிகள் அதிகமான அரசியல் தந்திரங்களோடு தில்லு முல்லு செய்தனர்.

இந்தக் காரியங்களை எல்லாம் கவனித்துக்கொண்டிருந்த டாக்டர் அம்பேத்கார் 1943ம் ஆண்டில் மால்தூஷியர்கள் மட்டுமே அக்கறை கொண்டிருந்த சாதாரண வஞ்சமற்ற ஒரு காரியமாக பத்தாண்டுக்கு ஒரு முறை நடந்த ஜனத்தொகை கணக்கெடுப்பு இன்று எல்லோருமே அதிக அக்கறை காட்டுகின்ற ஒரு காரியமாகி விட்டது; இதற்குக் காரணம் இந்தியாவின் அரசியலில் தலைகளின் எண்ணிக்கை முக்கியத்துவம் வாய்ந்த ஒரு காரியமாகிவிட்டது என்கிறார்.

"எனவே எண்ணிக்கையைச் சேர்ந்த அரசியல் பலம் தேட வேண்டுமென்றே எண்ணிக்கை கணக்கு காட்டும் வேலை இந்தியாவின் மக்கள் தொகை கணக்கெடுப்பு வேலையாக மாறிவிட்டது. தீண்டப்படாதவர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் கூட இந்த மக்கள் தொகை கணக்கெடுப்பு விஷயத்தில் ஆர்வம் உண்டு. ஆனால் கணக்கெடுக்கும் காரியத்தில் அவர்களால் ஒன்றும் செய்யமுடியாத நிலை. ஜனத்தொகை கணக்கெடுப்பு வேலையில் நிர்வாக அதிகாரிகளாகப் பணிபுரியும் வாய்ப்பு இவர்களுக்குக் கிட்டுவதில்லை. குறிப்பாக, 1914ல் நடந்த கணக்கெடுப்பின் உண்மை நிலை இதுவே பஞ்சாப் மாநிலத்தில் உள்ள தீண்டப்படாதவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக கொடுமைப்படுத்தப்பட்டு நசுக்கப் பட்டு விட்டார்களே. இதன் நோக்கம் என்னவென்றால் ஜனத்தொகை கணக்கெடுப்பில் தீண்டப்படாதவர்கள் சீக்கியராக இல்லாவிட்டாலும் சீக்கியர்கள் என்று கணக்குக் கொடுக்கச் சொல்லிக் கட்டாயப் படுத்தப்பட்டனர். இது இப்படியிருக்க இந்துக்கள் தங்கள் ஜாதியை ஜனத்தொகை கணக்கெடுப்பில் எவரும் பதிவு செய்யக்கூடாது என்று போராட்டம் நடத்தினார்கள். குறிப்பாக இந்துக்கள் தீண்டப்படாதவர்களிடம் சென்று அவர்கள் தங்கள் ஜாதியை குறிப்பிடாமல் இந்துக்கள் என்று மட்டும் குறிப்பிட்டால் தீண்டப்படாதவர்களும் மற்ற இந்துக்களைப் போலவே உயர்வாக நடத்தப்படுவார்கள் என்று சூழ்ச்சியாக சொல்லிவைத்தார்கள். தீண்டப்படாத்வர்கள் அறியாமையினால் இந்த ஏமாற்றுக் குப் பலியாகிவிட்டார்கள். அதன் விளைவு நம் எல்லோருக்கும் தெரிந்த ஒரு விஷயமே!" என்றார் அம்பேத்கார்.[6]

மத வாரியான ஜன கணிப்பை அரசியல் சூழ்ச்சியோடு நடவத்துவதைக் குறித்து வருத்தம் தெரிவித்துப் பேசிய ஜவகர்லால் நேரு "இவைகள் பெரும்பாலும் அரசியல் காரணங்களுக்காக மதச்சார்புள்ள முறையில் வாக்காளர்களைப் பிரித்துக் காரியங்களைச் செய்வதால் உண்டாயிற்று. தங்கள் மதத்தில் மற்றவரை சேர்ப்பதால் அந்த சமுதாயத்தின் எண்ணிக்கை பெருகி அரசியல் பிரதிநிதித்துவம் கூடுதலாகி, அச்சமுதாயத்தின் அரசியல் பலம் அதிகரிக்க

இடமுண்டாகிறது. ஜனத்தொகைக் கணக்கெடுப்பில் இப்படி மதச்சார்புடையவர்களின் எண்ணிக்கையை அதிகரித்துக்காட்ட வேண்டுமென்றே சதி செய்யப்பட்டன. அரசியல் காரணங்கள் தவிர இந்துமதத்தில் இந்துக்களல்லாதோரை மதம்மாற்றி சேர்த்துக் கொள்ளும் ஒரு போக்கும் காணப்படுகிறது'' என்று கூறியுள்ளார்.[7] ராஜ் பான்ஸிகளைக் குறித்து டாக்டர் பாரே ''1941ஆம் ஆண்டு ஜனத்தொகை கணக்கில் ராஜ பான்ஷிகளின் எண்ணிக்கையில் ஏற்பட்ட பெரிய சரிவுக்கு காரணம் தீண்டா வகுப்பாரை இந்துக்களாக்கும் முயற்சியில் தவறாக கணக்குக்காட்டி அறிக்கை கொடுத்ததே ஆகும்''[8] என்கிறார்.

இங்கு கடந்த கால நிகழ்ச்சிகள் சிலவற்றை சுருக்கமாகத் தருவது நல்லது. டாக்டர் அம்பேத்கார் சைமன் கமிஷனிலும் 1932ல் லண்டனில் நடந்த இரண்டாவது வட்ட மேஜை மாநாட்டிலும் தீண்டப்படாதவர்கள் பிரதிநிதியாகக் கலந்து கொண்டார். ஆட்சியையும் அதிகாரத்தையும் ஒப்படைப்பதற்கான மக்கள் பிரதிநிதித்துவசபை எங்ஙனம் அமைக்கப்படவேண்டும் என்பதைத் தீர்மானிப்பதற்காகவே இந்த மாநாடு கூடிற்று. 1932 ஆம் ஆண்டு ஆகஸ்டு 17ம் தேதி நடந்த வட்ட மேஜை மாநாட்டைத் தொடர்ந்து பிரிட்டிஷ் பிரதமர் தமது அறிக்கையில் வருங்காலத்தில் ஒரு குறிப்பிட்ட கால அளவுக்கு, மக்கள் பிரதிநித்துவ அவையில் பொதுத் தொகுதிகளில் ஒதுக்கப்பட்ட வகுப்பு மக்கள் போதுமான பிரதிநித்துவம் பெற முடியாததை முன்னிட்டு, அநேக இடங்களின் தனித் தொகுதிகள் அமைத்து அவற்றில் ஒதுக்கப்பட்ட மக்கள் மட்டுமே தங்கள் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்கவேண்டும் என்று எழுதினார். 20 ஆண்டுகளுக்கு இந்த ரிசர்வ் தொகுதிகள் இருக்க வேண்டும் என்பதே திட்டம்.

இந்த ஏற்பாடு பலவேறு விதமாக பலவேறு மக்களுக்குக் காணப்பட்டது. உண்மையான ஆஸ்திகருக்கு இது ஏதோ சமயங்களைச் சேர்ந்த மக்களைப் பலவேறு சமயப் பிரிவுகளின் அடிப்படையில் வைத்துள்ளனர், என்று நினைக்கக் கூடியதாய் இருந்தது. தேசப்பற்றுள்ள மக்களுக்கு வெகுநாளாகக் காத்திருந்து சுதந்திரத்தைப் பெறுவதற்குமுன் மக்ள் பிரதிதத்துவ சர்க்கார் ஒன்று அமைப்பதற்கு இது ஒருபடி என்று தோன்றிற்று. சமூகத்தைச் சுரண்டும் சுயநலவாதிகளுக்கு தாங்கள் தந்திரமாகப் பெற்றுக் கொள்ள முயன்ற கூடுதலான ஆதிக்கம் குறைவுபட்டுவிட்டதே என்று ஆகிவிட்டது.

''பிரித்தாளுகின்ற பிரிட்டிஷ் தந்திரம்'' என்று எரிச்சலை எல்லாம் கொட்டி வெள்ளையர்களைக் குறை சொன்னார்கள். ஆண்டது போதும் என்று தீர்மானித்த பிறகு அவன் ஏன் மக்களைப் பிரிக்க வேண்டும். பிரித்து வைத்தது வெள்ளைக்காரன் மூளையல்ல. அது பிராமணர்களின் யுக்தி. நிறமற்ற ஆரியனுக்கும் நிறமுள்ள திராவிட அடிமைக்கும் இடையில் தீண்டாமை தடுப்புச் சுவரை 3000 ஆண்டுகளுக்கு முன்பே அமைத்து இரண்டு தனிப்பட்ட இனங்களையும் இரண்டு தனிப்பட்ட மதங்களையும், பிரித்துவைத்த யுக்தியே அந்த பிராமணீய யுக்தி''[9]

1932ம் ஆண்டு ஏப்ரல் 13ம் தேதி காந்திஜி தீண்டாதவருக்கு தனித்தொகுதிகள் ஏற்பாட்டினை எதிர்த்து சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாக அறிவித்தபோது இந்தப் பிரச்சினை குறித்துத் தெளிவில்லாமலேயே அவர் அப்படி ஒரு முக்கியமான தீர்மானத்தை எடுத்து விட்டார். இனப்பாகுபாடுகள் குறித்து சரியாக அறிந்து கொள்ளுமளவுக்கு காந்திஜி ஒரு மனிதயியல் வல்லுநராயிருக்கவில்லை. ஏராவதா மத்திய சிறையிலிருந்து 1932ம் ஆண்டு 18ம் தேதி காந்திஜி ஒரு கடிதம் எழுதினார். நான் எடுத்த முடிவிற்காக வருந்துகிறேன். என்னுடைய தீர்மானம் சரியில்லாததாய் இருக்கலாம் தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தனித் தொகுதிகள் அமைத்தால் அவர்களுக்கோ இந்துகளுக்கோ தீமைபயக்கும் என்று நான் நினைத்தது தவறாய் இருக்கலாம்'' [10] என்று அவர் எழுதினார்.

அதே நேரத்தில் தீண்டப்படாதவர்கள், இந்துக்கள் தங்களை அடிமைகளாக வைத்து ஒட்டு மொத்தமாக தங்கள் வாக்குரிமைகளைப் பெறுவதற்கு தங்களை ஒன்றாக்கி ஆளப்பார்க்கிறார்கள் என்று பயந்தனர். தீண்டப்படாதவர்கள் மத விஷயத்திலும் சமூக ரீதியிலும் மைனாரிட்டியாக இருந்தால் தனித் தொகுதி முறையை வரவேற்றனர். 1942ல் அதே நிலையில் நாக்பூரில் நடந்த தீண்டப்படாதவர்களின் தேசிய மாநாட்டிலும் தனித்தொகுதி வறவேற்கப்பட்டது. ஒதுக்கப்பட்ட இனத்தவர் இந்துக்களிலிருந்து முற்றிலும் வேறுபட்ட மனித இனம் என்பதை நாக்பூர் தீர்மானம் நன்கு உறுதிப்படுத்திக்கூறியது. [11]

அதுபோலவே 1044ல் சென்னையில் நடந்த அகில இந்திய ஒதுக்கப்பட்ட இனத்தவர் சம்மேளனத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் மிகவும் ஆணித்தரமாக, திட்டமும் தெளிவுமாய், ''இந்தியாவின் தேசிய வாழ்க்கையில் ஒதுக்கப்பட்ட இனத்தவர்கள் பிரித்து வைக்கப்பட்ட ஒரு தனி இனம்'' என்றும், சீக்கியர்கள் முஸ்லிம்களை விட இவர்கள் மைனாரிட்டி என்பது மிகவும் உண்மை என்றும் வலியுறுத்தியது''. [12]

காந்திஜி உண்ணாவிரதத்தை மேற்கொண்டார். இந்த மத விஷயமானது விநோதமான அரசியல் காரியமாகவும் ''தேசபக்தி'' விஷயமாகவும் வர்ணங்கள் பூசப்பட்டு விட்டது. தீண்டப்படாதவர்களுக்கு தனித் தொகுதி என்று ஏற்கெனவே ஏற்பட்டிருந்த அமைப்பை அவர்கள் கைவிடுமாறு வற்புறுத்தப்பட்டனர்.

இப்படி காரியங்களை விட்டுகொடுக்கும்படி தான் வற்புறுத்தப்பட்டதைக் குறித்து டாக்டர் அம்பேத்கார் கீழ்க்காணும் வகையில் எழுதுகிறார். ''அன்று நான் மெல்லவும் முடியாத விழுங்கவும் முடியாத ஒரு பெரிய இக்கட்டான நிலையில் இருந்தேன். குழப்பமான நிலையில் ஒரு முக்கியமான முடிவை நான் எடுக்கவேண்டியிருந்தது. காந்திஜியின் உயிருக்கே ஆபத்தாய் இது இருந்தது. எனவே மனித குலத்தின் மேன்மையான ஒரு காரியமாக காந்திஜியின் உயிரைக் காப்பாற்ற வேண்டிய ஒரு பெரிய கடமை எனக்கு முன் இருந்தது.

அதே வேளையில் தீண்டப்படாதவர்களுக்கு பரிட்டீஷ் பிரதமர் கொடுத்த அரசியல் உரிமைகளைப் பாதுகாக்கவேண்டிய கடமையும் எனக்கு முன்பாக இருந்தது. நான் மனித குலத்துக்குச் செய்ய வேண்டிய கடமையை நினைத்து காந்திஜியின் உயிரைக் காப்பாற்றினேன்'' [13] இந்தச் சம்பவம் சரித்திரத்தில் 1932ம் ஆண்டின் பூனா ஒப்பந்தம் என்று அழைக்கப்படுகிறது. காந்தியின் பிடிவாதத்தினால் தீண்டப்படாதவர்கள் தங்கள் உரிமையை விட்டுக்கொடுக்க நேர்ந்தது.

இப்படிப்பட்ட சந்தடியில் தீண்டப்படாதவரின் கோரிக்கைக்குரல் கேட்பாரற்றுப் போயிற்று. தீண்டப்படாதவர்களோ அல்லது இந்து ஆஸ்திகரோ இருவருக்கும் பொதுவான மதம் இருப்பதாக ஒரு நாளும் கூறவில்லை. வற்புறுத்தலின் பேரில் அரசியல் வாக்குரிமை பெறுதவற்காகச் செய்யப்பட்ட ஒரு ஒப்பந்தத்தினால் உள்ளான மதபேதங்களை ஒருபோதும் அகற்ற முடியாது என்னும் உண்மையை காந்திஜி காலந்தாழ்த்தி உணரத்தொடங்கினார். கொஞ்சம் காலம் மட்டுமே நடத்திவந்த தீண்டப்படாதவர்களின் ஆலயம் பிரவேசயியக்கத்தைக் கூட காந்திஜி மிக ஞானமாகக் கைவிட்டுவிட்டார். 1934ம் ஆண்டு ஹரிஜன் என்ற பத்திரிகையில் ஆலயப் பிரவேச மசோதாவை நல்லடக்கம் செய்து விட வேண்டும்'' [14] என்று அவர் எழுதினார்.

இந்துக்களும் தீண்டப்படாதவர்களும் சேர்ந்து வாக்களிக்கும் கூட்டுத் தொகுதிகள் வேண்டும் என்று அரசியல் காரணங்களுக்காக காந்திஜி கேட்டபோதிலும் இந்த இரண்டு இனங்களுக்கும் உள்ள மதவித்தியாசங்களை அவர் நன்கு உணர்ந்திருந்தார். இதனை குருவாயூர் ஆலயத்தில் நடந்த சம்பவம் நமக்குத் தெளிவுபடுத்துகிறது. நவஜீவன் பத்திரிக்கையில் அவர் ஜாதிச் சட்டமும் வர்ணாசிரம தர்மமும் இந்து மதத்தில் முக்கியப்படுத்தப்படும் வரை தீண்டாதவர் எல்லா ஆலயங்களுக்கும் நுழைய விடுவது எப்படி சாத்தியமாகும்? என்று எழுதினார். [15]

ஆலயப்பிரவேசம் அல்ல பிரச்சினை தீண்டப்படாதவன் எந்த மதத்தைச் சேர்ந்தவன்? இதுதான் காரியம் என்பதை காந்திஜி பின்பு கொண்டார். அகில இந்திய இந்து மதசங்கத்தின் ஸ்தாபகரான ஸ்வாமி கற்பத்ரிஜி மகராஜ், இதே காரணத்திற்காகவே, தீண்டப்படாதவர்கள் இந்து ஆலயங்களுக்குள் நுழையக் கூடாது என்றார். [16] அதுபோலவேதான் சங்கராச்சாரியாரும் மற்றும் எல்லா இந்துமதத் தலைவர்களும் கூறினார்கள். [17]

பூனா ஒப்பந்தத்திற்குப் பிறகும் தீண்டப்படாதவர்கள் தனிப்பட்ட அந்தஸ்த்தைச் சேர்ந்தவர்களாகவே உள்ளனர். இந்த ஒப்பந்தம் தேர்தலுக்காக மட்டுமே தனித் தொகுதிக்குப் பதிலாக கூட்டுத்தொகுதியில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு இடஒதுக்கீடு செய்யப்படுவதற்கு வகை செய்தது.

வகுப்பு வாதிகள் இந்த ஓரளவு வெற்றியில் அவர்கள் திருப்தி அடையவில்லை. காரணம், மேற்கண்ட ஒப்பந்தம் தீண்டப்படாதவர்களை ஒரு தனித்த சிறுபான்மை இனமாகவே இருந்து வரச்செய்தது. இதைத் தொடர்ந்து நடந்த சம்பவம் அரசியல் நிர்ணயசபையின் தஸ்தாவேஜுகளில் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. சிறுபான்மை இனங்களின் ஆலோசனைக் கமிட்டியின் தலைவராக இருந்த சர்தார் வல்லபாய் பட்டேல் 1947ம் ஆண்டு ஆகஸ்டு 8ம்நாள் தனது அறிக்கையை அரசியல் நிர்ணயசபைக்கு (CONSTITUENT ASSEMBLY)[18] சமர்ப்பித்தார். அந்த அறிக்கையின்படி சட்டப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சிறுபான்மையினர் ஏழு வகைப்படும் ஆங்கிலோ இந்தியர், பாரசீகள், அசாம் சமவெளிப் பழங்குடியினர், இந்தியக் கிறிஸ்தவர்கள், சீக்கியர்கள், முஸ்லீம்கள், தாழ்த்தப்பட்டோர்[19] சிறுபான்மையினருக்கு «தனித்தொகுதி» என்பதை அளிக்காமல் 'ரிசர்வ் தொகுதி ' அவர்களுக்கு என்று பிரிக்கலாம் என்கின்ற சிபாரிசை ஆலோசனை கூறும் கமிட்டி, அரசியல் முறை நிர்ணயம் செய்யக்கூடிய சபைக்கு பரிந்துரை செய்தது. இது ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இப்படிப்பட்ட பரஸ்பர நம்பிக்கையைக் கொண்டுவர கிறிஸ்தவ தலைவர்கள் முக்கிய பங்கேற்றனர்.

இப்படி ஒரு நம்பிக்கையான சூழ்நிலை உருவான நேரத்தில், கே.எம். முன்ஷி ஓர் சிறப்பான உபாயத்தால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் ஒரு மாறுதலைக் கொண்டுவர எல்லோரையும் சம்மதிக்கச்செய்தார். தீவிரமான பிராமணத் தலைவர் முன்ஷி கூடாற்ற காட்சியளித்த மாறுதலைச் செய்யச் சொன்னார். இதுன்டிட:(அ) சிறுபான்மையினர் என்ற அட்டவணையிலிருந்து தாழ்த்தப்பட்ட சாதியினர் பெயரை எடுத்துவிடவேண்டும். (ஆ) '1 அ: 1935ம் ஆண்டு அரசியல் சட்டத்தின் முதலாம் அட்டவணையில் தாழ்த்தப்பட்டவர்கள் இந்து மதத்தைச் சேர்ந்த ஒரு பிரிவினர் என்று குறிக்கப்பட்டு, சிறுபான்மையினருக்கு என்னென்ன அதிகாரங்களும், உதவிகளும் புதியதாக உள்ள அறிக்கை பகுதி 1ல் கொடுக்கப்பட்டுள்ளதோ, அவைகள் வழங்கப்படும்'[20] என்கின்ற மாற்றத்தைச் சேர்க்கவும் என்றார்.

அந்நாளில் கூடிய பொதுமன்றம் சமுதாயத்தில் தொகுதி பங்கீடு, விசேஷமாக சிறுபான்மையினரைப் பற்றி மிகவும் அதிகமாக ஆலோசித்துக் கொண்டிருந்ததால் முன்ஷி கொண்டுவந்த 'சட்ட வஞ்சனை'[21] மதத்திற்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை அறிந்துகொள்ள தவறி விட்டது.

இப்படியொரு மாறுதல் கொண்டுவருவதன் உள்ளான நோக்கத்தை முன்ஷியே அழகாக எடுத்தியம்புகிறார். அவர் சொல்வதென்னவெனில், 'சிறுபான்மையினருக்கு அளிக்கப்படும் பாதுகாப்பு, தாழ்த்தப்பட்ட சாதியினருக்கும் அளித்தால் அவர்களை இந்து மதக் கட்டுப்பாட்டிற்கு கொண்டுவர முழுவதுமாக இயலும்.[22]

அவர் இப்படிப்பட்ட ஒரு மாறுதலை கொணர்வதற்கான கூற்று, மக்கள் சபைகளில் நடைபெற்ற விவாதங்களில் மிகப்பெரிய தவறான கூற்று எனலாம். தீண்டப்படாதவர்கள் சிறுபான்மையினர் இல்லையெனில், முன்ஷி எதற்காக தீண்டப்படாதவர்களுக்கு, "சிறுபான்மையினருக்கு கொடுக்கப்படும் அதிகாரங்களும், உதவிகளும்" கொடுக்கவேண்டும் என்று கேட்டார்? முன்ஷி சொல்வது அவருடைய எண்ணப்படி தீண்டப்படாதவர்கள் சிறுபான்மையினர் கிடையாது.[23]

யார் சிறுபான்மையினர் என்று யார் முடிவுசெய்வது? ஜனநாயக முறையில், எப்போதுமே ஒரு சமுதாயம் தான் யார் என்று அதுவே விளக்கவேண்டும். அவர் சொல்வது. ''ஹரிஜனங்கள் இந்து சமுதாயத்துடன் முழுவதுமாக சேரும்வரை சில பாதுகாப்புகள் அளிக்கப்பட்டுள்ளன''[24] அவர்கள் இந்து சமுதாயத்துடன் பின்னி பிணைந்த ஒரே பாகமெனில் ஏன் இந்த ''சேரும் முறை'' உள்ளது? முன்ஷி சொன்னது சிறுபான்மையினர் என்றால் சர்வதேச சட்டப்படி மொழியாலும், இனத்தாலும் சிறுபான்மையினராயிருக்கவேண்டும்.[25] முன்ஷி ஒரு இந்திய சரித்திர, இலக்கிய நிபுணராகையால், தீண்டப்படாதவர்கள் இனத்தாலும், மதத்தாலும் சிறுபான்மையினர் என்பதை எந்தவித சந்தேகமுமின்றி தெளிவாக அறிந்தவர். ஆனாலும்முன்ஷியின்பொய் அந்தநாளில் ஒரு பெரிய வெற்றியைச் சூடியது.

தொகுப்புரை: (அ) இந்தியாவில் தீண்டப்படாதவர்கள் எனக் கருதப்படுபவர், இனத்தால் ஆரியருமல்லர், மதத்தால் பிராமண சமயத்தவருமல்லர், ஆனால் அவர்கள் அறியாதசமயம், அவர்களுக்கு அறிவிக்காமலேயே, ஆகஸ்ட் 1947ல் சாசனத்தில் உண்மையையும், சத்தியத்தையும் மறைத்து அவர்கள் ''இந்துக்கள்'' என்று எழுதப்பட்டுள்ளது.

(ஆ) சிறுபான்மையினர் என்கிற தகுதியை ரத்துசெய்ய முன்ஷிகொண்ட சதித்திட்டம், தீண்டப்படாதவர்களின் முழு சமுதாயத்தையும் தன்னுடைய எழுதுகோலின் ஒரே வார்த்தையால் மாற்றம் செய்துவிட்டார்.

(இ) இந்தச் சதித்திட்டத்தின் பகிரங்கமான, தெள்ளத் தெளிவான நோக்கமென்ன வெனில், அரசியல் ஆதாயம்.தீண்டப்படாதவர்கள் அனைவரும் முன்ஷியின் ஓட்டு வங்கிக்கு இரையாக்கப்பட்டனர்.

(ஈ) ஆனால் முன்ஷி தங்களை மதம் மாற்றிவிட்டார் என்று தீண்டப்படாதவர்கள் கேள்விப் படவேயில்லை. அவர்கள் தங்கள் மதத்தை முன்பு போல் கடைப்பிடித்து வருகின்றனர்.

(உ) இப்படி தன்னுடைய அடிப்படை மனிதசுதந்திரத்தில் நடைபெற்ற பகல் கொள்ளைக்கு தீண்டப்படாதவர்களின் ஒரே ஒரு பாவம் என்னவெனில் அவர்கள் பேச அறியாத அடிமை சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாயிருக்கின்றனர்.

(ஊ) இந்த அநீதியானது ஒரு அரசியல் சாசனதிருத்தத்தினால்சரி செய்யப்பட வேண்டும்.

# 17

# யார் இந்த ஆதிவாசிகள்?

இந்தியா முழுமையிலும் 'ஆதிவாசிகள்' 'பழங்குடியினர்' ஆகிய பதங்கள் இவர்கள் இந்தியாவில் பூர்வீகக் குடிகள் என்பதை உணர்த்தும். இந்தியாவில் ஆரியர்கள் வருவதற்குமுன் நிகிரிட்டோக்கள் ஆஸ்டிராலாயிடுகள் திராவிடர்கள் மங்கோலாயிடுகள் ஆகிய நான்கு தனித்தனி இனக் குடும்பங்கள் நம் நாட்டில் ...வாக இருந்து வந்த காரியங்களைக் குறித்து 10ம் அத்தியாயத்தில் நாம் பார்த்தோம். இதில் முதல் இனமாகிய நிகிரிட்டோக்கள் கி.மு.4000ம் அளவில் இந்தியாவிற்குள் வந்தவர்கள்.

முன்பு குறிப்பிடப்பட்டது போல் இந்நிகிரிட்டோக்கள் அந்தமானில் காட... ...கள் ஜாரவா என்னும் கற்கால இனத்தைச் சேர்ந்த மனிதர்களாகவும், தமிழ் நாட்டிலும் கேரளாவிலும் மேற்கு மலைத்தொடர்களிலும் சமவெளிகளிலும் ...யர்கள், இருளர்கள் என்ற இனங்களாகவும் இவர்கள் சிறு சிறு குழுக்களில் ...வாகக் காணப்படுகின்றனர்.

மிகப் பெரிய ஆஸ்டிரலாய்டு இனங்களான ஆஸ்டிரோ ஆசிய இனக் குடும்பத்தைச் சேர்ந்த கோலாரியன் மனித வகுப்பைச் சேர்ந்தவர்கள் காசி மலைகளில் வாழும் காசிகள், அந்தமான் நிகோபார் தீவுகளில் வாழும் நிக்கோபாரிகள், பீஹாரிலும் வங்காளத்திலும் வாழும் 'சாந்தாலிகள், பிஹாரிலும் ஒரிஸாவிலும் வாழும் மூன்டாரிகள் பூனாஜிகள் வங்காளத்தில் உள்ள கோடர்க்ள், பீஹாரிலும் ஒரிசாவிலும் வாழும் ஹோசாக்கள், மத்திய பிரதேசத் தில் உள்ள கோர்வாக்கள், மகாராஷ்டிரத்தில் மத்திய பிரதேசத்தில் வாழும் கொர்க்குகள், பீஹாரிலும் ஒரிசாவிலும் காணப்படும் காரியக்கள், ஒரிசாவில் வாழும் கடப்பாக்கள் என்று பரந்து வாழ்ந்து வருகின்றனர். கோலோரியன் மூலவகுப்பைச் சேர்ந்த இந்தோ ஐரோப்பிய மொழிகள் பேசும் இனக்குழுக்க ளான பில்கள், பிலாலாக்கள் பட்லைகள், ரட்லாம் பழங்குடியினரான நாயிக்கு கள் அரவல்லி மலைகளில் வாழும் மீனர்கள், நாசிக் முதல் பரோடா வரையிலும் பூசாவால் தொடங்கி சூரத் வரையிலும் பரவியுள்ள கந்தேஷ் பழங்குடியினராகிய குக்னர் வர்லி, வாசவி, காமித், சௌத்திரி ஆகியவர்களும் இதில் சேர்க்கப்பட வேண்டியவர்கள்.

திராவிட இனத்தைச் சேர்ந்த முக்கிய பழங்குடியினர் கர்நாடகத்தில் உள்ள துளுக்களும் ஒரிசாவில் கோன்ட் மலைகளில் வாழும் குயீக்களும், மகாராஷ்டி ரத்திலும் மத்திய பிரதேசத்திலும் ஒரிசாவில் வாழும் கோண்டர்களும் ஒரிசாவி லுள்ள பார்ஜீக்களும், ஆந்திரப்பிரதேசத்திலுள்ள கோயாக்களும் ஒரிசாவில் உள்ள கோண்ட்களும் பீஹாரிலும் ஒரிசாவிலும் வங்காளத்திலும் உள்ள ஒரோவோன்களும் ராஜ் மலைகளில் வாழும் மாலர்களும் ஆவர்.

இந்தியாவில் மல்கோலாயிடு இனம் சேர்ந்த மக்கள் திபேத்தியர்கள், ப்ல்டீக்கள், லடாக்கீகள், ஷெர்ப்பாக்கள், போட்டியாக்கள், கனவுரீக்கள், இமாலயச் சாரலில் உள்ள லெப்சாக்கள் மற்றும் வடக்கு அசாமில் உள்ள மீகிரிக்கள், அசாம்-பர்மா இனக் குடும்பத்தைச் சேர்ந்த போரோக்கள், காரோக்கள், திரிபுரிகள், மற்றும் எத்தனையோ இன உட்பிரிவுகளையும் சேர்ந்த நாகா, கச்சீன், குக்கீச்சன் என்ற இனங்குடும்பங்களும். இந்தியாவில் உள்ள மதங்களைக் குறித்துப் பேசும் போது இந்தியாவைச் சேர்ந்த மக்களின் இன வித்தியாசங்களையும் மற்றும் பல்வேறு விதமான பிரிவுகளையும் தெளிவாகவும் குறிப்பாகவும் கருத்தில் கொண்டுதான் நாம் பேச வேண்டும். இந்தியாவிலுள்ள பழங்குடி மக்களின் மதங்களைப் பற்றி நாம் பேசும் போது டாக்டர் வித்தியார்த்தி குறிப்பிடுவது போல் மதங்களைப் பற்றிய புள்ளி விபரங்கள் அடங்கிய 1916ம் ஆண்டின் இந்திய மக்கள் தொகைக்கணக்கெடுப்பில் காணக்கிடக்கும் விவரங்க ளிலிருந்து பழங்குடி மக்களின் மதங்களைப் பற்றிய ஒரு தெளிவான உண்மை தெரிய வருகிறது. பழங்குடியினர் தாங்கள் நம்பிக்கை வைக்கிற 59 மதங்களைப் பற்றிய விபரங்களை அதில் குறிப்பிட்டுள்ளனர்''. [1]

அசாமில் உள்ள பிரம்ம புத்திரப்பள்ளத்தாக்கில் ஆரிய கலாச்சாரம் பரவ கொஞ்சம் இடமிருந்தது. இது தவிர வட கிழக்கு மாநிலங்களில் இயற்கையாய் அமைந்த தடுப்புச் சுவர்கள் காரணமாக மங்கோலாயிடு இனத்தவர்கள் மூவாயிரம் ஆண்டு காலமாக இனம், கலாச்சாரம், மதம் ஆகிய விஷயங்களில் தனித்து

தங்கள் இனச்சிறப்புகளோடு சுதந்திரமாக வாழ்ந்து இன்றுவரை அவற்றைப் போற்றிப் பாதுகாத்து அனுபவித்து வருகிறார்கள். ஜனத் தொகையில் கொஞ்சமாக இருந்தாலும் இமாலயத்தின் உட்பிரிவில் உள்ள அழகானதும் காடு முரடானதுமான மலைகளின் அகண்ட பிரதேசங்களை இவர்கள் ஆண்டு அனுபவித்து வந்துள்ளனர். காசி, காரோ, மற்றும் திபெத்திய பர்மிய மலைகளில் ஒவ்வாரு இனமும் பிரிவும் ஆறுகளால் குன்றுகளால் உண்டான இயற்கை எல்லைகளுக்குள் தங்கள் சின்னச் சின்ன இராஜ்யங்களைக் கட்டிக் காத்து ஆண்டுவந்துள்ளனர். வில்லாளன் என்ற தமிழ் சொற்களிலிருந்து உண்டானவை.[2]

சரித்திரப்பழமை வாய்ந்த வடமேற்குக் கணவாய்கள் வழியாக மத்திய கிழக்கிலிருந்து அநேக இனங்கள் இந்தியாவிற்குள் நுழைந்தன என்ற கருத்தில் அனைத்து அறிஞர்களும் உடன்படுகின்றனர். இதில் மங்கோலாய்டுகள் மட்டும் வடக்கிலிருந்தும் நிகிரிட்டோக்கள் கடல் கொண்ட லெமுரியாக் கண்டத்திலிருந்தும் வந்திருக்கவேண்டும் என்று அவர்கள் கருதுகின்றனர். உதாரணமாக சாந்தாலிகளின் நாடோடிக்கதைகளிலும் பாரம்பரியத்திலும் இவர்கள் கிழக்கு மத்திய தரைக்கடல் பிரதேசத்திலிருந்து இந்தியாவுக்குள் நுழைந்தவர்கள் முண்டாக்கள் திராவிடர்களிடமிருந்து பஞ்சாயத்து ஆட்சிமுறையான பட்டிமன்ற அமைப்பு முறையை கொண்டனர்.

திராவிடர்களின் தோற்றம், அவர்கள் எங்கிருந்து வந்தவர்கள், இந்தியாவில் இவர்கள் எங்கெல்லாம் பரவிக் கிடக்கிறார்கள் என்பது போன்ற விஷயங்கள் 10ஆம் அத்தியாயத்தில் கண்டோம். எனவே அவர்களைப் பற்றிய விபரங்கள் இங்கே தரப்படவில்லை. ஆனாலும் இரண்டு காரியங்கள் இங்கு கவனிக்கப்பட வேண்டும். ஆரியர்கள் இந்தியாவுக்குள் வந்த போது திராவிடர்கள் விவசாயம் செய்பவர்களாகவும், அதே சமயம் சிந்து கங்கை பீடபூமியில் பட்டணங்களில் வசிப்பவர்களாகவும் காணப்பட்டனர். திராவிட இனங்களில் சில இனங்கள் ஆரியப்படையெடுப்பின்போது காடுகளில் ஒதுங்கி காலப்போக்கில் பழங்குடிகளாக மாறிப்போயின. ராஜ்மகால் மலைகளில் வாழும் மாலர்கள் தராய் பகுதியில் வாழும் ஒரோவோன் இதற்கு உதாரணம்.

மனித இனங்களும் ஜாதிகளும் தனித்தனியாக வாழ்ந்தது பற்றியும் அவர்களுக்கிடையே இருந்த உறவுகள் பற்றியும் பழங்கால நூல்களில் சில தகவல்கள் கிடைத்துள்ளன. பாகவதபுராணம் நிஷாடர்கள் ''காகத்தை போல கருமை நிறமும், சப்பை மூக்கும், செக்கச் செவேறென்ற கண்களும் உடையவர்கள்''

என்று வருணிக்கிறது. புராணங்கள் இவர்களை கரிக்கட்டை போன்றவர்கள், தட்டை முகமுடைய சரியான குள்ளர்கள்'' என்று வருணிக்கின்றன. சிவபுராணம் நிஷாடர்களை ''அசிங்கமானவர்கள், துர்க்குணம் படைத்தவர்கள், மலைகளுக்குத் துரத்தப்பட்டவர்கள்'' என்கிறது. மேற்கிந்தியாவில் உள்ள பழங்குடியினர் காவியங்களில் குகர்கள், நிஷாடர்கள், சபாராக்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளனர். பிராமணிய இலக்கியங்களான ரிக்வேதம் மனுசங்கீதம், ஐத்திரேய பிராமணம், பாகவத புராணம், பிரம்மவைவார்த்த புராணம், பரசுர சங்கீதம் போன்றவற்றில் இந்தியாவிற்குள் வந்த ஆரியர்கள் ஆதிவாசிகளை வருணிக்க உபயோகித்த பதங்களைப் பார்க்கும்போது அவர்களை மதவிஷயத்திலும் கலாச்சார விஷயத்திலும் ஆரியர்கள் எவ்வளவு வெறுத்தார்கள் என்பது தெரிகிறது. பிராமணிய மதத்தில் தஸ்யூக்களுக்கு
சொல்லப்படும் தேவ கட்டளைகள் யாவும் ஆரியரல்லாத எல்லா இனத்தவருக்கும் பொருத்தமானவை அடிமைகளாக்கப்பட்டு ஆரியர்களின் கிராமங்களுக்கு வெளியே தீண்டப்படாதவர்களாக வாழ்ந்த தஸ்யூக்களுக்கு மாறுபட்ட நிலையில் ஆதிவாசிகள் காடுகளிலும் மலைகளிலும் தனித்து வாழ்ந்ததை மகா காவியங்கள் எழுதப்பட்ட காலத்தில் உள்ள சான்றுகளில் காண்கிறோம். இவற்றிலிருந்து மூன்று குறிப்புகளை அறிய வருகிறோம்.

ஆரியர்களோடு பழங்குடியினருக்கு இனக்கலப்பு நடக்கவில்லை; தேவைப்படவுமில்லை. இன்றும்கூட பழங்குடியினர் ஆரியவர்த்தாவில் வாழும் சூத்திரர்களிலிருந்து மாறுபட்டவர்களாய் அந்நிய ரத்தக் கலப்பின்றி வாழ்ந்தனர். ஆரியர் தம் படையெடுப்பில் காடுகளுக்குள் சிற்சில சமயங்களில் நுழைந்தபடியால் ஒரு வேளை மிக சொற்பமாக இரத்தக்கலப்பு ஏற்பட்டிருக்கலாம். இது மிக மிக அரிதாக நடைபெற்ற காரியமே.

தீண்டாமை பிராமணர்களால் அவர்கள் மீது திணிக்கப்படவில்லை. அது சாத்தியப்படவுமில்லை. தேவையாகவுமிருக்கவில்லை. அதனால் பழங்குடிமக்கள் எவ்வளவு ஏழைகளாகவும் நாகரிகமற்றவர்களாகவும் இருந்த போதிலும் தங்கள் சுயமரியாதையை இழக்கவில்லை.

ஒவ்வொரு இனத்தவரைச் சுற்றிலும் மதில் போடப்பட்டது போல் அவர்கள் தனித்து வாழ்ந்து வந்ததும் தங்களைத் தாங்களே ஆண்டு வந்த காரியமும் தெரியவருகிறது. மனிதவியல் வல்லுனர்கள் ஒவ்வொரு பழங்குடியினர் வாழ்ந்த கிராமத்திலும் தலைவன் ஒரு சின்ன அரசன் போல் இருந்து வந்ததாகக் கூறுகின்றனர். அங்ஙனமே ஒவ்வொரு இனப்பிரிவினரும் வாழ்ந்த பகுதி ஒரு மாநிலம் போலவும், ஒவ்வொரு பழங்குடி இனமக்கள் வாழ்ந்த பகுதி ஒரு தனி நாடு போலவும் எல்லா வகையிலும் இருந்து வந்தது. ஏதோ அத்தி பூத்தது போல் பிராமண மதம் ஆதிவாசிகளின் மதத்தோடு தொடர்பு கொண்டிருந்திருக்கலாம். வியாபாரிகள், காலனி ஆட்சியாளர்கள் மற்றும் வெளியுலக மக்கள் தொடர்பினால் பழங்குடிமக்கள் தனித்து வாழ்ந்து வந்த

நிலையில் மாற்றம் ஏற்பட்ட பின்பே ஆரிய மிஷனெரி முயற்சிகள் தொடங்கப் பட்டன. ஆரிய நாகரீகம் ஆற்றுப்படுகை விவசாய நாகரீகமாய் அமைந்திருந்த தால் காடுகளில் ஆரியரல்லாத சுதேசிகளை வென்று ஆள அவர்கள் அக்கறைப் படவில்லை. ஆரிய பழங்குடியினர் என்று இந்தியாவில் எங்குமே கிடையாது.

தொகுப்புரை; **இந்தியாவிலுள்ள மொத்தப்பழங்குடி இனமக்களும் ஆரியரல் லாத இனங்களைச் சேர்ந்தவர்களே.**



18

# பழங்குடியினர் - இவர்களின் மதங்கள் எவை?

ஆதிவாசிகளின் மதங்களைப் பற்றிய தகவல்கள் மிகவும் சுவையானவை. இதைப் பற்றிப் படிக்கும் போது கருத்தில் கொள்ள வேண்டியது. இன மதங்களுக்கு தனிப்பெயர்கள் எதுவும் கிடையாது. அந்த இனக் குடும்பங்களின் பெயர்களே அந்த மதங்களின் பெயர்களாகும். சில மனித இயலறிஞர்களும் சமூகவியலாரும் இந்த உண்மை அறியத் தவறிவிடுகின்றனர். மக்கள் தோன்றின போதே, அவர்களின் மதங்களும் உருவாகின. பாபிலோனியர்கள், சுமேரியர்கள், எகிப்தியர்கள், சீனர்கள், எபிரேயர்கள், கிரேக்கர்கள், ஆரியர்கள், திராவிடர்கள் ஆகியோரின் மதங்களுக்குப் பெயர் இருந்ததில்லை.

இதைப் புரிந்து கொள்வதில் நமக்குள்ள சிரமத்திற்குக் காரணம் RELIGION என்னும் மேற்கத்திய சொல்லே. இச்சொல் கடவுளின் காரியங்களைத் தனியாக

வும் அந்த மக்களைத் தனியாகவும் கூறுபடுத்தி வைக்கிறது. ஆங்கிலேயர்களுக்கும் கூட அவர்களின் சொந்த மதத்தினுடைய பெயர் தெரியாது. மனித இனங்களைப் பற்றிய பொதுவான உண்மையாகும் ஒரு பெயர் அவர்களுக்குத் தேவைப்படவில்லை. சில வேளைகளில் வெளியே உள்ளவர்கள் அவைகளுக்கு தியாஞ மதக் கொள்கை, போங்கோ மதக்கொள்கை என்று பெயர் கொடுத்தார்களே தவிர அந்த இனங்களைச் சேர்ந்தவர்கள் அப்படி எந்தப் பெயரும் கொடுக்கவில்லை. சுயமாக உண்டான சுதேசிப் பெயர்கள் இம்மதங்களுக்கு இருந்ததேயில்லை.

புத்தமதம், கன்பூஷியஸ் மதம், இஸ்லாம், ஜைனமதம், கபீர் பந்த் முதலியவை குருக்களால் உண்டான, இனங்களைக் கடந்து பரவிய மதங்களுக்கு உதாரணம். இதற்கு மாறாக, ஒரு இன மக்களின் சுதேசி மதம் என்பது அந்த இனத்துக்கு மட்டுமே என்ற அளவில் உள்ள ஒன்றாகும். அது அந்த சுதேசி இனத்திலுள்ள மக்களுக்கு மட்டுமே உரியது. ஒரே இனக் குடும்பத்தில் மக்களோடு மதமும், மதத்தோடு மக்களும் உருவாகி வளர்கின்றனர். மதம் வேறு மக்கள் வேறு என்ற நிலை இங்கு இல்லை. எனவே மதத்திற்கு தனிப்பட்ட பெயருமில்லை.

இந்த விபரங்களை அடிப்படையாகக் கொண்டு இந்தியாவில் உள்ள பழங்குடி மக்களின் மதவிஷயங்களை விரைவாக நாம் ஆராய்ந்து பார்க்கலாம். இதைக் குறித்து நிறையச் செய்திகளை ரிஸ்லி என்பவரும் கெய்ட் என்பவரும் தந்துள்ளனர்.[1]

பில் மதத்தில் சீதள மாதா என்ற தேவதையை முக்கிய தெய்வமாகக் கொண்டுள்ளனர். அம்மைவியாதிக்கு அவள் தான் அம்மா, நான்கு கைகளோடு உள்ள அவள் திராவிடத் தேவதையான அம்மைக்கு நெருங்கிய உறவு. பில்களின் முக்கிய தெய்வங்களான அசவாதா, ஒரிபஜ்ரோடியா, ஜலாரியா ஆகிய எல்லாமே பெண் தெய்வம்தான். புனிதத் தோப்பிலே இந்தத் தெய்வங்களுக்கெல்லாம் மிருகபலிகளையும், அத்தெய்வம் கேட்கும் காவுகளையும் கொடுக்க அந்த இனத்தைச் சேர்ந்த சம்பளமில்லாமல் சேவை செய்யும் போப்பா என்னும் பூசாரி இருக்கிறார்.

சோட்டா நாக்பூரைச் சேர்ந்த லோகர்தாகாவில் உள்ள யூயாக்கள் முக்கிய தெய்வங்கள் தாஸிம், பேமானி, லோய்சர், போராம் சிருஷ்டி கடவுளாகிய சூரிய கடவுள். முக்கிய பெண் தெய்வம் தக்கூரணிமை. இவளுக்கு வெள்ளாடு, மாடு, எருமை பலியிடுவார்கள்.

சிங்புங்கில் உள்ள பூம்ஜி மதத்தில் வங்காளத்திலுள்ள பாக்டி மதத்தின் புனித தோப்பாகிய சர்ணாவில் முக்கிய தெய்வம் சூரிய வழிபாட்டில் சிங்போங்காவை முக்கிய கடவுளாக கும்பிடுகிறார்கள். அவர்களின் தாய்-தெய்வத்தின் பெயர் மகாமாயா என்பது. அவ்வினத்தின் பூசாரியாகிய லாயா,

ஜாகீர், பாரு, கராகட்டா, பாகூத், தியோஷாலி புரு, குடா மற்றும் பலகுட்டி தேவதைகளுக்கும் பூஜை போட வேண்டும்.

பிர்கார் மதத்தில் பல குட்டி தெய்வங்களையும் ஆவிகளையும் வணங்கி வருவதோடு மகாமாயி, பூரியா, தூஹா, பிருபுத், தர்கா, பானி ஆகிய தெய்வங்களை முக்கிய தெய்வங்களாக மக்கள் வணங்குகிறார்கள்.

வங்காளத்தில் உள்ள காதர் மதத்தில் காரு, ஹார்தியா, சிம்ரா, மோகன்துவா, லீலூ, பர்தோனா என்ற தெய்வங்களுக்குப் பன்றிகளையும் வெள்ளாடுகளையும் பலியிடுகிறார்கள்.

தாந்த் மதத்தின் பென்னுகள் பெரிய கடவுள்கள் தார்ம், சாரு, தாரு என்பவைகள். இவைகளுக்கு மிருகங்களைப் பலியிடுகிறார்கள்.

சோட்டா நாக்பூரில் காரியா மதத்தின் முக்கிய தெய்வங்கள் தோர்கா நாசன், கிரீங், ஜியோலாபாட் என்பவைகளே. டோங்கா, தர்கா, மகாதன், குமி, அஜின் தர்கா, காரசர்மா முதலியவை குட்டி தெய்வங்கள் ஆவன.

மத்திய பிரதேசத்தைச் சேர்ந்த சர்குஜாவில் உள்ள கோர்வா மதத்தில் கூரியராணி என்ற தாய் தெய்வத்திற்கு எருமைகள், எருதுகள் மற்றும் பல சிறிய மிருகங்கள் பலியிடப்படுகின்றன. சோட்டா நாக்பூரிலுள்ள குர்மி மதத்தில் பாஹ் பகார், கோசாமீரம், ராய், கரேவர், கிஞ்சகேஸ்வரி போராம் தேவி, சத்பஹானி, தாகூம்பூரி என்று ஏராளமான தெய்வங்கள் உண்டு தாய்த் தெய்வமான மகமாயிக்கு வெள்ளாடு வெட்டி பலி செலுத்துகிறார்கள்.

பீஹாரைச் சேர்ந்த மன்பூரில் உள்ள மகிலி மதத்தில் முக்கிய தெய்வங்களாக பரஹிறி, நனாசா என்ற தெய்வங்களை வணங்குகிறார்கள்.

ராஜ்கமால் மலைகளில் வாழும் மாலர்கள் ரக்ஷி, பராத்வாரி என்ற சின்ன தெய்வங்களுக்கு வெள்ளாடுகளையும் பன்றிகளையும் பலியிடுகிறார்கள். அவர் களைப் படைத்த முக்கிய சிருஷ்டி கடவுள் என்ற தர்ம் கோசேயினை வணங்கி வருகிறார்கள். என்னிடம் அவர்கள் வானத்தைச் சுட்டிகாட்டி அந்தக் கடவுள் பரலோகத்தில் இருப்பதாகக் கூறினார்கள். தங்களை நிம்மதியாக வாழவிடாமல் தொந்தரவு செய்யும் தெய்வங்களுக்கே மாலர்கள் பலிகளைச் செலுத்துகிறார்கள்.

முண்டாமதத்தில் மேலானதும், நன்மை செய்வதும், பூரணமானதும், எல்லாம் கடந்ததுமான சிருஷ்டி கடவுளாக சிங்போங்காவை வணங்குகிறார்கள். ஆனால் புரு போங்கா, மராங்புரு காரசார்ணா போன்ற தொல்லை கொடுக்கும் சிறிய தெய்வங்களுக்கு பலி செலுத்துகிறார்கள்.

''பரிசுத்தமானதும், முழுக்கத் தூய்மையானதும், நன்மை செய்வதுமான தெய்வ மாகிய தர்மேஷ் எங்களைப் படைத்த தெய்வம். அவரே, வருங்காலத்தில் தயவாக

எங்களைக் காத்தும் வருவார் என்று ஓராவோன் மதத்தினார் கூறுகின்றனர்.[2] ஆனா லும் தங்களுக்குத் துன்பம் கொடுக்கக்கூடிய சின்ன தெய்வங்களான தர்கா, சாந்தா, மாராங்புரு, பராண்டாவுக்குப் பலிகளைக் கொடுத்து விடுகின்றனர்.

தானாபேனு என்னும் சிருஷ்டி கடவுளைப் பெரிய தெய்வமாக ஒரிசாவி லுள்ள குயீமதத்தில் வழிபடுகின்றனர். கிழக்குப் பகுதியில் உள்ளவர்கள் எல்லாம் ஜடப் பொருள்களையும் படைத்த சிருஷ்டி கடவுள் என்று பூமிக்கடவு ளாகிய தானாபேனுவைக் கும்பிடுகிறார்கள். அதே வேளையில் மேற்குப் பகுதியில் உள்ள மக்கள் எந்தப் பலியிலும் முதலில் அர்ச்சனை செய்யப்படும் பெரிய சிருஷ்டி தெய்வமாகிய பிட்பேரி பேனுவைக் கும்பிடுகிறார்கள்.[3] ஆனாலும் கிராமக்காப்பாளர் என்ற பெயருள்ள தர்மிபேனுவையும் தோப்புக் கடவுள் என்ற பெயருள்ள தோன்டா பேனுவையும் மற்றும் சிறிய தெய்வங்களை யும் அவர்கள் வழிபட்டு வருகிறார்கள்.

அவர்களின் மிகமுக்கியமான மதர் சடங்கு நல்ல விளைச்சலைக் கொடுக்க செலுத்தப்படும் மேரியா என்ற நரபலியே. இதற்கான மனிதனை மற்ற கிராமங்களிலிருந்து திட்டி வந்து பல மாதங்கள், வருஷங்கள் கொழுக்கர் சாப்பாடு போட்டு, பிறகு கேடு பலி செலுத்தும் சமயத்தில் அதிகமாக மதச் சடங்குகளோடு பக்தர்கள் கும்மாளம் போட்டு அவனைக் கொன்று சமைத்துச் சாப்பிடுவார்கள். இந்த நரபலி செலுத்துவது பிரிட்டிஷ் அரசாங்கத்தால் தடை செய்யப்பட்டு விட்டதால் இப்போது நரபலிக்குப் பதிலாக குரங்குளையும் எருமைகளையும் பலியிடுகிறார்கள்.

சோட்டா நாக்பூரைக் குறித்து டாக்டர் பாரே என்பவர் "இங்கு தொழிற் சாலைகள் வந்ததாலும், இந்து சமயக் காரியங்கள் நடைபெறுவதாலும் அரசியல் மாற்றங்களாலும், பழங்குடியினர் மதத்தில் மாறுதல்களும் மாற்றங்களும் ஏற்பட்டு வருகின்றன. ஆனாலும் இவ்வளவு எதிர்ப்புச் சக்திகளையும் சமாளித்துப் பழங்குடியினரின் மதம் இன்றும் தனித்தே விளங்குகிறது"[4] என்கிறார்.

வெரியர் எல்வின் பழங்குடியினரைப் பற்றிய தமது ஆராய்ச்சியில் சவோரா மதத்தைப் பற்றி இங்ஙனம் எழுதுகிறார். "சவோராக்கள் பூமியையும் மனிதனை யும் சிருஷ்டித்த தெய்வம் கிட்டுன் என்று நம்புகின்றனர். ஒரு காலத்தில் ஒரே ஒரு ஆண் ஒரே ஒரு பெண் தவிர மற்ற எல்லா உயிரினங்களையும் இந்த கிட்டுன் அழித்துப் போட்டதாக இவர்கள் நம்புகிறார்கள். பல பழங்குடியி னரின் கட்டுக் கதைகளில் சிங்போங்கா என்ற தெய்வம் ஜலத்தின் மேல் அசைவாடியதால் முதல் உயிரினங்கள் தோன்றின என்று சொல்லப்பட்டுள்ளது.[5] இந்த கடவுளின் சிருஷ்டிப்பு குறித்த விஷயங்களில் சவோராக்களும் முண்டாக்க ளும், மற்றும் இது போன்ற இனங்களிடையே காணப்படும் முக்கியமான பாரம்பரிய நம்பிக்கைகள் பைபிளில் முதல் எட்டு அத்தியாயங்களில் கூறப்பட்

டுள்ள உலகப் படைப்பு பற்றிய கிறிஸ்தவ சத்தியங்கள் போலவே இருக்கின்றன. அதுபோல அந்தமானில் உள்ள சாரியன் மதத்தில் உள்ள படைப்புக் குறித்த விஷயங்களுக்கும் கிறிஸ்தவ வேதாகமத்தில் உள்ள முதல் நூலில் சொல்லப்படும் விஷயங்களுக்கும் நெருங்கிய ஒற்றுமை காணப்படுகிறது. சிருஷ்டிப்பைக் குறித்த அவர்களுடைய பாரம்பரிய எண்ணங்களைப் பற்றி டாக்டர் கூன் என்பவர் ''முதலாவது புளுகா பூமியைப் படைத்தார். பிறகு டோமாவைப் படைத்தார். அவன் அந்தமான் மக்களைப் போல் கருப்பாக இருந்தான். ஆனால் உயரமாகவும் தாடி வளர்த்தவனாகவும் இருந்தான். அந்தமான் மக்கள் குள்ளமாகவும் தாடியில்லாதவர்களுமாயிருப்பார்கள். அவர் டோமாவை அந்தமான் ஜலசந்திக்குப் பக்கமாக வாட்டோமி என்ற இடத்தில் வைத்தார். பூமியில் இந்த வாட்டோமி என்ற ஒரே இடத்தில் தான் காடு இருந்தது. அக்காட்டில் உள்ள பழமரங்களிலிருந்து அவன் உணவை உட்கொள்ளலாம் என்றும் ஆனால் சிலமரங்களின் பழங்களைச் சாப்பிடக்கூடாது என்றும் எச்சரிப்புக் கொடுத்தார்''[6] என்று எழுதியுள்ளார்.

தீமை செய்கின்ற சின்ன தெய்வங்கள் சாந்தாலிகளுடைய அன்றாட விஷயங்களை நடத்திவருகின்றபடியால் அவர்கள் ஒழுங்காக நரபலியிட்டு அவற்றைத் திருப்திப்படுத்த வேண்டும். இந்த தெய்வங்களின் பெயர்கள் மராங்புரு, மோரேக்கா, ஜேயிர் இரா, கோசேய்ன் இரா, பர்காணா, மஞ்ச என்பவைகளே. போன நூற்றாண்டிலிருந்து நரபலிக்குப் பதிலாக வெள்ளாடுகளும் எருதுகளும் பலியிடப்பட்டு வருகின்றன.

முகர்ஜி, பெடர்சன், ஹோர்க் என்பவர்கள் சாந்தாலி மதத்தில் காணப்படும் பாரம்பரியம் ஒன்றைக் கூறுகிறார்கள். அதில் ஆதியில் பூமி முழுவதும் தண்ணீரால் சூழப்பட்டிருந்தது. தேவாதி தேவனின் ஆவி எல்லா மிருகங்களையும் படைத்தார் கடைசியாக மனிதனையும் அவன் மனைவியையும் படைத்தார். அந்த மனிதனின் பெயர் ஆராம். அந்தப் பெண்ணின் பெயர் அயோ யாவ. அதன் பொருள் தாய். அவர்கள் மரக்கறி உணவு புசித்தார்கள். கள்ளமில்லாதவர்களாயிருந்தார்கள். துணி உடுத்தியிருக்கவில்லை. பாவம் செய்ய சோதனை வந்தது. சோதனைக்காரன் ஒரு கிழவனாக வந்து மதுவை அவர்களுக்குக் குடிக்கக் கொடுத்தான். அவர்கள் அதைக் குடித்த போது அவர்கள் கெட்டுப் போனார்கள். அவர்கள் தாங்கள் நிர்வாணிகள் என்று அறிந்து அத்தியிலைகளைத் தைத்து உடுத்திக் கொண்டார்கள். அவர்கள் பலுகிப் பெருகி பூமியை நிறைத்தார்கள்'' என்ற விஷயங்கள் காணப்படுகின்றன. மேலும் ஜனங்கள் ஒழுக்கம் கெட்டுப் போனபோது தேவாதி தேவன் அவர்களை எச்சரித்தார். கடைசியாக ஒரு அக்கினி திரவத்தை வானத்திலிருந்து ஊற்றி உலகிலுள்ள எல்லா மனிதர்களையும் அவர் அழித்தார். ஒரே ஒரு பண்புள்ள மனிதனையும் நோவா அவன் மனைவியையும் மட்டும் அவர் அழிக்கவில்லை. இந்த மனிதனிலிருந்து மீண்டும் ஜனங்கள் தோன்றினார்கள். அவன் வழித் தோன்றல்களே சாந்தாலிகள். சாந்தாலியில் உள்ள பன்னிரண்டு பழங்குடி இனத்தவரும்

ஹைகிரி என்ற தங்கள் தாய் நாட்டை விட்டு கிழக்கு நோக்கி பல மலைகளைக் கடந்து இந்தியாவுக்குள் வந்து பீகாரில் நிரந்தரமாய்த் தங்கிவிட்டார்கள்.[9] இதுபோன்ற விஷயங்கள் ஏற்கனவே கூறியது போல் பைபிளில் எட்டு அத்தியாயத்தில் சொல்லப்பட்டுள்ள உலகமும் மனிதர்களும் படைக்கப்பட்ட செய்திகளை அப்படியே ஒத்திருக்கின்றன.

இன்று பழங்குடி மக்களின் மதங்களைத் தங்கள் அனுபவங்களைக் கொண்டு ஆராய்ச்சி செய்பவர்கள் சந்தர்ப்பம் சூழ்நிலைகளைக் கொண்டும் ஆராய்ச்சி செய்வதன் மூலம் பொதுவான அடிப்படை உண்மைகளை மறைத்து விடுகிறார்கள். இங்கு நாம் கவனிக்க வேண்டிய மிகமுக்கிய கருத்து பழங்குடியினருக்கு இருந்த கடவுளைப் பற்றிய எண்ணம். யாவும் கடந்த சிருஷ்டிகரான நன்மை செய்யும் ஒரு மிக உன்னதமான கடவுளைக் குறித்து அவர்கள் அறிந்திருந்தார்கள். இதனை ஓராவோன்கள் சாந்தாலிகளுடைய தார்மிஸ் முண்டாக்களின் சிங் போங்கா அங்காமி நாகாக்களின் டெர்ஹெமிய, கரோக்களின் ரூகா[10] தெய்வத்திலும், அந்தமான் மக்களின் புளுகா குயிக்கள் வணங்கும் பேனு தெய்வங்களிலும் காண்கிறோம். கடவுளைப் பற்றிய இந்த உயர்ந்த கருத்துக்களில் பழங்குடியினர் தொடர்ந்து கவனம் செலுத்த முடியாமற் போனதற்குக் காரணம் அவர்களின் மனமும் பொருட்களும் இரண்டாந்தர தெய்வங்களான தொல்லைதரும் ஆவிகளைத் திருப்திப் படுத்துவதில் செலுத்தப்பட்டுக் கொண்டிருந்த காரணமேயாகும். இந்த ஆவிகளுக்கும் பேய்களுக்கும் அவர்கள் எப்பொழுதும் பலி செலுத்திக் கொண்டும் பூஜை நடத்திக் கொண்டு இருக்க வேண்டியதாயிருந்தது. பல சரித்திரக் காரணங்களும் சூழ்நிலைக் காரணங்களும் மிருக பலி, நரபலி, பில்லி சூனியம், பால் உறவு சம்பந்தப்பட்ட மதச் சடங்குகள் ஆகியவற்றை இவர்கள் நடப்பிக்கும் அளவுக்கு இவர்களைச் சீரழியச் செய்தது.

கீழ்க்காணும் காரியங்களை நாம் குறிப்பிட வேண்டியது அவசியமாகிறது.

ஆதிவாசிகள் மத்தியில் பாகத் பக்தி இயக்கங்கள் தோன்றிய காரணம் அவர்களின் வழிபாடுகளில் கடவுளைப் பற்றி தாங்கள் ஆதியில் கொண்டிருந்த உயர்ந்த எண்ணங்களுக்குத் திரும்ப வேண்டும் என்ற ஆசையே. உதாரணமாக வித்யார்த்தி கூறுவதுபோல் 'தர்ணா பாகத் இயக்கம் என்பது குருக் மதம் என்ற சரியான நராயோன் மதத்தினை மீண்டும் உயிர்பெறச் செய்யவே தொடங்கப்பட்டது. கிராமங்களில் பழைய பூதங்கள் ஆவிகள் பற்றிய நம்பிக்கைகளை அறவே ஒழித்து, தங்களை இழிவுபடுத்தும் மிகவும் மோசமான பழக்கங்களான போதைப் பொருள் சாப்பிடுகிற, மது குடிக்கிற, காரியங்களை விட்டு பக்தியோடு கூட மகாதீயோ அல்லது பகவான்[11] என்றழைக்கப்படும் ஒரே தேவனை மட்டுமே வழிபடுவதே இவ்வியக்கத்தின் இலட்சியம் இந்தியாவில் பல இடங்களில் உள்ள பல இன பழங்குடி மக்களோடு நான் தங்கியிருந்து அவர்களோடு உறவாடியதன் மூலம் மேற்சொல்லப்பட்ட கூற்று உண்மை என நன்கறிந்தேன். அதாவது, தொல்லை கொடுக்கும் பேய்கள் தங்களை எதிர்த்து

விடுமோ என்ற பயத்தினின்று இவர்கள் விடுபட்ட மாத்திரத்தில் தங்கள் ஆதிதெய்வமாகிய உயர்ந்த கடவுளுக்குத் திரும்ப வேண்டும் என்ற ஆன்மீக எழுச்சியை அவர்கள் அதிகம் பெற்று விடுகிறார்கள். இந்தியா முழுவதிலும் உள்ள பழங்குடியினர் எவருக்கும் ஆலயங்கள் கிடையாது. அவர்கள் மற்ற மதங்களின் ஆலயங்களுக்குச் செல்லமாட்டார்கள். பழங்குடிப் பெண்கள் பொது இடங்களில் நடக்கும் பலிகளிலும் மதச் சடங்குகளிலும் கலந்துகொள்ளமாட்டார் கள்.

தனித்து விடப்பட்ட இடங்களில் பழங்குடியினர் வாழ்ந்து வந்ததால் இன்று வரை அவர்கள் தங்களுடைய சமய தனித்தன்மையையும் நம்பிக்கைகளையும் பாதுகாத்து வந்திருக்கிறார்கள்.

இந்த நாள் வரை பிராமணர்களின் மிஷனெரி வேலை தட்சிணத்திலுள்ள பழங்குடியினரிடம் நடத்தப்பட முடியவில்லை. காரணம் ஆரியவர்த்தாவுக்கும் தென்னாட்டு பழங்குடி பகுதிகளுக்கும் உள்ள தூரமே.

தீண்டப்படாதவர்களின் மதங்களுக்கும் பழங்குடி மக்களின் மதங்களுக்கும் இடையே குறிப்பிடத்தக்க ஒற்றுமை காணப்படுகிறது. பீகாரிலுள்ள தீண்டப்படாத தூசாத் மதத்தில் நெருப்பின் மேல் நடப்பது, எருதுப்பலி, பிசாசு நடனம் போன்றவை ஒரிசாவிலுள்ள திராவிட குயீக்கள், பிகாரிலுள்ள திராவிட ஒரான்கள் ஆகியோரின் மதத்திலுள்ள பல விஷயங்களை ஒத்திருக்கின்றன. இவர்களின் முதாதையர்களின் இனங்கள் ஒன்றுக்கொன்று இரத்த தொடர்புள்ளதாய் இருப்பதுபோல் அவர்களின் மத நம்பிக்கைகளும் ஒன்றுக்கொன்று நெருங்கிய உறவுள்ளதாய் காணப்படுகின்றன.

எனவே இந்தியாவில் பழங்குடி மக்களின் மதங்களுக்கும் இந்துமதத்தின்[12] கீழ் மட்டங்களில் உள்ள வழிபாட்டு முறைகளுக்கும்[13] ஒற்றுமைக் குறிகள்[14] இருப்பதாக அறியாமையினால் தவறாகச் சொல்லப்படுவது உண்மையில் இவைகள் தீண்டப்படாதவர்களின் திராவிட சமயத்திற்கும், திராவிடப் பழங்குடி மக்களின் மதங்களுக்கும் உள்ள ஒற்றுமைகளுமே. இனமும் சமயமும் இரத்தசம்பந்த அளவில் இந்த ஒற்றுமைக் குறிகள் அதிகம் காணப்படுகின் றன.

# 19

# பழங்குடிகளுக்குள் பிராமணீய மிஷனரிப் பணி

ராஜபுத்திரர்கள், மராட்டியர்கள், முகலாயர்கள் சிலமுறை உள்ளே நுழைந்த தல்லாமல் மகாராஷ்டிரத்திலுள்ள கந்தேஷ் தொடங்கி அசாமிலுள்ள அகோம் ராஜ்வரை எந்த பிறமதத்தினருடைய தொடர்புமின்றி காலனி ஆட்சியாளர் காலம்வரை ஆதிவாசிகள் நிம்மதியாக வாழ்ந்து வந்தனர். பிரிட்டிஷ்காரர்கள் இந்திய உபகண்டத்தில் அங்குமிங்குமாய்ச் சிதரிக்கிடந்த பகுதிகளை கூட்டிச் சேர்த்து அவற்றை பிரிட்டிஷ் ஆட்சிக்குள் கொண்டு வந்தபோதுதான் பழங்குடியினர் வாழ்ந்து வந்த இடங்களில் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த காரியங்கள் நடைபெறத் தொடங்கின. ரஸ்தாக்கள், அஞ்சல் வசதிகள், ஸ்தல ஆட்சிமுறைகள் அங்கு வந்தபோது பழங்குடியினர் இடங்களுக்கு செல்ல போக்குவரத்து வசதிகளும் அவர்களோடு செய்தித்தொடர்புகளும் கூட உண்டாயின. காலனியைச் சேர்ந்த வெள்ளக்கார வியாபாரிகளும், வட்டிக்கடைகாரர்களும் முதலில்

உள்ளே நுழைந்தனர். இதன் பிறகே பிராமணமிஷனெரிகளும் பழங்குடி மக்களின் மதவிஷயங்களோடு தொடர்புகொள்ளத் தொடங்கினார்கள்.

பழங்குடி மக்களின் மிகச் சில குழுக்களுக்கு பிராமண மிஷனெரிகள் சிலர் பூசாரிகளாகி விட்டதுண்டு. தக்காணத்திலுள்ள திராவிட மக்களில் ஒரு பகுதியினரைத் தங்கள் மதத்திற்கு எளிதாக மாற்றிவிட்டதுபோல் இந்தப் பழங்குடி மக்களை அவர்களால் மாற்றமுடியவில்லை. யுத்தகலாச்சாரத்திலே வல்லவர்களாயிருந்த பல பழங்குடியினர் அந்நியர்கள் என்றால் அவ்வளவு எளிதாக அவர்களை நம்பமாட்டார்கள். எனவே பிராமணர்களின் மிஷனெரி முயற்சிக்கு பழங்குடியினர் வாழ்ந்த இடப்பகுதிகள் ஏற்றதாயிருக்கவில்லை.

பழங்குடியினரின் மதவழிபாட்டு முறைகள் வேததர்மத்திற்கு மிகவும் வித்தியாசப்பட்டதாயிருந்தது. ஆரிய லேவாதேவிக்காரர்கள், நிலப்பிரபுக்கள், ஜமீன்தார்கள், வியாபாரிகள் முதலானோர் பழங்குடியினர் இருக்கும் இடங்களில் போய் வாழ்ந்து வந்த அளவில் மட்டுமே வேததர்மம் இந்த பழங்குடியினரிடம் தொடர்பு கொண்டது.

பல சமயங்களில் பிராமண மிஷனெரிகள் சமய நோக்கம் பலன் தருவதாக இல்லை. சோட்டா நாக்பூரிலுள்ள பழங்குடியினர் பற்றிய 1931ம் ஆண்டு ஜனத்தொகை கணக்கெடுப்பு கூறுவதுபோல்'' சாந்தாலிகள், முண்டாக்கள், ஒராயோன்கள், ஹோஸ்கள் என்னும் பழங்குடி மக்கள் இந்துமதத்திற்கு விருப்பம் தெரிவிக்கவில்லை. 1866ம் ஆண்டு இந்தியாவில் கொடிய பஞ்சம் வந்தபோதுகூட மனபூம் சந்தாலிகள் அனைவரும் பிராமணர்கள் சமைத்த உணவைப் புசிக்க மறுத்து விட்டனர். அதைக்காட்டிலும் பட்டினியாயிருப்பதையே அவர்கள் எல்லோரும் தெரிந்து கொண்டனர். அவர்கள் தங்கள் இனநலம் காக்க சங்கம் வைத்திருந்ததோடு இந்துக்கள் தங்கள் நிலங்களை அபகரிப்பவர்கள் என்றும், தங்கள் இடத்தைப் பிடித்துக்கொள்பவர்கள் என்றும் அறிந்துவைத்திருந்தார்கள்''.[1] ஆனாலும் அநேக வருஷங்களாகத் தொடர்ந்து ஏற்பட்ட உறவுகளால் பல ஆதிவாசிகள் குழுக்களில் ஒரு சிலர் பிராமணிய மதத்திற்கு மாறிவிட்டனர். ஆனால் பெரும் பகுதியினர் கொஞ்சமும் மாறாமல் தங்கள் இன மதங்களில் உறுதியாய் நின்றார்கள். 1891ம் ஆண்டின் இந்திய மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி மொத்த ஜனத்தொகையான 1,60,00,000 பழங்குடியினரில் 93,00,000 பேர் தங்கள் சொந்த மதங்களிலேயே இருந்தார்கள். மற்றவர் கிறிஸ்தவ மதத்துக்கோ, இந்து மதத்துக்கோ, புத்த மதத்துக்கோ மற்றெந்த மதத்துக்கோ மாறினார்கள். டாக்டர் ராதா கிருஷ்ணன் கூறுவது போல் இந்து மதத்திற்குள் கொண்டுவரப்படாத ஆவிகளை வணங்கும் ஆயிரமாயிரம் மக்கள் இந்தியாவில் இன்னமும் இருக்கின்றனர்.[2]

பிராமணர்களின் மிஷனெரிப் பணிகள் வடஇந்தியாவில் வாழ்ந்த ஆரியரல்லாத பழங்குடி மக்கள் மத்தியில் சில நன்மை செய்தது. இப்பணிகளால்

பழங்குடியினர் வெளி உலகத்தோடு தொடர்பு கொள்ள முடிந்தது. குறிப்பாக சில இந்து பக்த இயக்கங்கள் காரணமாக பழங்குடியினர் அறவொழுக்கம் உயர்ந்தது. ஆதிவாசிகள் சிலராவது நாகரீகமடையும் வகையில் மற்ற கலாச்சாரத் தில் நாகரீகங்கள் இவர்களிடம் வந்தன. சில லட்சம் பழங்குடியினர் இந்த மிஷனெரிகளால் நாகரீகம் பெற்றனர். இவர்களால் சொற்ப அளவில் மதமாற்ற மும் பெற்றனர். ஆயினும் மொழி, மதம், கலாச்சாரம் சம்பந்தப்பட்ட தடைகள் மதமாற்றம் உண்டாகாமல் அதிகம் தடுத்தது. மதம் மாற்றப்பட்ட பழங்குடி மக்கள் மீது சமஸ்கிருத கலாச்சாரம் வந்ததால் வர்ணாஸ்ரமதர்மம் திணிக்கப்பட் டது.

நாம் முன்பே கண்டதுபோல் பழங்குடி மக்களுக்கு வகுப்பு, குலம், இளக்குடும்பம் என்ற தனித்தன்மையுண்டே தவிர, வர்ணாஸ்ரமதர்ம ஜாதிப் பிரிவினைகளில் கானப்படும் உயர்வு தாழ்வு இல்லை. தீண்டாமை என்பது அவர்களுக்குத் தெரியாத ஒன்று. சமஸ்கிருத கலாச்சாரம் சமீபகாலத்தில் வந்து நுழைந்து அவர்களிடையே ஜாதிகளையும் கொண்டு வந்து விட்டது. டாக்டர் பாரே குறிப்பிடுவது போல் "அசாமிலுள்ள அகோம் ராஜாக்களில் பலருக்கு இரண்டு பூசாரிகள் உண்டு. ஒரு அகோம் பழங்குடி பூஜாரி, ஒரு பிராமணப் பூஜாரி ஒரு அகோம் பழங்குடி மனிதன் இந்துவாக மாறியவுடன் இந்து ஜாதி முறைப்படி வைதீக இந்துக்கள் நினைப்பது போலவே தானும் தன்னைக் குறைத்தவனாக மதிப்பிடுகிறான்."[3] சில தேசத்தலைவர்கள் பழங்குடி மக்களின் கலாச்சாரத்தைப் பாதிக்கக்கூடிய இக்காரியத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. நேரு வும் "இந்து மதத்திற்குள் ஆதிவாசிகளைக் கொண்டு வரக்கூடாது. ஆதிவாசிக ளின் வாழ்க்கையைப் பாதிக்கக்கூடியதும் நன்மையும் சந்தோஷமும் கொடுக்கக் கூடியதுமான அவர்கள் பழக்க வழக்கங்களை மாற்றுவதைத் தவிர்க்க வேண்டும் "[4] என்று கூறி இதனை எதிர்த்தார்.

ஆனாலும் சில பழங்குடி மக்கள் வர்ணாஸ்ரமதர்ம ஏணியின் உச்சியில் இடம் கிடைக்கும் என்று ஏமாற்றப்பட்டனர். இதனால் பெருங்கூட்டமாக அவர்கள் மதம் மாறினார்கள். டாக்டர் வித்தியார்த்தி கூறுவது போல் "தாருக்கள் பூநூல் அணிந்து தக்கூர்களிடம் திருமண சம்பந்தங்களை செய்து கொண்டு, இந்துக்களைப் போல் மதச் சடங்காச்சாரங்களைச் செய்து, அவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டுவிட்டனர். மத்திய இமாலயப்பகுதிகளில் உள்ள காசாக்களின் கலாச்சாரம், பக்கத்து சமவெளிகளில் வாழும் ராஜபுத்திரர்கள், பிராமணர்கள் வாழ்க்கையின் முன் மாதிரிகளைப் பின்பற்றி அமைக்கப்பட்டு விட்டது. இவர்கள் இந்துப் பெயர்களைத் தங்களின் கடைசிப் பெயர்களாக வைத்துக் கொண்டு ராஜபுத்திரர்களோடும் பிராமணர்களோடும் சமூக உறவு உண்டு பண்ணி தங்களை ராஜபுத்திரர் என்று அழைத்துக் கொண்டனர். மத்திய இந்தியாவில் பீகாரைச் சேர்ந்த கோராக்கள், கார்வாஸ், பாரகியாஸ், பழங்குடியின ரும் மத்திய பிரதேசத்தைச் சேர்ந்த பூமிஜீக்களும் இந்துக்களாவதில் ஷத்திரியர்க ளின் முன்மாதிரியைப் பின்பற்றி 'தங்கள் வாழ்க்கை முறையை' சமஸ்கிருதக்

கலாச்சாரத்திற்குள்ளாக்கி தங்களைச் ஷத்திரியர்கள் என்று அழைத்துக் கொண்டார்கள். இவர்கள் பூமிஜி ஷத்ரிய சங்கம் என்று ஒரு சங்கத்தை 1935ல் தங்களுக்கென்று அமைத்துக் கொண்டார்கள். [5]

பிராமணர்களின் மிஷனெரிச் செல்வாக்கு சில நல்ல காரியங்களைச் செய்திருந்தாலும் சமீபகாலங்களில் பழங்குடியினர் மத்தியிலும் தீண்டாமையைப் புகுத்திவிட்டது. இன்று வட இந்தியாவில் பழங்குடி மக்கள் வாழும் சிலபகுதிகளிலும் தீண்டாமை காணப்படுகிறது. மாட்டிறைச்சி சாப்பிடுவதை வைத்தே இந்த வேறுபாட்டை உண்டாக்கியிருக்கிறார்கள். இந்தியாவில் உள்ள ஆரியரல்லாத ஆதிவாசி இன மக்கள் அனைவரும் மாட்டிறைச்சி சாப்பிடுபவர்களே சமீப காலத்தில் தான் பிராமண மிஷனெரிகள் ஆதிவாசி மக்களை மாட்டிறைச்சி சாப்பிடக்கூடாது என்று சொல்லி கட்டாயப் படுத்தினார்கள். சில ஆதிவாசி இனங்களைச் சேர்ந்தவர்கள் மதம் மாறிய உடன் மாட்டிறைச்சி சாப்பிடுவதை விட்டுவிடும்படி சொல்லப்பட்டார்கள். ஆனால் தொடர்ந்து பழக்கமாக சாப்பிட்டவர்களைத் தீண்டப்படாதவர்களாக்கி விட்டனர். உதாரணமாக கந்தேஷில் உள்ள பில்களை, மாட்டிறைச்சி சாப்பிடுவதை சமீபகாலத்தில் விட்டுவிட்ட குக்னா, வார்லி, கோலி மற்றும் இனங்கள் தீண்டப்படாதவர்களாகக் கருதுகின்றனர். இந்துக்கள் தீண்டப்படாதவர்களை நடத்துவது போலவே இந்தப் பழங்குடி மக்களும் இப்பொழுது தங்கள் பழங்குடி இனத்தவரை நடத்துகின்றனர். கிரிக்சன் என்பவர் 1938ம் ஆண்டில் கோல் பழங்குடிமக்களை இப்பொழுது தீண்டப்படாதவர்கள் என்று இந்துக்கள் கருதுகிறார்கள் என்று எழுதுகிறார்''. [6]

வர்ணாஸ்ரமதர்மத்தின்படி ஜாதி அடிப்படையில் யாரையாவது கடைசிப்படியில் வைக்க வேண்டும். அடிமைகள் இருந்தால்தானே ஆண்டவன்மார்கள் இருக்க முடியும். எனவே தீண்டாமை முறையை ஆதிவாசிகள் நடுவில் பிராமணீயம் பிறப்பித்துவிட்டது.

தீண்டப்படாதவர்களைத் தனியிடங்களில் வசிக்கச் செய்தும் அவர்கள் மற்றவர்களைத் தொட்டால் தீட்டு என்று பேசியும் கிணற்றில் அவர்கள் தண்ணீர் எடுக்க அனுமதி மறுப்பது மற்றும் சாப்பாட்டு விஷயங்களிலும் கடைப்பிடிக்கும் கண்டிப்புக்களை வைத்தும் இந்தியாவின் மேற்குப் பகுதிகளில் வாழும் பழங்குடியினர் மத்தியில் மோட்ச மார்க்கத்தைச் சேர்ந்த மிஷனெரிகள் அண்மையில் தீண்டாமையைப் புகுத்திவிட்டார்கள். மத்திய பிரதேசம், ராஜஸ்தான் மற்றும் இந்தியாவின் பல பகுதிகளிலும், பழங்குடியினர் மத்தியில் எங்கெல்லாம் பிராமண மிஷனெரி இயக்கங்கள் பணிபுரிந்தனவோ அங்கெல்லாம் இப்படிப்பட்ட காரியங்கள் நடந்துவிட்டன. தீண்டப்படாதவர்கள் நிலைக்குத் தள்ளி விடப்பட்ட பழங்குடியினருடைய சுயமரியாதை இதனால் அழிந்து போனதே ஆதிவாசிகளுக்குக் கிடைத்த ஆதாயம். நான் கந்தேஷில் பில்கள் மத்தியில் வாழ்ந்து கொண்டிருந்தபோது நேரடியாகக் கண்ட உண்மை இது. அரிஜனங்களுக்கு கிடைத்த இந்த பலனே இவர்களுக்கும் கிடைத்தது.

இது எந்த வகையிலும் தவிர்க்கமுடியாத ஒன்றே. பிராமணிய மதம் சமூக வேற்றுமையில் அமைந்திருப்பதால் அதில் நல்ல அம்சங்கள் இருந்தாலும், வளர்ச்சியில் வர்ணாஸ்ரமதர்ம அடிப்படையில் பழங்குடிமக்களின் சமூக அமைப்பைக் கட்டாயமாக நிச்சயமாக தாழ்ந்த ஜாதி உயர்ந்த ஜாதி என்று மாற்றி வைத்துவிடும்.

முதன் முதலாக 1931ம் ஆண்டு ஜனத்தொகைக் கணக்கெடுப்பிற்காக மதங்களை வகைப்படுத்தும் போது இதனைக் குறிப்பாக கவனித்தார்கள். அப்போதுள்ள சென்சஸ் கமிஷனர் "இந்து மதத்தை மற்ற இந்தியாவின் பூர்வீக மதங்களிலிருந்து எந்த அடிப்படையில் வேறுபடுத்தலாம்? சாதாரணமாக ஒருவர் பிராமணர்களின் ஆதிக்கத்தை ஏற்றுக்கொண்டு ஜாதிமுறையைக் கடைப்பிடிப்பதே" [7] என்று கூறினார்.

வர்ணாசிரமதர்மமே இந்துமதத்தின் அஸ்திபாரம் என்பதை காந்திஜியும் ஒத்துக்கொண்டார். "வர்ணாசிரமம் பிறப்பைச் சார்ந்ததாகும். ஒருவன் தனது வருணத்தை தானாக மாற்றிக்கொள்ளமுடியாது. அதை ஏற்காதவன் பாரம்பரியத்தை மதிக்காதவன்"[8] என்று அவர் கூறுகிறார். நவஜீவன் பத்திரிகையில் எழுதும் போது காந்திஜி மேலும் "இந்து சமுதாயம் இன்று வரை நிலைத்திருப்பதற்குக் காரணம் அதன் ஜாதி அமைப்பே என்று நான் நம்புகிறேன்"[9] என்றார்.

1960ல் நாசிக்கில் நடந்த பத்திரிகை நிருபர்கள் கூட்டமொன்றில் காஞ்சி காமகோடி பீடத்தின் ஆச்சார்ய "வர்ணாஸ்ரமமே இந்து மதத்தின் வேர். ஜாதி அமைப்பு ஒழிந்தால் இந்து மதமும் ஒழிந்து போகும்"[10] என்று கூறினார்.

தொகுப்புரை: வட இந்தியாவில் பழங்குடிகளில் மிகச் சிறுபான்மையினரே பிராமணீய மதத்திற்கு மாற்றப்பட்டார்கள். இங்கு மதமாற்றம் என்பது ஒரு பழங்குடி மனிதன் ஜாதி பேதமின்றி சுயமரியாதையோடு வாழ்ந்த ஒருவன் வர்ணாஸ்ரம ஏணியில் கீழ் நிலைக்குத் தள்ளப்படுகிறான். பழங்குடியினரில் பெரும் பான்மையோர் இந்து சமஸ்கிருத கலாச்சாரத்தில் ஆதிக்கத்துக்கு தப்பிவிட்டார்கள். எனவே இன்றளவும் தங்கள் பழங்குடி மதங்களிலேயே இவர்கள் இருந்து வருகின்றார்கள்.

20

# பழங்குடி மக்கள் கிறிஸ்தவர்களாக மாறக் காரணம் என்ன?

இந்தியாவில் சில பழங்குடி இனத்தவர் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வதற்கான முக்கிய காரணங்கள் நான்கு. அவற்றை வரிசைப்படுத்திக் கூற விரும்புகிறேன்.

முதற்காரணம் கொஞ்சம் தெரிந்த காரணமே! கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டால் சமூக நீதியும் விடுதலையும் கிடைக்கும் என்ற நம்பிக்கை. வட்டிக்கடைக்காரர்கள் பெரிய தனக்காரர்கள் அல்லது பிரபுக்கள் நில அபகரிப்பு செய்பவர்கள் ஆகியோர் வந்து பழங்குடி மக்களின் சுதந்தரத்தை பறித்து அவர்களை அடிமையாக்கிக் கொள்வதற்கு முன்புள்ள காலத்தில் ராஜாக்கள் என்ற முறையில் தங்கள் எல்லைகளில் சமூகப் பொருளாதார சுதந்திரத்தோடு வாழ்ந்து வந்தார்கள். எனவே பழங்குடியினர் இன்று கேட்பது ஏதோ பிச்சை அல்ல. தங்கள் நியாயத்தையும் உரிமைகளையும் மீண்டும் பெற்று வாழ வேண்டும் என்பதே

அவர்களின் உரிமைக் குரல். எந்த பழங்குடி இனமும் தங்களுக்கு கிறிஸ்துவின் செய்தி அறிவிக்கப்படும்போது தங்களுக்கு நீதியும் விடுதலையும் கிடைக்க வழிபிறந்து விட்டதாக எண்ணுகிறார்கள். பழங்குடியினர் வாழும் கஷ்டமான சூழ்நிலையில் ஒரு கிறிஸ்தவப் பிரசங்கிதான் வட்டிக்காரனைப்பார்த்து அல்லது நிலப் பிரபுவைப் பார்த்து ''ஏன் இப்படிச் செய்கிறாய்?'' என்று தட்டிக்கேட்கி றார். இந்த உண்மையை அறிந்த நமது முதல் ஜனாதிபதியாகிய ராஜேந்திரப் பிரசாத் ''கிறிஸ்தவ மிஷனெரிகள் பழங்குடியினர் மத்தியில் அதிக சேவை செய்திருக்கிறார்கள்; எவ்வளவோ தியாகம் செய்து கல்வியைப் பரவச்செய்து அவர்கள் வாழ்க்கையை மேம்படச் செய்திருக்கிறார்கள்'' [1] என்று கூறுகிறார். கல்வி அறிவு பழங்குடியினருக்குக் கிடைப்பதை ஏதோ தொத்துநோய் பரவுவது போல் வட்டிக்கடைக்காரனும், பெரியதனக்கார நிலப்பிரபுவும் நினைத்து பயந்தார்கள். காரணம் இவர்கள் இனிப் பழங்குடியினரின் செல்வத்தை ஒரு அட்டை, மனிதனின் இரத்தத்தை உறிஞ்சுவது போல் உறிஞ்சி விட முடியாது. பழங்குடி மனிதர்களுக்கு காசுகளை எண்ணவும் பான்டு பேப்பர்களில் கையெழுத்து போடவும் தெரிந்தால் தங்கள் சுரண்டல் பிழைப்பே போய் விடும் என்று அஞ்சுகிறார்கள், இன்றும் மனுவாதிகள் பயப்படுவது போல்.

மனித இயலறிஞரும் பழங்குடி இயல் ஆராய்ச்சியாளருமான டாக்டர் மஜீம்தார் சோட்டா நாக்பூரிலுள்ள பழங்குடியினரைப் பற்றி எழுதும் போது ''ஆதிவாசி விவசாயிகளுக்குள் இந்து நிலச்சுவான்தார்களுக்கும் உள்ள உறவு கள் என்றுமே சரியாக இருந்ததில்லை. ராய் என்பவர் முண்டாக்கள் செய்த கிளர்ச்சிகள் பற்றி அவருடைய நூலில் எழுதியுள்ள விஷயங்களைப் படித்துப் பார்த்தால் இந்த மாவட்டத்தில் பழங்குடியினர் மத்தியில் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை ஏன் அதிகமாயிருக்கிறது என்பது விளங்கும்'' [2] என்கிறார்.

எனவே கிறிஸ்தவ பள்ளிகள் ஆலயங்கள் தீக்கிரையாக்கப்படுவது அது வியப்புக்குரிய செய்தியே அல்ல. நாடெங்கும் பழங்குடி மக்கள் வாழும் இடங்களில் வேண்டுமென்றே தவறாகக் கிறிஸ்தவர்கள்மேல் குற்றம் சாட்டி பல இடங்களில் இருந்து அவர்களை வெளியேற்றி அனுப்புவதெல்லாம் வட்டிக்கடைக்காரர்கள் நிலப்பிரபுக்கள் காண்டிராக்டர்களின் வேலையே. காரணம் கிறிஸ்தவர்கள் தங்கள் சுரண்டலுக்கு முட்டுக்கட்டையாயிருக்கிறார்கள் என்பதே. இந்த வரிகளை நான் எழுதிக் கொண்டு இருக்கும் போது இதே காரணங்களுக்காக நாசிக் காடுகளில் உள்ள மாங்க் கிறிஸ்தவர்கள் மீதும் தூலியா மாவட்டத்திலுள்ள பிலோடி பழங்குடி கிறிஸ்தவர்கள் மீதும் தாக்குதல் கள் நடந்ததாக எனக்குச் செய்தி கிடைத்துள்ளது.

சோட்டாநாக்பூரில் உள்ள நன்கு படித்த பழங்குடித்தலைவரான டாக்டர் பாரே தன்னுடைய ஜனங்களைப்பற்றி ''கிறிஸ்தவ மிஷனெரிகள் தொடர்பு கிடைப்பதற்கு முன்பு சமூக, பொருளாதார, சமய நிலையில் பழங்குடியினர் எப்படி வாழ்ந்தனர் என்றும், சமூக பொருளாதார ரீதியில் இனி வாழ முடியாது

என்ற நிலைக்கு அவர்கள் வந்துவிட்டனர் என்றும், இப்படிப்பட்ட ஒடுக்கப்பட்டு மனமுறிந்த நிலையில் தங்களுக்கு ஆன்ம விடுதலை மட்டும் அல்ல சமூக விடுதலையும் கூறி அறிவிக்கின்ற கிறிஸ்தவர்களின் செய்தி அவர்களுக்குக் கிடைத்தது என்றும், பழங்குடியினர் அதை உடனே ஏற்றுக் கொண்டு விட்டனர் என்றும் கூறுகிறார்''.[3]

பழங்குடியினர் மீது சமூக பொருளாதார நிலையில் இந்த சுயநலமிகள் முழு ஆதிக்கம் செலுத்திவருவதை நம்மில் பலர் அறியமாட்டோம். சில சம்பவங்களை பொருளாதார நிபுணர் பானர்ஜி தமது நூலில் கூறுகிறார். ''ஒரு ஆதிவாசிப் பெண்ணுக்கு லேவாதேவிக்காரன் ஒருவன் ஒரு காளை மாட்டை வாடகைக்கு கொடுத்தார். அவள் ப்ணத்தைக் கட்டவேண்டிய முதல் தவணை வந்தபோது அவளைக் கெடுத்துவிட்டான். பிறகு காலமெல்லாம் அவளை ஒரு வேசிபோல வைத்துக் கொண்டான். காரணம் அவளுக்கு படிக்கத் தெரியாது. எத்தனை தவணைப்பணம் கட்டியும் அவள் கடன் தீரவில்லை என்ற நிலை! இன்னொரு சந்தர்ப்பத்தில் ஒரு ரூபாய்க்கு ஒரு பெட்டிக்கடைக்கா ரன் ஒரு ஆதிவாசிப் பெண்ணுக்கு ஒரு தேங்காய் கடன் கொடுத்தான். அதைத்திரும்பி 16 கிலோ நெல்லாக அந்த ஆதிவாசிப் பெண்ணிடம் இருந்து திரும்ப வாங்கிவிட்டான். அதேபோல 10 கிலோ அரிசி சுமார் 30 ரூபாய் கடன்பட்ட ஒரு ஆதிவாசியிடம் ஒரு கடைக்காரன் 4000 கிலோ புல் கிட்டத்தட்ட 1200 ரூபாய் மதிப்புள்ளது திரும்பக் கேட்டு வாங்கினான்''[4]

இந்தியாவில் உள்ள பழங்குடிமக்கள் சமூக, பொருளாதார நிலையில் எந்த அளவுக்கு அடிமைப்பட்டுக்கிடக்கின்றனர் என்ற அதிகமான விபரங்களுக்கு பல்கலைக்கழகங்களின் வளர்ச்சித்துறை நிறுவனங்கள் வெளியிட்டுள்ள ஆராய்ச்சி கட்டுரைகளைப்படித்துப் பார்க்கும்படி மதிப்புக்குரிய எனது வாசகர்க ளைக் கேட்டுக் கொள்கிறேன். உதாரணமாக CASA செய்தி அறிக்கை ஒன்று கூறுவதுபோல் ''பழங்குடிமக்களில் ஏழைகளாக உள்ளவர்கள், பெரியதனக்காரர் களை சார்ந்து வாழ வேண்டிய அவல நிலையில் உள்ளன''[5]. சோட்டா நாக்பூரில் உள்ள பழங்குடிமக்கள் காரியங்களை நன்கறிந்த புகழ்பெற்ற இனவியலறிஞர் டாக்டர் எஸ்.சி. ராய் முண்டா பழங்குடியினர் சுயநலக்காரர்க ளால் அடிமைப்படுத்துவதைக் குறித்து எழுதும் போது ''முண்டாக்களும் ஒராவோன்களும் தங்களின் பூர்வீக உரிமைகள் அடிக்கடி பறிக்கபடுவதன் காரணத்தால் அறியாமையில் உழன்று பொருளாதார வளர்ச்சியற்றுக் காணப்படு கின்றனர். கடவுளே வந்து அவர்களுக்கு உதவுவதுபோல், புதிய ஐக்கியம் ஒன்றின் காரணமாக இப்போது பலம் வாய்ந்து காணப்படுகின்றனர். இந்தப் புதிய ஐக்கியமானது சிலுவையின் உபதேசமாக அவர்களுக்குக் கிடைத்துள்ளது ''[6] 'என்கிறார்.

அங்ஙனமே பீகாரில் பழங்குடியினரின் அடிமைத்தனம் குறித்து எழுதுகின்ற டாக்டர் வித்தியார்த்தியும் ''தங்கள் சொந்த நலன்களுக்காக மக்களைச் சுரண்டும்

தீயசக்திகளின், வட்டிக்கடைக்காரர்களின், வியாபாரிகளின் இரும்புப் பிடிக்குள் சிக்கி பழங்குடியினர் கடும் வேதனைக்குள்ளாகியுள்ளனர். அவர்களின் மத வாழ்க்கையைச் சீர்படுத்தியதோடு இவர்கள் அதாவது கிறிஸ்தவ பிரசங்கிமார்கள், பழங்குடி மக்களின் கல்வி மேம்பாட்டிற்கான வசதிகளையும் செய்து கொடுத்து அவர்களை ஊக்குவித்தனர். மேலும் மக்களிடையே ஒற்றுமை உணர்ச்சியை வளர்க்கும் நோக்கத்தோடு கிராமப் பஞ்சாயத்துக்களை மாற்றி அமைத்து புத்துயிர் பெறச் செய்தனர். வங்கிகளையும் ஒருவருக்கொருவர் உதவக் கூடிய சகாயநிதிச் சங்கங்களையும் ஏற்படுத்திக் கொடுத்தனர். கால்நடைகளைப் பராமரித்தல், விவசாயத்தைப் பெருக்குதல் போன்ற விஷயங்களில் உதவி உடல்நலத்தையும் சுகாதாரவசதிகளையும் கவனிக்க மருத்துவமனைகளையும் சுகாதார இல்லங்களையும் திறந்து வைத்து, கூட்டுவிவசாயப் பண்ணைகளை அமைத்து, மது அருந்துதல் போன்ற தீய பழக்கங்களை ஒழித்து, பழங்குடி மக்களின் முன்னேற்றத்திற்காக இவர்கள் பலவிதங்களில் பாடுபட்டார்கள்''[7] என்று எழுதுகிறார்.

சோட்டா நாக்பூரில் ஆதிவாசிகளை நிலப்பரப்புக்களின் கொடுமைகளிலிருந்து விடுவிக்கும் பணி குறித்து எழுத முனைந்த செட்டஸ்டன், ''தங்கள் ஜெபப் புத்தகத்திற்கு அடுத்தபடியாக இந்திய நிலச்சட்டங்கள், இந்திய குற்றவியல் சட்டங்கள் ஆகியவைதான் ஒவ்வொரு ஜேசுசபை கத்தோலிக்க சங்கத்தினரின் முக்கிய படிப்பாக இன்று உள்ளது. பழங்குடி மக்கள் அநீதியாய் காவல் நிலையங்களுக்கு இழுத்துச் செல்லப்படும்போது அல்லது அது சம்பந்தமான சட்ட ஆலோசனைகள் தேவைப்படும்போது ஜேசுசபையினர் அவர்களுக்காக வழக்காடுபவர்களாக உள்ளனர்''[8] என்று எழுதுகிறார்.

பொருளாதார அடிமைத்தனம் பொருளாதார விஷயங்களோடு நின்று விடுவதில்லை. அது வாழ்க்கையின் மற்ற அம்சங்களையும் பாதிக்கின்றது. ஆதிவாசிகளின் அடிமை வாழ்வு பற்றி சமூக சேவையாளர்கள் விசாரணை செய்து கூறுவதை எடுத்துக் காட்டி பானர்ஜி என்பவர் ''மேற்கு வங்காளத்தில் செங்கற்சூளையில் வேலை செய்பவர்களை விசாரித்துப் பார்க்கும் போது, ஆதிவாசிப் பெண்களை செங்கற் சூளை முதலாளிகள் அடிக்கடி ஏற்பாடு செய்யும் பால் உறவு களியாட்டங்கள் குறித்த விபரங்கள் தெரிய வந்தது. தங்கள் எஜமான்கள் முன்பாக ஆதிவாசிப் பெண்கள் மதுக் குடித்துவிட்டு நிர்வாணமாக ஆடவேண்டும். மற்றும் தசரா போன்ற விழாக்கள் நடைபெறும் போது இந்த பால் உறவு வெறியாட்டங்கள் கட்டுப்பாடின்றி நடத்துப்படுவதுண்டு''[9] என்று கூறுகிறார்.

இது எங்கோ ஒரு மூலையில் நடக்கும் ஆயிரத்தில் ஒரு சம்பவம் அல்ல. ஆதிவாசிகள் வாழுமிடங்களில் பெண்கள் கொத்தடிமை வேலைக்கு அமர்த்தப்படும்போது அந்த ஒப்பந்தத்தில் அவர்களின் உடலும் கூட எஜமானுக்குச் சொந்தமாகி விடுகிறது. லட்சக்கணக்கில் ஆதிவாசிகளும் தீண்டப்படாதவர்க

ளும் தங்கள் சொந்த நாட்டில் இப்படிப்பட்ட கீழ்த்தரமான நிலையில் வாழ்ந்து வருகின்றனர். காந்திஜி சாந்தி அறக்கட்டளையும், தேசிய தொழில் அமைப்பு நிறுவனமும் சேர்ந்து நடத்திய ஆராய்ச்சியின் பயனாக மத்திய பிரதேசத்தில் மட்டும் சுமார் ஐந்து லட்சம் கொத்தடிமைகள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. [10]

சமீபகாலத்தில் ஆதிவாசிகள் இருக்கும் பகுதிகளில் நிறைய முன்னேற்றப் பணிகள் நடைபெற்றுள்ளன. ஆனால் ஆதிவாசிகளின் நிலைமையில் எதுவும் முன்னேற்றம் உண்டாகவில்லை. டாங்க் முதல் உறசாரிபாக் வரை வாழ்ந்து வரும் பழங்குடி மக்கள் தங்கள் இடங்களில் அணைகள் கட்டுதல், சுரங்கப் பணிகள், தொழிற்சாலைகளைத் தொடங்குதல் ஆகியவற்றிற்கு கடும் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர் காரணம்? இவைகள் மூலம் அரசியல்வாதிகள், கண்டிராக்டர் கள், தரகர்கள் ஆகியோர் தங்கள் வாழ்க்கையில் புகுந்து தங்கள் நிலங்களை எடுத்துக் கொள்வதோடு பயங்கரமாக இவர்களைச் சுரண்டி வாழ்வதற்கு இந்தத் திட்டங்கள் வகை செய்வதே இவர்களின் இந்த எதிர்ப்புக்குக் காரணம். இப்படிப்பட்ட சமூக பொருளாதார அடிமைத்தனத்தில் உழலும்போதுதான் கிறிஸ்துவின் செய்தி இவர்களுக்குக் கிடைத்தது. இதன் முக்கிய விளைவு என்னவென்றால் பழங்குடிமக்கள் தங்கள் உள்ளத்தில் ஒரு விடுதலை உணர் வைப் பெற்றுவிட்டனர். மனிதர்கள் யாவரும் சமம் என்ற நல்ல செய்தி பழங்குடியினரின் ஆசைகளுக்கெல்லாம் புத்துணர்வு கொடுப்பது போலாயிற்று. 1959ம் ஆண்டில் வெளியான தேபர் கமிஷன் அறிக்கை கூறுவதுபோல் இதன் காரணமாக பழங்குடி மக்கள் பெருமளவில் கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்துவிட்ட னர். கிறிஸ்தவ மதத்தில் சேர்வதன்மூலம் நிலப்பிரபுக்களின் கொடுமைகளிலி ருந்து மிஷனெரிகள் தங்களைப் பாதுகாக்க முன்வருவார்கள் என்று பழங்குடி மக்கள் கருதினர். [11]

இப்படிக் கிறிஸ்தவர்களாகும் காரணம் ஒரு சமுதாய காரணமே. ஆனாலும் இது தவறு என்று பேசுவது மடமை. கொத்தடிமைப்பட்டுக் கிடக்கும் ஆதிவாசிகளாக இருப்பவர் மட்டுமே இக்காரணம் சரியா என்று பேச அருகதை உண்டு.

ஆதிவாசிகள் கிறிஸ்துவை நாடி வந்ததற்கு இரண்டாவது காரணம் தீய ஆவிகளிடமிருந்து அவர்கள் விடுதலை பெற. ஆவி வணக்கம் அவன் வாழ்க்கை முழுவதையுமே பாதிக்கும் ஒரு காரியம். தொல்லை கொடுக்கும் ஆவிகளைத் திருப்தி செய்யும் காரியங்களிலேயே ஆதிவாசிகளின் வாழ்க்கை யில் பெரும் பகுதியும் அவர்கள் வருமானத்தில் பெரும் அளவும் செலவிடப்பட் டுவந்தது. போங்காக்கள், பாவுக்கள், பாதியன்களுக்குச் செய்யப்படும் காவு, பூசையிலே ஆதிவாசியின் முழு வாழ்க்கையும் அமைந்துள்ளது. பட்டணங்களில் குடியிருப்போர் இதைக்குறித்து எள்ளிநகையாடலாம். ஆனால் ஆதிவாசிகள் மத்தியில் உள்ள விஷயங்களை ஆராய்ந்து அறியும் மனிதயல் அறிஞர்கள்

அப்படி நகைக்க முடியாது. பழங்குடிமக்கள் வாழ்க்கையில் இந்த ஆவிகள் உண்மையிலேயே அதிகமாய் ஆதிக்கம் செலுத்துகின்றன. ஒரு கூட்டத்தினர் மற்றொரு கூட்டத்தினருக்கு விரோதமாய் ஆவிகளை ஏவி பில்லிசூன்யம் பண்ணுவார்கள். உடனே அடுத்த கூட்டத்தார் மற்றொரு ஆவியை வைத்து இவர்களுக்குத் தொல்லை கொடுப்பார்கள். இப்படி மாறி மாறி இது தொடர்ந்து நடைபெறும். இதனால் சூன்யம் வைப்பவனுக்கும் சூன்யம் எடுப்பவனுக்கும் கொள்ளை லாபம். ஆனால் ஆதிவாசிகளோ பயத்திலேயே வாழ்நாள் முழுவதையும் கழிப்பார்கள்.

எங்கெல்லாம் சுவிசேஷம் சென்றதோ அங்கெல்லாம் மக்கள் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற்றார்கள். அப்படிப்பட்டவர்களைப் பற்றிய செய்திகள் ஏராளம் இருப்பதால் அவைகளை இங்கு எழுதப்போனால் இடம் கொள்ளாது. அபூர்வமாகத்தான் சுவிசேஷப் பிரசங்கிமார்கள் போய் பிசாசுகளைத் துரத்துவார்கள். ஆதிவாசிகளே இப்போது ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் தீய ஆவிகளைத் துரத்தி விடுகிறார்கள். அப்படிப்பட்ட எத்தனையோ நிகழ்ச்சிகளை நானே நேரில் பார்த்திருக்கிறேன்.

அதுபோலவே அநேக ஆதிவாசிகள் ஜெபத்தின் மூலம் வியாதிகளிலிருந்து சுகம் பெற்ற மாத்திரத்தில் கிறிஸ்துவ மதத்தில் வந்து சேர்ந்துவிட்டனர். அவைகளையும் விளக்கிக் கூறினால் எத்தனையோ பக்கங்கள் எழுதலாம். ஆனால் இவற்றை பெரிது படுத்தக் கூடாது என்று ஆண்டவர் இயேசு தாமே கட்டளையிட்டுள்ளார். ஆயிரக்கணக்கான மக்கள் குறிப்பாக ஆதிவாசிகள் ஜெபத்தின் பலனாக அற்புத சுகம் பெற்றுள்ளனர். இவர்கள் தனிநபர்களாக ஆண்டவர் இயேசுவின் மேல் விசுவாசம் வைக்கின்றனர். வடகிழக்கு இந்தியாவிலும் சோட்டா நாக்பூரிலும் உள்ள ஆதிவாசிகளின் முக்கியத் தலைவர்கள் கூறுவது போல் "ஆதிவாசிகள் வெகு உன்னதமான சிருஷ்டி கடவுளை நம்புகிறவர்கள். எனவே சிருஷ்டிகர்த்தாவாம் கடவுளில் நம்பிக்கை வைக்கும் கிறிஸ்தவ மதத்தை அவர்கள் எளிதாக ஏற்றுக் கொண்டனர். அது மாத்திரமல்ல பொல்லாத ஆவிகளின் உபத்திரவங்களிலிருந்தும், அவற்றைப் பூசைபோட்டு திருப்திபடுத்தும் அவசியமற்ற கஷ்டங்களிலிருந்து, கிறிஸ்தவம் தங்களுக்கு விடுதலை கொடுக்கும் என்பதை அவர்கள் அறிந்து கொண்டார்கள். கிறிஸ்துவின் சுவிசேஷம் அஞ்சி சாகும் ஒரு அவல வாழ்க்கையிலிருந்து இவர்களுக்கு விடுதலை கொடுத்து விட்டது"[12]

பழங்குடி மக்கள் கிறிஸ்தவர்களாவதற்கு மூன்றாவது காரணம், ஒழுக்கமானதும், அமைதியானதும், கண்ணியமானதுமான ஒரு வாழ்க்கையை அவர்கள் வாழ விரும்புவதே.

வியாபார நோக்கோடு ஆதிவாசிகளை ஆராய்ச்சி செய்யும் அறிஞர்கள், காசுக்காக ஆபாசமான பொய்யான விஷயங்களை எழுதியுள்ளனர். உண்மை

என்னவென்றால் இந்தியாவில் உள்ள பழங்குடி மக்கள் வழிவழியாகப் பெற்றுள்ள தங்கள் அழகிய கலாச்சாரத்தில் அமுக்கப்பட்டிருந்ததைக் குறித்து துக்கமும் வெட்கமும் அடைகின்றனர். நமது நாட்டின் பல இடங்களில் வாழும் பல்வேறு பழங்குடி மக்களோடு நான் பேசிப் பழகியிருக்கிறேன். தங்களை இறுகப் பிடித்துள்ள இருட்டுக்கள், இச்சைகள், பாலுறவு ஆகியவற்றை அடியோடு வெறுப்பதுமட்டுமின்றி அவற்றிலிருந்து பூரண விடுதலை பெறவே அவர்கள் விரும்புகின்றனர்.

நாகர்கள் 1880ம் ஆண்டு வரையிலும் தலைகளை வெட்டுபவர்களாகவே இருந்தனர். அது அவர்களுக்கு அற்புதமான வீர சாகசம்! நமது பிள்ளைகள் விருப்பமாக அஞ்சல் தலைகளைச் சேர்ப்பது போல அவர்கள் மனிதத்தலைகளை சேர்த்து வைப்பார்கள்! இந்த ஒரு காரியத்தினால் அவர்களுக்குள்ளே பகைகள் மனிதனை மனிதன் கொலை செய்த இரத்தம் சிந்துவது ஆகியவை சர்வ சாதாரணமாக நடைபெறும். இது தங்கள் இனமாகிய நாகர்களோடுமட்டுமல்ல, தங்களின் இனத்துக்கு அப்பாற்பட்டவர்களோடும் சர்வ சாதாரணமாக நடைபெறும் ஒரு காரியம். அசாமியனாகிய கோதுவாறாக இனத்தவரிடம் சென்று முதன்முதலாக அன்புக் கடவுளை, பிரசங்கித்த போது அவர்கள் தாமாகவே முன்வந்து அப்படிப்பட்ட கடவுள் எங்களுக்கு வேண்டும் என்று ஏற்றுக் கொண்டு விட்டார்கள்".[13]

குமி பழங்குடியினர் தங்கள் விதைப்புக்காலத்தில் நடத்தும் வழிபாட்டில் மெரியா என்ற நரபலி நடத்தி வந்தனர். 1911ம் ஆண்டு வரை இப்படிச் செய்து வந்தனர்.[14] பிறகு நரபலிக்குப் பதிலாக அவர்கள் குரங்குகளையும் எருமைகளையும் பலியிட்டனர். கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்ததற்கு அவர்கள் கொடுத்த காரணங்களில் ஒன்று இப்பலிகள் யாவும் அவர்களுக்கு மிகவும் அதிகமான அளவில் பணச்செலவை உண்டு பண்ணிற்றாம். ஆம்! செலவு நிச்சயம் அதிகமாக ஆகும். அடுத்த காரணம் பொல்லாத ஆவிகளுக்கு பயந்து வாழ்ந்துவந்த ஒரு வாழ்க்கையிலிருந்து விடுதலையை நாடினதே ஆகும்".[15]

ஆதிவாசிகளுக்கு அன்போடும் அக்கறையோடும் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டபோது திருட்டு கொலைத் தொழில் நிலையிலிருந்த அவர்கள் மாறி போனார்கள். சந்திகார் பழங்குடியினர் மத்தியில் ஒரு கட்டுப்பாடு இருந்தது. அதென்னவென்றால ஒரு வாலிபன் ஒரு பெண்ணின் மூக்குத்தியை பறித்தால் மட்டுமே ஒரு பெண்ணை மணம் முடித்துவைப்பார்கள். கொலை திருட்டு மறத்தொழில் செய்யும் இனங்களைச் சேர்ந்தவர்கள், இப்படி பலரும் சுவிசேஷத்தின் வல்லமையால் மாற்றப்பட்டனர். குறிப்பாக இரட்சண்ய சேனை இந்தியாவின் 25 இடங்களில் நிரந்திரமாக குடியிருந்து நடத்திய ஊழியங்களின் மூலம் இவர்கள் மாற்றப்பட்டனர்.

பாஸ்தாரில் உள்ள கோண்டாக்கள் இன்று வரையிலும் நரபலி செலுத்திவருகின்றனர். ராஜ்மகால் குன்றுகளில் வசிக்கும் மாலர்கள் குளிர்காலத்தில் அறுவடை தொடங்கும் சமயம் ஒரு முக்கிய மதச்சடங்காக 1983 ஜனவரி வரை நரபலி செலுத்தினார்கள். எனவே ஆதிவாசிகளில் சிலர் நல்ல விதமாக

வாழ நினைத்ததில் ஆச்சரியமொன்றுமில்லை. நரபலி செலுத்தாமல் கிறிஸ்துவை வணங்கி வாழ்வதா? அல்லது நரபலி செலுத்தி வாழ்வதா? எது சட்டத்தின் படி (Anti Conversion Law) தவறானது என்று சட்ட நிபுணர்களே பதில் கூறட்டும்.

நான்காவது காரணம் மிக முக்கியமானதும் அசட்டை செய்யப்பட்டதுமான ஒரு காரணம். ஆதிவாசிகள் தொல்லைதரும் தெய்வங்களை விட்டு விட்டு, தாங்கள் பூர்வீக மேலான சிருஷ்டி கர்த்தாவை வணங்க தாங்கள் முன்பிருந்த உயர்ந்த மதநிலைக்கு அவர்கள் திரும்ப நினைத்ததே அந்தக் காரணம். "ஒரிசாவிலுள்ள பில்பானி மாவட்டத்தில் உள்ள காந்து ஆதிவாசிகள் பற்றி குலமணி மகாபத்ரா ஆராய்ந்து படித்துள்ளார். மாலிக்பாடி என்ற கிராமத்தில் வசிக்கும் 62 காந்து குடும்பங்களில் 32 குடும்பங்கள் கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்ததற்கான காரணங்கள் அவர்களின் மதம் சம்பந்தப்பட்ட விஷயங்களுக்க டுத்த காரணங்களே". அவர் மேலும் "காந்து மக்களின் பல தெய்வ வணக்கம் மிகவும் குழப்பமானதாக உள்ளது. கிறிஸ்தவர்களின் கடவுள்பற்றிய கருத்து கிறிஸ்தவர்களாக மாறிய மக்களுக்கு நன்கு புரிந்த கொள்ளக் கூடிய தெளிவான கருத்தாயுள்ளது"[16] என்று கூறுகிறார்.

சாந்தாலிகள் தங்கள் மதநம்பிக்கையை பலஸ்தீனா நாட்டிலிருந்து கொண்டு வந்தோம் என்று கூறுகிறார்கள். திராவிடர்களும் ஆஸ்டிரோலாய்டுகளும், கிழக்கு மத்திரைக்கடல் பகுதியிலும் சுமேர் நாகரீகத்திலுமிருந்து தங்கள் பூர்வீக மதநம்பிக்கைகள் தோன்றியவை என்கின்றனர். கடவுள் பற்றிய இவர்கள் எல்லோருடைய கருத்தும் ஒன்றாய் இருக்கிறது. உன்னதமானவரும் அன்புள்ளவரும் இயற்கை கடந்த தனிப்பட்ட இரட்சகருமான கடவுள் இருக்கிறார் என்பதே இவர்களின் பொதுவான கருத்து. இவர்கள் மதத்தில் காணப்படும் சிருஷ்டிப்பு கருத்து, கிறிஸ்தவர்களின் வேதத்தில் காணப்படும் சிருஷ்டிப்புக் கருத்துப் போன்றதே என்பதை 18ம் அத்தியாயத்தில் நாம் கண்டோம். இவர்களுக்கு கிறிஸ்தவத்தில் சேர்வதென்பது தங்களின் பூர்வீக மத நம்பிக்கையின் உயர்ந்த நிலைமைக்குத் திரும்புவதென்பது ஆகும். இது குறிப்பாக சாந்தாலிகள், ஒராவோன்கள், முண்டாரிகள், குயீக்கள் மத்தியில் நடந்துள்ளது. இதற்கு ஆதிவாசிகளின் தலைவர்களே சான்று பகருகின்றனர். இந்தத் தலைவர்களின் கருத்துப்படி "மற்றவர்களின் எண்ணத்திற்கு மாறாக கிறிஸ்தவமதத்தை ஏற்றுக் கொண்ட பழங்குடியினர் தங்கள் கலாச்சார விஷயங்கள் பலவற்றையும் பழக்கவழக்கங்களையும் மாற்றாமல் அப்படியே வைத்துள்ளனர். காரணம் இவைகள் கிறிஸ்தவ கோட்பாடுகளுக்கு முரண்பட்டவையல்ல".[17]

தொகுப்புரை: இந்தியாவில் உள்ள ஆதிவாசிகள் கிறிஸ்தவர்களாக மாறுவதற்குக் காரணம் a) தாங்கள் இழந்து போன சுதந்திரத்தையும் சமத்துவத்தையும் மீண்டும் பெற

b) பொல்லாத ஆவிகளின் பயத்திலிருந்து விடுதலை பெற c) ஒழுக்கமான கண்ணியமான வாழ்க்கை நடத்த d) தங்கள் பூர்வீக கடவுள் நம்பிக்கைக்குத் திரும்பிவிட.




# 21

# பழங்குடி மக்கள் எப்பொழுது, எதற்காக, "இந்துக்கள்" ஆக்கப்பட்டனர்?

காலனி ஆட்சியிலிருந்து இந்தியாவுக்கு சுயராஜ்யம் கிடைத்த காலத்தில் நடந்த சில முக்கிய மாற்றங்கள் படிப்பதற்கு சுவாரஸ்யமாயிருக்கிறது. ஏற்கனவே 17ம் அத்தியாயத்தில் எடுத்துக் கூறியது போல் 1961ம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி இந்தியாவின் பழங்குடிமக்கள் 59 சமயங்களைச் சேர்ந்தவர்களாக உள்ளனர். இதில் சில மதங்களில் ஆதிவாசிகள் பல லட்சம் பேராகக் காணப்படுகின்றனர். 1931ம் ஆண்டின் மக்கள் கணக்கெடுப்பில் சில புள்ளி விபரங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. மகா புருஷதர்மம் என்ற சமயத்தை சேர்ந்த மக்கள் 4,85,000; கபீர்பந்தி மதத்தைச் சேர்ந்தவர்கள் 3,89,000 குடியினர்; பூச்சிப் பிரியா மதத்தில் 17,60,000 பேர் உள்ளனர்; நானக்சாகி மதத்தில் 2,41,000 பேர் உள்ளனர்.

இதுதவிர ஆதிவாசிகளின் முக்கிய மதங்களில் பீல் தர்மம், கோண்டி தர்மம் இவைகள் ஒவ்வொன்றிலும் 40 லட்சம் பேர் உள்ளனர். சாந்தாலி தர்மத்தில் 35 லட்சம் பேர். மீனா, முண்டா, ஒராயோன் தர்மங்கள் ஒவ்வொன்றிலும் 10 லட்சத்திற்கு மேற்பட்டு ஆதிவாசிகள் வாழ்கின்றனர். இன்னும் எத்தனையோ மதங்கள் உண்டு. இந்த ஆரியரல்லாத ஆதிவாசிகளின் மதங்கள் 1931ல் நடந்த மக்கள் கணக்கெடுப்பு வரையிலும் 'ஆவிகள் வணக்கம்' அல்லது 'ஆதிவாசிகளின் மதங்கள்' என்று கணக்கெடுக்கப்பட்டுள்ளன. இந்த மதங்களை மிகவும் சிறிய அளவில் உள்ளன என்று கருதி எளிதாக ஒதுக்கிட முடியாது. உதாரணமாக கோண்டி தர்மத்தைச் சேர்ந்தவர்களின் ஜனத்தொகை 40,00,000. அசாம்தவிர வடகிழக்கு இந்தியா முழுமையின் ஜனத்தொகையளவில் உள்ளது. அதுவுமல்லாமல் இது இந்தியாவில் உள்ள புராதன மதங்களுக்கு முன் தோன்றினவை என்பதையும், இந்தியாவில் உள்ள புத்தர்களின் எண்ணிக்கையையும்விட அதிகமான அளவில் இந்த மதத்தை சேர்ந்தவர்கள் உள்ளனர் என்பதையும் நாம் கவனிக்க வேண்டும்.

ஆதிவாசிகள் வாழும் பகுதிகளின் எல்லை ஓரங்களில் இந்தப் பழங்குடி மக்களில் சிலர் தங்கள் மதத்தைவிட்டு வேறு மதங்களுக்கு மாறியதுண்டு. பிராமண மிஷனெரிகள் இந்தப் பகுதிகளில் சென்று தங்கள் ஆசாரங்களைப் பரவச் செய்த போது இவர்களில் சிலர் மதம் மாறினர். ஆனாலும் ஒவ்வொரு பழங்குடி இனமும் தனது சொந்த மதநம்பிக்கைகளோடு தனித்து விடப்பட்ட இனமாக அந்தந்தப் பகுதிகளில் வாழ்ந்து வந்த காரணத்தால் தங்கள் மத நம்பிக்கைகளைப் பெருமளவில் பாதுகாத்து வந்தது. 1891ம் ஆண்டின் ஜனத்தொகைக் கணக்கெடுப்பில் 16 மில்லியன் ஆதிவாசிகளில் 93 மில்லியன் பேர் தங்கள் பூர்வீக மதங்களைப் பின் பற்றியதாகவும் மீதி பேர் மட்டுமே பிராமணியம், கிறிஸ்தவம், பௌத்தம் மற்றும் மதங்களுக்குப் போய் விட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மதம் மாறிய ஆதிவாசிகளையும் ஜாதிகளையும் கண்டுபிடிக்க சென்சஸ் மதிப்பீட்டுக் குழுவினர் 1901ம் ஆண்டில் கீழ்க்காணும் அடையாளங்களை வைத்திருந்தார்கள். மதம் மாறாத ஆதிவாசிகள் பிராமணர்களை தலையாக ஏற்றுக் கொள்வதில்லை பிராமண புரோகிதரை வைத்தோ வேறு இந்து பூசாரியை வைத்தோ அவர்கள் மந்திரங்களைச் சொல்லுவதில்லை. வேதங்களின் அதிகாரத்தன்மையை மறுத்தார்கள் இந்து தெய்வங்களை வணங்கமாட்டார்கள் பிராமண மதகுருக்களை குடும்ப விசேஷங்களில் அழைத்து காரியங்களைச் செய்யமாட்டார்கள். பிராமணரை குருக்களாக ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். இந்துக்களின் கோயிலின் உட்பகுதிகளுக்குள் போக முடியாத நிலையில் உள்ளவர்கள். அவர்கள் பிராமணர் அருகே குறிப்பிட்ட தூரத்திற்குள் வந்துவிட்டால் தொட்டுவிட்டால் பிராமணர்களைத் தீட்டுப்படுத்திடுபவர்கள் இறந்து போனவர்களை புதைத்து விடுபவர்கள் மாட்டிறைச்சி சாப்பிடுகிறவர்கள்.

மேற்கூறிய கருத்தின்படி சென்சஸ் கணக்கு எடுத்தவர்கள் நமது தேசத்தில் உள்ள பழங்குடி மக்களில் மிகமிகப் பெரும்பாலோர் பிராமணர்களின் ஆதிக்கத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என்றும், காரணம் அவர்கள் பிராமணர்களைப் பார்த்ததேயில்லை என்றும் வேதங்களின் அதிகாரத்தன்மையை அவர்கள் ஏற்கவில்லை. காரணம், அவற்றின் பெயர்களைக்கூட அவர்கள் கேட்டதில்லை என்றும், இந்துக் கோவில் உள்ளே போனதே இல்லை என்றும் கூறியுள்ளார்.

மத அடிப்படையில் மக்களை எண்ணி மதிப்பிடுவதில் கையாளப்பட்ட முறையை 1881ம் ஆண்டிலேயே மக்ளீவர் கடுமையாக எதிர்த்தார். அந்த கமிஷன் அறிக்கையை அவர் எழுதும்போது, இந்து மதங்களைச் சேர்ந்தவர்கள் என்று மக்களைக் குறிப்பிடும்போது 'இந்து' என்ற சொல் பயன்படுத்தப்படும் அர்த்தம் தவறானது''[1] என்று அவர் கூறுகிறார். சில பழங்குடி இனத்தவரை ''இந்துக்கள்'' என்று குறிப்பிடுவதில் உள்ள தவறை எழுதும் போது கெயிட் இங்ஙனம் கூறுகிறார். பிராமணர்களைக் குருக்களாக வைத்து குடும்பங்களில் அல்லது ஆலயங்களில் மத காரியங்களைச் செய்யாதவர்களை இந்துக்கள் என்று தவறாகக் கணக்கிட்டது மட்டுமல்லாமல் வடஇந்தியாவில் மக்கள் தொகையை 1911ம் ஆண்டு கணக்கெடுத்த இந்த அலுவலர்கள் இந்துக்கள் என்று அழைக்கத் தயங்கிய தெருக்கூட்டுபவர்களையும் மற்றும் தாழ்ந்த வகுப்பினர்களையும் எல்லோரையும் இந்துக்கள் என்ற மதவகுப்பில் தவறுதலாக வேண்டுமென்றே சேர்த்துவிட்டனர்''.[2] இந்தக் கமிஷன் அறிக்கை மேலும் கூறுவதாவது; ''மத்திய மாகாணங்களிலும் பேராரிலும் இந்துக்கள் என்று கணக்கிடப்பட்டவர்களில் கால்வாசிப் பேர் பிராமணர்களின் ஆதிக்கத்தையோ வேதங்களின் அதிகாரத்தன்மையையோ ஏற்றுக் கொள்ளாதவர்கள் இவர்களில் பாதிப்பேர் எந்த ஒரு இந்து மதகுருவையும் மந்திரம் சொல்ல அழைப்பவர் அல்ல, இன்னும் கால்வாசிப்பேர் இந்து தெய்வங்களை வணங்காமலும் பிராமண குருக்களை வைத்து தங்கள் மதகாரியங்களைச் செய்யாமலும் இருப்பவர்கள். மூன்றிலொரு பங்கினர் இந்து கோவில்களுக்குள் செல்ல அனுமதியற்றவர்கள். ஒரு கால் பங்கினர் தொட்டாலே மற்றவர்கள் தீட்டாவார்கள் என்ற நிலையைச் சேர்ந்தவர்கள் ஏழில் ஒருபங்கினர் இறந்தவர்களைப் புதைப்பவர்கள் ஐந்தில் இரண்டு பங்கினர் மாட்டிறைச்சி உண்பவர்கள்''.[3]

எந்த மக்கள் இனமும் தங்கள் சொந்த மதத்தைப் பின்பற்ற உரிமை பெற்றிருந்ததோடு இந்திய மக்கள் பல்வேறு சமயங்களைச் சேர்ந்தவர்கள் என்ற உண்மை எல்லோராலும் ஒத்துக்கொள்ளப்பட்டிருந்தது. இந்த நிலைமையில் ஒரு புதுத்திருப்பம் 1931ம் ஆண்டில் பொதுத்தேர்தலின் போது உண்டாயிற்று இந்த கால கட்டத்தில்தான் 'உன்னத்தி சமாஜ்' தோன்றி சைமன் கமிஷன் முன்பாக நின்றது. ஒன்றுபடுவதால் ஏற்படக்கூடிய ஓட்டு சக்தியை அரசியல் தலைவர்கள் உணரத்தொடங்கினார்கள். அந்த நாட்களில் இருந்த 20 மில்லியன் ஆதிவாசிகள் தங்களுக்கென்று தனிப்பட்ட சமூக, சமய அமைப்பை உண்டாக்கி

விடுவார்கள். அல்லது தங்களுக்குப் பிடித்தமான மதங்களோடு சேர்ந்துகொள் வார்கள் என்று சில தலைவர்கள் அஞ்சினார்கள். இது உடனே மதமாற்றம் முயற்சிகளில் ஒரு தீவிரத்தை உண்டுபண்ணிற்று. உதாரணமாக 1931ம் ஆண்டின் அசாம் மாநில மக்கள் கணக்கெடுப்பின் போது "இந்து மிஷன் 1821முதல் 1831வரை ஒராவோன்கள், காசிக்கள் சாந்தாலிகள் 60,000பேர் தங்கள் மதத்திற்கு மாறிவிட்டதாக உரிமை கொண்டாடினார்கள்.

டாக்டர் வித்தியார்த்தி ஆதிவாசிகளை இந்து மதத்திற்கு கொண்டுவந்த சில பாகத் இயக்கங்களின் பட்டியல் தருகிறார். "சமீப காலங்களில் மக்களை இந்துக்களாக மாற்றுவது மறுபடியும் தீவிரமாகியுள்ளது. ராய் என்பவர் ஐந்து மதம் மற்றும் இயக்கங்களைக் குறிப்பிடுகிறார். அவையாவன நேமா பகத்து இயக்கம் அல்லது பூவிப்புட் பகத் இயக்கம், இந்து மயமாகக்கப்பட்ட அல்லது பாச்சி டான் பகத் இயக்கம், இதில் விஷ்ணுபகத் இயக்கம் அடங்கும் கபீர் பந்தி பகத் இயக்கம் தாணா பகத் இயக்கம் இந்து இயக்கம்" [5]

பெரிய அளவில் ஆதிவாசிகள் இந்து மதத்திற்கு மாற்றப்பட்டது குறித்து கெயிட் என்பவர் "இந்துக்களாக ஆதிவாசிகளை மாற்றும் முறை என்றொரு நவீன மதமாற்றமுறை வடகிழக்கு இந்தியாவில் இந்துக்களால் பின்பற்றப்பட் டது. ஆதிவாசிகளின் வரலாற்றை இந்து தெய்வங்களில் இருந்து அவர்கள் வந்ததாகக் கூறிவிடும் முறை இது. பிராமணர்கள் ஒரு ஆதிவாசித் தலைவனை அவர் சிறப்புமிக்க பரம்பரையில் தோன்றியிருப்பதாகக் கூறி அவனுடைய முதாதையர் ஏதோ காரணத்தால் இதனை மறைத்து வைத்திருந்ததாகப் புளுகி அவன் இந்த கோத்திரத்தில் இந்த குலத்தில் தோன்றியவனாகக் கூறுவார்கள். இந்துக் கடவுள்கள் கூட்டத்தில் ஒரு கடவுளின் பெயரை புராணக்கதைகளிலி ருந்து எடுத்து ஆதிவாசிகளின் தலைவன் அந்த இந்துக் கடவுளின் வம்சா வழியை சேர்ந்ததாகக் கூறுவார்கள். உதாரணமாக கோச் அரசர்கள் சிவனிலி ருந்து தோன்றியவர்கள் என்று புளுகினார்கள். [6]

1931ம் ஆண்டின் சென்சஸ் கமிஷன் அறிக்கையில் முல்லன் என்பவர் எழுதியிருப்பதாவது; "மிகீர்களிடம் அவர்கள் பாலிராஜாவின் பரம்பரை என்றும், அவர்கள்தான் சரியான பூர்வீக இந்துக்கள் என்றும் இந்துக்கள் கூறிவைத்தார்கள்" [7] 1925 முதல் 1950 வரையுள்ள காலகட்டத்தில் மத்திய இந்தியாவிலும் வட கிழக்கு இந்தியாவிலும் உள்ள லட்சக்கணக்கான ஆதிவாசி களை இப்படியே கயிறு திரித்து மதம் மாற்றிவிட்டனர்.

"திட்டமிட்டு ஏமாற்றி செய்யப்பட்ட மத மாற்றம்" நடந்த மதமாற்றங்கள் பலவற்றைப்படுத்தி நாம் கூறக் கூடும். சுதந்திரம் கிடைப்பதற்கு முன் நாட்டு ஒற்றுமையைக் காப்போம் என்ற பெயரில் ஆதிவாசிகளை எல்லாம் 'இந்துக்கள்' என்று (டாக்டர் அம்பேத்கார் கூறுவதுபோல்) ஒரு தீவிரமான திட்டமிட்டு மக்களை ஏமாற்றி மதம் மாற்றும் சூழ்ச்சித் திட்டம் ஒன்று தீட்டப்பட்டு அது நிறைவேற்றப்பட்டது" [8] குறிப்பாக மக்கள் தொகை கணக்கெடுக்கும் அலுவர்கள் (census enumerators) இப்படிச் செய்யக் கற்பிக்கப்பட்டார்கள்.

1931ம் ஆண்டுக்கான ஜனத்தொகை கணக்கெடுப்பு அறிக்கையில் சி.எஸ். முல்லன் என்பவர் "அசாமிலுள்ள இந்து சபாவினர் ஆவி வழிபாடு உடையவர்களை "நீங்கள்தான் பூர்வீக இந்துக்கள்" என்று கூற பலத்த போதனைமுயற்சிகள் கையாளப்பட்டதோடு இதனை மிக்கீர், லாலுய்யூ, கச்சாரே கிராமங்களில் கைப்பிரதிகளை அச்சிட்டு வழங்கியும் மற்றும் கணக்கெடுப்பாளர் களாகவும் மேற்பார்வையாளர்களாகவும் இருந்தவர்களில் இந்துக்களாயிருந்தவர் களிடமும் இந்து முதலாளிகளான மாசதார்கள் மற்றும் முக்கியஸ்தர்களிடமும் இந்த பலத்த போதனை கொடுக்கப்பட்டது. சபாவைச் சேர்ந்த அதிகாரிகள் தங்கள் இந்து மதத்தைப் பரப்ப, ஆதிவாசிகளை இந்துக்கள் என்று நம்பச் செய்வதற்கு பிரச்சாரப் பயணங்கள் அதிகம் மேற்கொண்டனர். இந்த பிரச்சாரம் நல்ல பயன் கொடுத்தது! [9]

இந்தக் காரணத்தாலேயே 1931ம் ஆண்டு புள்ளிவிபரங்களில் ஆதிவாசி மதம் என்று குறிப்பிடப்பட்டிருந்ததை 1951ஆம் ஆண்டு கணக்கெடுப்பில் இந்துக்கள் என்று கூசாமல் போட்டுவிட்டார்கள்.

உதாரணமாக மத்திய பிரதேசத்தில் சமயங்களைக்குறித்து மக்கள் கணக்கெடுப் பில் census கீழ்க்கண்ட வித்தியாசத்தைக் காணலாம்.

| | 1901 | 1911 | 1921 | 1931 | 1941 | 1951 |
|---|---|---|---|---|---|---|
| இந்துமதம் | 82% | 79% | 82% | 84% | 72% | 95% |
| ஆதிவாசி மதம் | 13% | 15% | 13% | 11% | 22% | .05% |

1891ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி இந்தியாவில் ஆதிவாசிகளில் 60% தங்கள் சொந்தமதமாகிய பழங்குடி மதத்தைப் பின்பற்றுகிறவர்கள். இவர்கள் இந்துக்களாகவோ, கிறிஸ்தவர்களாகவோ மற்ற எந்த் மதத்தினராகவோ மாற்றப்படாதவர்கள். 1971ம் ஆண்டின் கணக்குப்படி 6% ஆதிவாசிகளே தங்கள் பழங்குடி மதத்தைப் பின்பற்றுகிறவர்கள்.

இப்படி திடீரென்று மத்திய பிரதேசம் போன்ற சில மாகாணங்களில் கணக்குகள் மாற்றப்பட்டதுமன்றி 'ஆதிவாசி மதம்' என்ற பிரிவு கணக்கெடுப்பு பாரத்தில் இல்லாமலேயே போகச் செய்துவிட்டனர்.

தொகுப்புரை :

1925 முதல் 1950 வரையிலுள்ள காலகட்டத்தில் இரண்டு கோடிக்கு மேலான ஆதிவாசிகளை கணக்கெடுப்பாளர்கள் பிராமண மதத்திற்கு "மதம் மாற்றி விட்டார்கள்" இந்த ஆதிவாசிகளுக்கு தாங்கள் அப்படி மாற்றப்பட்டிருப்பது குறித்த செய்தி கூட தெரியாது!



22

# சென்சஸ் எண்ணிக்கைகள் எந்த அளவுக்கு சரி

தம்முடைய சென்சஸ் தவறுகளுக்கு சென்சஸ் கணக்காளர்களை முற்றிலுமாகப் பொறுப்பாக்கக் கூடாது. உலகில் இந்த அளவுக்கு அதிகமான மக்களும் கணக்கற்ற விதத்தில் வித்தியாசமான ஜனங்களும் வாழும் ஒரு நாட்டின் மக்கள் தொகையை பத்தாண்டுக்கு ஒரு முறை கணக்கெடுப்புச் செய்வது எவ்வளவு பெரிய கடினமான வேலை என்பதை நினைக்கும் போது நமது சென்சஸ்துறை அலுவலர்களை நாம் அதிகம் பாராட்டாமல் இருக்கமுடியாது. வேலைப்பளு காரணமாக கணக்காளர்கள் எளிய முறைகளைக் கையாண்டு குறிப்பாக மதம் சம்பந்தப்பட்ட விஷயங்களை வகைப்படுத்துவதில் அவர்கள் அவசர நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். இதில்தான் பிரச்சனையே உண்டாகிறது.

கணக்கெடுக்கும் அலுவலரின் கஷ்டம் நடைமுறையில் கீழ்க்காணும் விதங்களில் உள்ளது.

a) சென்சஸ் பாரத்தில் ''மற்ற மதங்களும் பின்பற்றும் மார்க்கங்களும்'' என்ற இடத்தில் எத்தனையோ வகையான மதங்களைக் கணக்கில்லாமல் குறிப்பிடுவது அலுவலருக்கு முடியாத காரியம்.

b) அப்படிப்பட்ட ஒரு மதத்தை இந்து மதத்திலிருந்து வேறுபடுத்தி அவரால் சொல்லமுடியாது.

c) யார் 'இந்து' என்று அவருக்குத் தெரியாது 'இந்து' என்பவர் யார் என்று அதிகாரப்பூர்வமான பொருள் விளக்கம் இதுவரை அவருக்கு அரசாங்கத்தால் சொல்லப்படவில்லை.

d) 'இந்து'வுக்கும் 'இந்தியனுக்கும் உள்ள வித்தியாசம்பற்றி அவர் தெரிந்திருக்க வேண்டியதில்லை, 'இந்து' என்ற சொல்லுக்கு ஆதாரமற்றதும், எழுதப்படாததும், நாடெங்கிலும் இருப்பதுமான ஒரு பிரபலமான பொருள் விளக்கம் என்னவென்றால் முஸ்லீம், கிறிஸ்தவன், சீக்கியன் தவிர மற்ற அனைவரும் இந்துக்களே !

e) ஆதிவாசிகள் இனத்தின் பெயரை மதத்தின் பெயராகக் கணக்கிடக் கூடாது என்று தடை போடப்பட்டுள்ளது.

ஆகவே சென்சஸ் கணக்கிடும் அதிகாரி மக்களை எண்ணிக் கணக்கிடும் இடத்திற்கு ஒரு பெரிய தாம்பாளத் தட்டை எடுத்துச் செல்கிறார். அதன் மேல் ஐந்து கூட்டு வைக்கும் கிண்ணங்கள் உண்டு. கிண்ணங்களில் சரியாக விழாததெல்லாம் அந்தப் பெரிய தாம்பாளத்தட்டில்தான் விழும். சென்சஸ் கணக்கில் ஜைனம், பௌத்தம், கிறிஸ்தவம், சீக்கியம், இஸ்லாம் ஆகிய மதங்கள்தான். அந்த ஐந்து கிண்ணங்கள் இந்து மதம்தான் தாம்பாளத்தட்டு !

அரசியல் சட்டத்தின்படி எல்லாம் கிண்ணங்களாகவே இருக்கவேண்டும்; தாம்பாளத்தட்டிற்கு அங்கே வேலையில்லை ! ஜனத்தொகை கணக்கிடும் அலுவலருடைய மனதிலும், மேற்பார்வை செய்யும் அலுவலர் மனதிலும் பெரிதாக மேலோங்கிவரும் எண்ணமே ஜனத்தொகை விபரங்களாக இறுதியில் இடம் பெற்றுவிடுகிறது. அலுவலர்கள் மக்கள் பற்றிய விபரங்களைக் கணக்கிட்டு எண்ணி எழுத வேண்டும் என்பது அவசியமே. மதம் பற்றி சரியான கேள்வியை கேட்க சென்சஸ் பாரத்தில் சரியான கேள்வி இருந்தால்தானே அவர் சரியான பதிலை மக்களிடமிருந்து பெற முடியும் ! எனவே பழங்குடி மக்கள் அவர்கள் மதம் பற்றிய கேள்விக்கு தெளிவான பதில் கிடைக்காததால் அவர் தனக்குத் தெரிந்த ஏதோ ஒன்றை எழுதி வைத்துவிட்டுப் போய் விடுகிறார்! உதாரணமாக கேட்கக்கூடிய சில கேள்விகளே எடுத்துக் கொள்வோம் ''நீ இந்துவல்ல என்றால் உன் சொந்த மதத்தின் பெயர் என்ன ?'' பழங்குடி மனிதரோ சென்சஸ் கணக்கெடுக்கும் அலுவலரோ, அல்லது மேலும் வேறு எந்த சென்சஸ் ஆபீசரோ அல்லது சென்சஸ் கமிஷனரோ இந்தக் கேள்விகளுக்கு பதில்களைக் கூறவே முடியாது.

சரியான கேள்விகள் கீழ்கண்டவாறு இருக்க வேண்டும்.

உன்னுடைய சாந்தாலி தர்மத்தை விட்டு வேறு மதத்திற்கு நீ மாறியதுண்டா?

அப்படியென்றால் அந்த மதமாற்றச் சடங்கு என்ன விதத்தில் நடந்தது?

இப்படிப்பட்ட கேள்விகள் ஒரு சாந்தாலி மதம் மாறினாரா இல்லையா என்று சரியாகக் கண்டு பிடிக்க நமக்கு உதவும். அப்படி அவன் மாறியிருந்தால் எந்த மதத்துக்கு மாறினான்? பிராமணிய மதத்துக்கா? இசுலாமுக்கா? கிறிஸ்தவ மதத்துக்கா? அல்லது வேறு ஏதாவது மதத்திற்கா? என்று கண்டுபிடிக்க உதவும்.

போஜ்புரி தாம்பாளத்தில் ''மற்ற மதங்களும் மத நம்பிக்கைகளும்'' என்ற ஒரு சிறிய உப்புக்கல் பாத்திரம் உண்டு. சென்சஸ் கட்டளைபடி உப்பு தனிப் பாத்திரத்தில் வைக்கப்பட வேண்டும் என்பது மட்டுமல்ல, ஒவ்வொரு வகை உப்பும் தனித்தனியாகப் பிரித்து வைக்கப்படவேண்டும். 1971ம் ஆண்டு பல்வேறு மாநிலங்களின் மக்கள் தொகைக் கணக்கெடுப்புகளில் இந்த உப்புக் கிண்ணத்தையே காணவில்லை! இந்தத் தவறுக்கு காரணம் இனங்களின் பெயர்களே, அவர்களின் மதங்களின் பெயர்கள். தனியாக அவர்கள் மதத்திற்கு எந்தப் பெயரும் இல்லை என்பதே.

1971ம் ஆண்டு சென்சஸ் கமிஷனர் சந்திரசேகர் குறிப்பிடுவதுபோல் மக்களின் அடிப்படை கலாச்சாரகுணமே மதம் ஆகும்.[2] அவர் தனது சென்சஸ் துறையைச் சேர்ந்த கணக்கெடுப்பவனுக்கு பழங்குடி இனங்களின் மதங்களைக் குறிப்பிடும் போது 'மதத்தை இனங்களின் வகைகளோடு இனங்களின் பெயர்களோடு குழப்பிக் கொள்ளாதீர்கள், இனப் பெயர்களை மதம் என்று எழுதக் கூடாது' என்று கட்டளை கொடுத்தார்.[3]

கீழ்க்காணும் உதாரணங்கள் நாடெங்கிலுமிருந்து கிடைத்த சென்சஸ் விபரங்கள். இவை மேலே நாம் சுட்டிக் காட்டிய தவறை நன்கு வெளிப்படுத்தும்.

மத்தியப் பிரதேசத்தில் ஆரியரல்லாத 83,87,000 பழங்குடி மக்களில் 836 பேர் மட்டுமே மதம் மாறாமல் தங்கள் சொந்த மதங்களிலேயே இருப்பவர்கள் என்று மாநில சென்சஸ் துறை கணக்கிட்டு இவர்களைத் திட்டமாய்க் கூறமுடியாத மதங்களைச் சேர்ந்தவர்கள் என்று வகைப்படுத்தியது. ஆனால் அகில இந்திய ஜனத்தொகைக் கணக்கீட்டில் இவர்களையும் கூட இந்துக்கள் என்று கணக்கிட்டு தொகையேற்றி விட்டனர்.[4,5,6]

உதாரணமாக பஸ்தர் ஜில்லாவில் உள்ள மொத்த திராவிடர் பழங்குடி மக்கள் 8,55,000 பேரில் ஒருவர் கூட தங்கள் சொந்தமான பழங்குடி மதத்தைப் பின்பற்றவில்லையாம். மாநிலங்களின் சென்சஸ் அறிக்கையில் 6000 கோண்டர்கள் திட்டமாய்க் கூற முடியாத மதத்தைச் சேர்ந்தவர்கள் என்றிருக்கும் போது

அகில இந்திய சென்சஸ் கணக்கில் இவர்கள் ''இந்துக்கள்'' என்று கணக்கிட்டுக் காட்டப்பட்டுவிட்டார்கள்.

மத்தியப்பிரதேசத்தில் ஆரியரல்லாத பில் இனக்குடும்பத்தைச் சேர்ந்த 15,73,000 மக்களில் ஒரே ஒரு பில் ஆண் மட்டும் பழங்குடி மதம் என்று திட்டமாய்ச் சொல்ல முடியாத ஒரு மத நம்பிக்கையைப் பின்பற்றுவதாகக் கணக்கிடப்பட்டுள்ளார். நூதன மனிதராக இவருடைய சகோதரர்கள் 15,73,000 பேர் இந்து மதத்திற்கு மாற்றப்பட்ட போது இவர் மட்டும் தனது நம்பிக்கையில் பிடிவாதம் காட்டுவது நூதனமான ஒரு செயல்தானே![7] 1971ம் ஆண்டு சென்சஸ் கணக்குப்படி பழங்குடி மக்கள் மாநிலமான திரிபுராவில் 4,50,000 ஆரியரல்லாத மங்கோலிய ஆதிவாசிகளில் ஒருவர் கூட பழங்குடி மக்கள் மதத்தைப் பின்பற்றவில்லை. காரணம் எல்லோரும் ''மதம் மாற்றப்பட்டனர்''. கிண்ணங்களும் தாம்பாளமும் என்ற உவமானம் இங்கு பொருத்தமாயிருக்கிறது. குக்கி, ஜமாதியா, ஹலாம், ரியாங் என்ற மங்கோலாய்ட் பழங்குடிமக்கள் புத்தமதம், கிறிஸ்தவமதம் ஆகிய கிண்ணங்களில் இடம் பெறாதவர் எல்லாம் ஒட்டு மொத்தமாக ஆரிய மதத்தில் சேர்த்து கணக்கிடப்பட்டுவிட்டனர்.[8]

அசாமில் ஆரியரல்லாத 19,19,000 பழங்குடி மக்களில் 62 பேர் தவிர எல்லோரும் மதம் மாற்றப்பட்டனர்.[9] அனைத்து மங்கோலியப் பழங்குடி மக்களான போரோ, கச்சாரி, லாலுஸ், மீகர், மிசோ, ராபா மற்றும் பழங்குடிமக்கள் புத்தமதம் கிறிஸ்தவம் ஆகிய கிண்ணங்களில் விழாதவர்கள் அனைவரும் இந்துமதம் என்ற தாம்பாளத்தில் விழும்படிச் செய்யப்பட்டுள்ளனர்.

ராஜஸ்தானில் உள்ள பன்ஸ்வரா ஜில்லாவில் ஆரியரல்லாத பில் பழங்குடி மக்கள், 7,74,000 பேரில் 45பேர் மட்டுமே பழங்குடி மதத்தைப் பின்பற்றுகிறவர்கள் என்ற கணக்கிடப்பட்டுள்ளனர். சென்சஸ் கணக்குப்படி மற்ற எல்லா பில்களும் மதம் மாற்றப்பட்டுவிட்டனர்.[10]

ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள மலைவாழ் திராவிடப் பழங்குடியினரான கோண்டுகள், நாயிக்போடுகள், ராஜகோண்டுகள் 1,58,000 பேர்களில் ஒரே ஒருவர்தான் பழங்குடி மதமான கோண்டி மதத்தைப் பின்பற்றுகிறவராம்.[11]

ஆந்திரப்பிரதேசத்தில் உள்ள கோயா மலைஜாதியினர் 2,85,000 பேரில் ஒருவர் கூட கோயா தர்மத்தினைப் பின்பற்றாமல் எல்லோரும் மதம் மாற்றப்பட்டுவிட்டனர்.[12] ஆந்திராவில் உள்ள ஏருகலா, சுகாலி, மற்றும் திராவிட பழங்குடி மக்கள் கூட்டத்தினரின் கதையும் இப்படித்தான்.

குஜராத்தில் உள்ள குக்நா என்ற மொத்த மலைஜாதியினர் 1,47,000 பேரும் ''மதம் மாற்றப்பட்டனர்''. ஒருவர் கூட தங்கள் மூதாதையரின் மதத்தைப் பின்பற்றவில்லையாம். குஜராத்தில் உள்ள நாய்க்காடா மக்கள் 2,33,000 பேர்

மாநிலமும் இப்படித்தான். இம்மாநிலத்தில் உள்ள ஆரியரல்லாத மொத்த பழங்குடியினர் 37,17,000 பேரில் 500 பேர் மட்டுமே தங்கள் பூர்வீக மதத்தை விடாமல் பற்றிக்கொண்டிருக்கின்றனர். சென்சஸ் கணக்குப்படி மற்ற எல்லோரும் மதம் மாற்றப்பட்டவர்கள். [13]

கேரளாவிலும் தமிழ் நாட்டிலும் காடுகளிலும் குகைகளிலும் வாழும் நிகிரிட்டோ மலைவாழ் பழங்குடிமக்களில் மொத்த காடர்கள் 1900 பேரும், 1,04,000 இருளர்களும் 89,000 புலையர்களும் ஒரு பிராமணரைக் கூட பார்த்தறியாதவர்கள். ஆனால் எல்லோரும் பிராமண மதத்திற்கு மாற்றப்பட்டாயிற்று. சென்சஸ் கணக்குப்படி ஒரு நிகிரிட்டோ கூட தனது பழங்குடி மதத்தைப் பின்பற்றவில்லை. [14]

மகாராஷ்டிரத்தில் ஆரியரல்லாத மொத்த திராவிடப் பழங்குடியினரான 3,12,000 கோண்ட் இன மக்களும் பிராமண மதத்திற்கு மாற்றப்பட்டுவிட்டனர். ஒரு ஆதிவாசிகூட தனது பூர்வீக மதத்தைப் பின்பற்றவில்லை. ஆரியரல்லாத பழங்குடி மக்கள் பெருமளவில் உள்ள கொக்னா, கொர்க்கு, மற்றும் இனங்களிலும் இதுவே நிலைமை. [15]

ஒரிசாவில் திராவிடப் பழங்குடியினரான கோண்ட்கள் அதிகமாக உள்ளனர். இவர்கள் 4,99,000 பேரும் முழுவதுமாக மதம் மாற்றப்பட்டுவிட்டனர். சென்சஸ் கணக்குப்படி ஒரு கோண்ட் மனிதர் கூட தங்கள் குடும்பமதத்தைப் பின்பற்றவில்லை. [16]

இந்தியாவில் உள்ள மொத்தப் பழங்குடி மக்கள் 38 மில்லியன். சென்சஸ் கணக்குப்படி இவர்களில் 94 சதமானம் மதம் மாற்றப்பட்டதாயிற்று.

இந்த அத்தியாயத்தில் பேசிய காரியங்களிலிருந்து இரண்டு உண்மைகள் தெளிவாகின்றன.

சென்சஸ் கணக்காளர் அவசரமாக தனது வேலையை முடிக்கவோ, அல்லது மதவாதிகளின் கட்டாயத்தினாலோ கொடுத்துவிட்ட இக்கணக்குகள் மதங்களுக்கிடையில் சந்தேகங்களையும் கவலைகளையும் தோற்றுவித்துள்ளன. உண்மையான ஆன்மீக வாதிகளுக்கு எண்ணிக்கை முக்கியமல்ல. ஆனால் மதவாதியாக உள்ள அரசியல்வாதிகளுக்கு ஆன்மீகத்தைவிட எண்ணிக்கையே முக்கியம். எண்ணிக்கையே அவர்களின் ஆன்மீகம். உண்மையில் நடப்பது என்னவென்றால் கிராமங்களிலும் பழங்குடியினர் மத்தியிலும் இருந்து புத்தமதம், இசுலாம், கிறிஸ்தவம், இந்துமதம் ஆகிய அனைத்திற்கும் மதமாற்றம் நடக்கிறது. ஆனால் கிண்ணங்களும் தாம்பாளமும் உதாரணத்தில் காண்பது போல் மக்களை மத அடிப்படையில் வகைப்படுத்தும் போது தாம்பாளத்தில் உள்ளதற்கு அதிகமாக கணக்குப் போட்டுவிட்டனர்.

மேலே குறிப்பிட்ட ஆதிவாசிகளுக்கு மக்கள்தொகை கணக்கிடுவோரால் தாங்கள் மதம் மாற்றப்பட்டதாயிற்று என்ற விஷயம் இன்னமும் தெரியாது. இப்படிப்பட்ட பழங்குடியினர் இசுலாம், புத்தமதம், கிறிஸ்தவம் என்ற ஏதாவது மதத்தைச் சேரும் போது அவனுடைய பழங்குடி மதத்தைவிட்டு தான் இப்பொழுது மாறியோ, வளர்ந்தோ வருவதாக நினைக்கிறான். ஆனால் அரசியல்வாதிகளுக்கும், நீதிபதிகளுக்கும் சென்ஸஸ் கணக்கிடுபவருக்கும் அது இந்து மதத்திலிருந்து மதம் மாறியதே. இது ஒரு பதட்டமான நிலையாக மதங்களைச் சேர்ந்த மக்களுக்கு மனக்கொதிப்பை ஏற்படுத்துவது இயல்பே. இதற்குக் காரணகர்த்தாவாக குற்றஞ்சாட்டப்பட வேண்டியவர் சென்ஸஸ் கணக்காளரே!

காந்திஜி இந்தத் தவற்றை 1937ம் ஆண்டிலேயே உணர்ந்து விட்டார். தேவையில்லாத வீணான பயங்களையும் சந்தேகங்களையும் எழுப்பும் இது போன்ற கணக்கெடுப்புகளை அவர் தடுத்து நிறுத்த வேண்டியதாயிற்று. "ஹரிஜன்" என்ற பத்திரிக்கையில் "மற்ற மதங்களையெல்லாம் கூட்டிச் சேர்த்து வைத்தால் இந்துக்கள் மெஜாரிட்டி இல்லை" என்று காந்திஜி எழுதுகிறார்.[17]

இந்த ஜனசங்கி கணக்குகளின் நம்பத்தகுந்த தன்மை அடுத்த பெரிய தவறாக உள்ளது. சமூக வளர்சித்துறை அலுவலர்களுக்கு இந்த சென்சஸ் கணக்குகள் அவர்கள் தேவைக்கு தொலையட்டும். உதாரணமாக கிராமங்களிலும் ஆதிவாசிகள் வாழும் பகுதிகளிலும் பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்படும் குழந்தையின் பிறந்த நாளையும் வயதையும் நிர்ணயிப்பது பள்ளிக்கூட ஆசிரியர்தான்.

அதுபோலத்தான் பழங்குடி மக்களுக்கு பெயர் தெரியாத அவர்களின் மதத்தை நிர்ணயிப்பது சென்சஸ் கணக்காளர் வேலை. இது வியப்புக்குரியதல்ல. பள்ளிக்கூடத்தில் சேர்த்துக் கொண்டால் போதும். பிறந்த தேதி மாறிவிட்டால் குடிமுழுகிப்போகாது என்று பெற்றோர்கள் கருதுவார்கள். அங்ஙனமே சமூக ஆய்வாளர்களுக்கும் சமூகப்பணி வளர்ச்சி அதிகாரிகளுக்கும் தேவைப்படும் அளவில் மக்கள் மதங்கள் பற்றிய சென்சஸ் கணக்கு இருந்தால் பாதகமில்லை தான். ஆனால் இந்த சென்சஸ் கணக்கின் அடிப்படையில் மதச் சட்டங்களை அரசியல் மன்றங்களில் இயற்றுவதும், நீதி மன்றங்களில் தீர்ப்புக் கூறுவது, பள்ளிக்கூட வாத்தியார் வைத்த பிறந்த தேதியைக் கொண்டு ஆதிவாசிப் பையனுக்கு ஜாதகம் கணிப்பது போன்ற மடமை அல்லவா?

தொகுப்புரை:- பல்வேறு மதங்களைச் சேர்ந்த மக்கள் பற்றிய விபரங்களைத் தரும் நமது சென்சஸ் கணக்குகள் நம்பத்தகுந்தவையல்ல. இவைகளை அடிப்படையாகக் கொண்டு நீதிமன்றங்களிலும் சட்டமன்றங்களிலும் நியாயம் கூறுவது நியாயமல்ல.

CHAPTER 22
THE RELIGIOUS MOSAIC OF INDIA



23

# இந்தியாவில் உள்ள சமயங்கள் பற்றிய ஒரு கண்ணோட்டம்

கடந்த 13 அத்தியாங்களில் விவாதித்த உண்மைகள் ஒரு வரைவு படத்தில் எதிர்பக்கத்தில் உள்ள சுருக்கித்தரப்பட்டுள்ளன. இந்த அத்தியாயம் அப்படத்திற் கான ஒரு விளக்கமே. ஜனத்தொகையை அளவாகக் கொண்டு இப்படம் வரையப்படவில்லை. ஒன்றொடொன்று இணைக்கப்பட்டுள்ள கட்டங்கள் இன உறவு முறை அல்லது இனக்கலப்பு முறையில் ஏற்பட்ட இணைப்புகளைக் காண்பிக்கிறது. இவைகள் பழங்குடி மக்களின் இனக்குடும்பங்களின் சமய இணைப்பையும் நமக்குக் காட்டுகின்றன.

1. பிராமணிய மதம். அதாவது ஆரியவைதீக தர்மம். இது எல்லா ஆரியர்களின் இனக்குடும்பங்களின் மதம். இதில் பிற்காலத்தில் தோன்றிய ஜைனம தம், சீக்கியமதம், இசுலாம், பௌத்தம், தாஸ்தீகம் முதலியவை அடங்காது.

2. ஆரியவர்த்தாவிலிருந்து தென் இந்தியாவில் போய்க் குடியேறிய பிராமணர் களின் இனக்குடும்ப மதம்.

3. சூத்திரர்களின் மதம். இவர்கள் ஆரியவர்த்தாவில் வசித்த சமஸ்கிருத கலாச்சாரத்திற்குள் கொண்டுவரப்பட்ட கலப்பினத்தவர். இந்த பிரிவினர் கடந்த 2000 ஆண்டுகளாக தீண்டாமைலிருந்து பிரித்து வைக்கப்பட்டவர் கள். (10) மூலம் இனக்கலப்பு ஏற்படாமல் பிரித்து வைக்கப்பட்டனர்.

4. ஆரியவர்த்தாவில் உள்ள புத்தமதத்தைச் சேர்ந்த சூத்திரர்.

5. ஆரியவர்த்தாவில் உள்ள சூத்திரர்களில் முஸ்லீம் மதத்தைச் சேர்ந்தவர்கள். உருவமில்லாத ஒரே கடவுளை வழிபடும் மதங்களில் 6,7,8,9 தோன்றிய உயிர்மீட்சி இயக்கங்கள். அவையாவன நானக்பந்த் கபீர்பந்த். நானக்பந்த, ராபிதாஸ்பந்த், சத்நாமிபந்த். இவை பிராமணிய மதம், இசுலாம், கிறிஸ்தவர் கள் ஆகியவற்றோடு கலந்து ஏற்பட்ட இயக்கங்கள்.

10. ஆரியவர்த்தாவில் உள்ள தீண்டப்படாதவர்களின் மதமாகிய திராவிடதர்மத் தைச் சேர்ந்தவர்கள். 11, 12 தங்கள் பூர்வீக திராவிட மதத்தைவிட்டு தீண்டாமையை நம்பாத பௌத்தம், சீக்கியமதம், கிறிஸ்தவம், இசுலாம் மதங்களை ஏற்றுக் கொண்ட வட இந்தியாவில் உள்ள தீண்டப்படாதவர்கள்.

14. தென் இந்தியாவிலும் தென் கிழக்கு இந்தியாவிலும் உள்ள தீண்டாத இனத்தவரின் திராவிட தர்மம்.

15. தென் இந்தியாவில் தங்கள் பூர்வீக திராவிட இன மதத்தை விட்டு கிறிஸ்தவர்களாகிய சில தீண்டா மக்கள்.

16. தென் இந்தியாவில் தங்கள் பூர்வீக திராவிட இன மதத்தினை விட்டு முஸ்லீம்களாகிய தீண்டப்படாதவர்கள்.

17. தங்கள் பூர்வீக திராவிட மதத்தை விட்டு முஸ்லீம்களான தென்னிந்திய கிராமவாசிகளான திராவிடர்கள்.

18. தென் இந்தியாவிலும், தென் கிழக்கு இந்தியாவிலும் நகரங்களிலும், பட்டணங்களிலும் வசிக்கும், ஆரியரல்லாத ஆனால் சமஸ்கிருத கலாச்சார மான வர்ணாஸ்ரம தர்மத்தை ஏற்றுக்கொண்ட திராவிடர்கள்.

19. தென்னெந்தியக் கிராமங்களிலும். தென்கிழக்கு இந்தியக் கிராமங்களிலும், பிராமணர்கள் இல்லாத இடங்களிலும் தங்கள் பூர்வீக இனக்குடும்பங்களின் மதமாகிய திராவிட தர்மத்தைப் பின்பற்றுபவர்கள்.

20. தென் இந்தியாவில் தங்கள் பூர்வீக திராவிட மதங்களை விட்டு கிறிஸ்தவத்தை தழுவிக்கொண்ட சில தீண்டப்படாத மக்கள்.

21. ஆரியவர்த்தாவில் தங்கள் பூர்வீக மதத்தைச் சேர்ந்த பழங்குடியினரான திராவிட மக்கள்.

22. பிராமணர்களின் மிஷனெரி முயற்சிகளால் மதம் மாற்றப்பட்ட வட இந்தியாவில் உள்ள சில திராவிடப் பழங்குடி மக்கள்.

23. வட இந்தியாவில் தங்கள் பூர்வீக மதத்தினை விட்டு கிறிஸ்தவர்களாக மாறிய சில திராவிடப் பழங்குடியினர்.

24. தங்கள் பூர்வீக இனமதங்களைப் பின்பற்றிய பழங்குடியினர் தென் இந்தியாவிலும் தென் கிழக்கு இந்தியாவிலும் உள்ள மலைகளில் வாழும் திராவிடப் பழங்குடி மக்கள்.

25. தென் இந்தியாவிலும் தென்கிழக்கு இந்தியாவிலும் தங்கள் பூர்வீக திராவிட மதத்தைவிட கிறிஸ்தவர்களாக மாறின திராவிடப் பழங்குடியினர்.

26. ஆஸ்டிரேலோய்டு இனத்தவரும், ஆஸ்டிரோ ஆசிய இனங்களைச் சேர்ந்தவர்களுமான சாந்தாலி முண்டா பில் தர்மத்தைச் சேர்ந்தவர்கள்.

27. பிராமண மிஷனெரி வேலைகளால் தங்கள் பூர்வீகப் பழங்குடி இனமதங்களைவிட்டு பிராமண மதத்தை ஏற்றுக் கொண்ட சில ஆஸ்டிரோலாயிடு ஆசியா பழங்குடிமக்கள்.

28. மதஎழுச்சி தூய வாழ்வை நாடி ஒரே கடவுள் கொள்கையை உருவமல்லாத வழிபாட்டினை கொண்ட பழங்குடி மதங்கள் பிர்சா, தாணா, சர்ணா போன்ற இயக்கங்கள்.

29. பூர்வீக பழங்குடி மதத்தை விட்டு கிறிஸ்தவமதத்தை ஏற்றுக் கொண்ட சில ஆஸ்டிரோலாய்டுகளும் ஆஸ்டிரோ இனங்களும்.

30. கிறிஸ்தவ மதத்திலும் பழங்குடி மதத்திலும் ஒருமிக்க ஆன்மீக எழுச்சி பெற்றவர்கள். சோட்டா நாக்பூரில் வாழ்கின்றனர்.

31. கேரளாவிலும் தமிழ் நாட்டிலும் அந்தமானிலும் வாழும் நிகிரிட்டோ பழங்குடி பூர்வீக மதங்கள் தொடப்படாமல் இருந்ததாலும் மதங்களின் தனித்தன்மையாலும் காக்கப்பட்டனர்.

32. தங்கள் பூர்வீக மதத்திலிருந்து சில நிகிரிட்டோ பழங்குடியினர் கிறிஸ்தவ மதத்தை ஏற்றுக் கொண்டனர்.

33. வடகிழக்கு இந்தியாவில் உள்ள பழங்குடி இன பூர்வீக·மதங்களைச் சேர்ந்த மங்கோலாயிடு இனப்பழங்குடியினர்.

34. கலாச்சாரக் கலப்பு மிஷனெரி முயற்சிகளால் பிராமண மதத்தை ஏற்றுக் கொண்ட சில மல்கோலாய்டு இனப் பழங்குடியினர்.

35. தங்கள் பூர்வீக பழங்குடி மதங்களை விட்டு கிறிஸ்தவர்களான சில மங்கோலாயிடு பழங்குடி.

இப்படத்தில் காண்பிக்கப்பட்டபடி புள்ளிக் கோடிட்ட பகுதிக்கு உள்ளே உள்ளவர்கள் மட்டுமே இந்துக்கள் என்பது தெள்ளத் தெளிவாகிறது.

# 24

# ‘இந்து’ என்பவர் யார்?

“இந்து” என்ற சொல் ஆரிய வேத வர்ணாசிரம தர்மம், பிராமணீய மதம் என்னும் ஒரு பழங்கால மதத்தைக் குறிப்பதால் எல்லா மரியாதையோடும் அந்தச் சொல்லை உபயோகிக்கிறோம். ஆனாலும் “இந்து” என்ற சொல் சரி அல்ல என நாம் விளக்க வேண்டும். இது குறித்து நேரு கொண்டிருந்த கருத்தை நாம் ஏற்கனவே சொல்லியிருக்கிறோம். அவர் கூறுவதுபோல் இந்து என்ற சொல் ஒரு குறிப்பிட்ட மதத்தினுடைய பெயராக மிக அண்மைக் காலத்திலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது. அந்த மதத்தின் பழைய விரிவான பெயர் ஆரிய தர்மம் என்பதாகும்.[1] காந்திஜியும் இது பற்றி சொல்லியிருப்பதை நாம் ஏற்கனவே கூறியுள்ளோம். அவர் கூற்றுப்படி “இந்து மதம்” என்ற சொல்லை விட நல்ல மெய் விளக்கம் தரும் சொல் “ஆரிய மதம்தான்”.[2]

நாடுபிடிப்போர் வடமேற்கிலிருந்து படையெடுத்து வந்தபோது சிந்து நதிக்கு கிழக்கே உள்ள அப்பகுதியைக் குறிப்பதற்கு அவர்கள் இட்ட பெயர் ‘இந்து’

''இந்து'' என்ற சொல் நமது பண்டைய இலக்கியங்களில் எதிலுமே இல்லாத ஒரு சொல். முதல் முதல் தந்திரிக நூல் ஒன்றில் இது காணப்படுவது கி.பி. எட்டாம் நூற்றாண்டில்தான். இங்கும் இந்து என்ற சொல் ஒரு மக்கள் கூட்டத்தைக் குறிக்கிறதேயன்றி ஒரு குறிப்பிட்ட மதத்தைப் பின் பற்றுகிறவர்களை அது குறிப்பிடவில்லை''[3] இவ்வாறு நேருஜி கூறுகிறார். டாக்டர் அம்பேத்கார் கருத்துப்படி ''இந்து என்ற சொல் ஒரு அந்நியச் சொல். அது முகமதியர்கள் இங்கு வந்தபோது இந்தச் தேசத்திலே குடியிருந்த பண்டைய மக்களைத் தங்களிலிருந்து வேறுபடுத்திக் காட்ட கொடுத்த பெயராகும். அது எந்த ஒரு சமஸ்கிருத நூலிலும் காணப்படாத சொல்''[4] என்கிறார். ஜானியா என்னும் அறிஞர், ''பெர்சியர்களும், கிரேக்கர்களும் இந்த நாட்டை சிந்து நாடு என்றுதான் அழைத்தனர். பெர்சியரின் உச்சரிப்பில் 'சி' இல்லாததால் 'இ' என்று உச்சரித்து 'சிந்துவை' 'இந்து' என்று ஆக்கிவிட்டார்கள்''[5] என்கிறார். நேரு எழுதிய ''நான்கண்ட இந்தியா'' என்ற சிறப்பான நூலில் ''இந்து நதிக்கு அப்புறத்தில் வாழ்ந்த மக்கள் இந்து என்ற சொல்லை உபயோகித்தனர். இந்தப் பெயர் சிந்து என்ற நதியின் பழைய பெயரிலிருந்து பிறந்த ஒரு சொல். எனவே சிந்து என்ற மூலச் சொல்லிலிருந்தே 'ஹிந்து' 'ஹிந்துஸ்தானி' மற்றும் 'இண்டஸ்' 'இந்தியா' ஆகிய பெயர்களும் உண்டாயிற்று''[6] என்று எழுதுகிறார். டாக்டர் ராதாகிருஷ்ணனும் வடமேற்கிலிருந்து படையெடுத்து வந்தவர்கள் அப்பகுதிக்குக் கொடுத்த பெயர் இது என்ற கருத்துக்கே முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார். ''இந்து என்ற மதம், இடம் காரணமாக ஏற்பட்ட பெயரேயன்றி மதம் சம்பந்தப்பட்ட ஒரு பெயரல்ல. ஒரு குறிப்பிட்ட பகுதியில் மக்கள் வாழ்ந்ததைக் குறித்தே அது அங்ஙனம் அமைந்தது''[7] என்று அவர் கூறுகிறார். இங்கு வாழ்ந்த மக்கள் 'இந்துக்கள்' என்றே, இன்னும் சரியானபடி சொன்னால், 'சிந்துக்கள்' என்றே அழைக்கப்பட்டனர். உதாரணமாக, சூசான் அரண்மனையில் வாழ்ந்த ஆகாஸ்வேரு சக்கரவர்த்தியும் கி.மு. 520ம் ஆண்டில் அவர் செய்த பிரகடனத்தில் இந்த நாட்டை 'இந்து தேசம்' என்றே குறிப்பிட்டுள்ளார்.

சமீப நூற்றாண்டுகளில் படையெடுத்து வந்த அராபியர்கள்தான் இந்தச் சொல்லுக்கு மத சம்பந்தமான பொருள் கொடுத்து விட்டனர். பின்பு காலனி ஆட்சிக்காரர்களான வெள்ளையர்கள் தங்கள் தஸ்தாவேஜிகளிலும் மற்ற நூல்களிலும் இந்தியாவின் பலதரப்பட்ட மதங்களைக் குறிப்பதற்கு இச்சொல்லையே பயன்படுத்தினார்கள். டாக்டர் ராதாகிருஷ்ணன் சுட்டிக் காண்பிப்பது போன்று, இப்படி பலதரப்பட்ட மதங்கள் இந்தியாவில் இருப்பதைக் காலாகாலமாய்க் காண்கிறோம். மேலும் அவர் ''இந்தியாவில் உள்ள ஆண்களும் பெண்களும் பலதரப்பட்ட சமுதாயங்களைச் சேர்ந்தவர்களாய், பலதரப்பட்ட தெய்வங்களை வணங்கி, பலதரப்பட்ட சடங்காச்சாரங்களை அனுசரிப்பவர்''[8] என்று குறிப்பிடுகிறார். தீண்டப்படாதவர்களின் மதம் குறித்துப் பேசுகின்ற வேளையில் டாக்டர் அம்பேத்காரும், ''இந்து என்ற சொல் பல்வேறு

அர்த்தங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒரு காலத்தில் அது வாழ்ந்த மக்கள் ஓரிடத்தின் பெயராயிருந்தது. இன்று இந்துஸ்தானில் குடியிருக்கும் ஒவ்வொரு மனிதனும் இந்து என்று கருதப்படுகிறான். இப்பொருளில் தீண்டப்படாதவர்களையும் இந்துக்கள் என்று அழைப்பதில் தவறில்லைதான். அப்படிப்பார்த்தால் இந்தியாவில் இருக்கும் முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள் சீக்கியர்கள், யூதர்கள், பார்சிகள் மற்றும் எல்லோருமே இந்துக்கள்தான்''[9] என்று கூறுகிறார்.

விவேகானந்த மகேந்திர பத்திரிகையில் நாராயணர் என்பவர் எழுதும் போது ''இந்து மதம் என்று அழைப்பது இல்லாத ஒன்றை அழைப்பது போன்ற காரியம்'' 'இந்து', 'இந்து மதம்' ஆகிய சொற்கள் மிகப் பிற்காலத்தில் அந்நியர்கள் நம்மோடு தொடர்பு கொண்டதால் ஏற்பட்ட சொற்கள்''[10], என்று எழுதுகிறார். 'தமிழ் சமயம்' என்று நூலில் சுப்ரமணியபிள்ளை அவர்கள் ''ஐரோப்பியர்கள் இந்தியாவில் வந்தபோது இங்கு பல்வேறு மதங்கள் இருப்பதை அறியாத காரணத்தால் எல்லாம் ஒரே மதம் என்று எண்ணி அதற்கு 'இந்துமதம்' என்று பெயர் கொடுத்துவிட்டார்கள். ஆனால் இந்துமதம் என்ற சொல் எந்தத் தமிழ் இலக்கியத்திலும் சமஸ்கிருத இலக்கியத்திலும் இல்லாத ஒரு சொல்'' என்று எழுதுகிறார்.[11] 'சைவ சமயம்' என்ற நூலில் டாக்டர் அருணாசலம் என்பவர் ''வடமேற்கிலிருந்து படையெடுத்து வந்தவர்கள் இங்குள்ள மக்களை 'சிந்துக்கள்' என்று அழைத்தனர். அதுவே 'இந்துக்கள்' என்று ஆயிற்று. இப்பெயர்கள் அனைத்தும் அந்நியர்களால் கொடுக்கப்பட்ட பெயர்கள்''[12] என்று எழுதியுள்ளார்.

இந்தியாவில் உள்ள மதங்களின் பலதரப்பட்ட நம்பிக்கைகள் குறித்து ஸ்ரீசங்கராச்சாரியா உபந்நியாசம் செய்யும் போது ''வெள்ளையன் நமக்கு 'இந்துக்கள்' என்று பெயர் கொடுத்தான். அவன் கொடுத்த பெயர் நம்மைக் காப்பாற்றினது''[13] என்கிறார். 'இந்துக்கள் என்பவர்கள் யார்?' என்ற தமது நூலில் பால்ராஜ் மாதோக் என்பவர் 'சிந்து' என்ற சொல்லிலிருந்து ஹிந்து என்ற சொல் பிறந்தது. எனவே 'ஹிந்து' என்பது ஒரு நாட்டைக் குறிக்குமேயன்றி அது ஒரு மதத்தைக் குறிக்காது''[14] என்று விளக்குகிறார். வீர சர்க்கார் என்பவர் இரு வரிப்பாடலாக இந்துவுக்கு இலக்கணம் கூறுகிறார்.

அசிந்து சிந்து பரியன்தா யாசிய பாரத் பூமிக்கா மித்ருபூ புண்ய புஷ்சைவா
சவை ஹிந்ருதி ஸ்மிரிதா.

தமிழில் இதன் பொருள் ''இந்து நதி தொடங்கி சமுத்திரம் வரை விரிந்து கிடக்கும் இந்த நாட்டை எந்தையர் நாடு என்றும் இது மக்களையும் அவர்கள் வாழும் தேசத்தையும் குறித்தது புண்ணிய பூமி என்றும் இது கலச்சாரத்தைக் குறித்தது எவனொருவன் எண்ணிப்பார்க்கிறானோ அவனே ஒரு ஹிந்து''.[15]

ஆனாலும் இந்தப் பெயர் இந்தியாவின் மதங்களைப் பற்றி அறிய நமக்கு கொஞ்சமும் உதவி செய்யாது. அதற்காக அது ஏற்பட்டதும் அல்ல அவற்றைப்

புரிந்துகொள்ள 1916ம் ஆண்டு இந்திய சென்சஸ் அறிக்கை இலக்கணங்களை நாம் படிக்க வேண்டும்.

வரைவுப்படம் 'ஆ'வில் நாம் பார்த்தது போல வேதஆரியதர்மம் தனது பெரிய குடைக்குள் அருகாமையிலுள்ள ஆரியரல்லாத மக்களின் பகுதியினரை தன்னோடு சேர்த்து இணைத்துக் கொண்டும், மத நம்பிக்கை கலாச்சாரத்தில் வேறுபட்ட தொலை தூரத்திலுள்ள மக்களை மிஷனெரிப்பணி மூலம் மதம் மாற்றியும், தன்னிடம் சேர்த்துக் கொண்டு விட்டது. இப்படி எவரையும் தன்னோடு இணைத்துக் கொள்ளும் முறையிலும், மதம் மாற்றியும் இந்த ஆரிய தர்மம் நாள்தோறும் ஆயிரமாயிரம் மக்களைத் தனது ஆளுகைக்குள் கொண்டு வருகிறது. இப்படி வேதஆரிய வர்ணாஷ்ரம தர்மத்திற்கு மாற்றப்பட்ட மக்கள் யார் என்று வேத அடிப்படையிலும், அனுசாரங்கள் அடிப்படையிலும், 1910ம் ஆண்டு சென்சஸ் தரும் கீழ்கண்ட அடையாளங்களைக் கொண்டும் நாம் அறிந்து கொள்ள முடியும்.

1. பிராமணர்களின் மத அதிகாரத்திற்கு கீழ் வாழ்பவர்கள்.

2. மந்திரங்களை ஒரு பிராமணரிடமிருந்தோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஒரு இந்து மதகுருவிடமிருந்தோ பெறுகிறவர்கள்.

3. வேதங்களின் அதிகாரத்தை ஏற்றுக் கொள்கிறவர்கள்.

4. பிராமணீய தெய்வங்களை வணங்குபவர்கள்.

5. பிராமணர்களைத் தங்கள் மதக்குருக்களாக வைத்திருப்பவர்கள்.

6. அவர்கள் தொட்டுவிட்டால் மற்றவர்கள் தீட்டுப்படமாட்டார்கள்.
7. இந்து கோவில்களுக்குப் போகிறவர்கள்.
8. இறந்தவர்களின் சடலங்களை எரிப்பவர்கள்.
9. மாட்டிறைச்சி உண்ணாதவர்கள்.

ஆரியரல்லாத இனக்குடும்பங்களிலிருந்து வேத ஆரியதர்மத்திற்கு மாற்றப்படுகிறவர்கள் மேற்கூறிய அடையாளங்கள் கொண்டவர்கள் என்ற உண்மை இன்றும் உண்மையாயிருக்கிறது. இவ்வாறு ஆரியரல்லாத இனக்குடும்பங்களிலிருந்து மதம்மாற்றப் பட்டவர்கள் 'ஆ படத்தில் காணும் உடைபட்ட கோட்டிற்குள் இருக்கும் வேத ஆரிய வர்ணாஷ்ரம தர்மத்தைச் சேர்ந்த ஆரியர்களோடு சேர்த்து இந்துக்கள் என்றழைக்கப்படுபவர்கள்.

தொகுப்புரை : இந்துக்கள் இந்தியாவில் மிகப்பெரிய சிறுபான்மையினர்.
(Hindus are the largest Minority in India)

# 25

# மதச் சுதந்திரத்தை எதிர்ப்பவர்கள் யார்?

பக்தியுள்ள இந்துக்கள் இதை நிச்சயம் எதிர்க்கமாட்டார்கள். அவர்களுக்கு மதம் என்பது தனிப்பட்ட கடவுள் நம்பிக்கையும், கடவுளை உள்ளுணர்வின் மூலம் தாங்கள் கண்டுகொள்வதுமேயாகும். இப்படிப்பட்டவர்கள் மற்ற மனிதர்களின் ஆன்மீக நம்பிக்கைகளில் தலையிடமாட்டார்கள். இத்தகைய நல்ல இந்துக்கள் பல இலட்சம் பேர் இருக்கின்றனர். இவர்களைப் பொருத்த அளவில் மதம் என்பது புனிதமான காரியம்; ஆத்மவாழ்விற்குரிய புனித இடம்; அதில் எண்ணிக்கையோ ஆள்சேர்ப்பதோ அவசியமல்ல. மற்றவர்களின் மதநம்பிக்கைகளை மதச் சுதந்திரத்தை மதித்து நடக்கும் இப்படிப்பட்டவர்களிடம் எனக்கு அதிக மரியாதை உண்டு.

ஆதிவாசிகள் மத சுதந்திரத்தை என்றுமே எதிர்ப்பதில்லை. உதாரணமாக இழிநிலையில் செயல்பட்ட நியோககமிஷனீ மத்திய பிரதேசத்தின் முக்கிய நீதிபதியாக இருந்த ஹிதயதுல்லா.[1] இதன் தவறான முடிவுகளை பலமாகக் குறை கூறினார். ஆதிவாசிகளிடம் கிறிஸ்தவர்கள் செய்துவரும் சுவிசேஷப்பணி பற்றியும் சமூகத் தொண்டுபற்றியும் "பொதுமக்கள்" எதிர்ப்பு தெரிவிப்பதாகக் கூறினது. ஆனால் இவை வேண்டுமென்றே கமிஷன் கூறும் குற்றச்சாட்டுகள் என்பதை ஆதிவாசி கிறிஸ்தவர்கள் பலமாக எடுத்துக் கூறினார்கள். கிறிஸ்தவர்களின் நற்பணிகளை ஆதிவாசிகளில் திரளான பேர் ஆதரிக்கின்றனர். ஒரு ஆதிவாசிகூட இப்பணிகளை எதிர்ப்பதில்லை! ஆதிவாசிகளின் ஆத்துமாக்களுக்கு உத்திரவாதிகள் போல் நடிக்கும் ஆதிவாசிகளல்லாத மற்றவர்களே தொடர்ந்து இப்படிப்பட்ட எதிர்ப்புகளைத் தெரிவித்து வருகின்றனர்.

தீண்டப்படாதவர்களும் மதச்சுதந்திரத்தை எதிர்ப்பதில்லை. இந்தப் புத்தகத்தில் விவாதிக்கப்பட்டுள்ள விஷயங்கள் வெளிப்படையாக்குவது போல், இவர்கள் தங்கள் மத நம்பிக்கைகளின் சுதந்திரத்திற்காகத் தொடர்ந்து போராடுகிறார்கள். மீனாட்சிபுரத்தில் நடந்த மதமாற்றம் காரியத்தில் கூச்சல் போட்டு நாடகமாடியதைத் தவிர மதம் மாறியவரோ அல்லது மதம் மாறாத தீண்டப்படாதவர்களோ எந்தவித எதிர்ப்பும் தெரிவித்தாக அதிகாரபூர்வமாக எந்தப் பதிவேட்டிலும் காணப்படவில்லை.[2]

நாட்டு மக்களின் குறிப்பாக ஆதிவாசிகள், தீண்டப்படாதவர்கள் ஆகியோரின் மதச்சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தவே அரணாச்சலச் சட்டமும், ஓம்பிரகாஷ் தியாகி சட்டமாகக் கொண்டுவந்த மசோதாக்களும் வந்தன.[3] "ஆதிவாசிகளும் தீண்டப்படாதவர்களும் பலவீனர்கள்ளாகவும் ஏமாறக்கூடிய மக்களாகவும், அறியாமையுள்ளவர்களாகவும் இருப்பதால் இவர்கள் வயதுவராத குழந்தைகளைப் போலவே நடத்தப்படவேண்டும்" என்று இம்மசோதாக்கள் கூறுகின்றன.[4]

அரசியல் சட்ட அடிப்படையில் இந்த விவாதம் ஒத்துக்கொள்ளப்படக் கூடியதல்ல. டில்லியில் ஆட்சி செய்பவர்களைத் தேர்ந்தெடுக்க ஆதிவாசிகளுக்கும் தீண்டப்படாதவர்களுக்கும் உரிமையளித்த அரசியல் சட்டம் மதவிஷயங்களுக்கும் அதே உரிமை வழங்கியிருக்கிறது. இவர்களின் மதச்சுதந்திரத்தை அழிப்பதற்கு ஒரு தந்திரமான வழி என்னவென்றால் அவர்கள் ஆத்துமாக்களுக்கு போலீஸ் காப்பு நியமிப்பதேயாகும்.

அப்படியானால் மதச்சுதந்திரத்தை எதிர்ப்பவர்கள் யார்? நியோகி கமிஷனும் மதச்சுதந்திரத்திற்கு விரோதமாக உள்ள எல்லா மசோதாக்களும் சட்டங்களும் கிறிஸ்தவர்களின் பிரச்சாரமும், கிறிஸ்தவ சமூக நலப்பணிகளும் சமாதானத்தைக் கெடுத்து சமூகக்குழப்பங்களையும் சமூகச்சண்டைகளையும் தோற்றுவிப்பதாக கிராமவாசிகளிடமும் ஆதிவாசிகளிடமிருந்து புகார்கள் வந்திருப்பதாகக் குறை கூறுகின்றன.

இந்தியாவில் உள்ள இந்தக் "கிராம குரல்" யார்? மாவட்டப் போலீஸ் அதிகாரிக்கும் அந்த ஜில்லாவில் உள்ள அரசியல் வாதிக்கும் இவர்கள் யார் என்று தெரியும்! இவர்கள் ஆதிவாசிகளைச் சுரண்டும் காண்டிராக்டர்கள், லேவாதேவிக்காரர்கள், ஜமீன்தார்கள், நிலப்பிரபுக்கள், அடிமை வியாபாரிகள், எதையும் சாதிக்கக்கூடிய இவர்கள் தான் ஆதிவாசிகளுக்காக, கிராமவாசிகளுக் காக, குரல் கொடுப்பவர்கள். இவர்கள்தான் ஆதிவாசிகள் என்ற பெயரில், கிராமவாசிகள் என்ற பெயரில் சர்க்கார் செலவிடுகிற கோடிக்கணக்கான ரூபாய்களை விழுங்கிக் கொண்டிருக்கும் முதலைகள்.

இந்தக் "கிராமவாசிகளின் 'குரல்கள்'" தான் அந்த ஜில்லாக்களில் உள்ள அரசியல் வாதிகளுக்கு ஒட்டுச் சேகரித்துக் கொடுப்பவர்கள். இப்படிப்பட்ட கிராமவாசிகளின் குரல்களாக இருப்பவர்கள் போடும் சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பவர்கள் யார்? ஜில்லா போலீஸ் அதிகாரிகள்.

நமது தொன்மையான அடிமை முறை எஜமானி, படியாள், கொத்தடிமை சட்டபூர்வமான தடை செய்யப்பட்டுவிட்டாலும் இந்தக்கிராமவாசிகளின் குர லாக இருப்பவர்களின் ஆதரவோடு அவை இன்றும் நன்கு செழித்து வளர்ந்து வருகின்றன.

இந்த அடிமை முறைக்கு வெடிவைக்கும் இரண்டு காரியங்கள் உண்டு 1. கல்வியின் மூலம் மக்கள் பெறும் சிந்தனை விடுதலை உரிமை 2, அடிமை முறைக்கு ஆண்டவனுடைய அனுமதி உண்டா என்று தட்டிக் கேட்கும் மதச்சுதந்திரம்.

இந்த கிராமவாசிகளின் குரல்களாகச் செயல்படும் முதலைகள் எந்த அளவுக்கும் தில்லுமுல்லு, அடிதடி செய்து, பொய்சொல்லி, இந்த இரு உரிமைகளும் தங்களின் பலமான ஆதிக்கத்தை ஊடுருவி ஒழித்துவிடாதபடி பார்த்துக் கொள்வார்கள். இதனால் தான் இவர்கள் அடிக்கடி பலமாக கிறிஸ்தவப் பணிகளையும் பிரச்சாரங்களையும் எதிர்த்துப் புகார் செய்கின்றனர்.

இவர்கள் ஆத்திரமூட்டும் காரியங்கள் என்று பேசுவதெல்லாம் கொத்தடிமை கள் பாண்டு எழுதிக்கொடுப்பதைப் படித்துப் புரிந்து கொள்ளுமளவுக்கு வந்து விட்டார்களே என்ற ஆத்திரமே! அமைதிக்குறைவு என்று பேசுவதெல்லாம் கொத்தடிமைப் பெண்ணின் உடலின்மேல் தனக்கிருந்த உரிமை பறிபோனதே என்ற உள்ளக்கொதிப்பே. 'பெரியகுழப்பம்' உண்டாகிறதாகச் சொல்வதெல்லாம் முதலாளிகளும் அடிமைகளும் சமமானவர்கள் என்று சொல்லிப் பிரசங்கிப்பதைக் கேட்கமுடியாத குழப்பமே!

தீண்டப்படாதவர்களின் குறைகளை விசாரித்து மகாராஷ்டிர அரசு ஒரு அறிக்கை வெளியிட்டது. "தாழ்த்தப்பட்ட மக்கள் ஒவ்வொரு கிராமத்திலும் மிகச் சிறுபான்மையினராக இருக்கிறார்கள். இவர்கள் எந்த விதத்திலும் கிளர்ந்தெழுந்து தங்கள் சுரண்டலை அழித்துவிடாமல் பாதுகாப்பதிலேயே ஜாதி

இந்துக்கள் கண்ணும் கருத்துமாக இருக்கின்றனர்" [5] என்று அவ்வறிக்கையில் காணப்படுகின்றது.

வங்காளத்தைப் பற்றி 'சுயநலக்குரல்' கிறிஸ்தவத்தை ஏன் எதிர்க்கிறது என்ற விஷயத்தை டாக்டர் ஆடி தெளிவாக ஆராய்ச்சி செய்துள்ளார். "இந்தியாவில் சமூகப் போராட்டம்" என்ற தமது நூலில் தமது முடிவுக்கு ஏராளமான நூல்களிலிருந்து ஆதாரம் காட்டியுள்ளார். அதில் சிலவற்றை எடுத்துக் கூற விரும்புகிறேன். வங்காளத்தில் உள்ள சி.எம் எஸ் மிஷனைச் சேர்ந்த ஜேம்ஸ் லாங் என்பவர் "ஜமீன்தார்கள் அதிகமான பலத்தோடுகூடிய ஆயுதம் தாங்கிய அடியாட்களை வைத்து வேலைவாங்குவதோடு சுரண்டவும் செய்கின்றனர்" [6] என்று எழுதியுள்ளார். பாப்திஸ்த் சபையைச் சேர்ந்த முல்லின்ஸ் என்பவர் தமது நூலில் "கல்கத்தாவுக்கு வடக்கிலுள்ள கிருஷ்நகர் ஜில்லாவிலுள்ள பண்ணைக் கூலிகள் மத்தியிலும், கல்கத்தாவின் தெற்கே உள்ள கிராமங்களிலும் கிறிஸ்தவம் பரவியதோடு குறிப்பாக 1840 முதல் 1860 வரை கிழக்கு வங்காளத்திலும் கிறிஸ்தவ மதம் பரவத்தொடங்கியவுடன் அது நிலப்புரபுக்களின் எதிர்ப்பையும் பொறாமையையும் சம்பாதித்தது. இந்நிலப்பிரபுக்கள் தங்கள் பண்ணைக்கூலிகள்மேல் தங்களுக்குள்ள அதிகாரமும் இதனால் ஒழிந்து போய் விடுவதோடு தங்கள் பொருளாதார சுரண்டல் பாதிக்கப்பட்டுவிடும் என்று கருதினர்" [7] என்று முல்லின்ஸ் எழுதியதாக டாக்டர் ஆடி கூறுகிறார். முல்லின்ஸ் வங்காளத்தின் கிராமங்களில் உள்ள கஷ்டங்களைப்பற் மேலும தமது நூலில் எழுதியுள்ளார். "1825 ஆண்டு முதல் 1830ம் ஆண்டு வரை கல்கத்தாவுக்கு தெற்கேயுள்ள ராம்க்கால் சோக் என்ற கிராமத்திலும் அதைச் சுற்றியும் வாழ்ந்து வந்த நிலம்பயிரிடுபவர்கள், மீன் பிடிப்பவர்கள் ஆகியோர் மத்தியில் கிறிஸ்தவம் பரவுவதைக் கண்டு ஜமீன்தார்கள் வெகுண்டனர் உதாரணமாக அங்குள்ள ஜமீன்தார் ஒருவர் மக்கள் கொதித்து எழுந்ததைத் தடுக்க முயன்றார். அங்குள்ள கிறிஸ்தவர்கள்தான் அந்தக் கிராமத்தைக் கெடுத்து விட்டார்கள் என்று சொல்லி கிறிஸ்தவர்களுக்கு ஆளுக்கு பத்து ரூபாய் அபராதம் போட்டார். அவர்கள் ஒரு மனதாய் அதைக் கட்ட மறுத்தபோது அவர்களைக் கைதுசெய்ய ஏற்பாடு செய்ததோடு செருப்பால் அடிக்கவும் ஏற்பாடு செய்தார். அவர்களின் தோட்டங்களிலுள்ளப் பழங்களை அழித்து நாசம் செய்து அவர்கள் மீன்பிடிக்கும் குளங்களை கெடுத்து விட்டதோடு அவர்களைச் சிறையிலும் தள்ளினார்கள்". [8]

சோட்டா நாக்பூரிலுள்ள ஆதிவாசிகள் பற்றிய தமது ஆராய்ச்சியில் டாக்டர் வித்தியார்த்தி உயர்வுக்கு "மிஷனெரிகள் பூர்வீகக்குடிகளின் பூரண உயர்வுக்கு நம்பிக்கை அளிக்கின்றனர் என்பதையே ஜமீன்தார்கள் எப்பொழுதும் குறைகூறிக் கொண்டிருந்தனர். மற்ற காரணங்களல்லாமல் இந்த ஒரு காரணத்திற்காகவே கிறிஸ்தவம் பரவுவதை உயர் ஜாதி இந்துக்கள் விரும்பவில்லை நிலச்சுவான்தார்கள் விவசாயிகள் மத்தியில் பெரிய அபாயக்குரல் எழுப்பி கிறிஸ்தவர்களாக மதம் மாறியவர்களை எல்லா வகையிலும் கொடுமைப்படுத்தச் செய்தனர்' [9] என்று கூறுகிறார்.

1891ம் ஆண்டு தமிழ் நாட்டைச்சேர்ந்த செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள தீண்டப்படாத கிறிஸ்தவ மக்கள் உபத்திரவங்களுக்குள்ளானது பற்றி கௌடி என்பவர் குறிப்பிடும்போது ''கிறிஸ்தவர்களாக மாறிவிட்ட பறையர்களுக்கு நிலத்தைப் பயிரிடவோ அல்லது குத்தகைக்குக் கொடுக்கவோ கூடாது என்று கிராமத்தில் உள்ள நிலச்சொந்தக்காரர்கள் சேர்ந்து முடிவுசெய்வது சகஜமான காரியமாக இருந்தது. தினக்கூலியாக வேலை செய்துவந்த ஏழைகளுக்கு இது மிகக்கடினமான சோதனை. இவர்கள் உபத்திரவம் இதோடு முடிந்துவிட வில்லை. கிறஸ்துவப் பறையர்களை அவர்கள் வீட்டைவிட்டு துரத்தி அவர்களை பட்டினியும் பசியுமாக வதைத்து எஜமான்கள் சொல்வதைக் கேட்கும்வரை எல்லா வகையிலும் உபத்திரவப்படுத்தினார்கள். அதுவுமல்லாமல் பறைச்சேரிக ளில் கிறிஸ்தவக் குடும்பங்களுக்கு கிறிஸ்தவரல்லாத குடும்பங்களுக்கும் சண்டைகளைத் தூண்டிவிட்டுக் கொண்டே இருப்பார்கள்''[10] என்று கூறுகிறார்.

தர்ஸ்டன் என்ற இனவியல் ஆராய்ச்சியாளர் கடந்த நூற்றாண்டில் திருவாங்கூ ரில் வாழ்ந்த கிறிஸ்தவ சாணர்களையும், ஈழவர்களையும் ஜாதி இந்துக்கள் கொடுமைப்படுத்திய காரியங்களை தனது நூலில் கூறுகிறார். ''19-ம் நூற்றாண் டின் தொடக்க காலத்தில் (1822-ல்) கிறிஸ்தவ மதத்திற்கு மாறிய தாழ்ந்த ஜாதிப்பெண்கள் மார்பில் துணி போடக்கூடாது என்ற பழங்கால விதிகளை (ஆகம சாஸ்திரங்களை) எதிர்த்துப் போராடி அரைக்கு மேல் துணி போட்டுக் கொண்டனர். இப்படி அவர்கள் செய்தவுடன் பெரிய பயமுறுத்தல்களும், கொடுமைகளும், குழப்பங்களும் ஆரம்பித்துவிட்டன. இதேபோன்ற காரியங் களை முப்பது ஆண்டுகள் கழித்து1859-லும் நடந்தபோது சென்னை மாகாண கவர்னர் தலையிட்டு தாழ்ந்த வகுப்புப் பெண்கள் மார்பில் துணி போடலாம், என்பதற்கு அனுமதி வழங்கினார்''.[11]

வங்காளத்தில் உள்ள கிறிஸ்தவக்குடியானவர்களுக்கு உண்டான உபத்திரவங் களைப் பற்றி அரசாங்கம் விசாரணை நடத்திக் கண்டுபிடித்த உண்மைகளை, ஓடி என்பவர் கூறும்போது ''1846-ம் ஆண்டில் கொட்டுப்பாரி என்ற கிராமத்தின் அருகில் உள்ள இருபத்தொன்பது கிறிஸ்தவக் குடும்பங்களிடமி ருந்து ஜமீன்தார்கள் எல்லா உடைமைகளையும் பறித்துக்கொண்டதாக மாஜிஸ் ரேட் கண்டுபிடித்தார். நிலங்கள், தொழில் கருவிகள், ஆடுமாடுகள், துணிகள் ஆகிய எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டார்கள். வீடுகள் தரைமட்டமாக்கப் பட்டன. கிறிஸ்தவர்கள் ஊரைவிட்டே ஓடும்படி ஆயிற்று''[12] என்கிறார்.

இந்த சுயநலமிகள் கிறிஸ்தவர்களைக் கொடுமைப்படுத்திக் கையாண்ட முறைகள் பற்றி அலி என்பவர் எழுதிவைத்துள்ளார். ''மிஷனெரிகள் சொன்ன காரியங்களை எனது கேள்விகளுக்குக் கிடைத்தபதில்கள் உறுதி செய்தன ஜமீன்தார்கள் தங்கள் குடியானவர்களிடம் இரக்கமின்றி நடந்து கொண்டனர் கூடுதலான வரிகளை விதித்தனர். சட்டப்படி கொடுக்க வேண்டிய குத்தகைக்கு அதிகமாக வரி வசூலித்து, லஞ்சம் வாங்கி பொய்க்கையெழுத்து போட

செய்து, கட்டாயப்படுத்திச் சிறையில் அடைத்துவைத்து, வாங்கிய பணத்துக்கு ரசீது கொடுக்காமல் பொய் வழக்குப்போட்டு, இன்னும் எத்தனையோ வகைகளில் கொடுமை செய்து, பண்ணையாட்கள் தங்களை எதிர்த்துப் போராடதபடி பார்த்துக்கொண்டனர்''.[13]

''கொடுமைகள் தாங்கமுடியாத அளவில் அதிகரித்து விட்டன. இதை எதிர்த்துப் போராடாவிட்டால், தங்களைப் படித்தவர்கள் என்றோ பண்பாடுள்ளவர்கள் என்றோ அழைத்துக் கொள்ள நமக்கு எந்த உரிமையும் கிடையாது''[14] என்று எழுதினார் ஜகஜீவன்ராம் தர்ஸ்டன் குறிப்பிடுகிற அந்தச்சம்பவத்தின் பெயர் 'தோள்சீலைக்கழகம்' திருவாங்கூர் மகாராஜாவின் சமஸ்தான சட்டம், சாணார், ஈழவர், கவாதாய், வண்ணார், சாம்பவார், பறையர், செராமார், புலையர் ஆகிய அடிமை வகுப்புகளைச் சேர்ந்த பெண்கள், உயர்ஜாதி இந்துககளுக்கு மதிப்பளிக்கும் வகையில் மார்பில் சேலை போடக் கூடாது.[15] இப்படிப்பட்ட இழிவுப்படுத்தும் பழங்கங்களை எதிர்த்ததால் கிறிஸ்தவர்கள் சொல்லொண்ணாத் தொல்லைக்குள்ளானார்கள். இந்த உபத்திரவங்கள் அலை அலையாய் 1822-23, 1828-30, 1855-59ம் வருஷங்களில் வந்தன. கிறிஸ்தவர்களின் கோயில்கள், வீடுகள் எரிக்கப்பட்டன. கிறிஸ்தவர்கள் அடிக்கப்பட்டனர்; கொல்லப்பட்டனர்; பெண்கள் கற்பழிக்கப்பட்டார்கள். நிலங்கள் பறிக்கப்பட்டு உடைமைகள் கொள்ளையடிக்கப்பட்டு, கிறிஸ்தவர்கள் மேல் பொய்வழக்குப் போடப்பட்டது. அநேகர் சிறையிலும் தள்ளப்பட்டனர்.

தமிழ்நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் சின்னச் சின்ன ஜமீன்தார்கள், மிராசுதார்கள் அடிமைகள் வேலைக்கு வைத்திருந்தார்கள். 1822 முதல் 1838 வரை கிறிஸ்தவர்களுக்கு இவர்கள் செய்த கொடுமைகள் பற்றி தமிழ் கிறிஸ்தவ சரித்திரப் பேராசிரியர் கிறிஸ்துதாஸ் தமது நூலில் எழுதியுள்ளனர். தங்கள் அடிமை முறைகளையும் சுரண்டலையும் கிறிஸ்தவர்கள் ஒழித்து விடுவார்கள் என்ற ஒரே பயம்தான் இதற்கெல்லாம் காரணம் என்கிறார் அவர்.[16]

கிறிஸ்துதாஸ் தமது நூலில் கிறிஸ்தவர்களுக்குச் செய்யப்பட்ட கொடுமைகளையும் உபத்திரவங்களையும் வரிசைப்படுத்திக் கூறுவதோடு பாபநாசபுரம், நாசரேத் முதலிய அடைக்கல கிராமங்கள் ஏன் எப்பொழுது உண்டாக்கப்பட்டன என்றும், 1830ம் ஆண்டு ஜுன் மாதம் சுதேச தர்ம சகாய சங்கம் அமைக்கப்பட்டு, கொடுமை தாங்காமல் ஓடிவரும் கிறிஸ்தவர்களுக்கென்று ஆதரவற்றோர் நிதி வைத்து அவர்களுக்கு உதவிகள் எப்படி வழங்கப்பட்டன என்றும் கூறுகிறார்.

திருநெல்வேலி மாவட்டத்தில் மட்டும் 1822 முதல் 1838 வரையுள்ள காலத்தில் கிறிஸ்தவர்களைக் கொள்ளையடிப்பது, கிறிஸ்தவர்களைத் தாக்குவது, அடிப்பது, வீடுகள், உடமைகளை எரிப்பது, கோர்ட்டில் பொய் வழக்குகள் போட்டுச் சிறைச்சாலையில் அடைப்பது போன்ற ஐநூறுக்கு மேற்பட்ட கொடுமைகள் 387 கிராமங்களில் நடந்துள்ளன''[17] என்கிறார்.

சுதீப் மஜீம்தார் 1982ல் மத்தியப் பிரதேசத்திலுள்ள கெஸ்லா என்ற இடத்தில் நடந்த கொடுமை ஒன்றைப்பற்றி புலன் விசாரணை செய்து எழுதும்போது, ஒரு பெரிய போலீஸ் அதிகாரி கூறியதை எழுதி வைத்துள்ளார். ''அந்தப் போலீஸ் அதிகாரி கூறியதாவது ''நான் சொல்கிறேன் பார் அந்த ஆட்களெல்லாம் தண்டனை பெறாமல் வெளியே வந்துவிடுவார்கள். நிலையில்லாத ஆதிவாசிகள் எப்படி இந்த வியாபாரிகளுக்கும், காட்டிலாகா அதிகாரிகளுக்கும் விரோதமாய் தங்கள் வாயைத் திறக்கமுடியும்? இவர்களுக்கு எங்களால் பாதுகாப்பளிக்க முடியாது. சாட்சிகள் நீதி மன்றத்திற்குப் போனாலும் குறுக்கு விசாரணையில் அவர்களால் நிற்கமுடியாது. சட்டம் குற்றவாளிகளுக்குத் தான் உதவி செய்யும்! இந்த சட்டத்துக்கு உட்பட்டுதான் நாங்கள் நடப்போம்'' [18] என்று கூறுவதாக எழுதுகிறார்.

இவை என்றோ நடந்த கற்கால சம்பவங்கள் அல்ல. இந்த ஆண்டு கஜபதி ஜில்லாவில் 310 கிறிஸ்தவ தலித் வீடுகள் தீக்கிரையானதும், குஜராத்தில் 28 ஆதிவாசி கிறிஸ்தவ ஆலயங்கள் நொறுக்கப்பட்டதும், கிரஹாம் ஸ்டேனும் அவரது பச்சிளங் குழந்தைகளும் உயிரோடு எரிக்கப்பட்டதும் இதே நாசிசக் கும்பலால் இதே காரணத்துக்காகவே.

தொகுப்புரை :

மனச்சாட்சி சுதந்திரமும் மதச்சுதந்திரமும் தீண்டப்படாதவர்களுக்கும் ஆதிவாசிகளுக்கும் கிடைக்காதபடி எதிர்ப்பவர்கள் அவர்களுடைய எஜமானர்களே. காரணம் அவர்கள் அடிமைகளாக நீடித்தால் மட்டுமே சுரண்டி எஜமானர்கள் செழிப்பாக வாழமுடியும். ஆதிவாசிகளும் தீண்டப்படா தவர்களும் தங்கள் மதச்சுதந்திரத்தை ஒருநாளும் எதிர்த்ததில்லை.

# 26

# அரசியல் சட்டமும் மதமாற்ற சட்டமும்

நம்முடைய ஜனநாயகத்தை உருவாக்கிய பெருந்தலைவர்கள் தேசத்தின் அரசியல் சட்ட அமைப்பில் ஜனநாயகத்தின் உயிர் நாடி அம்சங்களை அவர்கள் உருவாக்கி வைப்பதில் அரும்பாடுபட்டுள்ளனர். அங்ஙனமே, இந்நாட்டின் சட்டங்களுக்கு விளக்கம் கொடுத்த நீதிபதிகளும் மனித சுதந்திரம், சமத்துவம், நியாயம், நீதி ஆகியவைகளைக் காப்பதற்கு அதிக முயற்சி எடுத்துள்ளனர். அவர்களை நாம் பாராட்டுகிறோம்.

சட்டமன்றம் இயற்றும் சட்டங்கள், நீதிமன்றங்கள் வழங்கும் தீர்ப்புக்கள், அரசியல் சட்டத்தின் நோக்கங்களுக்கு முரண்பட்டதாக கண்டால் அவற்றை மாற்ற அல்லது நீக்க உயர்நீதி மன்றத்துக்கு அதிகாரம் அரசியல் சட்டத்தில் உண்டு.

அடிப்படை உரிமைகளைக் (Fundamental Rights) குறைக்கும் வகையில் மத்திய சர்க்காரோ அல்லது மாநில சர்க்காரோ சட்டம் இயற்றுமானால் அது செல்லுபடியாகாது என்று அரசியல் சட்டம் ஷரத்து பின்வருமாறு கூறுகிறது.

இந்தக் காரணத்தினாலேதான் அரசியல் சட்ட நிபுணர்களான ஹிதயதுல்லா, ராம்ஜெத்மாலனி போன்றவர்கள் ''மதச்சுதந்திர உரிமைச்'' சட்டங்களின் மீது அரசியல் சட்டங்களுக்குள்ள அதிகாரம் குறித்து கேள்விகேட்கின்றனர். 1979ம் ஆண்டு மார்ச் 18ம் தேதி பம்பாயில் 1967ம் ஆண்டில் ஒரிசா மாநிலச் சட்டசபை இயற்றிய மதச்சுதந்திர உரிமைச்சட்டம் பற்றிப் பேசியபோது. ''மாநிலங்கள் இப்படிச்சட்டங்களை இயற்ற அரசியல் சட்டத்தில் இடமுண்டு என்று அவசரநிலைமைப் பிரகடனகாலத்தில் இருந்த சுப்ரீம் கோர்ட் கூறினது. ஆனால் நானும் சட்டம் படித்தவன் என்று அளவில் சுப்ரீம் கோர்ட்டை அவமதிக்கும் எண்ணமில்லாமல் எனது தனிப்பட்டசார்பில் சுப்ரீம் கோர்ட் அளித்த தீர்ப்பு தவறானது என்று கூறுகிறேன். என்றைக்காவது ஒருநாள் சுப்ரீம் கோர்ட் சட்ட நூல்களைப்பற்றி கூடுதலாக அறியும்போது தனது தவறை உணர்ந்து அந்தத் தீர்மானத்தைத் திருத்திக்கொள்ளும் என்று உறுதியாக நம்புகிறேன்.

இந்தியாவின் முன்னாள் பிரதம நீதிபதியாக இருந்த ஹிதயதுல்லா ''கடைசியாக நடந்த வழக்கில் என் கருத்து என்னவென்றால் சுப்ரீம் கோர்ட் 'பிரச்சாரம்' என்ற சொல்லுக்கு குறுகிய அர்த்தம் கொடுத்து அந்த வழக்கில் சரியான தீர்ப்பு வழங்கவில்லை. கோர்ட்டை அவமதிக்காத முறையில் நான் கூறுகிறேன் அந்த உரிமை முழுமையாகக் கொடுக்கப்படவில்லை. மத சுதந்திரம் இல்லாமலே ஆகிவிட்டது. எனவே அந்த வ்ழக்கை மறுபரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்'' எனக் கூறுகிறார். [3]

நம்முடைய அரசியல் சட்டம் மதச்சுதந்திரம் பற்றி என்ன கூறுகிறது?

நம்முடைய அரசியல் சட்டத்தில் 22பிரிவுகள் உள்ளன. இவற்றுள் மிக முக்கிய பிரிவு 3ம் பிரிவு. இது அடிப்படை உரிமைகளைப் பற்றியது. இப்பிரிவில் எட்டுப் பகுதிகள் உள்ளன. இவற்றுள் மிக மிக முக்கிய பகுதி ''மனசாட்சியிலும் மதவிஷயங்களிலும் உள்ள உரிமை பற்றியது. 25வது ஷரத்து இப்பகுதியைச் சேர்ந்ததாகும். அது பின் வருமாறு உள்ளது. பொது ஒழுங்கு, ஒழுக்கம் மற்றும் நலவாழ்வு ஆகியவற்றுக்கும் இந்தப் பகுதியில் கூறப்பட்டுள்ள மற்றவற்றுக்கும் ஆட்பட்டும், எல்லாரும் தம் மனசாட்சிப்படி செயல்படுவதற்குரிய சுதந்திரம் உடையவர்களாவார்கள் எம்மதத்தையும் தழுவ, கைக்கொள்ள, மற்றும் பரப்ப உரிமையுடையவர்களாவர்.

இந்தக் கோட்பாட்டில் உள்ளவை எதுவும்

மத வழிப்பாட்டுடன் தொடர்புடைய பொருளாதாரம், நீதி, அரசியல் மற்றும் இதர மதச்சார்பற்ற செயல்பாட்டுக்கு தேவைப்படும் சட்டத்தை அமுல்படுத்துவ

தற்கும் அல்லது அத்தகைய புதிய சட்டத்தை உருவாக்குவதற்கும் அரசைத் தடுக்க முடியாது.

இந்த ஜீவாதார உரிமையில் முக்கியத்துவம் பற்றி ஷரத்து ''இந்தப்பாகத்தின் கீழ் அளிக்கப்பட்டுள்ள உரிமையை குறைக்கக் கூடிய அல்லது பறிக்கக் கூடிய எந்த சட்டத்தையும் அரசு உருவாக்கக் கூடாது. அப்படி மீறி உருவாக்கப்பட்ட சட்டம் எதுவும் செல்லத்தக்கதல்ல.

இந்த அடிப்படை அரசியல் சட்டத்தை வெளிப்படையாக மீறி சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. கடந்த 25 வருடங்களாக வேண்டுமென்றே சூழ்ச்சியினால் மதச் சுதந்திரத்தைக் குறைத்துக் கொண்டே வருகிறார்கள்.

இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்பும்கூட சமஸ்தானங்கள் ஆண்டுவந்த காலத்தில்கூட ரெய்கார் சமஸ்தான மதமாற்றச்சட்டம் 1936, உதய்பூர் சமஸ்தான மதமாற்றச் சட்டம் 1946 போன்ற சட்டங்கள் இருந்து வந்தன. கிராமங்களில் வாழ்ந்த பழங்குடிமக்கள் விடுதலைக்கிருந்த கடைசி உரிமையையும் எடுத்துப் போடுவதற்காகக் கொண்டுவரப்பட்ட சட்டங்கள் இவை. 1936ம் ஆண்டு மத்திய பிரதேச சட்டமன்றத்தில் சட்டமாகக் கொண்டுவரப்பட்ட மசோதா சட்டமன்றத்தால் நிராகரிக்கப்பட்டது. 1968ல் இயற்றப்பட்ட மதச்சுதந்திரம் சட்டம் இந்திய அரசியல் சட்டத்திற்கு முரணானது என்று உயர்நீதிமன்றம் அதைச் சட்டப்பூர்வமாக ரத்து செய்துவிட்டு. 1958ல் மத்திய பிரதேச சட்டமன்றத்தில் தள்ளப்பட்ட மசோதா மீண்டும் 1968ல் மதச்சுதந்திர சட்டம்'' என்ற பெயரோடு சட்டமாக்கப்பட்டது.

அடுத்த முக்கிய நிகழ்ச்சி சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் கொடுத்த தீர்ப்பாகும். கேள்விக்குறிய இந்த தீர்ப்பு இங்ஙனம் கூறுகிறது. ''ஷரத்து 25 மக்களை வேறொரு மதத்திலிருந்து தங்கள் மதத்திற்கு மாற்றுவதற்கு உரிமை அளிப்பதாகக் கருதுவது நியாயமல்ல. இந்த ஷரத்தில் அடங்கியுள்ள மதச்சுதந்திரம் ஒரு மதத்திற்குமட்டுமுரியதல்ல. இது எல்லா மதங்களுக்கும் சமமாகப் பொருந்தும். ஒரு மதத்தினர் எப்படி அதை அனுபவித்து வருகிறார்களோ அப்படியே பிற மதங்களைச் சேர்ந்தவர்களுக்கும் உரிமை உண்டு.

ஒருவருக்குள்ள சுதந்திரம் மற்றவர்களுக்கும் சம அடிப்படையில் வழங்கப்பட வேண்டும். எனவே தங்கள் மதத்திற்கு மற்றவர்களை மாற்றுவதற்கு எவருக்கும் உரிமை கிடையாது''.[4]

மேலே கொடுக்கப்பட்ட தீர்ப்பிற்கு அடிப்படையான ஊகங்களைப் புரிந்து கொள்ளவேண்டுமானால் மத்திய பிரதேச அரசினால் நியமிக்கப்பட்ட நியோகி கமிஷன் அளித்த மிகவும் அநீதியான அறிக்கையை நாம் நன்கு படிக்கவேண்டும்.

அந்த அறிக்கையினை முழுமையாகப் படிக்க இயலாதவர்களுக்கு உதவும் வகையில் பரீட்சார்த்தமாக இரண்டு மசோதாக்களை மட்டும் நமக்கு சம்பந்தப் பட்ட அளவில் இங்கே கொடுத்துள்ளேன். முதலாவது மசோதா 1978ம் ஆண்டில் அருணாச்சலப் பிரதேச சுதந்திர சட்டம்.

இதன் முழு விவரங்களை இப்புத்தகத்தின் ஆங்கில மொழி பெயர்ப்பில் படிக்கவும். The confusion called Conversion. Bharat Jyoti Pub, P.O. Box. 7313, Chennai - 600 101.

ஒரிசா மாநிலம் மத்திய பிரதேச மாநிலம் இயற்றிய சட்டங்களும் அருணாச்சலப் பிரதேச சட்டங்களைப் போன்றவையே.

மேற்கூறப்பட்ட அருணாச்சலப்பிரதேசம் ஒரிசா மத்தியபிரதேசம் ஆகிய மாநிலங்கள் இயற்றிய சட்டங்களின்படி தற்போதுள்ள நரபலி அருவருப்பானது என்று பேசினாலோ பாட்டுப் பாடினாலோ இரண்டு வருடம் கடுங்காவல் தண்டனை பெறவேண்டும் அல்லது ஐயாயிரம் ரூபாய் வரை அபராதம் கட்டவேண்டும். [5]

ஓம் பிரகாஷ் தியாகியினால் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட அந்த மசோதா பற்றி இப்போது காணலாம்.

நல்லவேளை இந்த ஆபத்தான மசோதா தானாக செத்தொழிந்தது. பாராளு மன்றத்துக்கே அதுவரவில்லை. இன்னும் மோசமான காரியம் என்னவென்றால் மாநிலங்கள் அவைகளில் கொண்டு வரப்பட்ட மாநிலங்களின் மதச்சுதந்திரச் சட்டங்களைப் பற்றிய சுப்ரீம் கோர்ட் தீர்ப்பேயாகும். 1977ம் வருடம் கொடுக்கப்பட்ட தீர்ப்பு. [6]

இந்த இடத்தில் கோர்ட் பெரிய தவறு செய்துவிட்டது. கீழ்கண்ட விளக்கங்க ளால், மேற்சொல்லப்பட்ட மசோதாக்கள் அரசு ஆணைகள், நீதிமன்ற தீர்ப்புக்கள் ஆகிய அனைத்தும் தவறானவை.

A. பாதிக்கப்பட்ட தரப்பினர் யார் என்பது வரையறுத்துச் சொல்லப்படவில்லை. நீதிமன்ற விஷயங்களில் அடிப்படையான தத்துவத்தின்படி பாதிக்கப்பட்டவர் களை வரையறை செய்யும்வரை குற்றம் என்ன என்று வரையறை செய்யப்படமு டியாது. ஒருவருக்கு நேர்மையான செயலாக இருப்பது மற்றவரைப் பாதிக்கக்கு டிய குற்றமாக இருக்கலாம்.

உதாரணமாக ஒரு நிலத் தகராறு என்று வைத்துக் கொள்வோம். அந்த நிலத்தைப்பற்றிய வரைபடம் முதலாவது தேவை என்று நீதிமன்றம் கூறும். நிலத்தின் எல்லைகள் எதுவென்று வரையறை செய்த பிறகே நில ஆக்கிரமிப்பு உண்டா இல்லையா என்று கூற இடமிருக்கும்.

குள்ளமான விவசாயி கூறுகிறார் நெட்டையான விவசாயின் நிலத்தைதான் அபகரித்துக் கொள்ளவில்லை என்று. நெட்டை விவசாயி கூறுகிறான் குள்ளன் அதைச் செய்தான் என்று. உன் நிலத்தின் எல்லைகளைக் கூறு என்று நீதிபதி கேட்கிறார். நெட்டை விவசாயி கூறுகிறான் என் நிலத்திற்கு எல்லை கிடையாது என்று.

சுப்ரீம் கோர்ட் இந்து மதத்திற்குக் கொடுத்த வரையறை பின்வருமாறு உள்ளது.

''இந்துமதம் எல்லாம் நம்பிக்கைகளையும் எல்லா தொழுகைகளையும் உள்ளடக்கி இதுதான் எங்கள் நம்பிக்கை என்றில்லாதபடி ஒரு நம்பிக்கையையும் விட்டுவிடாமல் தன்னோடு சேர்த்துக் கொள்ளுகிறது. ஒரு இந்து கடவுளை எந்த வடிவத்திலும் கண்டு பக்தி செலுத்தமுடியும் அவன் எந்த மத நம்பிக்கையையும் தனது என்று எடுத்துக் கொள்ளுகிறான். இந்துக்களையும் இந்துவல்லாத மக்களையும் எந்தெந்த நம்பிக்கைகள் தனக்குப்பிடிக்கிறதோ அவைகளையெல்லாம் சேர்த்துக் கொள்ளுகிறான். ஒரு இந்து மற்ற மதத்தைச் சேர்ந்த காரியங்களைச் செய்யும் போதும் இன்னமும் இந்துவாகத்தான் இருக்கிறான். அவன் எல்லா மதங்களையும் வித்தியாசமான கடவுள்களையும் மத உபதேசங்களையும் அவைகள் தவறு என்று கூறாமல் அவை குறைவுள்ள வைகள் என்று கருதி உலகத்தின் உயர்வுக்கும் மனிதகுலத்தின் வாழ்வுக்கும் தெய்வீக சக்திகள் ஒன்றுக்கொன்று தேவை என்று நினைத்து அவைகளைத் தொழுது கொள்கிறான். அவனுக்கு அநேக மதங்களின் உண்மைகள் ஒன்றை யொன்று ஒத்தாகவே அமைகின்றன. ஒன்றுக்கொன்று முரணானவை அல்ல. ஒரு இந்துவுக்கு கடவுள் இருக்கிறாறோ இல்லையோ. கடவுள் ஒன்றோ பலவோ அடிப்படை இன்னின்ன உபதேசம் என்று வரையறை செய்ய முடியாது. இந்து மதம் என்பது ஒரு நாகரீகம்; அதில் எல்லா மதங்களும் அடங்கும்; அதற்கு ஆரம்பம் கிடையாது. அதைத் தோற்றுவித்தவர் இல்லை. அதற்கு நடுநாயகமான அதிகாரம் படைத்தவர்கள். அமைப்பு என்று எதுவுமே கிடையாது'' [7]

மேற்கண்ட விளக்கம் சுப்ரீம் கோர்ட் வழக்கில் கூறப்பட்டது. சுருங்கச் சொன்னால் இந்துமதம் என்பது அனைத்துமதம்" ஆகும். இப்படி இழுப்புக்கெல்லாம் வளைந்து கொடுக்கும் விளக்கத்திற்கு எல்லை எங்கே இருக்க முடியும் ? எனவேதான் யாரையும் தனது இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் என்று உரிமை பாராட்டி இந்தியாவில் உள்ள பழங்குடி மக்கள், தீண்டப்படாத வர்கள், ஆரியரல்லாதோர் அனைவரும் இந்துக்கள் என்று சொல்லப்படுகிறது.

சரியான வரையறை சொல்லப்படாமல் நீதிவிசாரணை செய்யும்போது எந்த வழக்கானாலும், நீதிமன்றத்தீர்ப்பானலும், அரசு ஆணையானாலும் ஒரு தரப்பினரின் அடிப்படை ஜீவாதார உரிமைகள் என்ற பகுதி உள்ள 14, 15வது

ஷரத்துகளில் கூறப்பட்டுள்ள உரிமைகளை அவர்களுக்கு இல்லாமற்போகப் பண்ணுவதாகவே முடியும். இதனால் ஒரு நிலத்திற்கு எல்லைக்கல் இடமுடியாத கோர்ட் நிலத்தகறாரைத் தீர்த்து வைக்கத் தகுதியற்றது.

ஷரத்து 14 இந்தியாவில் உள்ள எந்த நபருக்கும் சட்டத்தின் முன்பு சம உரிமையும் சட்டத்தின் மூலம் சமமான பாதுகாப்பையும் தர அரசு மறுக்கக்கூடாது.

ஷரத்து 15 சமயம், சாதி, இனம், பால், பிறப்பிடம் அல்லது அவற்றில் ஏதேனும் ஒரு காரணத்துக்காக எந்த, குடிமகனையும் தடுத்து எந்த குறைப்பாட்டினை, கட்டுப்பாட்டினை அல்லது நிபந்தனையை விதிக்கக்கூடாது.

B. மேற்கூறப்பட்ட மசோதாக்கள், சட்டங்கள், மாநில ஆணைகள் நீதிமன்ற தீர்ப்புகள் அனைத்தும் இந்தியாவில் உள்ள இனவாரி அடிப்படை மதங்களின் அந்தஸ்தை மறுக்கும் மக்கள் தொகை கணிப்பில் செய்யப்பட்ட முடிவை வைத்துச் செய்யப்பட்டவை. அவை அரசியல் சட்டத்திற்கு முரணாண முடிவுகள்.

மக்கள் தொகை கணக்கெடுப்பவர்களுக்கு சென்சஸ் கமிஷனரின் உத்தரவு மதங்களைப் பொறுத்த விஷயத்தில் பின்வருமாறு இருந்தது ''மதத்தை ஜாதியுடன் அதாவது இனப் பெயர், ஆதிவாசி இனம் என்பதோடு சேர்த்துத் தவறாக கணக்கெடுக்க வேண்டாம்''[8] திட்டமிட்டு செய்யப்பட்ட இந்தப் பெரிய தவறு காரணமாக, கணக்கெடுத்தவர். ஆதிவாசிகளின் மதப் பெயர் அந்த இனமதப் பெயராக இருக்கக் கூடாது என்று ஜனசங்கி அலுவலர் அநியாயமாகச் செய்த முடிவினால், ஆதிவாசிகளில் அநேகர், மற்றும் ஆரிய இனத்தைச் சேராத சமஸ்கிருதக் கலாச்சாரத்திற்குப் புரம்பான திரள்கூட்ட மக்கள் தங்கள் சொந்த மதத்தைச் சேர்ந்தவர்கள் என்று அழைக்கப்படும் உரிமையை இழந்து போனார்கள் அத்தியாயம் 18,22,23ஐ பாருங்கள் இந்தத் தவறுக்கு அரசியல் சட்டம் இடம் கொடுக்க முடியாது.

மத அடிப்படை வித்தியாசத்தை தவறாகப் பாகுபடுத்தி அநேக ஆதிவாசிகள் தாங்கள் மதத்தை உரிமையோடு பின்பற்ற முடியாமல் செய்து விட்டார்கள். இந்த மக்கள் அரசியல் சட்டம் தரும் உரிமை பற்றி எதுவுமே அறியாத பாமர மக்கள் இந்த ஜனசங்கிக் கணக்காளரின் இத்தவறினால் இந்தியாவில் வாழும் இரண்டு லட்சம் நிகிரிட்டோக்கள் தமிழ்நாட்டிலும் கேரளாவிலும் உள்ள காடுகளிலும் குகைகளிலும் எந்த வித ஆரிய கலாச்சாரம் பற்றியும் அறியாதபடி வாழ்ந்து வருகின்றவர்கள் ஆரியமதத்தில் ஜனத்தொகைக் கணிப்பில் சேர்க்கப் பட்டுள்ளனர் என்ற ஒரு எடுத்துக்காட்டே போதுமானது. ஒரு நிகிரிட்டோ கிறிஸ்தவனாகிவிட்டால் எல்லா மதவாதிகளும் இந்துமதத்திலிருந்து கிறிஸ்தவர்கள் மதமாற்றம் செய்து விட்டார்கள் என்று கூச்சலிடுகிறார்கள். ஆனால் இந்த நிகிரிட்டோ இந்துவாக மாறினது எப்போது?

இதேபோல்தான் தென் இந்தியாவிலும் மத்திய இந்தியாவிலும் வடகிழக்கு இந்தியாவிலும் உள்ள ஆரியரல்லாத பல பல மக்களையும் பற்றிச் சொல்லலாம்.

மத்திய பிரதேசத்திலும், ஒரிசாவிலும், அருணாச்சலப் பிரதேசத்திலும் உள்ள மதச்சுதந்திரச் சட்டம் ஒரு ஆதிவாசியோ தீண்டப்படாதவரோ, கிறிஸ்தவ மதத்துக்கு மாறுவதற்கு நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்கின்றது. முன்பு அவர் இன்ன மதத்தைச் சேர்ந்தவர் என்பதைக் குறிப்பிடும் நீதிமன்ற அறிக்கையில்லாமல் மாற்றுதல் பற்றிக் கூறும் அறிக்கை பற்றிக் கேட்பதற்கே வேடிக்கையாய் இருக்கிறது.

உதாரணமாக ஒரு சட்டப்பூர்வமான விவாகரத்து நடைபெற வேண்டுமானல் சட்டப்படி மணந்து கொண்ட ஒரு கணவனும் ஒரு மனைவியும் இருக்க வேண்டும். முற்றிலும் தவறான முறையில் மத்திய பிரதேசத்திலும், ஒரிசாவிலும், அருணாச்சலப் பிரதேசத்திலும் ஜனசங்கிக் கணக்கெடுப்பினை வைத்து அவர்கள் இன்னமதத்தைச் சேர்ந்தவர்கள் என்றே கூறப்பட்டுள்ளது. இது எப்படி இருக்கிறது என்றால் சென்சஸ் எடுப்பவர் ஒரு நபரின் வருமானம் இவ்வளவு என்று குறிப்பிட்டால் அதை வைத்துக் கொண்டு வருமான வரி அதிகாரி அவருக்கு வரி போடுவது போல் இருக்கிறது.

மேற்கண்ட மூன்று மாநிலங்களிலும் துரதிர்ஷ்டவசமாக மதத்தை ஒரு சட்டத்திற்குரிய காரியமாக்கி விட்டனர். ஆகவே இனி ஒவ்வொரு நபரும் தனியே நீதிமன்றத்தில் சட்டபூர்வ அறிக்கையிட்டு நான் இன்ன மதத்தைச் சேர்ந்தவன் என்று அடையாள்ம் பெற வேண்டும்.

அப்படி சட்டபூர்வ அறிக்கை ஒவ்வொரு மனிதனுடைய மதவிஷயத்திலும் செய்யப்படாதவரை மதமாற்றத்தைத் தடுக்கும் மேற்கூறப்பட்ட சட்டங்கள் அனைத்தும் நமது தேசிய நீதிமன்றங்களைக் கேலி செய்வது ஆகும். எம்மதத்திலிருந்து மதமாற்றம் என்று சொல்லாதவரை எந்த மதத்திற்கு மதமாற்றம் என்று தீர்மானிக்க நீதிமன்றத்திற்கு தகுதியில்லை.

இது அடிப்படை உரிமைகள் பற்றிய 14,15 ஷரத்துகளை முழுக்க மீறுவதாக அமைகிறது.

**C.** மேற்கூறப்பட்ட எல்லா சட்டங்களும், மாநில ஆணைகளும், நீதிமன்றத்தீர்ப்புக்களும் சிலை வணக்கக்காரர் அனைவரும் இந்துக்கள் என்ற தவறை அடிப்படையாக கொண்டவை.

இந்தத் தவறான அடிப்படையை வைத்துப் பார்த்தால் ஜைனர்கள், பௌத்தர்கள், கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் ஆகிய அனைவருமே இந்துக்களே. இந்த இலக்கணத்தைக் கொண்டு பார்த்தால் உலக ஜனத்தொகையில் பெரும் பகுதி இந்துக்கள் என்று சொல்லி விடலாம்.

'எரேஷ்கிகால்' என்ற பெண் தெய்வத்தையும் 'ஷாமாய்' என்ற சூரிய தெய்வத்தையும் வணங்கும் மத்திய கிழக்கு நாடுகளில் வசிப்பவர்களும் அப்படிப்பார்த்தால் இந்துக்கள் என்று சொல்லலாம்.

அப்படியே தென் அமெரிக்காவில் உள்ள மாயோன்களும் கூட இந்துக்கள் என்று கூறிவிடலாம். காரணம், அவர்களும் கொஞ்சக் காலத்திற்கு முன்புவரை கோட்லிகூட தேவதைக்கும் குவெட்சால் கோல்ட் தெய்வத்திற்கும் நரபலி செலுத்திவந்தவர்களே.

இந்த இலக்கணத்தைக் கொண்டு பார்த்தால் ஆப்பிரிக்காவின் குடிகள் அனைத்தும் மங்கோலியர்களில் பெரும்பகுதியும், தூரக் கிழக்கு நாடுகளில் உள்ள அனைவரும் மெலானேஷியர்கள், பாலிநேஷியர்கள், பசிபிக்தீவுகளில் உள்ள மக்கள், அனைவரும் விக்கிரங்கள் உருவங்கள், இஷ்டப் பொருள்களை வணங்கி மிருகபலி, நரபலி செலுத்தி வாழ்ந்துவருவதால் அவர்களையும் இந்துக்கள் பட்டியலில் சேர்த்துவிடலாம்.

அடையாள வழிபடும் முறைக்கு மக்கள் எளிதாகக் கொடுக்கும் பெயரே, 'சிலைவணக்கம்' என்பது. அடையாளங்கள் இன்றி கடவுளை வழிபடும் மதங்கள் எதுவுமே உலகத்திலில்லை. இப்படிப்பட்ட தவறான இலக்கணம் ஒன்றைக் கூறுவதன் மூலம் அநேகருடைய கோபத்திற்கு அப்படியே எல்லா இந்துக்களையும் உருவ வழிபாடு செய்பவர்கள் என்று கூறுவதன் மூலம் அநேக நல்ல இந்துக்கள் மனதைப் புண்படச் செய்துவிடமுடியும். உதாரணமாக, பிரம்மோ சமாஜிகள், பிரார்த்தனா சமாஜிகள், ஆரியசமாஜிகள் நல்ல உயர்ந்த கொள்கைகளை வைத்திருக்கிறார்கள். இவர்கள் விக்கிரக வணக்கம் செய்பவர் கள் அல்லவே! சரித்திரத்தில் பார்க்கும் போது விக்கிரக வழிபாடு பிராமணீய மதத்தில் பிற்காலத்தில் ஒரு பகுதியில் புகுத்தப்பட்டது என்பதை அத்தியாயம் 18லும் 21லும் உள்ளது போல் காணமுடிகிறது.

தர்க்கசாஸ்திர முறையில் பார்த்தாலும் சட்டரீதியில் பார்த்தாலும் சரியான உண்மை என்னவென்றால் சில இந்துக்கள் விக்கிரகவழிபாடு செய்பவர்கள். விக்கிரக வணக்கத்தாரில் சிலர் இந்துக்கள். விக்கிரக ஆராதனையை ஒரு போதும் மதச்சார்பில் மக்களைப் பிரிப்பதற்கு நாம் பயன்படுத்தக்கூடாது. மூக்குக்கண் ணாடி அணிவதைவைத்து ஒருவரை எப்படி ஒருமதத்தைச் சேர்ந்தவர் என்று கூறுவது தவறோ அதுபோல் இதுவும் தவறே.

இந்திய மக்களில் அடையாள வணக்கம் செய்யும் எத்தனையோ திரளான எளிய தாழ்த்தப்பட்ட மக்கள் இந்துக்களாக இல்லாமல் இருக்கின்றனர். இவர்கள் பின்தங்கிய வலுவிழந்த மக்களாகவும் அரசியல் சட்டம் தரும் உரிமைகள் பற்றி அறிவில்லாதவர்களாய் இருப்பதாலும் தங்கள் மத உரிமையை பறி கொடுத்தார்கள்.

இது அரசியல் சட்டம் 14, 15(1), 19(1) ஆகிய ஷரத்துக்கள் வழங்கும் அடிப்படை மனித உரிமைகளுக்கு எதிர்ப்பாக உள்ளது.

D. எல்லாச் சட்டங்களும், அரசு ஆணைகளும் நீதிமன்றத் தீர்ப்புக்களும், ஜனத்தொகைக் கணக்கெடுப்புக்களும் தீண்டப்படாதவர்களை ''இந்துக்கள்'' என்று அழைக்கின்றன.

இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பில் கணக்கெடுப்பவர்களுக்கான குறிப்புகளில் ''ஷெட்யூல் வகுப்பினைச் சேர்ந்தவர்கள். ஒன்று இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் அல்லது சீக்கிய மதத்தைச் சேர்ந்தவர்கள் ஒருவர் ஷெட்யூல்ட் வகுப்பைச் சேர்ந்தவர் என்றால் அவரை 'இந்து'[9] அல்லது சீக்கியர்' என்று 10வது கேள்விக்கான விடையில் எழுத வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

மக்கள் தொகை அலுவலர் இதற்கான காரணத்தைக் குறிப்பிடவில்லை. அங்ஙனமே 1950ல் சட்ட அமைச்சுத்துறை வெளியிட்ட ஜனாதிபதி ஆணை ''பாரா 2ல் என்ன போட்டிருந்தாலும் இந்து அல்லது சீக்கிய மதத்தைச் சேராத எவரையும் ஷெட்யூல்ட் வகுப்பைச் சேர்ந்தவராக எடுத்துக் கொள்ளக் கூடாது''[10]. என்கிறது. அமைச்சுத்துறை இதற்கான காரணம் எதுவும் கூற வில்லை.

நீதிமன்றத் தீர்ப்பு அங்ஙனமே உள்ளது.

ஒருவரை ஷெட்யூல்ட் வகுப்பைச் சேர்ந்தவர் என்று கருத வேண்டுமானால் அவர் இந்து அல்லது சீக்கிய மதத்தைச் சேர்ந்தவராக அறிக்கை செய்ய வேண்டும். அப்படி ஒரு மதத்தை வெளிப்படையாகச் சேர்ந்து கடைப்பிடிப்ப தோடு அதற்கான காரியங்களில் உள்ள நம்பிக்கையை வெளிப்படையாக அறிவிக்க வேண்டும். ஒரு இந்துவாக அல்லது சீக்கியனாக இல்லாத நாளில் அவன் அரசியல் சட்டத்தில் உள்ள ஷெட்யூல்ட் வகுப்பினரின் உரிமைகளைப் பெறமுடியாது''.[11] நீதிமன்றம் இதற்கான காரணத்தைச் சொல்லவில்லை.

தீண்டப்படாதவர் தீண்டப்படாதவராயிருக்கும் காரணத்தால் இந்துவல்லாதவர் என்று எண்ணப்படுவது அல்ல. அவர் இந்துவாக இல்லாத காரணத தால் அவரை தீண்டப்படாதவர் என்பது மூவாயிரம் ஆண்டுகளாய் உள்ள பிராமணீய விளக்கம். இந்து மதத்தைச் சேர்ந்த தீண்டப்படாதவர் என்பது சூடான ஐஸ்கிரீம் என்று சொல்வது போல் முரண்பட்ட கூற்றாக உள்ளது. இந்து மதத்திற்கு மாறின தீண்டப்படாதவர்கள் உண்டு. ஆனால் தீண்டப்படாத மக்கள் இந்துக்கள் அல்ல.

கே.எம். 'முன்ஷி' செய்த வெளிப்படையானதும் திட்டமிட்டு செய்த சூழ்ச்சியும் முன்பு ஒரு அத்தியாயத்தில் தெளிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

இரண்டாயிரம் ஆண்டுகளாக இந்து வேதங்கள் என்று ஏற்றுக்கொள்ளப்பட்ட நூல்கள் அனைத்தும் தீண்டப்படாதவர்களைப் பிரித்துவைத்து அவர்கள் வர்ணமில்லாதவர்கள் என்று அழைக்கின்றது. அதாவது ஜாதி அமைப்புக்கு அப்பால் உள்ள சமுதாயம் என்கிறது [12] வழிவழியாக இருந்து வரும் இந்து வேதங்கள்தான் யார், இந்து யார், இந்துவல்ல என்று கூறும் கணக்குகளை வைத்துள்ளது. இது சட்டத்துறை அமைச்சகத்தின் வேலை அல்ல.

இனயியல், மொழியியல், மனித இயல் ஆராய்ச்சிகளின் இந்தியாவிலுள்ள இனங்களைப் பற்றிய கண்டுபிடிப்புக்கள் எந்த ஐயப்பாட்டுக்குமிடமின்றி தீண்டப்படாதவர்களின் இனம், மதம் பற்றிய அடிப்படையில் தீண்டப்படாதவர் கள் இந்துவல்லாத மக்கள் என்று வரையறை செய்கிறது.

ஜனசங்கி மதிப்பீட்டாளரும் சர்க்கார் இன மதிப்பீட்டாளரும் நூறு ஆண்டுக ளாக மேற்கூறப்பட்ட வித்தியாசத்தை வரையறை செய்து அடிப்படையில் ஜனசங்கியாளர்களுக்காகவும் சர்க்கார் அலுவலர்களுக்காகவும் வைத்துள்ளனர்.

தீண்டப்படாதவர்களின் தலைவர்கள் தங்கள் இனத்தவர்களின் சமூக, மத அடையாளத்தை தொடர்ந்து அறிவித்து வருகின்றனர். தீண்டப்படாதவர்கள் எம்மதத்தைச் சேர்ந்தவர்கள் என்பதைத் தெளிவுபடுத்தும் உரிமை சட்டத்துறை அமைச்சுக்கோ ஜனசங்கி கணக்கீட்டு ஆணையாளருக்கோ அல்லது நீதிமன்றத் திற்கோ உரிமை இல்லை. அம்மக்களின் தலைவர்களுக்கு அது உண்டு.

இப்படிச் செய்தது மதச்சுதந்திரத்தைக் குறைப்பதாகவும் அழிப்பதாகவும் உள்ளது மேலே கூறப்பட்ட அரசாங்க உத்தரவுகள், மதச் சட்டங்கள் யாவும் அரசியல் சட்டத்தின் ஷரத்துக்களின் மீறுதல்களாகும். சிறுபான்மையினராக உள்ள தீண்டப்படாதவர்களின் சொந்த இன, மத, கலாச்சாரத்தை சட்டம் போட்டு அகற்றுவதாக இருக்கிறது. எனவே, 13(2), 14, 15, 25 ஆகிய ஷரத்துக்களை மீறுவதாக இது உள்ளது.

ஷரத்து26 தம்தம் மதம் சம்பந்தப்பட்ட விவகாரங்களைத்தாமே நிர்வகிப்பதற் கும்.

இந்திய எல்லைக்குள் வாழ்கின்ற தமக்கெனத் தனிமொழி, வரிவடிவம் அல்லது பண்பாடு உள்ள குடிமக்களுக்கு அவற்றைப் பேணிக்காப்பதற்கான உரிமை இருக்கிறது.

தீண்டப்படாதவனுக்கு அவன் பலமில்லாதனாயிருப்பதால் இந்த சிறுபான்மை யினருக்குள்ள உரிமைகள் கிடைப்பதில்லை. எனவே அரசியல் சட்டத்தில் திருத்தம் கொண்டுவர அவசியமேற்படுகிறது.

E. அரசாங்கத்தின் எல்லா இனப்பாகுபாடுமுறைகளும், ஆணைகளும், மதமாற் றம் குறித்த சட்டங்களும், நீதிமன்றத்தீர்ப்புக்களும் ''ஷெட்யூல்ட் வகுப்பினர்'' என்ற பதத்தின் அர்த்தத்தை வேண்டுமென்றே திரித்துக் கூறுகின்றன.

நமது அரசியல் சட்டத்தின் 16வது பிரிவு சமூக நிலையில், கல்வி நிலையில், பொருளாதார ரீதியில் பின்தங்கியுள்ள மக்களைப்பற்றி மட்டுமே கூறுகிறது.

இந்தப்பிரிவில் 13ஷரத்துக்கள் உண்டு. இவைகளில் 338, 340, 341வது ஷரத்துக்கள் பின்தங்கிய வகுப்பினர் என்பவர்கள் யார் என்ற இலக்கணத்தைக் கூறுகிறது.

ஷரத்து ஷெட்யூல்ட் வகுப்பினர். ஒரு மாநிலம் அல்லது யூனியன் பிரதேசம் சம்பந்தப்பட்ட மட்டில் அதன் ஆளுநர் அல்லது துணை ஆளுநரையும் கலந்தா லோசித்த பின்னர் அந்த மாநிலம் அல்லது யூனியன் பிரதேசத்தில் உள்ளவர்களில் இந்த அரசியல் சாசனப்படி தாழ்த்தப்பட்ட மக்கள் என்று கருதப்பட வேண்டிய ஜாதிகள், இனங்கள், பழங்குடியினர் மற்றும் அத்தகைய ஜாதி, ஜனம், குழு ஆகியவற்றின் உட்பிரிவுகள் அல்லது கிளைகள் ஆகியவற்றைப் பட்டியலிட்டு ஒரு பொது அறிக்கையின் மூலம் குடியரசுத்தலைவர் குறிப்பிட வேண்டும்.

XVI படி குறிப்பிடப்பட்டுள்ள தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் பட்டியலில் இருந்து ஒரு ஜாதி, இனம் அல்லது பழங்குடியினர் நீக்குவதற்கும், புதிதாகச் சேர்ப்பதற்கும் நாடாளுமன்றத்தால் சட்டம் நிறைவேற்றப்படலாம்.

ஷரத்து 341ல் உள்ளபடி இந்திய ஜனாதிபதி 1950ம் ஆண்டில் ஷெட்யூல்ட் வகுப்பினர் பட்டியல் இயற்ற அரசியல் உத்தரவு போட்டார் இதுபற்றி ஏற்கனவே எழுதியிருக்கிறேன்.

இனம் என்பது 'இந்துமதம்' ஏற்படுத்தியதல்ல. ஷெட்யூல்ட் வகுப்பு என்பவை சமஸ்கிருத சொற்கள் அல்ல. இனக்குடும்பம் எங்கெல்லாம் மனிதர்கள் வாழ்கிறார்களோ அங்கெல்லாம் இனம் என்பது சிறிய அளவிலோ அல்லது பெரிய அளவிலோ இருந்துதான் வருகிறது. மேலிருந்து கீழ் அல்லது பக்கவாட்டில் இது வகைப்படுத்தப்பட்டுள்ளது. ஆரிய வேத வர்ணாசிரம தர்மம் இந்தியாவில் நுழைந்து பக்கவாட்டில் பிரிந்து நின்ற இந்தியாவின் பூர்வீகக் குடிகளை மேலிருந்து கீழாக ஜாதி ஏற்றத்தாள்வுகளை உண்டாக்கி பிரித்து வைத்துவிட்டது. ஆரிய வேதவர்ணாசிரம தர்மம் இந்தியாவுக்குள் வருவதற்கு பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சாமார்களும் சக்கிலியர்களும் இந்தியா வில் இருந்து வருகிறார்கள். இந்தியாவைப் பொறுத்தமட்டில் இனங்களும் மதங்களும் ஒன்றைஒன்று தழுவியே நிற்கின்றன. காரணம் குழுகுழுவாக மக்கள் ஆரிய வர்ணாசிரம தர்மத்திலும் இசுலாமிலும் மதம் மாறிச் சேர்ந்துள்ளனர். ஆனால் ஒன்று மற்றொன்றை உள்ளடக்காது. ஒன்று மற்றொன்றைப் பூரணமாக தனக்குள் கொண்டு வரவில்லை. எனவே இனமும் மதமும் வேறுபட்ட இரு காரியங்களே அவற்றை இரண்டறக் கலந்து விட்ட காரியங்களாகக் கொள்ளக்கூடாது.

எல்லா மதங்களிலும் ஒரு சிறு அளவிலாவது மேலிருந்து கீழாகவோ அல்லது பக்கவாட்டிலோ இனப்பிரிவுகள் உள்ளன. ஏனெனில் மதங்களில் இருப்பவர்கள் மனிதர்களே.

அரசியல் சட்டத்தில் மதம் இனத்தோடு பிணைக்கப்படவில்லை. அரசியல் சட்டத்தின் எந்த இடத்திலும் ஷெட்யூல்ட் வகுப்புப் பட்டியலில் சேர்க்கப்படுவ தற்கு அல்லது விளக்கப்படுவதற்கு மதம் அடிப்படை என்று பேசப்படவில்லை. அரசியல் சட்டத்தின் 16வது பிரிவில் கண்ட 13ஷரத்துக்களில் ஷெட்யூல்ட் வகுப்பு மக்களைப் பற்றிக் குறிப்பிடும்போது, 'மதம்' என்ற சொல்லோ அல்லது மதத்தின் பெயரோ காணப்படவில்லை. ஆகவே 1950ம் ஆண்டில் ஜனாதிபதி பிறப்பித்த உத்தரவு கீழ்கண்டபடி அரசியல் சட்டத்தின் நோக்கத்தையும் பொருளையும் முற்றிலும் மீறுகிறது.

மதத்தை ஒரு அளவு அம்சமாக ஆக்கினது தவறு. மதம் மட்டுமே அளவு கோல் என்றது தவறு. ஒரு குறிப்பிட்ட சக்கிலி, கரா, சாமர், கிறிஸ்தவமதத்தைச் சேர்ந்து விட்டால், ஏழையோ பணக்காரனோ, அவனுக்கு அரசாங்க சலுகை கிடையாது. அவனே இந்து மதத்திற்கு மாறினால் அன்றே அத்தனை அரசாங்க சலுகையும் உண்டு

இரண்டு மதங்களை மட்டுமே அளவு அம்சங்களாக வைத்துள்ளது தவறு.

இப்படியாக ஜனாதிபதி உத்தரவு அரசியல் சட்டம் 338(3), 340(1), 341(1), (2), 14, 15(1), 16(1), (2), 29(2) ஆகிய ஷரத்துக்களையும் மீறுகிறது.

ஷரத்து இந்தக் கோட்பாட்டில் வரும் தாழ்த்தப்பட்ட மக்கள் மற்றும் தாழ்த்தப்பட்ட பழங்குடியினர் என்ற சொற்கள், 340 ஆவது கோட்பாட்டின் ஆவது கூறின்படி குடியரசுத்தலைவரால் நியமிக்கப்படும் ஓர் ஆணையத்தின் அறிக்கையைப் பெற்ற பிறகு, தம் உத்தரவில் குறிப்பிட்டுள்ள அத்தகைய பிற்பட்ட வகுப்பினரையும் குறிப்பதாகப் பொருள் கொள்ள வேண்டும்.

ஷரத்து 29(2) சமயம், சாதி, இனம், மொழி வேறுபாட்டின் காரணமாக எந்தக் குடிமகனுக்கும் அரசால், அல்லது அரசு உதவித்தொகையில் நடத்தப்படும் கல்விச்சாலைகளில் அனுமதி அளிப்பதற்கு மறுப்பு தெரிவிக்கக்கூடாது.

F. எல்லா மதச்சுதந்திரசட்டமும் உதவிகள் செய்து மதமாற்றம் செய்வதாக, முரண்பட்ட விதத்தில் ஏதாவது கூறுகிறது. ஆன்மீக காரியங்களை உயர்வாக நினைக்கும் எவருமே உதவிகள் மதங்கள் பெயரால் செய்வதை விரும்பமாட் டார்கள். மதத்தின் பெயரால் எவரும் எந்த உதவிகளும் பெறுவதோ, அல்லது இழப்பதோ கூடாது.

அரசியல் சட்டமும் இதனையே வலியுறுத்துகிறது. ஆனாலும் உதவிகளைக் கொடுத்து மக்களை மதம மாற்றும் விஷயத்தில் மிகப் பெரிய அளவில் இன்று ஈடுபட்டிருப்பது இந்திய அரசாங்கமே!

1950ம் ஆண்டு ஷரத்து 341ன் கீழ் பிறப்பிக்கப்பட்ட ஜனாதிபதி உத்தரவின் நேரடியான நோக்கமும் பொருளும் மத்திய பாராளுமன்றத்திலும் மாநில சட்ட மன்றத்திலும் ஓட்டுரிமை பெறுவதற்காகவே அன்றி கல்விச்சலுகைகளோ பொருளாதாரச் சலுகைகளோ பெறுவதற்காக அல்லவே அல்ல.

கீழ்க்கண்ட தாஸ்தாவேஜீகளைப் படித்தால் அது நன்கு தெளிவாகும்.

1950 டிசம்பர் 17ம் தேதி டாக்டர் ஹெய்ச். சி. முகர்ஜி எம்பிக்கு ஜனாதிபதி செயலர் எழுதிய கடிதத்தில் இவ்வாறு எழுதுகிறார்.

பின்தங்கிய மக்களுக்கான கல்விச்சலுகைகள் பொருளாதாரச் சலுகைகளைப் பொறுத்தமட்டில் இந்திய அரசில் கொள்கை மத அடிப்படையிலோ ஜாதி அடிப்படையிலோ எந்தவித வித்தியாசமும் காட்டக்கூடாது என்பதே.

பின்தங்கிய ஷெட்யூல்ட் வகுப்பினர் என்பவர்களுக்கும் இருக்கக் கூடிய வித்தியாசம் சில் அரசியல் உரிமைகளுக்காகவும் தனித் தொகுதி வைப்பதற்காக வுமே. மாநில அரசாங்கங்களுக்கு இது பற்றி தெளிவு படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன''

திரு. ஜி.எதிஸ் பிரான்சிஸ் என்ற நாக்பூர் கத்தோலிக்க ரீஜனல் கமிட்டி தலைவருக்கு 1950ம் ஆண்டு நவம்பர் மாதம் 7ம் தேதி பிரதமரின் அலுவலகத்திலிருந்து அனுப்பப்பட்ட பதில் இப்படியாக இருந்தது. "ஏதோ சில குழப்பமான எண்ணங்கள் உண்டாவதற்கு ஏதுவானது போல் தெரிகிறது. எல்லா மாநில அரசு உதவிகளும் சலுகைகளும் இந்துமதத்தைச் சேர்ந்த ஷெட்யூல்ட் ஜாதியினருக்கே என்பது முற்றிலும் தவறானது. அரசியல் சட்டத்தில் 341வது ஷரத்தின் கீழ் ஜனாதிபதி பிறப்பித்த உத்தரவின்படி அப்படிப்பட்ட காரியங்கள் செய்யப்படவில்லை. மாநிலச் சட்ட சபைகளிலும் பாராளுமன்றத்தி லும் இந்துக்களாக உள்ள ஷெட்யூல்ட் வகுப்பாருக்கு தனித்தொகுதிகள் அளித்து தனி இடங்கள் ஒதுக்குவதற்காகவே அது. அரசாங்க உதவிகளையோ சலுகைக ளையோ பற்றியதல்ல. அரசியல் சட்டத்தின் ஷரத்துக்களில் ஆகியவை ''எல்லா அரசு உதவிகளும் வசதிகளும்'' இந்து ஷெட்யூல்ட் வகுப்பாருக்கு மட்டுமின்றி கல்வி நிலையிலும், சமுதாய நிலையிலும் பின்தங்கிய வகுப்பினர் அனைவருக் குமே உண்டு. அவர்கள் இந்துக்களோ கிறிஸ்தவர்களோ மற்றும் எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவைகள் உண்டு. ஆனால் ரிசர்வ் தொகுதிக ளுக்கு மட்டும் இந்து மதத்தைச் சேர்ந்தவர்களுக்கு அந்த வேட்பாளர் உரிமை உண்டு."

திருவாங்கூர் கொச்சி எம்.எல்.ஏ திரு எம்.பி. சாக்கோவுக்கு பிரதமரின் தனிச்செயலர் 1950 நவம்பர் 24ம் தேதி எழுதியுள்ள மற்றொரு கடிதத்தில் "இந்தக்காரியத்தை நாங்கள் பரிசீலனை செய்தோம். இந்திய அரசின் உள்துறை அமைச்சகத்தையும் கேட்டோம் எல்லா மாநில அரசு உதவிகள் சலுகைகள் இந்து மதத்தைச் சேர்ந்த ஷெட்யூல்ட் வகுப்பாருக்கு மட்டுமல்ல கல்விநிலையில் சமுதாய நிலையில் பின் தங்கியுள்ள எல்லாருக்கும். உண்டு. அவர்கள் இந்துக்களோ, கிறிஸ்தவர்களோ மற்றும் எம்மதத்தைச் சேர்ந்தவர்களோ இந்த விஷயத்தில் இந்து ஷெட்யூல்ட் வகுப்பாருக்கும் கிறிஸ்தவ ஷெட்யூல்ட் வகுப்பாருக்கும் எந்தவித வித்தியாசமும் காட்டப்படக்கூடாது. இதன்படிப்பார்த் தால் அரசாங்க உதவிகள் சலுகைகள் பின்தங்கிய வகுப்புக்களைச் சேர்ந்த கிறிஸ்தவர்களுக்கு மறுக்கப்படுவது அரசியல் சட்டத்தின் தன்மைக்கு முற்றும் முரண்பட்டசெயலாகும்."

"ஜனாதிபதியால் 1950ம் ஆண்டு ஷெட்யூல்ட் வகுப்பினர் அரசியல் சட்ட உத்தரவு ஷரத்து 341 பிரிவு படி பிறக்கப்பட்டது. இது ஷெட்யூல்ட் வகுப்பினரின் தொகுதி ஒதுக்கீட்டிற்காகவே, அரசாங்க உதவிகள் சலுகைகள் அளிக்கப்படும் விஷயத்தில் எந்தமதத்தைச் சேர்ந்தவர்களுக்கும் அவை உண்டு. அரசியல் சட்டத்தில் ஷரத்து 340ன்படி "பின்தங்கிய வகுப்பினர் என்ற பதம் ஷரத்துக்கள் 340,341ல் உள்ள அர்த்தங்களில் குழப்பத்தைத் தவிர்க்கவே பயன்படுத்தப்பட் டுள்ளது."[13]

இப்படிப்பட்ட எல்லா வாக்குறுதிகளும் கொடுத்துவிட்டு இன்று அரசாங்கம் மதத்தின் பெயரால் அப்பட்டமான பாகுபாடு காட்டுகிறது. இதற்கு விளக்கம் கொடுக்க அதனால் இயலவில்லை.

எளிய மக்களின் நலனில் அக்கறை உள்ள அரசாங்கம் நம்முடைய சமூக பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ள மக்களின் நல்வாழ்வுக் காக ஒவ்வொரு மாதமும் கோடிகோடியாக பணத்தை செலவழிப்பதைப் பாராட்டாமல் இருக்க முடியாது. ஆனாலும் மக்களின் வரிப்பணத்திலிருந்து கோடிகோடி ரூபாய்களை மதத்தின் பெயரால் பாகுபாடுகள் செய்து செலவழிப் பது அரசியல் சட்டத்தின் பல்வேறு ஷரத்தக்களை மீறுவதாக உள்ளது.

இது ஷரத்துக்கள் 14, 15, 16, 46, 341, 27 ஆகியவற்றின் நோக்கத்திற்கு பொருளுக்கும் முற்றிலும் முரணானதே.

ஷரத்து 27 விளக்கமளிக்க வந்த சுப்ரீம் கோர்ட் "அரசியல் சட்டத்தின் மதச்சார்பற்றதன்மைக்கு முரண்பட்ட வகையில் பொதுமக்கள் பணத்தை எடுத்து ஒரு குறிப்பிட்ட மதத்தை அல்லது மதப்பிரிவை வளர்க்கவோ, பாதுகாக்கவோ செலவு செய்யக் கூடாது" என்று திட்டவட்டமாகக் கூறுகிறது.[14]

இந்த பாரபட்சமான முடிவின் விளைவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

தமிழக சட்டமன்றத்தின் அவைத்தலைவர் கொடுத்த புள்ளி விவரப்படி 1321 கிறிஸ்தவர்கள் தங்களை இந்துக்கள் என்று அரசுப் பதிவேட்டில் தங்கள் பெயரைப் பதிவு செய்து கொண்டு 1980 ஜூலை முதல் 1981ம் ஜூன் 30ம் தேதிக்குள் இந்துக்களாக மாறிவிட்டார்கள்.[15]

ஓய்வு பெற்ற மேஜர் டி.ஆர். வேதாந்தம் சலுகைகளைக் கொடுத்து அரசாங்கம் மதம் மாற்றம் செய்வதை அதிகம் ஆதரித்து கீழ்கண்டவாறு கூறுகிறார்.

''1954ம் ஆண்டு நான் இராணுவமுகாம் ஓர்க்ஷாப்பில் அதிகாரியாகப் பணியாற்றி வந்தேன். கிறிஸ்தவ அரிஜனங்கள், இந்து அரிஜனங்கள் மட்டுமே சலுகைகள் கொடுக்கப்படுவதாக என்னிடம் புகார் செய்தனர். தங்களுக்கும் சலுகைகள் வேண்டும் என்று கேட்டனர். மேலதிகாரிகளுக்கு இது பற்றி எழுதியபோது அவர்கள் சலுகைகள் இந்து அரிஜனங்களுக்கும் ஷெட்யூல்ட் வகுப்பினருக்கும் மட்டுமே என்று பதில் கொடுத்தனர். இப்படி சட்டமியற்றப்படக்காரணம் ஷெட்யூல்ட் வகுப்பினரும் கிறிஸ்தவமதத்தில் சேருவதை தடுப்பதற்காகவே, கிறிஸ்தவ அரிஜனங்களுக்கு நிலைமையை எடுத்துக்கூறினவுடன் தாங்கள் இந்துக்களாக மாறினால் அரசாங்கம் சலுகைகள் தருமா என்று கேட்டார்கள். நான் ஆம் என்று பதிலளித்தேன். எனவே பெருமளவில் கிறிஸ்தவ அரிஜனங்கள் ஆரிய சமாஜத்தில் போய் தங்களை இந்துக்களாகவே மாற்றிக் கொண்டு அரசாங்க சலுகைகளைப் பெற்றார்கள்''[16]

எனவே 'தவறான' வழிமுறைகளைக் கையாண்டு மக்களை பொருளால் வசீகரித்து மதமாற்றம் செய்யும் கீழ்தரமான வேலை மாபெருமளவில் அரசாங்கத்தாலேயே செய்யப்பட்டுவருகிறது. அரசாங்கம் செய்யும் இந்த மதமாற்ற வேலை குறித்து நாளேடுகள் நல்ல பிரச்சாரம் செய்கின்றன. தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டை மாவட்டங்களில்[17] மங்களூரில்[18] 'பெல்ராங்கடியில்[19] சேலம் ஜில்லாவில்[20] அண்மையில் நடந்த மதமாற்றங்கள் அரசாங்கம் கீழ்தர வழிகளைப் பின்பற்றிச் செய்யும் செயல்களுக்கு நல்ல சில உதாரணங்கள் ஆகும்.

பெரிய ஸ்தானபனங்களோ சிறிய ஸ்தாபனங்களோ இந்திய அரசு செய்வது போல் நமது வரிப்பணத்தைக் கொட்டி மக்களை மயக்கி மதமாற்றம் செய்யும் ஈனமான வேலைகளில் இவ்வளவு பெரிதான அளவுக்கு மற்றயாரும் ஈடுபடவே முடியாது.

ஞ. எல்லா 'மதச்சுதந்திரச்' சட்டங்களும் அரசு ஆணைகளும், நீதிமன்றத் தீர்ப்புக்களும் ஜனசங்கி குறிப்புக்களும் சிறிய பெரிய பாரம்பரியங்கள் (Little and Great Traditions) என்ற தவறான எண்ணத்தில் காரியங்களைச் செய்துவருகின்றன.

தயவு செய்து 18,21,22ம் அத்தியாயங்களின் விபரங்களை மறுபடியும்

காணுங்கள். ''கிண்ணங்களும் தாம்பாளமும்'' என்ற முறையில் ஜனத்தொகை கணக்கிட்டவர்களின் தவறு இதனால் விளைந்த தவறேயாகும்.

ஜனத்தொகை கணக்காளர்கள் வேண்டுமென்றே 1931ம் ஆண்டிலிருந்து 1981ம் ஆண்டுக்குள் இப்படி ஒரு மாற்றம் கொண்டுவந்தனர்.

இந்தவிதமான பாரபட்சக் கணிப்பில் ஒரு ஆதிவாசியோ தீண்டடப்படாதவரோ ஒரு குறிப்பிட்ட மதத்தைச் சேரும்போது அவர் அதில் இணைந்து (Absorbed) விடுவதாகவும் அதே ஆள்வேறொரு மதத்தைச் சேர்ந்தபோது (Converted) மதமாற்றம் என்றும் கூறப்படுவதேன்?

இந்த பாகுபாட்டின் படி ஒரு மதத்தைச் சேர்ந்து கொண்டால் நிதீமன்றத்தில் அதற்கு ஒரு அறிவிப்பு தாக்கல் செய்யப்பட வேண்டும். (Affidavit) அதே நபர் வேறொரு மதத்தில் சேர்ந்து கொண்டால் அப்படிச் செய்யத்தேவை இல்லை.

ஜனசங்கி கணக்கிலும் நீதிமன்ற நிலையில் இந்தப் பாரபட்சபோக்கு ஷரத்துக்கள் 13,14,15ஐ மீறுவதாக உள்ளது.

அப்படியே இதனை அரசியல் சட்டத்திற்கு ஒத்ததாகவே எடுத்துக் கொண்டாலும், மாநிலத்திற்கு மாநிலம் ஜனத்தொகை கணக்கெடுப்புக்கு வைத்திருக்கும் வகைப்படுத்தும் முறைகள் மாறுபடுவது எப்படி அரசியல் சட்டத்திற்கு ஒத்ததாக இருக்கமுடியும்? மத்திய பிரதேசத்தில் ஜனசங்கி கணக்கெடுப்பவர் ''சிறிய பாரம்பரியத்தில் மூலம் அம்மதத்தில் சேர்க்கப்படுகிறார்' என்று கூறும் வேலை நாகலாந்தில் நடைபெறவில்லையே. நாகலாந்தில் பூர்வீக மதத்தினர் கிறிஸ்தவர்கள் 21 பூர்வீக மதத்தைச் சேர்ந்த நாகாக்களை மதமாற்றம் வேறு, ஜனத்தொகை கணக்கெடுப்பில் ஜனங்களை மதத்துடன் சேர்க்கும் பணிவேறா? [21]

சிலமதங்களுக்கு மாறும் மக்களிடம் மட்டும் கோர்ட்டில் அறிக்கை மனு ((Affidavit) கேட்பதா?

மாநிலத்திற்கு மாநிலம் ஒரே நாட்டில் பிரிவில் சொல்லப்பட்ட காரியங்கள் நடைபெறுவது அரசியல் சட்டம் 44, 14, 15வது ஷரத்துக்களுக்கு முற்றிலும் முரணானகாரியம்.

H. எல்லா மதமாற்ற மசோதாக்களும், சட்டங்களும், நீதிமன்றத்தீர்ப்புக்களும் கமிஷன் அறிக்கைகளும் 'மதமாற்றம்' 'மதமாற்றுதல்' ''மதச்சுதந்திரம்'' என்னும் சொற்களால் ஜால வித்தை காட்டுகின்றன.

அடிப்படை மனித உரிமைகள் என்ற பகுதியில் 'மதத்தைத் தெரிந்து கொள்வது' பற்றிப் பேசும்போது ஒரு மதத்தைத் தெரிந்தெடுக்கவும் தொழவும், பரப்பவும் அதைச் செய்யும் நபர் என்ற முறையில் ஓர் பிரஜைக்குள்ள சுதந்திரம் உண்டு என்று அரசியல் சட்டம் தொடர்ந்து தெளிவுப்படுத்திப் பேசுகிறது.

ஆனால் எல்லா சட்டங்களும் "பிரச்சாரக்காரர்" ஒரு பிரஜையின் மேல் ஆளுகை செய்வதாகவும் அந்தப்பிரஜை அவர் ஆளுகைக்குட்பட்டவராகவும் பேசுகிறது. இது 'மதத்தை ஏற்றுக்கொள்வது என்ற சொல்லுக்கு வேண்டுமென்றே அடிப்படையாக விஷயத்தை மாற்றி அர்த்தம் கொடுப்பதாகும், ஒரு மதத்தை ஏற்றுக் கொள்பவர் பிறகு அதைப் பிரசங்கிக்கலாம். ஆனால் அது அல்ல இங்கு பிரச்சினை. அரசியல் சட்டம் ஒரு பிரஜைக்குள்ள அடிப்படை உரிமை பற்றி அவன் ஒரு மதத்தைத் தெரிந்தெடுத்து, ஆசரிக்கிற உரிமையைப் பற்றி பேசுகிறது.

ஆனால் மேலே கூறப்பட்ட சட்டங்கள் அனைத்தும் மதம் மாற்றுகிறவரின் உரிமைகள் பற்றிப் பேசுகிறது. அரசியல் சட்டம் ஒரு பிரஜை தனக்கு வேண்டிய மதத்தைத் தெரிந்து கொண்டு விசுவாசிப்பதற்கான உரிமைகள் பற்றிப் பேசுகிறது. மேலே கூறப்பட்ட சட்டங்கள் மதத்தைப் பிரசங்கிப்பவருக்குள்ள சுதந்திரம் பற்றிப் பேசுகிறது. இரண்டும் ஒன்றுக்கொன்று தொடர்பானவைதான் ஆனால் இரண்டும் ஒன்றாகாது. இது வேண்டுமென்றே காரியங்களைத் திரித்து மத மாற்றம் மற்றவர்கள்மீது திணிப்பது போல் பேசப்படுகிறது.

மேலே கண்ட மதமாற்றம் பற்றிய சட்டங்கள் யாவும் இந்த மத மாற்றுபவர்கள் இல்லாமல் இந்தியாவில் மத மாற்றமே நடைபெறாது என்ற ஊகத்தில் உருவானவை. ஒருவருமே மதவிஷயங்களில் வளர்ச்சி அடையமாட்டார்கள் அல்லது தேர்ந்தெடுப்பு செய்யமாட்டார்கள் என்று இச்சட்டங்கள் ஊகிக்கின்றன. இது அப்பட்டமான அறியாமை.

இந்திய அரசாங்கத்தின் ஷெட்யூல்ட் வகுப்பினர் ஷெட்யூல்ட் பழங்குடியினர் நடத்துறை இயக்குநர் கொடுத்த அரசாங்க அறிக்கையின்படி "மதம் மாறிய அரிஜனங்கள் தாங்கள்தான் முஸ்லிம்களை அணுகினோம் என்று திட்டவட்டமாகக் கூறுகிறார்கள்". மேலும் அவ்வறிக்கை கூறுவதாவது "மீனாட்சிபுரத்தில் உள்ள ஷெட்யூல்ட் வகுப்புமக்கள் 1981ம் ஆண்டு பிப்பிரவரி மாதம் 9ம் தேதி கூடி இசலாம் மதத்தில் சேர்வது என்று முடிவு செய்தார்கள். அவர்கள் திருநெல்வேலி சென்று தங்கள் பெரியவர்கள் கடந்த 20 ஆண்டு காலமாக இசலாம் மதத்தில் சேர்த்துக் கொள்ளும்படி கேட்டார்கள். மதம்மாறிய அரிஜனங்கள் தாங்களாகவே தங்கள் மதம் மாற்றிக்கொண்டார்கள்"[22] மட்டுமல்ல மதமாற்றம் சடங்குகளுக்காக ரூ.41,000 மதம் மாறியவர்கள் கொடுத்திருக்கிறார்கள். [23]

மனித இயல் கூற்றுப்படி இந்தியாவில் உள்ள 40 மில்லியன் ஆதிவாசிகளும் ஒரு முப்பது நாற்பது ஆண்டுகளில் நன்கு அமைக்கப்பட்ட (organised religions) மற்ற மதங்களைத் தழுவிக் கொள்வார்கள். அங்ஙனமே மில்லியன் கணக்கில் வாழும் தீண்டப்படாதவர்களும் நல்ல கொள்கைகள் படைத்த மதங்களை சேருவார்கள். 1971ம் ஆண்டு ஜனசங்கி கணக்கெடுப்பின்படி 21, 84, 556

மக்கள் எந்த மதச் சார்பும் இல்லை. அங்ஙனமேதான் மில்லியன் கணக்கில் வாழும் சந்தாமிகளும், கபீர் மதத்தைச் சேர்ந்தவர்களும் மற்றவர்களும் இருக்கிறார்கள். இவர்கள் முஸ்லிம்களாகவோ, கிறிஸ்தவர்களாகவோ மாறினால் அது மதமாற்றம் செய்யப்பட்டதாக அர்த்தமா ?[24] இவர்கள் இந்துக்களாக மாறினால் அது மத மாற்றமா ? ஆம் என்றால் அதைச் செய்தவாகள யார் ? இது இந்தியாவின் போக்கு மட்டுமல்ல. உலகெங்கும் இன்று இப்படித்தான் நடைபெறுகிறது. இது மதம் மாற்றுபவர்களால் அல்ல. மக்களே தேர்ந்தெடுத்து தேடுகிறார்கள். இதற்கு நல்ல உதாரணம் நம் நாட்டிலுள்ள ஆரியரல்லாதோர் பிராமணர்களின் மதத்திற்கு வருடந்தோறும் ஆயிரக்கணக்கில் சேர்ந்து கொண்டு வருவதே.

அரசியல் சட்டத்தின் 25வது ஷரத்து எந்தப் பிரஜைக்கும் ஒருமதத்தைத் தெரிந்தெடுத்து அதை பின்பற்றுவதற்கு பூரண சுதந்திரம் அளிக்கிறது. ஆனால் மேலே கொடுக்கப்பட்ட மசோதாக்கள், சட்டங்கள், நீதிமன்றத்தீர்ப்புக்கள் அனைத்தும் வார்த்தை ஜாலங்கள் மூலம் மதம் மாறுபவரை விட்டு மதம் மாற்றுபவரைப் பற்றியே பேசிக்கொண்டு பிரஜைகள் தங்கள் மதத்தைத் தேடும் சுதந்திரத்தைச் சுற்றி போலீஸ் காவல் நிறுத்துகிறார்கள். இந்த விதமான சட்டங்கள் அனைத்தும் முரணானவை எனவே செல்லுபடியாகாத சட்டங்கள்.

I. மேலே கூறப்பட்ட சட்டங்கள் கமிஷன் அறிக்கைகள் நீதிமன்றத் தீர்ப்புக்கள் குழுத்தீர்மானங்கள் (Group decisions) என்ற விநோதமான கருத்தைக் கொண்டு செய்யப்பட்டவை. மூன்று குறிப்புகளைக் கொண்டு இவ்வாதம் சரியல்ல என்று கூறலாம்.

இந்தச் சட்டங்களை உண்டு பண்ணுகிறவர்கள் இந்திய கிராமவாசிகளைப் பற்றி எதுவுமே அறியாதவர்கள். இந்தியக்கிராமங்களில் ஒரு பெண்ணைத் தெரிந்து கொள்ளுவதோ, ஒரு எருமையை விலை பேசுவதோ, ஒரு நோயாளியை ஆஸ்பத்திரியில் சேர்ப்பதோ எல்லாமே குழுவாக (Group) தீர்மானம் எடுக்கும் காரியமே. ஒரு மதத்தில் சேர்வது எவ்வளவு முக்கியமான காரியம்! எனவே எல்லோரும் சேர்ந்துதான் தீர்மானம் எடுப்பார்கள்.

இந்த சட்டமியற்றுபவர்களுக்கு உலக வரலாறு தெரியவில்லை எல்லாக்காலங் களிலும் எல்லாமதங்களிலும் மக்கள் குழுக்களாக குடும்பங்களாகச் சேர்ந்துள்ள னரே தவிர தனி மனிதர்களாகச் சேரவில்லை. இதற்கு நல்ல உதாரணம் நம் நாட்டில் உள்ள பிராமணீய மதமே.

மூன்றாவதாக அரசியல் சட்டரீதியில் சட்டமியற்றுபவர்கள் தரும் வாதங்கள் செல்லுபடியாகா. ஒரு தனிநபருக்கு சட்டம் அளிக்கும் சுதந்திரத்தை குழுவுக்கு நமது அரசியல் சட்டம் மறுக்கவில்லை. குழுவாக இருப்பதினால் தனிப்பிரஜைக ளுக்குக் கிடைக்கும் எந்த உரிமைகளையும் அவர்கள் இழந்து போவதில்லை.

J. எல்லா மசோதாக்களும், நியோகி கமிஷன் வகையைச் சேர்ந்த எல்லா கமிஷன் அறிக்கைகளும் மதச்சுதந்திரத்தைக் குறைத்தால்தான் ''சமுதாய அமைதியை'' நிலை நாட்டமுடியும் என்கின்றன.

இவ்வளவு பெரிய பொய்யை எங்குமே பார்க்க முடியாது. சமுதாய ஒழுங்கு சமூக அமைதியும் மதச்சுதந்திரம் வருவதற்கு முன்புள்ள காலங்களில் இருந்ததாக இவர்கள் நம்மை நம்பச் சொல்லுகிறார்கள். இது மாபெரும் பொய்யென்று நிலைநாட்ட சில உதாரணங்களை நாம் பார்க்கலாம்.

பழங்குடியினரும் தீண்டப்படாதவர்களும் வாழும் கிராமங்களில் நிலவும் ''அமைதியை'' இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிக்கைப் படம் பிடித்துக் காட்டுகிறது. ''கற்பழிப்பு இந்தியக் கிராமங்களில் சர்வசாதாரணமாக உள்ள காரியம். நிலப்பிரபு , லேவாதேவிக்காரன் அல்லது சுரண்டும் வர்க்கத்தைச் சேர்ந்த எவரும் தங்கள் செல்வாக்கின் அந்தஸ்தின் ஒரு அம்சமாக கிராமப் பெண்களைக் கற்பழிப்பதைக் கருதுகின்றனர்.[25, 26]

1957ம் ஆண்டு பரமக்குடியில் ஒரு உயர்ந்த ஜாதி தலைவரோடு சரிசமாக கலெக்டர் ஒழுங்கு செய்த கூட்டம் ஒன்றில் அரிஜனங்களின் தலைவரான இம்மானுவேல் உட்கார்ந்து விட்ட காரணத்தால் அவர் தலை பட்டப் பகலில் வெட்டப்பட்டது.[27]

இந்தியக் கிராமங்களில் நிலவும் 'சமுதாய அமைதி' பற்றி மெட்றாஸ் மெயில் தகவல் தருகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள தாழையூத்து கிராமத்தில் ஜுலை 26ல் ஒரு செருப்புத் தைக்கும் தொழிலாளியின் 28 வயது மனைவியின் வலது கை வெட்டி எறியப்பட்டது. காரணம் அவள் உயர்ந்த ஜாதி மனிதரின் காமவெறிக்கு இணக்கம் தெரிவிக்கவில்லை. முன்னாள் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு. இளைபெருமாளின் கூற்றுப்படி வெட்டப்பட்ட கையை இன்னொரு உயர்ந்த ஜாதி இந்து எடுத்து ஊர்வலமாகச் சென்றார்களாம். போலிஸார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை''[29]' என்கிறார் அவர்.

லாகீம்பூரில் தீண்டப்படாத 15வயது சிறுமியைக் கண்ணைக் குருடாக்கி கற்பழித்ததும் கங்காநகரில் கமலா என்ற பெண்ணைக் கற்பழித்துக் கொலை செய்ததும், ரூர்க்கியில் பாகுராம் குடும்பத்தைத் தீயிட்டுக் கொளுத்தியதும் பாட்டியாலா போலீஸ் ஸ்டேஷனில் தர்ஷனா, சீமோ என்ற தீண்டப்படாத பெண்களை போலீசார் கூடி கற்பழித்ததும் பரோடாவில் உயர்ந்த ஜாதிப் பண்ணையார்கள் வங்காரையும் அவர் குடும்பத்தையும் கொலை செய்ததும் நமது இந்தியக் கிராமங்களில் நிலவும் ஒழுங்கும் அமைதியும்'' என்று எடுத்துக் கொள்ளப்படுகிறது.

அரசாங்கம் கொடுத்த 1978 கணக்கின்படி 450 கொலைகள் 1570 கொடுமைகள், 540 கற்பழிப்புக்கள், கிராமத்தின் சுயநலமிகளால், 1200 தீயிட்டுக்கொளுத்தப்பட்ட தீண்டப்படாதவர்கள் இவையனைத்தும் காலை உணவுமுடிந்து அன்றாடம் படிக்கும் கிரிக்கெட் ஸ்கோர்ஸ் சீதோஷ்ண நிலை அறிக்கையோடு இவைகளும் சேர்ந்து படிக்கப்படும் சாதாரண காரியங்கள். கராம்சேடு குற்றங்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன. சமயச் சட்டங்களை

உண்டுபண்ணுகிறவர்களுக்கு கிராமங்களில் நிலவவேண்டிய அமைதி குறித்து மிகுந்த அக்கறை உண்டு. யாருடைய அமைதியான வாழ்வை நாடுகின்றனர்? ஜமீன்தார் நிலப்பிரபு, அடிமை வியாபாரி இவர்களுடைய அமைதிக்காகப் பாடுபடுகிறார்கள் சட்டமியற்றுபவர்கள் சமூக விரோதிகளின் அமைதியை காப்பதே அரசியல் சட்டத்தின் நோக்கம் என்பது உண்மையானால் அப்பொழுது இவர்கள் சட்டங்களும் சரியானவைதான்.

K. மேற்கூறப்பட்ட மசோதாக்கள், சட்டங்கள், கமிஷன் அறிக்கைகள் அனைத்தும் வெளிநாட்டுப்பணமும், வெளிநாட்டவரும் மதமாற்றத்தின் கைக்கூலிகளாக இருக்கிறார்கள் என்ற ஊகத்தில் மத சுதந்திரத்தை கட்டுப்படுத்த வேண்டும் என்கின்றன. இந்தியாவிலேயே மிக அதிகம் வெளிநாட்டுப்பணம் பெறுபவர் சத்திய சாயிபாபாவும், மகரிஷியும்.

அரேபிய எண்ணையில் மீனாட்சிபுரம் கிராமம் மூழ்கிப்போனது என்று கூச்சலிட்டு ஓய்ந்த பிறகு இந்திய அரசாங்கத்தின் ஷெட்யூல்ட் வகுப்பு ஷெட்யூல்ட் பழங்குடியின் சென்னை இயக்குநர் விடுத்த அரசாங்க அறிக்கை யின் முடிவில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது; ''மதம் மாறிய அரிஜனங்கள் தங்களுக்குப் பணம் கொடுக்கவில்லை என்றும் தாங்களே முஸ்லீம் தலைவர் களை அணுகிக் கேட்டார்கள் என்றும் மதம்மாறாத அரிஜனங்கள் பலர் இரகசிய விசாரணையில் அரிஜனங்கள் முடிவு செய்த பிறகே முஸ்லீம், தலைவர்கள் மதமாற்ற காரியங்களுக்கு ஒழுங்கு செய்தார்கள் என்றும் கூறப்பட்டது. எனவே இக்காரியத்தில் வெளிநாட்டுப் பணம் சம்பந்தப்படவில்லை என்று உறுதியாகக் கூறலாம்''[3] என்று அறிக்கை கூறியது.

நாட்டுப் பெருமை நெஞ்சில் கொண்ட அனைவருமே. பணம் வெளிநாடுகளி லிருந்து வந்து உள்நாட்டு காரியங்களை மாற்றுவதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது சர்க்காரின் எல்லா முயற்சிகளையும் அவர்கள் ஆதரிப்பார்கள். 1976ம் ஆண்டு வெளிநாட்டுப் பணத்தைத் தணிக்கை செய்யும் சட்டம் இந்தியாவிற்குள், தனிமனிதர்களுக்கோ மதவிஷயமாகவே, மதச்சார்பற்ற முறையிலோ வருவதை கட்டுப்படுத்துகிறது. இச்சட்டத்திற்கு வெளிநாட்டுப் பணவரவை சரிபார்க்க, கட்டுப் படுத்த, சீர்படுத்த, குறைக்க, தடை செய்ய அதிகப்படியான அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது.

இன்னமும் கடுமையான நடவடிக்கைகள் எடுத்தாலும் நாட்டுப்பற்றுள்ளோர் முழு உள்ளத்தோடு ஆதரவை வழங்குவார்கள்.

ஆனால் ஒரு பிரஜையாக என்னுடைய தொழுகைக்கு உரிய சுதந்திரத்தை தடுக்க இதற்கும் அதற்கும் என்ன சம்பந்தம்?

ஊரைக்கெடுக்கும் உல்லாசப்பயணிகள், ஆனந்த மார்க்க பக்தர்கள் வருவதைக குறைப்பதை பொறுப்பான பிரஜைகள் வரவேற்பார்கள். அரசியல் குழப்பங்கள் விளைவிக்கும் வெளிநாட்டுக்காரர்கள் வரக்கூடாது.

இவர்களைத் தடுக்க இன்னும் அதிகமான சட்டங்கள் தேவையானால் அரசியல் சட்டத்திற்குட்பட்டு சட்டங்களை உருவாக்கிக்கொள்ளலாம். நல்லெண் ணம் கொண்ட எல்லா பிரஜைகளும் அவற்றை ஆதரிப்பார்கள்.

வெளிநாட்டு செல்வாக்கு குறைக்க வெளிநாட்டுக்காரர்களையும் வெளிநாட்டுப் பணத்தையும் குறித்த சட்டங்களை இயற்றலாம். இந்நாட்டுப் பிரஜையின் அடிப்படை உரிமையைக் குறைக்க சட்டமியற்றுவதால் வெளிநாட்டுச் செல்வாக்கு எவ்வளவும் குறைய இடமில்லையே ! இதற்குக் கூறப்படும் காரணங்கள் அர்த்தமற்றவை. வேண்டுமென்றே செய்யப்பட்டவை. அரசியல் சட்டம் ஷரத்து 25க்கு முரணானது.

வைரமாளிகை என்னப்பட்ட தனது அரசவை மாளிகையில் மேன்மைதங்கிய சக்ரவர்த்தி சிம்மாசனத்தில் வீற்றிருந்து ஆணைகளைப் பிறப்பித்துக் கொண்டிருந்தார்கள்.

சாம்ராஜ்யத்தின் மாண்புமிகு நீதி மந்திரி பெண்களுக்காக கொடுக்கப்படும் வரதட்சிணை பற்றி மசோதா ஒன்றை சக்ரவர்த்தியிடம் கொண்டு வந்தார். சட்டத்துக்கு விரோதமாக மாப்பிள்ளைகள் வரதட்சிணை கொடுக்காத பெண்களை எரித்துவிடும் கொடிய குற்றங்களை எடுத்து மேன்மை தங்கிய சக்கிரவர்த்தியிடம் மாண்புமிகு அமைச்சர் எடுத்துக் கூறினார்.

அறிவுமிகு அரசாங்கத்தின் அறிவு அமைச்சர் வரதட்சிணைக் கொடுமைகளைத் தடுக்க தற்போதுள்ள சட்டங்கள் என்னவாயிற்று என்றார்? மாண்புமிகு நீதி அமைச்சர் கூறினார். அவைகளை சரியாக நாட்டில் அமுல்படுத்தமுடியவில்லை. காரணம் அரசாங்க மேல்மட்ட அதிகாரிகளில் பாதிப்பேர் பையன்களுக்கு இன்னமும் கலியாணம் ஆகவில்லை அரசாங்க போலீஸ் அதிகாரிகள், நீதிபதிகள் பிள்ளைகளுக்கும் அப்படியே பெண் கேட்டு வருகிற நாட்கள் இவை,

மேன்மைதங்கிய சக்ரவர்த்திக்கு கடுங்கோபம் வந்துவிட்டது. கர்ஜித்தார் உறுமினார். வைரமாளிகை அதிர்ந்தது. ஏழு வைரங்கள் கீழே விழுந்தன. அறிவு அமைச்சரை நோக்கி உடனடியாகப் புதுச்சட்டம் ஒன்று எழுதச் சொன்னார்.

அமைச்சர் மூன்று நிமிடங்கள் கண்களை மூடியிருந்தார் பயங்கரமும் அமைதியும் நிலவியது. சக்ரவர்த்தியன் முன்பாகப் பணிந்து இப்படிக் கூறினார்; 'சாம்ராஜ்யத்தில் திருமணங்களே நடக்கக்கூடாது என்று தாங்கள் ஆணை பிறப்பித்துவிடுங்கள்'' சக்கரவர்த்தி சம்மதம் தெரிவிக்க தலை அசைத்தார். மணி அடித்தது. பணிப்பெண்கள் தங்கத் தட்டொன்றினை சக்ரவர்த்தி முன் நீட்டினர், தனது ஆணையை எழுதுவதற்காக.

மான்புமிகு நீதி அமைச்சர் இடைமறித்து இதில் பெண்கள் தவறு செய்யவில்லை; எனவே அவர்கள் நலனைப்பார்த்து ஆணையைத் திருத்திவிடுங்கள் என்றார். அறிவு மந்திரி விளக்கம் கொடுத்து ஆண்கள் திருமணம் செய்வதை மட்டுமே இச்சட்டம் தடை செய்யும் என்றார்.

மேன்மை தங்கிய சக்ரவர்த்தி தனது வைர மோதிரத்தால் முத்திரையிட்டு ஆணையைச் சட்டமாக்கினார். சட்டத்திற்கு ''பெண்கள் திருமணச் சுதந்திர சட்டம்'' என்று பெயர் கொடுக்கப்பட்டது.

# REFERENCES

## CHAPTER 2


1. Bhavani Shankar Niyogi - Report on the Christian Missionary Activity - Enquiry Committee - Madhya Pradesh - M.P.Press - Nagpur - 1956 - Vol.1 - 6.
2. Saphir Athyal - *Evangelical Review of Theology* - Oct. 1977 - New Delhi p.53
3. Thomas Jefferson - *To Baron von Humboldt 188* - *The Great Quotations* - Pocket Books - New York.
4. Henry Clay - House of Representatives - 24 March 1818.
5. Dennis Kinkaid - *Portuguese in Western India* - Butler & Co - 1938 - p.3
6. Robin Boyd - *Church History of Gujarat* - CLS Madras - 1981 - p.6.
7. Jacob Burckardt - *The Civilisation of the Renaissance in Italy* - Phaidon Press - London - 1950 -p.304
